**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி**

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI**

**தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்**

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# தலித்தியம் பெண்ணியம்

**2023-2024**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 627 012**

# தலித்தியம் பெண்ணியம்

**நோக்கம்**

தலித்தியமும் பெண்ணியமும் குறித்த கருத்துகளை விளக்குதலும் பல்வேறு அறிஞர்களின் பார்வைகளை எடுத்துக் கூறுதலும்.

**பயன்**

சமூக வரலாற்றில் தலித்தியமும் பெண்ணியமும் குறித்த வரலாற்று செய்தியை மாணவர்களுக்குச் சென்றடையச் செய்தல்.

**அலகு - 1**

தலித் பெண்ணியவாதம் – பூங்கொடி (கட்டுரை எண்.2) தலித் பெண்களும் உளவியலும் – மார்கரெட் கலைச்செல்வி(க. எண்.5) தலித் பெண்களும் பெண் விடுதலை இயக்கங்களும் – நிர்மலா (க.எண்.7)

**அலகு - 2**

தலித் இயக்கங்களில் தலித் பெண்ணியப்பார்வை – ரஜினி (க.எண்.8) – தலித் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம் – ஒரு வரலாற்று பார்வை – எப்சிபா(க.எண்.9) – தலித் விடுதலையில் தலித் பெண்ணியப் பார்வை – சக்குபாய் (க.எண்.10)

**அலகு - 3**

தலித் பெண்ணியமும் சுற்றுச்சூழலும் – காபிரியேல் டீட்ரிச் (க.எண்.15) – ஜோதிபா பூலேயின் கருத்துகளில் தலித் பெண்ணிய விடுதலைக் கருத்துகள் – ஜோஸ்பின் மேரி (க.எண்.16)-

பாமா படைப்புகளில் தலித் பெண்ணியம் – பாமா (க.எண்.18)

**அலகு - 4**

பெண்ணியம் – சொற்பொருள் விளக்கம் – பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்(மேலை நாட்டுப் பெண்ணியம்)

**அலகு - 5**

பெண்ணிய வகைகள் – பிற பெண்ணிய வகைகள் – பெண்ணிய கோட்பாட்டாளர்கள்

# அலகு 1

## தலித் பெண்ணியவாதம் – பூங்கொடி

சமுதாயத்தின் இன்றைய புதிய சமூகநிலைமைகள் மக்களின்வாழ்க்கைப் பற்றிய சிந்தனைத்தளத்தில் பல மாறுதல்களைஏற்படுத்தியுள்ளது. அவ்வகையிலேயே பெண்களிடம், சமூகம் அவர்களுக்குக்கொடுத்துள்ள பாத்திரங்கள் அந்தஸ்து மற்றும்அதிகாரம் ஆகியவற்றின் அடிப்படையில் சில மாற்றங்களைக்கோருகின்றது. இம்மாற்றங்களின் விளைவு பெண்நிலைவாதத்தை முன்னிறுத்தியது. நடுத்தர வர்க்கப் பெண்களது பிரச்சனைகளையேபெரும்பான்மையாகப் பேசிவருகின்ற இன்றைய பெண்நிலைவாதம் ஒருசாராரின் குரலாக ஒலிக்கின்ற சூழலில் தலித் பெண்களது நிலை குறித்தகருத்தியலை முன்வைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகஇக்கட்டுரை அமைகின்றது.

**பெண்நிலைவாதம் விளக்கம்**

பெண்நிலைவாதம் கருத்தியல் ரீதியான தளத்தை அடிப்படையாகக்கொண்டது. கால மாறுதல்களுக்கேற்ப மாறும் தன்மையுடையது. காரணம்காலந்தோறும் பெண்நிலைகளின் பின்புலத்தைப் பொருத்தது. எனவே வரையறைகள் மாறலாம். இருப்பினும் தென்னாசிய நாடுகள் இணைந்துநடத்தியப் பெண்கள் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறையை இன்றையபெண்நிலையாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர் .அவ்வரையறை வருமாறு, “சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண்ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும், இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப்பூர்வமான நடவடிக்கைகளும்” பெண்நிலைவாதம் எனலாம். சமூகம் குறித்த நோக்கில் இன்றைய பெண் நிலையாளர்களின்செயற்பாட்டுத்தளத்தில் சில குறைபாடுகள் உள்ளன என்பது இங்கு சுட்டப்பட வேண்டிய ஒன்று.

**பெண்நிலை குறித்த செயற்பாடுகள்**

பாலின ரீதியிலான ஒடுக்குமுறைகளையும், ஆண் மேலாதிக்கத்தையும், தந்தைவழிச் சமூக அமைப்பையும் இனங்காணும் எவரும் பெண்நிலையாளர்களாகக் கருதப்படுகின்றனர். இது பாலின ஒடுக்குமுறை வடிவங்களை மட்டும் இனங்காட்டுவதாகாது. ஆண் ஆதிக்கத்திற்கு எதிரான

நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்ற ஒரு போராட்டச் செயலை நிலைநிறுத்துகின்றது. பெண்நிலையாளர்களின் முன்னையநிலைப் போராட்டமானது வீடு குடும்பம் தவிர்த்த சட்டரீதியான சமத்துவ நிலைகளுக்கானப் போராட்டங்களையே முன்னெடுத்துச் சென்றது. ஆனால் இன்று பெண்ணின் முழுமையான விடுதலை வேண்டிய சிந்தனைப்
போராட்டமாக உருப்பெற்றுள்ளது. எனவே வீட்டுக்குள் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் ஆண்களின் மேலாதிக்கம் இங்கு கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது. பெண்ணடிமைத் தனத்திற்குக் காரணம் தனிச் சொத்துடமை என்பதை உடலியல் சம்பந்தப்பட்ட (கருத்தரித்தல் , குழந்தை பெறுதல் ) காரணிகளை முன்வைக்கின்றனர் .

பெண்கள் மீதான சமூக, பொருளாதா, கலாச்சார ஒடுக்கு முறைகளைக் களைவதற்கு பெண்களைப் பால்வேறுபாடு கருதாது 'மனிதஜீவி' என்ற வகையில் அவளது உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெறுவதற்குரிய போராட்டத்தை முதன்மைப்படுத்துக்கின்றது. பெண்கள் வீட்டில் ஆண்களுக்குக் கீழ்ப் படிவதையும் குடும்ப அமைப்பினால் பெண்கள் சுரண்டப்படுவதையும் , தொழிலும் , சமூகத்திலும் ,நாட்டின் கலாச்சாரத்திலும் பெண்கள் தொடர்ந்து குறைவான அந்தஸ்து உடையவராக இருப்பதையும் எதிர்க்கின்றனர்.

பெண்கள் சமூக உற்பத்தியிலும் இனமறு உற்பத்தியிலும் ஈடுபடுவதால் ஏற்படும் இரட்டைச் சுமை 'குடும்பம்' என்ற நிறுவனத்தாலேயே அவளுக்கு ஏற்படுகிறது. (இக்கருத்து ஆளும் நிலப்பிரபுதுவத்தாலும், முதலாளித்துவத்தாலும் மதம், கல்வி மூலம் ஆக்கிரமித்து பெண்களை ஆதரிக்கவும் செய்கிறது) தந்தைவழிச் சமூக அமைப்பு கேள்விக்குள்ளாக்கப்படுவதால் ஆளும் வர்க்கத்து ஒழுக்கநியதிகளை, சட்டங்களை கேள்விக்குள்ளாக்கித் தகர்க்கின்றனர் எனவே, போராட்டச் சிந்தனைக்கேற்றவாறு, தங்களது அனுபவ பின்புலத்திற்கு அரசியல் கட்சி சார்ந்தும், இயக்கங்கள் சார்ந்தும் சுயேச்சையாகவும் பெண்நிலையாளர்கள் தங்களது போராட்டத்தைச் செயற்படுத்துக்கின்றனர். தமிழ்சசூழலை பொறுத்தவரையில் பெண்நிலையளர் குடும்பம் என்ற அமைப்பை எகிர்க்காதவராய் ‘குடும்ப அமைப்பில்' சில மாற்றங்களை வேண்டி நிற்பவர்களாகச் செயல்படுகின்றனர் . பெண்களது சுயமான,தன்னியல்பானத் தேர்வைப் பொறுத்து 'குடும்பம் '

என்ற அமைப்பு ஏற்கப்பட்டும் , ஏற்கப்படாமலும் இருக்கலாம் . மேலை நாட்டு பெண் நிலையாளர்களின் தீவிரத்திலிருந்து விடுபட்டவர்களாக உள்ளனர் . குடும்ப அமைப்பை காப்பாற்றுவதற்கு, ஆண் பெண் உறவுமுறைகளின் தன்மையை மாற்றியமைப்பதன் மூலம் குடும்பத்தில் சுதந்திரத்தையும் , சமத்துவத்தையும் பரவலான மரியாதையையும் நடைமுறைப்படுத்த இயலும் என்கின்றனர் . 'தாய்மை' என்பது உரியது என்கின்றனர்.

புதிதாகத் தோன்றிய தொழில்நுட்ப நிறுவனங்கள் அதனால் தோன்றிய நடுத்தர மக்களது வாழ்க்கையில் அவை ஏற்படுத்திய பாதிப்புகள் நேரடியாகவும் , வலிமையுடையதாகவும் உள்ளது" என்ற கருத்தின் அடிப்படையிலேயே இருவகை இலக்கிய பதிவுகளும் நிகழ்ந்திருப்பதை காணமுடிகிறது. கல்வி அறிவு பெற்ற, பொருளாதார சுதந்திரம் பெற்ற, சமுதாயக் கட்டுப்பாடுகளினால் அதிகம் பாதிக்கப்படாத மேல்தட்டு பெண்களது பிரச்சனைகள் அந்நியத்தன்மை, சமுதாயத்தை இவர்களாகவே அல்லது இவர்களைச் சமுதாயமே தள்ளி வைத்தது போன்ற ஒரு ஒதுக்கம், தவறாக புரிந்து கொள்ளப்படாமை, அப்பெண்கள் தங்கள் வாழ்க்கை நியாயங்களை முன்வைத்து சமுதாய நியதிகளையும் தகர்த்து இன்னும் அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்களாகப் படைக்கப்படுதல் ஒருவகை. நடுத்தர வர்க்கம் மற்றும் கிராமப் பெண்கள் பற்றிய பிரச்சனைகள் (அன்றாட வாழ்க்கையின் அவலங்களும் போராட்டங்களும்) என்பது மற்றொரு வகை, இதில் பின்னையப்போக்கே பெண்நிலைவாத செயற்பாட்டுத்தளத்திலும் இலக்கியத் தளத்திலும் அதிகம் காணப்படுகிறது. இதன் பொருட்டு கேள்வி முன்வைக்கப்படும் பொழுது விடையாக பின்வரும் கருத்து. பெண்நிலையாளர்களால் நிலை நிறுத்தப்படுகிறது.

"மத்திய தர வர்க்கத்து படித்த பெண்கள் தான் அதிகத் தெளிவான கண்ணோட்டத்தோடும் செயலாக்கத்தோடும் இப்போராட்டங்களில் செயல்படுகின்றனர். அதற்காகவே தமது கல்வியறிவையும், பொருளாதாரச் சுதந்திரத்தையும் மற்ற பெண்களுக்காகவும் , தமக்காகவும் போராடுவதற்குப் பயன்படுத்துக்கின்றனர் . இக்கருத்து ஒரு சார்புடையதாகவே உள்ளது. இருப்பினும் வர்க்கபேதத்திற்கு இடம் அளிக்காத பெண்விடுதலையை விரும்புவதாகவும் அதுவே "சமூக விடுதலைக்கு" இட்டுச் செல்லும் என்றும் நம்பிக்கையுடன் கூறிக்கொள்கின்றனர்.

மேலோட்டமான பிரச்சனைகளை வரதட்சணைக் கொடுமை, சிசுக்கொலை, ஆபாசச் சுவரொட்டிகள் என்பவற்றை எதிர்ப்பதற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இந்நிலையில் முழுமையான 'பெண்விடுதலை' என்பது சாத்தியப்படுமா என்ற கேள்வி எழுகின்றது. இந்தியச் சூழலில் குறிப்பாக தமிழ் சூழலில் பெண் அடிமைத்தனம் வேர்கொண்டதற்கான காரணிகளை அறிவது இங்கு அவசியமாகிறது.

**சாதியமும், பெண்ணடிமைத்தனமும்**

எந்த சமூக அமைப்பில் சாதிப்பாகுபாடுகள் அதிகம் இருக்கின்றனவோ அங்கு பெண்ணடிமைத்தனம் நிலைநிறுத்தப்படுகின்றது என்பதை பல்வேறு சிந்தனையாளர்களும், ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இக்கருத்தியல் இந்தியச் சூழலுக்கு மிகப் பொருந்தக்கூடியது. இந்தியாவிற்கே உரிய சாதியத்திற்கும் பெண்ணடிமைத்தனத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. நம் கடவுள், மதம், அரசாங்கம், இலக்கியம், மொழி முதலில் அனைத்தும் சாதியைக் காப்பாற்றும் நிறுவனங்களாகச் செயல்படுகின்றன. இந்தியத் தன்னிலை என்பது, சாதியத் தன்னிலையாகவே உள்ளது. அதாவது ஒரு மனித உயிரியின் கல்வி, தொழில் , உணவு, உடை, மணமுறை இன்னும் சொன்னால் அதன் அசைவுகள் நடவடிக்கைகள் அனைத்தும் சாதியால் நிர்ணயிக்கப்பட்டதாகவே இருக்கின்றன. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட வாழ்வில் பெண்நிலையாளர்கள் சமூகத்தளத்தில் பெண்நிலை இயக்கம் குறுக்கப்பட்ட நிலையில், சுதந்திரம், சமத்துவம் பற்றி பேசுவது சமூக விடுதலை நோக்கியதாக அமையவில்லை. இது 'அதிகாரம்' என்பது அரசிடம் மாத்திரமின்றி எல்லாவகை மனித உறவுகளிலும் விரவியுள்ளதை உணர்த்துகிறது. இந்து மதமும், சாதியமும் பெண்களை மிகவும் அதிகமாக இழிவுபடுத்தி 'குடும்பசிறைக்குள்' ஒட்டி வைத்துள்ளன. உதாரணமாக பெண்களுக்கே உரிய 'மாதவிடாய் ' பிரச்சனையை “தீட்டு” என்று கூறி தீண்டப்படாதவர் பிரச்சனையாக்கியதைக் கூறலாம். தமிழ்ச்சூழலில் பேசப்படும் பெண்நிலைவாதக் கருத்துக்களை இருபோக்கிற்குள் உட்படுத்தலாம் . அவை,

1. ஒழுக்க மதிப்பீடுகள், குடும்பம் போன்றவை தான் பெண்ணடிமைத்தனத்திற்கு மூலாதாரமாக இருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளாமல் மேலெழுந்தவாரியான பிரச்சனைகளை எதிர்க்கும் போக்கு.

2. பெண்ணடிமைத்தனத்திற்கு மூலதாரமாக ஒழுக்க மதிப்பீடுகள்மற்றும் அவற்றின் குறியில் செயல்பாடுகள் ஆகியவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தல் , உடனடி கொடுமைகளை எதிர்த்துப் போராடுதல்குறிப்பாக நிலவும் தந்தைவழிச் சமூக ஒழுக்க மதிப்பீடுகளை எதிர்த்துப் போராடுகின்ற போக்கு. இதில் இன்றைய பெண் நிலையாளர்கள் முதல் போக்கையே உயர்த்திப் பிடிக்கின்றனர் . அடித்தள மக்களது அவல போராட்டங்களில் கவனம் செலுத்துவது அரிதாகக் காணப்படுகிறது. எனவே இரண்டாவது போக்கினை உயர்த்திபிடிக்கும் நடவடிக்கையாக 'தலித் பெண்நிலைவாதம் ' முன்வைக்கப்படுதல் அவசியமாகின்றது.

தலித் பெண்நிலைவாதத்தின் தேவை

கல்வியறிவில் முன்னேறிய மத்தியதர வர்க்கத்துப் பெண்களின் குரலாக ஒலிக்கும் இன்றைய பெண்நிலை வாதம், இவர்களுக்கு அப்பாலும் பெண்ணுக்குரிய அனைத்து அடையாயளத்தையும் உரிமைகளையும் இழந்து நிற்கின்ற மற்றொரு சாரராகிய தலித் பெண்களுடன் இணைந்த குரலாக ஒலிக்க தவறி வருகிறது. (பாதிக்கப்பட்ட பெண்களின் குரலே) மத்தியதர வர்க்கத்துப் பெண்ணிற்கு ஏற்படும். துவலங்கள் அடித்தளப் பெண்களுக்கு ஏற்படுவதுடன் அதற்கும் மேலான சாதிய ஒடுக்குமுறையாளும், பொருளாதார பண்பாட்டு ஒடுக்குமுறையாளும் கூடுதலான. பாதிப்பு ஏற்படுகின்றது. இத்தகு பெண்களை பெண்களாலேயே ஒடுக்கப்படும் அளவிற்கு தந்தைவழி சமூக அமைப்பு ஒழுக்க அமைதியால் பெண்களைத் தயார்படுத்தியுள்ளது. பெண்ணடிமைத்தனமும் சாதிகளும் ஒன்றின் ஒன்று பிணைந்துள்ளதால் ஒன்றின் விடுதலை ஒன்றைச் சார்ந்து அமைகின்றது. எனவே பெண்நிலைவாதம் என்ற பொது அர்த்தத்திற்கு அனைத்து வர்க்கப் பெண்களின் ஒருமித்த குரலே தேவையாகின்றது. எனவே இந்தியச் சூழலைப் பொறுத்தவரையில் 'தலித் பெண்நிலைவாதத்தின் "  தேவை

அவசியமாகிறது. எனில் , தலித் பெண்நிலைவாதத்தின் இலக்குகளைத் தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது. இங்கு 'தலித் இலக்கியம் " என்ற தனித்த இலக்கிய வகை தோன்றிய சூழலை மனதில்கொள்ளுதல் வேண்டும் . அனைத்து அரசியல், பண்பாட்டு ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பாதிக்கப்பட்ட வாழ்வைத் திருப்பிக் கொடுக்கும் உத்தரவாதத்துடன் தலித் அல்லாதவர்களுடன் தலித் மக்களும் எதிர்த்து கடமையாற்றியதாலேயே இப்புதிய இலக்கியம் தோற்றம் பெற்றது போன்றே" தலீத்

பெண் நிலைவாதத்தின் "தோற்றமும் அவசியமாகின்றது. இதன் இலக்குகளாக பின்வருவனவற்றைக் கூறலாம் .

1. பெண்களின் ஐக்கியப்பட்ட ஒருமித்த குரலாக "தலித் பெண்நிலைவாதம்' முன்னிறுத்தப்படுதல் வேண்டும்.

2. 'பெண் நிலைவாதம்' குறித்து தங்களது சிந்தனைத்தளங்களில் செய்யவேண்டிய: மாற்றங்கள் சாதி, பண்பாட்டுப் பொருளாதார அடிப்படையிலும் , இடஒதுக்கீடு அடிப்படையிலும் தங்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகளை அடையாளங்களை இனங்கண்டு பதிவு செய்தல் வேண்டும் .

3. தங்களது சுதந்திரத்தையும் அடையாளத்தையும் வெளிப்படுத்தக்கூடிய செயற்பாட்டுதளத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். வர்க்கபேதமற்ற பெண்நிலை வாதத்தை உள்ளடக்க வேண்டியதன் தேவையே, "பெண் என்ற ஒருமைக்குள் கொண்டு சென்று முழுமையான பெண் விடுதலைக்கு வழிவகுக்கும்.

**தலித் பெண்களின் சமூக நிலை**

அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மதம், சாதி இவற்றின் பெயராலும் சுரண்டப்படும் அனைவரும் தலித்துகள் . அவ்வகையில் பெண்களும் தலித்துகள் என்று கூறும் பெண்நிலையாளர்கள் 'தலித் ' என்ற சொல்லை சுரண்டல் குறியீடாகப் பயன்படுத்துகின்றனர் . இதனைத் தவிர்த்து பெண்நிலையாளர்கள் (இப்பதத்திற்கு ஒடுக்கப்பட்ட,நொறுக்கப்பட்ட என்ற பொருளும் உண்டு) இப்பதத்தை சாதியைக் குறிக்கும் சொல்லாக அல்லது சுரண்டலைக் குறிக்கும்

சொல்லாகச் சுருக்கி விடாது, வேதனையின் குறியீடாகக் கொண்டு, சுரண்டல் மற்றும் கொடுமை, அக்கிரமங்களை எதிர்க்கும் குறியீடாகக் கொள்ளவேண்டும் . அவமானம், பாதுகாப்பின்மை, எதிர்ப்பு ஆகிய பொருள்களை தலித் என்ற சொல்லாட்சி பொருள் தருவதுடன் அதனுடன் இணைந்த செயற்பாட்டுத் தளத்தையும் கொண்டிருக்க வேண்டும் .

பெண்நிலையாளர்கள் தலித்துகள் துயரம் அளவு கடந்தது. தலித்துகளுக்கு சமூக உரிமைகள் மறுக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுகின்றனர் என்பதைப் புரிந்து கொண்டு தலித்துகள் மத்தியில் விழிப்புணர்ச்சியை உருவாக்க வேண்டும் . இதற்கு, விழிப்புணர்ச்சியைப் பெறுவதற்கு தலித்துகள் அல்லாத மற்ற பெண்களும் கூட்டு சேர்ந்து

போராட்டத்தை ஆரம்பித்தல் வேண்டும். இச்சமூக கொடுமைகளால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் தலித்துகள் என்பதால் அவர்களும் முன்வருதல் வேண்டும் . தலித்துகளுக்கு இங்கு முதன்மை கொடுப்பது என்பது மற்றவர்பால் சாதி துவேஷத்தை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. எல்லா இனத்தாரிலும் சுரண்டப்படுபவர்கள்அனைவரும் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற சிந்தனை தெளிவு தேவை. மத்தியதர வர்க்கத்துப் பெண்கள் கல்வியறிவாலும் , அதனால் பெற்ற பொருளாதாரச் செல்வாக்காலும் செயல்திறம் மிக்கவர்காளாக இருந்தாலும் தலித்துகள் மத்தியில் இயற்கையிலேயே போர்குணம் உள்ளது. மற்ற சாதி ஏழைகள் நடுவே ஒரு கோழைத்தனம் உள்ளது. அத்தோடு தம்சாதி உயர்ந்தது என்கிற போலிப் பெருமை உள்ளது. இப்போலி பெருமை குறைய குறைய அவர்கள் நடுவே நல்ல பிரஞ்ஞை உருவாகும் . அப்போது இச்சமூகத்தில் துன்பப்படுபவர்கள் அனைவரும் ஒன்றே என்ற உணர்வு மேலோங்கும் . இது படிப்படியாகத்தான் வரும் தலித்துகளிடையே காணப்படும் இந்த போர்க்குணத்தை வளர்த்தெடுக்க அதனால் முன்னேற்றம் கோருமா என்று அறியவேண்டும் .இப்போராட்டம் தலித்கள் மத விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் . ஆனால் அதே சமயத்தில் சாதி போராட்டமா நின்று விடாது, அதையும் மீறி சமூகக் கொடுமைகளுக்கு ஒரு தீர்வு காண்கிற சுரண்டப்படுகிற எல்லோருக்கும் ஒரு தீர்வைக் காட்டுவதாக அமையவேண்டும். மேலும் தலித்துகளின் இப்போராட்டத்தால் நம் அனைவருக்கும் ஒரு விடிவு வரும் என்ற நம்பிக்கையை பெறும் வகையில் இப்போராட்டம் அமைதல்வேண்டும் . மொழி, மதம் கடந்த குரலாக அது ஒலிக்கவேண்டும். தலித்துகளிலும்

இரண்டுவிதமான பிரிவு உள்ளது. “ஒன்று கல்வியறிவும் , பொருளாதார அந்தஸ்தும் பெற்று இருக்கும் தலித் எலிட்டிஸ்டுகள் , மற்றவர் இவையிரண்டும் இல்லாத மிகுந்த வறுமையின்

பிடியில் இருப்பவர்கள் . தலித் எலிட்டிஸ்டுகள் , தாங்கள் தலித் என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டு ஆளும் வர்க்கத்து ஒழுக்கமைவுகளைப் பின்பற்றுபவர்கள் , இது ஆண் பெண் இருபாலரையும் உள்ளடக்கியது. இவர்களிடம் உண்மையான தலித் பிரக்ஞையோ,அவர்களுக்கு எழும் சிக்கல்கள் பற்றியோ கவலை இருப்பதில்லை. ஆனால் தலித்துகளிடம் அழகான அசலான ஒரு பண்பாடு இருப்பதை அவர்கள் ஏற்பதில்லை.

அக்கறை கொள்வதுமில்லை. ஆண்மேலாதிக்க ஒழுக்க மதிப்பீடுகளைத் தூக்கியெறிகின் ற எதிர்நிலை மதிப்பீடுகளை நிலைநிறுத்துவனாகவே ,ஆண்கடவுளர்கள் ,பெண்கடவளர்கள் நடனம் , கதைகள் , பாட்டு, புராணம் ,நம்பிக்கைகள், உலகப்பார்வை, பழக்கவழக்கங்கள் எல்லாமே தனிப்பட்டவிதத்தில் அமைந்துள்ளது. உதாரணமாக சேலத்தில் நடைபெறும் செருப்படித்திருநாள் பண்டிகை. மனிதர்கள் தவறு செய்வதால் கடவுள் தண்டிப்பார் என்ற

ஒழுக்கநியதிக்கு எதிராக கடவுள் தவறு செய்தால் மனிதர்கள் தண்டிக்கிற எதிர் பண்பாடு முன் வைக்கப்படுகிறது. இப்பண்பாட்டுத் தளத்தில் அக்கறை கொள்ள செய்வதால் 'விடுதலை' பற்றிய அறிவை வளர்க்க இயலுமா என்று காணுதல் வேண்டும் .

தலித் பெண்நிலைவாதத்தை முன்னிறுத்தும் செயற்களமாக, சாதீயம் மற்றும் தீண்டாமையைக் கடுமையாக எதிர்த்த பெரியாரியத்தைப் பின்பற்றலாம் . ஏனெனில் தமிழ்ச்சூழல் சாதியத்திற்கும் , பெண்ணடிமைத் தனத்திற்கும்,பெண்ணடிமைத்தனத்திற்கும் ,குடும்ப அமைப்பிற்கும் ,பெண்ணடிமைத்தனத்திற்கும் கற்புக்கும், பெண்ணடிமைத்தனத்திற்கும் ஒழுக்க மதிப்பீடுகளுக்கும் உள்ள உறவுகளை முதன்முதலில்

வெளிப்படுத்தியவர் பெரியார் தான் . பெண் விடுதலைக் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதிலும் , பெண்களின் பிரச்சனைக்களுக்காக சுயேச்சையான அமைப்புகளைக் கட்டமைப்பதிலும் இவரது படிப்பினைகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு 'பெண்விடுதலைச் ' சிந்தனையை, முன்னெடுத்து

செல்லக்கூடியதாக 'தலித் பெண்நிலைவாதம் ' அமைவதுடன் மனித நேயத்தை முன்னிறுத்தும் சமூக விடுதலையாகவும் அமைதல் வேண்டும் .

**இன்றைய சூழலில் தலித் பெண்களின் விழிப்புணர்வுச் செயற்பாடுகள்**

ஆண்மேலாதிக்க ஒழுக்கமைதிகளை இலக்கியங்கள் பதிவு செய்வதை உணர்ந்து அமுக்கப்பட்ட தலித் மக்களின் உணர்வு வெளிப்பாடாக தலித்இலக்கியம் ' தோன்றிய சூழலில் தலித் பெண்களும் தங்களை சாதி, மதம், இவற்றின் பெயரால் மேற்கொண்ட ஒடுக்குமுறைகளை வெளிப்படுத்தும் எழுத்துக்கள் கடந்த மூன்றாண்டுகளாக வெளிவரத் தொடங்கியுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கது பாமாவின் 'கருக்கு' என்ற நாவல் சாதியின் பெயரால் இந்துமதத்தில் ஏற்பட்ட அதிகார அடக்குமுறைகளால் ஒடுக்கப்பட்டு 'சாதி' என்ற அடையாளத்தை இது இழந்து மற்றவர்களுடன் ஓரினமாக, சமமாகப் பழக நினைத்து கிறிஸ்துவ மதம் மாறி, அங்கும் அதே அடக்குமுறையால் தாக்கப்பட்டு 'கன்னியாஸ்திரி' வேடத்தைத் துறந்து வெளியேறிய ஒரு தலித் பெண்ணின் சுய வரலாற்று நாவலாக அமைந்துள்ளது. ஒரு தலித்திற்குக் கொடுமை என்பது “சாதியின் பெயராலேயே” நடக்கிறது. பால் அம்சங்களை வெளிப்படுத்தவில்லை என்று எண்ணாமல் 'சாதியின் ' பெயரால் ஒரு தலித் பெண்ணிற்கு நேர்ந்த கொடுமை என்பதால் அந்நாவலை 'பெண் நிலைவாதத்திற்கு' உட்படுத்தி பார்க்க இடமுண்டு. ஏனென்றால் பண்பாட்டு நடைமுறைகளையும் பொருளாதார நடைமுறைகளையும் இணைத்துப் பார்க்கும் போதே தலித் பெண்களின் பிரச்சனைகள் புரிந்து கொள்ளப்பட முடியும் . தலித் பெண்களின் வாழ்க்கை முறை பெரும்பாலும் சாதி, மதம் என்ற ஒடுக்குமுறைகளாலேயே சூறையாடப்படுகின்றன. தலித் எழுத்துக்கள் மூலம் எழுத்தறிவில்லாத கீழ்மட்ட மக்களுக்கு ஆவேச விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இவ் எழுத்தியக்கம் பயன்படாவிடில் பெரியாரிசம் காட்டும் போராட்டத்தில் ஈடுபடுத்தலாம். தலித் பெண்களிடமிருந்து இலக்கிய வடிவங்கள் வெளிவருவதே அவர்களது விடுதலைக்கான உணர்வை வெளிப்படுத்துவதாக அமையும் என்பதற்குப் பின்வரும் கருத்து அரண் செய்யும் .

“ஒரு தலித் மேல் பரிவு இருக்கலாம். அவர்களோடு வாழும்போது வாழ்க்கைமுறை என்னவென்று தெரியலாம். ஆனால் அந்த உணர்வை அனுபவிப்பது என்பது ஒரு தலித்தாக இருந்தால் மட்டுமே சாத்தியம் என்று நினைக்கிறேன். ஆக அவர்கள் மத்தியில் இலக்கியம் வருமேயானால் மிகச்சிறப்பாகத் தலித் விடுதலைக்கான இலக்கியமாகவும் இருக்கமுடியும்” என்கிறார் உஞ்சைராசன். இன்று வேலைவாய்ப்புகள் 'தனியார் மயமாக்குதல்' என்ற அரசியல் நடவடிக்கை தந்திரமாக தலித்துகளை ஒதுக்கி செயலாற்றுகிறது. இடஒதுக்கீடுஎன்பது வேலைவாய்ப்புகளில் இருந்து நின்று போகும் .பொருளாதார தாராளவாதமும் இதே நிலை தான் தலித்துகள் அடிப்படையில் உழைப்பாளிகள். தொழிலை ஆரம்பிக்கும் மூலதனம் அற்றவர்கள். இதற்கு மாறான அரசியல் நடவடிக்கைகளை எதிர்க்கும் குணம் தலித்துகளுக்கு ஏற்பட வேண்டும் . ஒரளவு படித்த தலித் பெண்கள் அரசு வங்கிக் கடனுதவி சலுகைகள் பெற்று இன்று எல்லாத்துறையிலும் முன்னேறி வருகின்றனர் . இதற்குச் சான்று சென்னையில் பத்து ஒடுக்கப்பட்ட பெண்கள் ஆட்டோ ஒட்டும் பணி மேற்கொண்டுள்ளனர் . ஆண் பெண் இருவரது உழைப்பிலும் எந்தவித உயர்வும் தாழ்வுமில்லை என்பதை இந்நிகழ்ச்சி நிரூபிப்பதாக அமைகின்றது. இருப்பினும் ஒரு குறிப்பிட்ட காலவரையறையை 'வாகனம் ஒட்டுவதற்காக' மட்டுமே அவர்கள் பயன்படுத்துவது இன்னும் முழுமையான விடுதலையைப் பெண்கள் அடையவில்லை என்பதையே உணர்த்துகிறது. இச்செயற்பாடுகளை தலித் பெண்நிலைவாதத்திற்கு முன்மாதிரியாகக் கொள்ளுவதும் மேலும் புதிய ஆக்கப்பூர்வமான மனித விடுதலை நோக்கிய போராட்டங்களை மேற்கொள்வதும் தலித் பண்நிலைவாதத்தின் கருத்துத்தனத்தை அர்த்தமுடையதாக மாற்றும் .

**தலித் பெண்களும் உளவியலும் – மார்கரெட் கலைச்செல்வி**

தலித் பெண்கள் யார்?சமூக ரீதியாக, ஏற்றத்தாழ்வுள்ள உறவு நிலைகளையும் , அதிகார உறவுகளையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் , ஒவ்வொரு நாளும் ,ஒவ்வொரு மணிநேரமும் ,ஒவ்வொரு நிமிடமும் , ஒவ்வொரு மணித்துளியும் சந்தித்துக் கொண்டிருக்கின்றவர்கள் தலித் பெண்கள் . பொருளாதார ரீதியாக, உழைப்புச் சுரண்டலில் சிக்குண்டு, உழைப்போடு மட்டுமே

உறவாடி, தங்களின் முகவரிகளை இழந்து, கடைநிலை ஊழியர்களாக்கப்பட்டவர்கள் தலித் பெண்கள் . அரசியல் ரீதியாக, மனிதர்களாகக் கருதப்படாமல் , ஓட்டுச்சாவடிகளாக, சந்தைகளாக, இடமாக மாற்றப்பட்டவர்கள் இவர்கள் . தங்கள் மீதும் , தங்கள் உடல் மீதும் அதிகாரம் இழந்தவர்கள் . தங்களின் நிலை குறித்து முடிவெடுக்க இயலாதபடிக்கு, முளைச்சலவை செய்யப்பட்டவர்கள் . கலாச்சார ரீதியாக, நீ தீண்டத்தகாதவள் , கிராமத்துவாசி என்றெல்லாம் முத்திரை குத்தி, தள்ளி வைக்கப்பட்டவள் ஒரு தலித்பெண். தாசியாக, தேவதாசியாக, வாழும் நிலைக்கு தள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்டவர்கள்.. இதற்கு சமயம் ஒரு கருவியானது. கருத்து ரீதியாக, அனைத்து ஒடுக்குதல்களையும், உள்வாங்கி, நான் அடிமைப்பட்டிருக்கின்றேன் , என்ற நிலையை உணராமலேயே இதுதான் தலைவிதிக்கோட்டை ஏற்று வாழக் கற்றுக்கொடுக்கப்பட்டு, அப்படியே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தலித் பெண்கள் . இந்நிலையை 'மாக்ஸ் வெப்பர் ' என்னும் சமூகவியலாளர். ‘concept of Hegemony’ crear அழைக்கின்றார். (16960டு என்பது சமூக வாழ்வில், மக்கள் மனதில், அவர்களின் உணர்வில் ஏற்பட்டுள்ள ஒரு நிலைப்பாடு ஆகும் . இந்த நிலைப்பாடு, பிராமனியத்தைப் போன்றே எல்லோர் மனதிலும் ஊடுறுவி நிற்கின்றது. இதனால் , பெண்களும் , ஆண்களும் ஆதிக்க சக்தியின் உணர்வினை உள்வாங்கிக் கொண்டு, அதைப்பற்றி வெளிப்படையாக கேள்வி எழுப்ப முடியாமல், அதிகார உறவினை ஏற்றுக்கொண்டு வாழ்கின்றனர் . இவ்வகையில் தலித் பெண்கள் தங்களின் வாழ்க்கை குறித்தும் , சமூக நிகழ்வுகளைக் குறித்தும் எவ்வகை உணர்வினைக் கொண்டிருக்கின்றார்கள் என்ற தேடலின் விளைவே இக்கட்டுரையாகும்

**உளவியல் என்றால் என்ன**

அரிஸ்டாட்டில் என்ற கிரேக்கத் தத்துவ அறிஞர் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள் ' என்ற நூலே உளவியல் பற்றி முதன் முதலாக எழுந்த நூலாகும் . அதன் பிறகு 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த குளோக்கல் என்ற அறிஞர் தன் நூலுக்கு உளவியல் (Psychology) என்று பெயரிட்டார். உளவியல் என்ற சொல் மனப்போங்கு, உள்ளப்போங்கு, ஆன்ம இயல், மன இயல் எனப்பல்வேறு வார்த்தைகளால் விளக்கப்படுகின்றது. உளவியல் வளர்ச்சியடைந்த பின்னர் அதன்

ஆராய்ச்சிப்பொருள்பற்றிக் கருத்துக்களும் விரிவடைந்து கொண்டே செல்கின்றது. மனிதர்களின் நனவு நிலை (Concious Mind) நனவிலிநிலை (Unconcious Mind) ஆகிய இரண்டிற்கும் உள்ள தொடர்பினையும், அவற்றை இயங்கச் செய்யும் காரணிகளையும் பற்றி ஆய்வு செய்வது உளவியல் ஆய்விற்கு உட்பட்டதாகின்றது. அந்த வகையில் மனிதர்களது நடத்தை பற்றி சில அடிப்படைக் கருத்துக்கள், இன்று பொதுவாக, எல்லா உளவியலறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவற்றுள் முக்கியமானது: "உடலுக்குள்ளிலிருந்து எழும் வேட்கைகள், கிளர்ச்சிகள் ஆகிய தூண்டல்கள், வெளியுலகச் சூழலிலிருந்து எழும் தூண்டல்கள், மனிதனின் சமூக உறவினின்றும் எழும் தூண்டல்களினால் மனிதனின் நடத்தை தோற்றுவிக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுகின்றது" என்பதாகும்.

மனிதர்களில் நடத்தையும், மனப்பான்மையும், நெறிப்படுத்தப்படுதல் என்பது சமூகமயமாக்குதலின் ஒர் அங்கமாகும். அவ்வகையில் தலித் பெண்களின் நடத்தையும், மனப்பான்மையும் காலங்காலமாக சமூகமயமாக்கப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாக இருக்கிறது.

உடலில் ஏற்படும் வடுக்கள் போன்றே உள்ளத்தில் ஏற்பட்ட வடுக்களும் மாறாமல் இருக்கின்றன என்பது ரால்ஃப் காஃப்மேன் அவர்களின் கூற்றாகும் மேலும், டேனியல் வெப்ஸ்டர் என்ற இன்னுமொரு அறிஞர் கூறுகையில் பளிங்கு கல்லில் நாம் செதுக்கினால் காலம் அதை அழித்துவிடும். ஆலயங்களை நாம் எழுப்பினால், அவை தரைமட்டமாகித் தவிடு பொடியாகும். ஆனால் அழிவற்ற உள்ளங்களை ஆண்டு, நியாயமான கொள்கைகளை அவற்றிலே நாம் புகுத்தி நிலை நிறுத்தினால், உள்ளமெனும் செப்பேடுகளில் நாம் பொறிப்பதைக் காலமும் அழிக்க முடியாது. என்றென்றும் ஒளிவீசி நின்று நிலைக்கும் அவை", என்று கூறிய கருத்துக்கள் , முறையாக நாம் தலித் பெண்களின் உள்ளத்தைப் புரிந்துக் கொண்டு, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள, சவால்களைச் சந்திக்க நம்மை "அழைத்துச் செல்கின்றது. அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள

வடுக்களும், காயங்களும், அனுபவ வெளிச்சங்களும், நம்முடைய வாழ்க்கைக்கு பாடங்களாக அமைகின்றன.

ஆய்வுக்காக தெரிந்து கொள்ளப்பட்ட இடங்கள், தொடர்ந்து சாதிக் கலவரப் பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருக்கின்ற காரியாபட்டி (அல்லாளபேரி) மேலவளவு, அலங்காநல்லூர் ஆகிய கிராமங்களாகும் . மதுரை, மதுரை சுற்றிலுமுள்ள பல கிராமங்கள் கலவரங்களை சந்தித்த வண்ணம் இருக்கின்றன. மேற்கூறிய கிராமங்கள் மாதிரி கிராமங்களாக (Smaple) தெரிவு செய்யப்பட்ட கிராமங்களாகும் . நகரத்தில் வசிக்கும், உழைக்கும் தலித் பெண்களிடத்திலும், அலுவலகத்தில் பணியாற்றும் தலித் பெண்களிடத்திலும் நேரடிப்பேட்டி (Personal Interview) மூலமாக கருத்து சேகரிக்கப்பட்டது. தலித் பெண்களின் நிலை குறித்து விளக்கம் தரும்போதே, இவர்களின் உளவியல் குறித்து அறிய வேண்டியதின் நோக்கம் புலப்பட்டிருக்கும் . அதிகார உறவுகளின் சிக்கி அவமானத்தை தாங்கி, உரிமை இழந்து, உள்ளம் ஊமையாக்கப்பட்டவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த இழிநிலை மாறவே தலித் பெண்களின் மனப்போங்கு (உளவியல்) என்ன என்று அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நான் என்னைக் குறித்து அறிமுகம் செய்து கொள்ளும் போதெல்லாம் என் தந்தை ஒரு Hill Tribe தாய் ஒரு Hill Tribe நான் ஒரு City Tribe என்று தான் அறிமுகப்படுத்துவேன். ஆதிவாசி ரத்தம் என்னுள் இருப்பதாலேயே என்னால் பலவற்றை வித்தியாசமானமுறையில் சிந்திக்க முடிகின்றது. எடுத்துக்காட்டாக, நிலம், நிலம் பொதுவானது. நிலத்தில் உழைப்பவர்கள் அதைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் செய்கின்றவர் . ஆனால் நிலத்தில் உழைக்காதவர்கள் அதைப் பெருமளவில் வைத்துக் கொண்டு, உரிமை கொண்டாடி வருவதை என்னால் சகித்துக்கொள்ள முடிவதில்லை.

தாங்கள் எஸ்.டி. வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை வெளிப்படுத்த தெரியாத, விரும்பாத என் பெற்றோர், பள்ளிக் குறிப்பேட்டில் இனத்தைக் குறித்து எதுவும் சொல்லாமல், மதத்தைக் குறித்து மட்டும் சொல்லிவிட்டனர் . அதிலும் குறிப்பாக "இந்தியக் கிறிஸ்தவர் ' என்று சொல்லிவிட்டனர். ஆனால் நான் ஒரு ஆதிவாசிப்பெண் அல்லது தலித் என்று சொல்வதையே

பெருமையாக நினைக்கின்றேன். இது போன்றே, தான் ஒரு தலித் என்ற 'உள்ளுணர்வே' தலித் பெண்களின் உளவியலுக்கு அடிப்படையாகும். இந்த உள்ளுணர்வும் ,உந்துதலும், தலித் பெண்களை ஒரு போராட்ட நடவடிக்கைக்கு இட்டுச் செல்லும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

“அடிப்படையில் ஒரு கருத்து உண்மையானது என்பது தன்னாலேயே விளங்கும்படி அமையவேண்டும். உள்ளுணர்வினாலேதான் இப்படி அறிய முடியும். கணிதத்திலும், அளவையிலானிலும் காணும் அருவக் கருத்துக்கள் உள்ளுணர்வினால் கண்டறிந்தனவே. இக்கருத்துக்கள் நம் அனுபவத்தை, அறிவுக்கேற்ற வகையில் நன்கு விளக்க முற்படுவதால் ஏற்புடையன என ஆராய்ந்து தெரிந்து ஏற்றுக் கொள்கிறோம்.” என்பது கல்வி உளவியலாளர் வில்லியம் அவர்களின் கூற்றாகும். எனவே தலித் பெண்' என்ற உள்ளுணர்வு விளக்க முற்படும் உண்மையின் தேடலுக்குள்ளாக நம்மை இட்டுச் செல்ல இவ்வாய்வுக் கட்டுரை நமக்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன். நான் பேசிய பெண்ணிடம் 'உள்ளுணர்வு' எவ்வாறிருக்கின்றது. என்பதைப் புரிந்து கொள்ள உற்றுநோக்கல் முறை (Observation Method) பயன்படுத்தப்பட்டது. வாழ்க்கையில் ஏற்படும் யதார்த்தங்களைப் பற்றிய, தலித் பெண்களின் பார்வை எப்படி இருக்கின்றது என்பதை புரிந்து கொள்வதற்கு ஒரு சில முக்கியமான பிரச்சனைகளை தெரிவு செய்து அதைப்பற்றி அவர்களின் கருத்தும், உள்ளுணர்வும், கண்ணோட்டமும் எவ்வாறு இருக்கின்றது என்று பல கேள்விகள் கேட்கப்பட்டு அதனடிப்படையில் ஒரு சில உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**செயலை ஊக்குவிக்கும் தூண்டுதலாக உள்ளுணர்வைப் புரிந்து கொள்ளுதல்**

சமீபத்தில் நடைபெற்ற சாதிக்கலவரத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மேலவளவு மற்றும் அல்லாளபேரி பெண்களின் வார்த்தைகளிலிருந்து அப்பெண்களின் உள்ளுணர்வை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். ஆறு தலித் ஆண்கள் : வெட்டிக் கொல்லப்பட்டிருந்த வேளையில், அங்குள்ள பெண்களின் உணர்வு சற்று மேலோங்கி இருந்தது. ஆறுக்கு ஆறு சாய்க்கப்பட்டே ஆகவேண்டும் என்றனர். கொன்றவர்களைப் பழிவாங்கியே தீரவேண்டும்

என்றனர். அல்லது தூக்கிலிடப்பட வேண்டும்என்றனர். அதே வேளை சாதிச் சண்டையினால் இடம் பெயர்க்கப்பட்ட அல்லாளபேரியில் உள்ள பெண்களின் உணர்வுகள் சற்று வித்தியாசமாக இருந்தது. அவர்களின் கூற்றுப்படி தலித் மக்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதனால் தான் எங்களை (தலித் மக்களை) எளிதாக எண்ணி விடுகின்றனர் . எனவே தலித் மக்கள் தங்கள் எண்ணிக்கையை கூட்டவேண்டும் என்றனர். இவ்வகை இனப்படுகொலையைப் பற்றி நகரத்தில் வசிக்கும் தலித் பெண்களிடம் கேட்டபோது இவ்வகைச் சம்பவங்கள் அதிர்ச்சி தரக்கூடியதாக இருக்கின்றது என்றனர். சாதியம் தங்கள் மீதும், தாங்கள் சார்ந்திருக்கும் சமூகம் மீதும் செலுத்துகின்ற அடக்குமுறைக்கும் ஆதிக்க வெறிக்கும் எதிராக தங்களின் செயல்பாடுகள் அமையும் என்பதை இவர்களின் உள்ளுணர்வு நமக்குக் காட்டுகிறது.

**உடலும் உள்ளமும் குற்றப்படுத்தப்படுத்தல்**

ல்லூரிப் படிப்பை முடித்த ஒரு தலித் மாணவியின் அனுபவம் மிகவும் வேதனைக்குரியது. தலித் மக்கள் மீது செலுத்தப்படும் அடக்குமுறைகளை, சந்திக்கும் போதும், இதைப்பற்றி கேள்விப்படும் போதும் கோபமும் ஆத்திரமும் வருவதாகத் தெரியப்படுத்தினார். இப்பெண்ணின் ஆவேசத்தை அவள் கண்களிலும் பார்க்க முடிந்தது. தாய்மை, கற்பு, பாசம், பாலியல் சுகம் இவைகள் பெண்ணின் உடம்போடு ஒட்டிய விஷயங்களாக ஆதிக்கக் கலாச்சாரத்தால் பார்க்கப்படுவது போல நிறமும் , சாதியும் தலித் பெண்களின் உடம்போடு ஒட்டியதாகப் பார்க்கப்படுகின்றது. இதனால் 'தீண்டாமை' என்னும் தீயினுள் ஒவ்வொரு பெண்ணும் , தினம் தினம் செத்துக் கொண்டிருக்கின்றாள் . மனிதக் கழிவை அகற்றுதல், தெரு கூட்டுதல், கழிவறை சுத்தம் செய்தல் போன்ற தொழிலில் ஈடுபடுகின்ற கிராமத்துப் பெண்கள், இது தங்களின் விதி என்று நொந்து கொள்கின்றனர் . ஒரு சாதி இந்து தன்னைப் பார்த்து 'தள்ளி நில் ' என்று சொல்லும்போது தலைகுனிவும் குற்ற உணர்வும் ஏற்படுவதாக தெரியப்படுத்தினர் . பிறரைத் தொடக்கூடாத அளவுக்கு தாங்கள் குற்றவாளிகளோ என்ற குற்ற உணர்வுக்குள்ளாக தள்ளப்படுவதாகத் தெரியப்படுத்தினர்.

**பாலியல் பலாத்காரத்திற்கெதிரான காப்புணர்ச்சி**

(FEELING OF SECURITY AGAINST SEXUAL OPPRESSION)

தலித் பெண்கள் மீது சாதி இந்து ஆண்கள் நடத்தும் பாலியல் பலாத்காரம் மீண்டும் மீண்டும் தலித் பெண்கள் மீது நடத்தப்படும் அதிகாரஅடக்குமுறையாகும் . இதைப்பற்றி இவர்களின் உணர்வில் கோபம், ஆத்திரம், வெறித்தன்மையும் வெளிப்பட்டது. இதற்குக் காரணம் இவர்கள் மீது காலங்காலமாக தொடுக்கப்பட்ட தொடர் வன்முறையேயாகும். சாதாரண கிண்டல் கேலியிலிருந்து, பலாத்காரமாக உடல் உறவு கொள்ளுதல் வரை தலித் பெண்கள் அனுபவித்த வன்முறையிலான உறவு முறைகளே இவர்களின் ஆத்திரத்தை தூண்டுவதாக அமைந்துள்ளது. பல நூற்றாண்டுகளாக அச்சுறுத்தலுக்குள்ளாகவே அழுக்கப்பட்ட பெண்கள் , அச்சத்தையே அணிகலனாக அணிந்து கொண்டிருக்கின்றனர் . இதனால் தங்கள் வாழ்விடங்களைவிட்டு வெளியேறி செல்லவும் தயக்கம் காண்பிக்கின்றனர் . 'அடி ஆத்தி, அம்புட்டு தூரம் ஒத்தையில போறதா? எங்கவூட்டு ஆம்பள ஆளு துணையில்லாம அங்கெல்லாம் போகமாட்டோம்" ,என்ற அவர்களின் உரையாடல் பாணி இவர்களின் சமூக நடவடிக்கையை (Social Mobility) புரிந்து கொள்ளவும், சமூகத்தில் உறவாட அவர்கள் எவ்வளவு தூரம் பயப்படுகின்றனர் என்பதையும் வெளிப்படுத்தியது. அதுபோல, எதையும் சந்தேகத்தோடு அணுகுகின்ற ஒரு போங்கும் இவர்களிடத்தில் காணப்படுகின்றது. வயக்காட்டில் மலம் கழிக்க சென்ற பெண்களை சாதி இந்து ஆண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினதினாலும் , வயல் வேலைக்கு சென்ற போது தவறாக, வன்முறையாக அணுகப்பட்டதாலும் , உதவி செய்ய வா, என்று கூப்பிட்டு உடலை உரிமை கொண்டாடியதாலும் ஏற்பட்ட உள்க்காயங்களால் இப்பெண்கள் யாரையும் சந்தேகக் கண் கொண்டு தான் பார்க்கின்றார்கள் . நம்பவைத்து கழுத்தறுக்கப்பட்ட கதைகள், மேலும் மேலும் நம்பிக்கை இழக்கச் செய்திருக்கின்றது.

**குடும்பச் சிக்கலைத் தீர்க்கும் விருப்பு வெறுப்பற்ற நேரிய மனப்போக்கு**

கணவன் மனைவியை அடித்தல் முதல் பாலியல் துன்புறுத்தல் (Incest) வரை அனைத்து கொடுமைகளும் இவர்களை விட்டு வைக்கவில்லை; தலித் பெண்களின் அன்பும் அறிவும்

சூறையாடப்படுகின்றது. ஆண் ஆதிக்க அமைப்பின் கருவிகளான, அச்சம் , மடம் , நாணம் , பயிற்பு போன்ற நான்கு குணங்களும் இவர்களைத்தான் வெகுவாகப் பாதித்திருக்கின்றது. இத்தனையும் சகித்தாலும், இவர்கள் தலித் மக்கள் ஈடேற வேண்டும் என்ற ஒரே நோக்கின் அடிப்படையில், சிலவற்றை சகித்துக் கொள்கின்றனர். குடும்பத்திற்குள்ளேயே இவர்களின் போராட்டம் தொடர்கிறது. தன்னால் எதிர்க்க முடியாத சூழலில் உழைப்பையே நம்பி வாழும் இவர்கள் உழைத்து வாழவும் துணிந்து விடுகின்றனர். இதைப்பகிர்ந்து கொள்ளும்போது வேதனை அவர்கள் கண்களில் தொனித்தது. குடும்பத்திற்குள்ளேயே, தீட்டுப்பட்டவளாக நடத்தப்படும் . தருணங்களும் உண்டு. மரம் செடி, கொடிகளுக்கு தண்ணீர் ஊற்றாமல் இருப்பது போன்ற நடைமுறைப் பழக்கங்களில் ; தலித் பெண்கள் தீட்டுப்பட்டவர்களாக தற்காலத்தில் கருதப்படுகின்றனர் . மாதவிடாய் நேரங்களில் பெண்கள் தீட்டானவர்கள் என்பதை ஆதிக்க சமயமும் , சாதியும் வலியுறுத்தி வருகின்றது. இது இவர்களின் மனதிலும் ஆழப்பதிந்திருந்ததால் மாதவிடாயை ஒரு தீட்டாகவும் அது ஏற்படும் நேரத்தில் தாங்களும் தீட்டானவர்கள் என்றும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதனால் , தீண்டாமை என்பது பெண்களின் கருவறைக்கும் பூசப்படும் தீட்டுச் சாயமாகப் பார்க்கப்படுகின்றது. குடும்பக்கட்டுப்பாடு என்பது அரசாங்கம் இவர்கள் மீது திணிக்கும் கட்டாய வன்முறையாகும். ஆனால் குடும்பக்கட்டுப்பாட்டை இவர்கள் எதிர்க்கின்றனர். குடும்பத்தை பற்றிய இவர்களின் புரிந்து கொள்ளல் சற்று ஆழமானதாக பரந்துபட்ட ஒன்றாக இருக்கின்றது. கடையவரின் நலன் என்று மற்றவர்கள் இவர்களைப் பார்க்கும் பார்வைக்கு பதிலாக, அனைவரின் நலமே இவர்களின் போங்காக இருக்கின்றது. ஒருவருக்கொருவர் அச்சுறுத்தலின்றி வாழ வேண்டுமாயின் தலித் மக்களின் எண்ணிக்கையை கூட்ட வேண்டும் என்பதே இவர்களின் உணர்வாகும். பெண் குழந்தையாயினும் பரவாயில்லை, அவர்கள் இன்னும் பலுகிப்பெருகவேண்டும் என்றனர் .

**வரதட்சணைக்கு எதிரான அறப்போராட்டம்**

ஒருபெண் தனது கணவன் வீட்டுக்கு பொருள்களாகவோ, அல்லது சொத்துக்களாகவோ கொண்டுவருவதே வரதட்சணை. இப்பழக்கம் ஆதிக்க சாதியினரிடமிருந்து, தலித் பெண்களின்

பார்வை முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கிறது. சொல்லப்போனால் வரதட்சணையும் கிடையாது. ஒரு தட்சணையும் கிடையாது என பதில் கொடுத்தனர். என்றாலும் சமூக அந்தஸ்து கிடைக்கவேண்டுமானால் தாங்களும் இவ்வாறு ஒரு நடைமுறையைப் பின்பற்றவேண்டும் என நம்புவதற்கு தள்ளப்படுகின்றனர். உழைத்துச் சாப்பிடவேண்டும், ஒருத்தருக்கொருத்தர் சுரண்டி வாழக்கூடாது என்றனர். வரதட்சணை வாங்கும் பழக்கத்தில் ஒருவர் சொத்தை ஒருவர் அபகரித்துக் கொள்வது தான் நடக்கின்றன. உழைப்பினால் கிடைக்கும் பலனைக்கொண்டு கஞ்சி குடிக்கவேண்டும் என்கின்றனர். பிறரிடமிருந்து வாங்குவதை தலித் பெண்கள் துளிகூட விரும்புவதில்லை. இது இவர்களின் தனிப்பட்ட, ஒட்டுமொத்த கருத்தும் எனப்படுகின்றது.

**உரிமை மீறல்களும் உள்ளக் குமுறல்களும்**

குடும்பத்தில் கணவன் மனைவியின் உடல்மீது செலுத்தும் அதிகாரமும் , ஆதிக்கமும் தேவதாசி முறையின் மூலம் சமூகத்தில் இன்னுமொரு நிலையில் நடைபெறுகின்றது. பொட்டுத்தாலி கட்டும் பழக்கம் இன்றளவும் நடக்கின்றது. குறிப்பாக தலித் பெண்கள் இதில் ஈடுபடுத்தபடுவது குறித்து சமீபத்தில் வெளியான நக்கீரன் பத்திரிக்கைசெய்தி மூலம் வெளிப்பட்டிருப்பதிலிருப்பது பலருக்கு தெரிய வந்திருக்கும் என நம்புகிறேன் . பொட்டுத்தாலி கட்டி வாழ்ந்த பெண்ணின் குடும்பத்தார் அத்தொழிலை விட்டுவிட்டு வேஷம்கட்டி ஆடிப்பிழைப்பதை தொழிலாக கொண்டிருக்கும் தற்போதைய தலை முறையினருடன் உரையாடும் வாய்ப்பு கிட்டியது.

தன்னுடைய அம்மா ஒருகாலத்தில் பொட்டுத்தாலி கட்டி வாழ்ந்தார் என்பதை வெளியில் சொல்ல விரும்புவதில்லை. அதைக்குறித்து விசாரிக்கையில், குரல் ஒசை சற்று தாழ்வாக்வே இருந்தது. இதன் மூலம் அருகில் இருக்கும். தன் சிறிய குழந்தைகளும், குடும்பத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் மருமகளுக்கும் கூட தங்களின் பூர்வீகம் பற்றி தெரியவில்லை என்பது புலப்பட்டது. தாங்கள் தேடிக்கொண்டிருக்கும் சமூக அந்தஸ்து தங்களின் வரலாற்றைத் தோண்டுவதில் போய்விடுமோ? என பயப்படுகின்றனர். குறவன் , குறத்தி வேஷம் கட்டி ஆடும்பொழுது ஆண்கள் பெண்களின் உடலை ஆபாசமாக பார்ப்பதாகவும் , மிகவும் மட்டமாக தங்களை அணுகுவதாகவும்

தெரியப்படுத்தினர். இதனால் தங்கள் மனம் வேதனை அடைகிறது எனவும், புண்படுகின்றது எனவும் சற்று தழுதழுத்த குரலில் கூறினார்கள். என்றாலும் சற்று சுதாரித்துக்கொண்டு, அவ்வாறு நடப்பவர்களை அடிக்கவும் தயங்கமாட்டோம் என்றனர். தங்களை ஊனப்படுத்துபவர்களை, எதிர்க்கும் உணர்வுடனே வாழ முற்படுகின்றனர். அதே வேளை, வாழ்வுக்கான ஆதாரங்களை உற்பத்தி செய்யும் பணியிலும், இயற்கையைப் பாதுகாப்பதிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பதால், வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

ஆபாசமான நடனத்தையும், இரட்டை அர்த்தமுள்ள வசனங்களையும் வெறுக்கின்றனர். கலாச்சாரம் மக்களின் வாழ்வைக்காட்டும் கண்ணாடி அதே போல் கலாச்சாரம், ஆதிக்க சக்தியின் கருவியாக செயல்பட்டு வருவதை எதிர்க்கும் எதிர்க்கலாச்சாரமும் தலித் பெண்களிடையே தான் இருக்கிறது. எதிர்க்கலாச்சாரம் என்பது அடிபட்ட உள்ளங்களின் உணர்வாக இருக்கின்றது.

**உறவுக்கும் உரிமைக்கும் இடையேயுள்ள உளச்சிக்கல்கள்**

கணவன் மனைவியை தள்ளி வைப்பது, ஆணுக்கு வழங்கப்பட்ட உரிமையாகவே பார்க்கின்ற சமூக சூழலில் , மணமுறிவு, திருமணத்திலிருந்து விலகியிருத்தல் என்பது தலித் பெண்களைப் பொருத்தமட்டில் பிரச்சனைக்குரியதாகவே இருக்கின்றது. என்றாலும் இறுதிக்கட்டமாக, மறுவாழ்க்கையிலிருந்து விலகி இருக்க தடையோ, தயக்கமோ கிடையாது என்றனர். மறுமுறை சந்திக்க இயலாதபடி தங்களைத் தடுப்பது, குழந்தைபேறும், வயதும் ஆகிய இரண்டும் தான் என்றனர். வயதிற்கேற்ப ஏற்படும் உளவியல் சிக்கல்கள், சமூக முன்னேற்றம் இரண்டிலும் . பெண்கள் தங்களுக்கு இயல்பாக ஏற்படும், இயல்பகங்களை நனவில! நிலைக்கு தள்ளிப்போடுகின்றனர் . இதனால் நனவு நிலையால், சரியாக செயல்பட முடியாதபடிக்கு தாய்மைப் பண்பும் , வயதும் இரண்டும் இவர்களைக் கட்டுப்படுத்துகின்றது. தான் ஒரு குழந்தைக்கு தாய் என்பதாலும் தன் வயதுக்கு தான் சிந்திப்பவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்ற தயக்கத்தினாலும் ,மணமுறிவை இவர்கள் ஆதரிப்பது கிடையாது. இதற்கு இன்னுமொரு காரணம்

அகமணமுறை. தாய்மாமன் கலாச்சாரம் என்பது மிகவும் அதிகாரம்வாய்ந்த ஒன்றாக இருக்கிறது இதனால் கணவன் மனைவி குறித்த சிந்தனையும் மிக குறுகிய வட்டத்திற்குள்ளாகவே இருக்கின்றது.

தலித் பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள் , அவர்களின் உளச்சிக்கலை இயக்கம் பெறச் செய்திருக்கின்றது. இதனால் தங்களுக்கு ஏற்படும் உள்ளுணர்வுகளில் மிகவும் தெளிவாக இருக்கின்றனர் . ஆதிக்ககலாச்சாரத்தின் பல்முனை தாக்குதலில் பாதிக்கப்பட்டிருந்தாலும், எடுத்துக்காட்டாக வெகுதிரள் தொடர்பு சாதனங்கள் ஆதிக்க சாதியின் பிரச்சார பீரங்கிகளாக செயல்படுகின்றன. இவைகள் தலித் பெண்களுக்கு ஆதரவாக இருந்ததும் கிடையாது, இருப்பதும் கிடையாது. கலாச்சாரம், பழமொழிகள் மூலமாகவும், வழக்குச் சொற்கள் மூலமாகவும் தொடுக்கின்ற வசவுகளும்பழிச்சொற்களும் இன்னுமொரு தாக்குதல், இது இவர்களின் உளச்சிதைவை அதிகப்படுத்துகின்றது. படித்த, நகர்ப்புறத்தில் வசிக்கும் தலித் பெண்கள் தங்களை அடையாளம் காட்டிக்கொள்வதில் சற்று தயக்கம் காண்பிக்கின்றனர் . ஆனால் கிராமத்துப் பெண்களுக்கு தங்களின் சாதியே ஒரு அடையாளம் ஆகும். நகரத்தில் வசிப்பவர்கள் ஏன் இவ்வாறு தங்களை வெளிக்காட்டுவதில் தயக்கம் காட்டுகின்றனர் என்பதற்கு, இவர்களின் தாழ்வு மனப்பான்மைதான் காரணம் என்று தலித் தலைமையில் இருப்பவர்கள் எண்ணுகின்றனர் அதுவும் ஒரு கணமே தவிர, அதுவே காரணமாகாது. காலங்காலமாக தொடர்ந்து,நடைபெறும் , மேலாதிக்க கருத்தியல் ஆணவமும் ஒரு காரணமாகும் ஒரு தலித் ஆண் , ஆண் என்பதாலேயே பல சலுகைகளைப் பெறுகின்றான் ஆனால் ஒரு பெண்ணுக்கு தலித் என்பதால் மட்டுமல்ல, பெண் என்பதாலேயே பல சலுகைகள் மறுக்கப்படுகின்றன. தங்களின் உளத்தேவைகளும் உடல் தேவையும் மறுக்கப்படும்போது, உளச்சிக்கல்கள் அதிகரிக்கிறது. தன்மான உணர்ச்சி பாதிக்கப்படும் போது, சுயமரியாதை இழக்க நேரிடும்போதும், ஏற்படும் சிக்கலை மேற்கொள்வதற்கு ஒரு தலித் ஆணுக்கு பல வடிகால்கள் இருக்கின்றது. ஆனால் தலித் பெண்களுக்கு வடிகால்களே வாழ்க்கையாகி போய்விட்ட நிலையில் தன்மான உணர்வும்,

சுயமரியாதையும் தக்க வைத்துக்கொள்ள வேண்டிய உணர்வுக்குள்ளாக இருக்கின்றனர். குடிப்பழக்கமும், சிகரெட் பிடிக்கும் பழக்கமும், பெண்கள் தவிர்க்க வேண்டும் என்ற தொனியை முன்வைக்காது அறநெறி, சார்ந்தும் கண்ணோக்காது, அவலத்தைக் குறித்து மட்டுமே சுட்டிக்காட்ட விழைந்தேன். ஒருபுறம் தங்களின் நிலையைக் குறித்த எண்ணமும், இன்னொரு புறம் சுயமரியாதையைக் காத்துக் கொள்ளவேண்டும், போராட வேண்டும் என்ற துடிப்பும் இவர்களிடத்தில் காணப்படுகிறது. இன்னும் பல ஊர்களில் மனிதக் கழிவை அகற்றும் தொழிலில் பெண்கள் ஈடுபட்டிருக்கின்றனர். தன்மானத்தை இழந்து அந்தத் தொழிலில் ஈடுபடும்போது குடிப்பழக்கமும், சிகரெட் பிடிப்பதும் இவர்களுக்கு வாடிக்கையாகி விடுகின்றது. ஓரங்கட்டப்பட்ட இவர்களின் வாழ்க்கையில் மிஞ்சியதெல்லாம் தான் ஒரு தாழ்த்தப்பட்டவள் என்ற உணர்வு மட்டும் தான். நகரங்களில், பள்ளிக்கூடங்களில் எஸ் .சி/எஸ் .டி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றி பிற சாதிக்காரர்களின் ஏளனப் போங்கும், கேலிப் பேச்சும் இளம் தலித் பெண்களிடையே ஒரு வெறியைத் தூண்டிவிட்டிருக்கின்றது. தாங்கள் சாதிக்க பிறந்தவர்கள் என்ற உள்ளத்துடிப்பு அவர்களிடத்தில் காணப்படுகின்றது. ஆரம்ப கட்டத்தில் கூறினது போல தலித் பெண்கள் (Hegemony) என்னும் நிலைப்பாட்டினுள் இருக்கும்போது அவர்களால் எப்படி போராட இயலும் என்ற அடிப்படைக் கேள்வி எழுந்தது. உண்மையில் முதலாளித்துவ, சாதிய ஆதிக்க அமைப்பிற்குள் வாழும் ஏழை, நிலமற்ற விவசாய கூலி, தலித் மக்கள் அனைவருமே இப்படிப்பட்ட நிலைப்பாட்டினுள் இருப்பதற்கான சமூக சூழலும் , அர்த்தமும் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது என்றாலும் தலித் பெண்கள் காலங்காலமாக அனுபவித்து வந்த அடக்குறையினைஎதிர்த்து குரல் எழுப்ப கிளம்பி விட்டனர். தலித் பெண்களின் உளவியல் சமூக மாற்றத்திற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இவர்களின் குரல்கள், நாம் இவர்கள் பக்கம் உற்றுநோக்க நம்மை அழைக்கின்றது. ஒருமுறை மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது அங்கு ஒரு வாசகத்தைப் பார்த்தேன். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது. "குழந்தைகள் கண்ணாடியைப் போன்றவர்கள். அவர்களை கவனமாகக் கையாளுங்கள்" என்ற வசனத்தைப்

பார்த்தேன் . தலித் பெண்களின் உளவியல் என்பது பலவீனமானதும் அல்லது உடையக் கூடியதும் அல்ல. மாறாக உடைக்கப்பட்டிருக்கின்றது. பலவீனப்படுத்தப்பட்டி ருக்கிறது. இதைக் கவனமாகக் கையாள வேண்டும் . நசுக்கப்பட்ட உள்ளங்களின் உயிர்த்துடிப்பான உண்மைக் கதைகள் ஏராளம். அதைக் கேட்பதற்கான செவி அல்ல இதயம் நம் எல்லோருக்கும் தேவைப்படுகின்றது. அவர்களைப் புரிந்து கொள்வதற்கான நுண் அறிவுத் திறமை வேண்டியிருக்கின்றது. தலித் பெண்களின் உள்ளக்குமுறலைக் கேட்டு, சரியான பதிலுரை வழங்க, நாம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது. சுயமரியாதையும், அங்கீகாரமும் பெற வேண்டியிருக்கின்றது. அப்படிப்பட்ட உந்துதல்கள் இக்கருத்துப்பட்டறை மூலம் கிடைக்க என் வாழ்த்துக்களை தெரியப்படுத்திக் கொள்கிறேன் .

**தலித் பெண்களும், இந்திய விடுதலை இயக்கங்களும் – நிர்மலா**

**பெண் விடுதலையின் தோற்றம்**

நிலபிரபுத்துவ சமுதாயம் முதல் குறிப்பிட்ட காலக்கட்டம் வரை மனித இன மறு உற்பத்திக்குள் மட்டும் வரையறுக்கப்பட்ட பெண், பின்னர் கூடுதலாக புதிய தொழில் மய சமுதாயத்தில் பொருள் உற்பத்தியிலும் ஈடுபட வேண்டிய கட்டாய சூழ்நிலை தோன்றியது. குடும்ப பொருளாதார தேவையின் அடிப்படையில் ஆரம்பத்தில் விவசாய உற்பத்தியில் ஈடுபட ஆரம்பித்த பெண்கள், பின்னர் கொஞ்சாம் கொஞ்சமாக ஒருங்கிணைக்கப்படாத சிறு சிறு தொழிற்சாலைகளிலும், கட்டிட தொழில் மாறும் அலுவலகங்களிலும் பணிக்கு சென்று பொருள் ஈட்டத் தொடங்கினர். பொருளாதார தேவை, உற்பத்தியின் தேவை என்றும் வீட்டிற்கும், நாட்டிற்கும் அவசியமான ஒன்றாக இருந்ததால் பெண்களை பொருள் ஈட்டும் துறைக்கு அனுப்ப ஆண்கள் அனுமதித்தனர். இதுவும் கூட இப்பெண்களுக்கு ஆணாதிக்க சமுதாயம் கொடுத்த சுதந்திரம் என்பதல்ல. அதற்கு பதிலாக, நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு என்பதை விட உலக பொருளாதார சந்தையில் போட்டியிட ஒவ்வொரு தனி மனிதனின் பங்கு தேவை என்பதால் ‘அனைத்து துறைகளிலும் பெண்கள்’ என்ற நிலை உருவாக்கப்பட்டது.

பொருளாதார தேவைக்காக பணிக்கு வெளியே சென்ற பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட தனிதுறைகள் என இருந்த காலம் மாறி உலகமயமாதல் , மேற்கத்திய கலாச்சாரம் இவற்றின் தாக்கமாக பெண்கள் அனைத்து துறைகளிலும் தங்களது முத்திரையை பதிக்க ஆரம்பித்தனர்.

இவ்வாறாக பெண்கள் ஆண்களுக்கென ஒதுக்கப்பட்ட அனைத்து துறைகளிலும் தங்களின் முகவரிகளை எழுதத் தொடங்கிய நாள் முதல் அவர்களுக்கான சிக்கல்களும் துவங்கிவிட்டன. இதற்கான காரணங்களையும், தீர்வுகளையும் அதற்கான வழிமுறைகளையும் , யோசித்த அதே நேரத்தில் பெண் விடுதலை என்ற சிந்தனையும் எழுந்தது. இதற்காக இயக்கங்களும் , அமைப்புகளும், ஆய்வுகளும், அனைத்தையும் தழுவிய பெண் விடுதலைக் கருத்தியலும் , "கோட்பாடும் தோன்றியது. இந்தியாவில் பல தன்னார்வ நிறுவனங்களும் மேற்கூறிய இயக்கங்கள் மற்றும் கருத்தியல்கள் வளர உதவியாக இருந்தன.

**சுதந்திரத்திற்கு முன் இந்தியாவில் பெண்கள் இயக்கங்களின் நிலை**

சுதந்திர இந்தியாவின் நிலை என்பது நாம் பல. வரலாற்று நிகழ்வுகளின் வாயிலாக அறிந்த ஒன்று தான். அந்த கால கட்டங்களில் பெண் தலைமையேற்று, பெண் விடுதலையை முன்னிறுத்திய பெண்கள் இயக்கங்கள் எண்ணிக்கையில் மிக குறைந்த அளவே. ஆனால் பெண்களின் பிரச்சனைகள் என அல்லாமல் வர்க்க, சாதிய பிரச்சனையை முன்னுறுத்திய ஆதிக்க ஆண் தலைமையேற்று வழி நடத்திய இயக்கங்களின் செயல்பாடுகள் , போராட்டங்கள் இவற்றில் பெண்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்க அளவு இருந்தது என்பது இன்றைய வரலாற்றில் மறைக்கப்பட்ட உண்மையாகும் . இப்போராட்ட காலகட்டங்களில், இயக்கங்களின் நிலைப்பாடு ஆண்கள் மைபப்படுத்திய ஆணாதிக்க சிந்தனையை உள்வாங்கிய தன்மையைக் கொண்டதோடு மட்டுமில்லாமல் , அவ்வியக்க பெண்கள், இன்றைய கட்சிகளில் அடிமட்ட தொண்டாகளாக தலித்துக்கள் இருப்பது போல, அன்று, இயக்கங்களின் முடிவெடுக்கும் நிலையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டு, கடைநிலை உறுப்பினர்களாகத் தான் இருந்தனர். இதற்கு உதாரணம் தெலுங்கானா போராட்டம். இவ்வாறாக தாங்கள் கலந்து கொண்ட இயக்கங்களில் பெண்களின் விடுதலையையும் முன்னுறுத்திக் கொண்டு செல்வார்கள் என்ற தங்களின் நம்பிக்கையை முற்றிலும் முறியடி க்கப்பட்ட நிலையில், ஆண் தலைமையேற்ற இயக்கங்களை விடுத்து, தங்களின் விடுதலைக்கு மற்றும் தங்கள் உணர்வுகளை உணர்ந்து கொண்டு முன்னிறுத்திச் செல்ல

தாங்களாகவே இணைந்த இயக்கங்கள் தேவை என்பதை உணர்ந்ததன் விளைவே, பெண்கள் இயக்கங்களின்

தோற்றத்தை அதிகரித்தன. அப்போது தான் பெண்களை அடக்கி, ஒடுக்கி, வைக்க ஆணாதிக்க சமுதாயத்தால் கையாளப்பட்ட சதி, தேவதாசி முறை, குழந்தை மணம் , கல்வி மறுக்கப்பட்ட நிலை, மத சடங்குகளின் மூலம் பெண்களை அடிமைப்படுத்தும் முறை போன்றவற்றிற்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்தனர் . அன்றைய கால கட்டத்தில் தலித் பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட வன்முறைக்கு முன்னுரிமை கொடுப்பது என்பதை விட, தங்களின் ஒரு நேர உணவிற்கான வழிமுறைக்கு முன்னுரிமை கொடுகக வேண்டிய கட்டாய சூழலினால் பெரும்பாலான பெண்கள் இயக்கங்களில் படித்த, மேல்தட்டு, நடுத்தர, ஆதிக்க சாதியை சார்ந்த பெண்களின் தலைமை தவிர்க்க முடியாத ஒன்றாகப் போய்விட்டது. சுதந்திரத்திற்கு பின் இந்தியாவில் பெண்கள் இயக்கங்களின் நிலை இந்திய சுதந்திரத்திக்குப் பின் வந்த ஐந்தாண்டு திட்டங்கள் , பரவலான கல்வி, நகரில் பெருகிய வேலை வாய்ப்பு, தொழிற்சாலை பெருக்கம் , சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகள் , சட்டப் பாதுகாப்பு போன்றவற்றின் காரணமாக பெண்கள் பொது வாழ்வில் ஈடுபடுவது படிப்படியாக பெருகியது. சுதந்திரத்திற்கு முன் தங்கள் மீது இழைக்கப்பட்ட பாலியல் மற்றும் சமய ரீதியான பிரச்சனைகளை மட்டும் முன்னிறுத்தி செயல்பட்ட பெண்கள் இயக்கங்கள் , பின்னாளில் கல்வி, வேலை வாய்ப்பு, சொத்து மற்றும் அரசியல் போன்ற நிலைகளில் தங்களது உரிமையை பெறுவதற்கான போராட்டங்களையும், கோரிக்கைகளையும் கொண்டு சென்றனர் . இவற்றுடன் தங்களது விடுதலைக் கூறுக்கான விதிமுறைகளையும் ஒழுங்குப்படுத்தி, கூர்மைப்படுத்தி இயக்கங்களின் கூட்டமைப்பில் முன் வைக்க ஆரம்பித்தனர் . இத்தகைய குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக சர்வதேச பெண்கள் ஆண்டுகளாக 1975-85 (பத்தாண்டுகள்) அறிவிக்கப்பட்டதை குறிப்பிடலாம். இவற்றின் மூலம் இப்பெண்கள் ஒன்றாக இணைந்து செயல்பட தங்களுக்காக ஒரு தளம் அமைத்துக் கொண்டனர் . இந்திய பெண்கள் இயக்கங்களும் , அவற்றின் நோக்கங்களும் இந்தியாவின் வேறுபட்ட பல சமூக, பொருளாதார பண்பாடுகளின் காரணமாக இந்திய பெண்கள் இயக்கங்கள் எதிர்கொள்கின்ற

சிக்கல்களும் அவற்றை களைய, எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும் அந்தந்த பகுதியின் சமூக அமைப்பிற்கு ஏற்றவாறு வேறுபட்டதாக இருந்து வருகின்றன.

வடகிழக்கு பகுதிகளில் , அரசின் அடக்குமுறைகளை எதிர்த்தும் , மேற்கு வங்கத்தில் உலக சமாதானம் மற்றும் மாநில அடக்குமுறை மற்றும் குடியரசு உரிமைகளுக்காகவும் டில்லி, பம்பாய் , பூனா, கான்பூர் , ஆமதாபாத் போன்ற மாநகரங்களில் தனிப்பட்ட பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்தும் இவ்வியக்கங்கள் போரிடுகின்றன.வடபகுதிகளில் , வரதட்சனை, சாதி, இனக்கலவரம் , பழங்குடி பெண்கள் அடிமைத்தனம் போன்றவற்றை எதிர்ப்பதில் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றன. தென்னிந்தியாவில் பெண்கள் சந்திக்கும் அன்றாட பிரச்சனைகளான கேலி செய்தல் , பாலியல் பலாத்காரம் வரதட்சணை, ஆபாசமாக சித்தரிப்பு ஆகியவற்றை எதிர்த்தும் மற்றும் அடிப்படை வசதிகளை கோரியும் போராடுகின்றன. டில்லியில் பல பெண்ணுரிமை சங்கங்கள் ஒருங்கிணைந்து 'தாஹெஜ் விரோதி சேத்னா மஞ்ச்' என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தி பல்வேறு பெண்கள் பிரச்சனைகளுக்காக செயல்பட்டு வருகின்றன. டில்லியில் சஹேலி, பம்பாயில் 'மகளிர் மையம் ', பூனாவில் ஸ்திரி கேந்த்ரா ' கான்பூரில் 'சகி கேந்தார' போன்ற சங்கங்களும் , பெங்களூரில் 'விமன்ஸ் வாய்ஸ்', 'விமோச்சனா', ஆந்திராவில் 'மகளிர் சங்கம்', தமிழ்நாட்டில் 'தமிழக எழுச்சி' அமைப்பு மேலும் பல பெண்ணுரிமை இயக்கங்கள் பெண்கள் பிரச்சனைகளுக்காக செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய அமைப்புகளை
ஐந்து வகையாக பிரிக்கலாம் . அவை

1. தன்னுரிமை மகளிர் இயக்கங்கள்

   பெண்கள் தலைமையில், பெண்களின் பிரச்சனைகளை முன்னிறுத்தி வெளிநாட்டு நிதியுதவி பெறாமல் உறுப்பினர்களின் சந்தா மற்றும் நன்கொடைகளைக் கொண்டு தாங்களாக முடிவெடுத்து செயல்படும் தன்மை கொண்டது.

2. வெகுசன அமைப்புகள்

பிரச்சனையின் அடிப்படையில், மக்கள் ஒருங்கிணைந்து அப்பிரச்சினையின் தீர்விற்கான கூறுகளை கொண்டு செல்லும் அமைப்பு. இது பெரும்பாலும் பிரச்சினையை மையப்படுத்தி உருவாகிறது. அமைப்பு முறைகளை பின்னர் இயல்பாக உருவாக்கி கொள்கிது.

3. தொழிற்சங்கள்

ஒருங்கிணைக்கப்படாத துறைகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பெண் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து அவர்களின் தொழில் சார்ந்த கோரிக்கைகளை பெற ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும் .

4. ஆதரவற்ற மகளிருக்கான புகலிடங்கள்

அரசு மற்றும் தன்சார்வு நிறுவனங்கள் , சேவை அமைப்புகள் இவ்வாணாதிக்க சமூகத்தினரால் வஞ்சிக்கப்பட்ட பெண்களின் நலனுக்காக செயல்பட்டு வருகின்றது.

5. ஆய்வுக்குழுக்கள்

இவ்வமைப்பில் உள்ளவர்கள் பிரச்சனைகளில் நேரடியாக ஈடுபடாமல் பாதிக்கப்பட்ட நபர்களை சந்தித்தும் , பாதிக்கப்பட்ட இடங்களை நேரடியாக பார்வையிட்டு பிரச்சனையின் தன்மை, பின்னணி, அதன் தாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்து அப்பிரச்சனையை அரசியலாக்குவதில் முனைப்புடன் ஈடுபடுகின்றனர் .

**பெண்ணுரிமை இயக்கங்களின் வளர்ச்சியும் , விளைவுகளும்**

இவ்வியக்கங்களுக்குப் பல சிக்கல்கள் , தடைகள் இருந்த போதிலும் இவை சமுதாயத்தில் சில மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளன. என்பதை மறுக்க முடியாது. 1979-80ல் நடைபெற்ற மதுரை பாலியல் பலாத்கார வழக்கு இந்தியா முழுவதும் மிகப்பெரிய கொந்தளிப்பை பெண்கள் மத்தியில் உண்டாக்கியது. இவ்வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து நடந்த ஊர்வலங்களும் , பொது விவாதங்களும் , பெண் நிலை பற்றி தெளிவிற்கு பெரிதும் காரணமாயின. இயக்கங்களின் ஒருங்கிணைந்த போராட்டங்களினால் பாலியல் பலாத்காரத்திற்கு எதிரான கடுமையான புதிய சட்டம் வந்தது. குடும்பங்களின் மறைவாக இழைக்கப்படும் வன்முறைகள்

அம்பலப்படுத்தப்பட்டன. இவை பொது மேடைகளிலும் , தகவல் தொடர்புசாதனங்களிலும், விவாதிக்கப்பட்டு பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள்

குறித்து சரியான புரிதல் ஏற்பட வழி வகுத்தது. பெண்ணுரிமைக்காக மேலும் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதுவரை ஆண்களுக்கு என இருந்த காவல்துறை, பாதுகாப்பு, விமானம் ஒட்டுதல் போன்ற துறைகளில் பெண்களும் பணிபுரிய வாய்ப்பு உருவாயிற்று. கல்வி, வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு, அரசாட்சி நிர்வாக உயர் பதவிகளில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளன. காலங்காலமாக ஆணாதிக்க சமூகத்தினரால் உருவமைக்கப்பட்டு, நம்முள் தினிக்கப்பட்ட பெண்களுக்கான பண்புகள் என குறிப்பிட்ட கலாச்சார தடைகள் அறு தெறிந்து விட்டு வெளியே வர ஆரம்பித்துள்ளனர்.

**பெண்கனின் ஈடுபாட்டிற்குத் தடையாக இருக்கும் காரணிகள்**

தாய்மையின் பொறுப்புகள் , குழந்தைகளை கவனித்தல் , உணவு தயாரித்தல் , மற்றும் வீட்டு வேலைகள் மற்றும் வெளி வேலைகள் , பெண்களை இயக்கப் பணிகளில் ஈடுபடுவதிலிருந்து விலகி நிற்க வைத்தது, மேலும் குடும்பம் , வீடு என்ற வட்டமும் அதற்குள் (கணவர்), முதியோரை கவனிக்க வேண்டிய நிர்பந்தத்தோடு வீட்டிலிருக்க வேண்டிய பெண் வெளியே ஊதியத்திற்கு மாத்திரமே செல்லலாம் . அதைத்தாண்டி அவள் செல்லக்கூடாது என்ற கருத்தியலும் மற்றும் தொழிற்சங்கம் ஆண் வர்க்கத்திற்கே உரியது என்ற கலாச்சாரமும் அவளை தடுத்து விடுகின்றன. தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் போது வேலைநிறுத்தம், கொடிபிடித்தல் போன்றவை பெண்கள் மீது காலங்காலமாக எதிர்பார்க்கப்பட்ட அச்சம், மடம் , நாணம் , பயிர்ப்பு போன்ற குணங்களை இல்லாமல் செய்துவிடும் என்ற பயமும் , அவற்றை தூக்கி எறிந்து விட்டு வெளிவந்த பெண்களையும், நடத்தை சரியில்லாதவள் என்ற ஆணாதிக்க சிந்தனை மேலும் பல சிக்கலுக்குள்ளாக்குகிறது. ஒரு புறம் நமது கலாச்சார பண்பாடுகள் மேற்கண்டவாறு பெண்களை இயக்க செயல்பாடுகளில் ஈடுபடுதற்குத் தடையாக இருந்தாலும் , மறுபுறம் பெண்கள் இயக்கங்கள் பற்றி தொடர்பு சாதனங்கள் சித்தரிக்கும் போக்கும், கட்சிகளின் அடிப்படையில் இயங்கி வருகின்ற

பெண்கள் அமைப்புகளின் செயல்பாடுகளும் , சில நேரங்களில் நாம் தளங்களில் இறங்கி செயல்படும் போது பல்வேறு பிரச்சனைகளை சந்திக்க வைக்கிறது.

**தலித் பெண்களின் பிரச்சனையில் பெண் விடுதலை இயக்கங்களின் நிலைப்பாடு**

பெண்கள் இயக்கங்களின் வரலாற்றில் பெண்களுக்கு இழைக்கப்படும் பல்வேறு வகையான வன்முறைகளில் தொடங்கி இன்று அரசியல் ,பொருளாதார தளங்களில் பெண்களுக்கான இடம் என்பதனை வலியுறுத்திவரும் இதே வேளையில் , தலித்திலும் தலித்தாக கருதப்படும் பெண்களில்இன்றும் மோசமாக ஒடுக்கப்பட்ட நிலையிலிருக்கும் தலித் பெண்களின்பிரச்சனைக்கென தனிக் கவனம் செலுத்தவேண்டியயும் , முன்னுரிமை

கொடுத்தும் செயல்படவேண்டிய கட்டாயச் சூழலில் தள்ளப்பட்டிருக்கிறோம் . இத்தகைய செயல்பாடுகளில் தற்போதுள்ள பெண்விடுதலையை முன்னிறுத்தும், பெண் விடுதலை இயக்கங்களின் செயல்பாடுகளை குறித்து நாம் புரிந்து கொள்வதற்கு நான் சில இடங்களில் நடந்த தலித் பெண்கள்மீது தொகுக்கப்பட்ட வன்முறைகளையும் , அவற்றில் பெண் விடுதலை இயங்களின் நிலைப்பாட்டினையும் விளக்க முற்பட்டுள்ளேன்.

**இந்திய அளவில் சுமை தூக்கும் தொழிலாளர்கள் - பூனா**

இத்தொழிலாளர்கள் 1971-73ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் , வறுமை காரணமாக பூனாவை சுற்றியுள்ள பீர் , கோலப்பூர் , ஒஸ் மனாபாத் போன்ற பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து நகரில் குடிபுகுந்தவர்களாவர் . இவர்களில் பெரும்பாலனோர் கணவனை இழந்தோர் , கணவனால் கைவிடப்பட்டவர்கள், உடல் நலமில்லாத கணவர்களை கொண்ட பெண்களே. இவர்களின் பணியானது ரயில் வரும் போது அதில் வரும் சாமான்களை இறக்கி சேமிப்பு கிடங்கிற்கும், மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளிடமும் சேர்ப்பதும் , சாமான் வரும் பைகளில் ஏற்படும் பழுது பார்ப்பது போன்றவையே. 10 மணி நேரம் பணி செய்யும் போது கிடைக்கும் கூலியோ 1.50 லிருந்து 3 ரூபாய் மட்டுமே. நடு இரவு வரை பணிபுரிபவர்கள் 5 ரூபாய் சம்பளம் பெறுவர் . இச்சம்பளம் பெற இவர்கள் பலமணி நேரம் காத்திருக்கவேண்டும் . இச்சம்பளமும் பல இடைத்தரகர்களை தாண்டிவரும் போது மிக சொற்பமாகி விடுகிறது. இப்பணியில் தலித் பெண்கள் சேர்த்துக்

கொள்ளப்படுவதில்லை. காரணம் இவர்கள் கையாளும் உணவுப் பொருள்கள் தீட்டு பட்டுவிடும் என்பதால் இப்பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து 14 நாள் வேலை நிறுத்தம் செய்து, கூலி உயர்வு கேட்டு போராடினர் . இப்பெண்கள் குழுவால் 1975ல் தொழிற்சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் புதிய தொழிலாளர் உள்வருவது தடை செய்யப்பட்டது. குறைந்த விலையில் உணவு சீருடை போன்றவை பெறப்பட்டது. பெண்களால் துவங்கப்பட்ட சங்கமாயினும் நாளடைவில் ஆண்களின் ஆதிக்கம் அதிகமாகி, பெண்களின் ஜனநாயக உரிமை மற்றும் முடிவெடுக்கும் உரிமை மறுக்கப்பட்டது. தலித் பெண்கள் இங்கு பணிபுரிய வாய்ப்பு மறுக்கப்பட்டதற்கு சங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**மது ஒழிப்பு இயக்கம் - ஆந்திரபிரதேசம்**

1992-ஆம் ஆண்டு செப்டம்பர் , அக்டோபர் மாதங்களில் ஆந்திராவில் உள்ள கர்நூல் மாவட்டத்ததில் படிப்பறிவற்ற கிராமத்து பெண்கள், பல ஆண்டுகளாக, தங்கள்கணவர்கள் பகல் முழுதும் வேலை செய்து கிடைக்கும் சம்பளத்தை குடித்து ஏப்பம் விட்டு, தங்களை அடித்துகொடுமைப்படுத்துவதை தாங்க முடியாது என எடுத்த பல முயற்சிகளின் விளைவே இது.ஸ்திரி விமுக்தி என் பெண்கள் அமைப்பின் சார்பில் சந்தியா என்ற பெண்ணின் தலைமையில் இப்பெண்கள் மதுவினை தடைசெய்யக் கோரி முதல் மந்திரி, மாவட்ட ஆளுநர் , காவல்துறை உயர் அதிகாரிகள் என பலமுறை, பல வழிகளில் அணுகினர் . ஆனால் அம்மாநில முதல் மந்திரி மற்றும் ஆளுநர் போன்றோர் நடவடிக்கை எடுக்க மறுத்ததால் , இப்பெண்கள் தாங்களே இதற்கு தீர்வு காண்பது என்று தீர்மானித்தனர். சாராயம் விற்பவர்களையும் , குடிப்பவர்களையும் தண்டிக்கவும் முடிவு செய்து அறிவித்தனர் . இவர்களின் அறிவிப்பை மீறி சிஸ்தா ரொபெட் என்னுமிடத்தில் சாராயம் விற்ற ஒருவரை பெண்கள் சென்று, இழுத்து வந்து செருப்பு மற்றும் வெங்காய மாலைகள் போட்டு தெரு வழியாக ஊர்வலமாக அழைத்து வந்தனர் . சாராயம் குடித்தவர்களை நூற்றுக்கணக்கான கிராமத்து மக்கள் முன்னிலையில் அவர்கள் தலையை மழித்து தண்டனை வழங்கி, தங்கள் குடிகார கணவர் திருத்த வேண்டிய முயற்சி எடுத்தனர் இது போன்றே அக்டோபர்

2ல் காந்தி ஜெயந்தி அன்று இரண்டு லாரிகளில் சாராயம் ஏற்றி விற்பனைக்கு செல்வதை அறிந்த பெண்கள் ஒன்று திரண்டு குறுக்கு வழியில் சென்று லாரிகளை தடுத்து நிறுத்தி 2 நாள் இரவும் பகலும் தங்கள் குழந்தைகளை மரத்தில் துணிகளை கட்டி தூங்க வைத்து அரிசி, காய்கறி சேகரித்து சமைத்து உண்டு லாரிகளை தடுத்து நிறுத்தும் போராட்டத்தில் ஈடுபட்ட மூன்றாவது நாள் , காவல்துறை உதவி ஆய்வாளர் வந்து அது விற்கப்படாது சேமிப்பு கிடங்கில் சேர்க்கப்படும் என்று உறுதியளித்து எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் சொன்னப்படி செய்யாமல் ஏமாற்றி விட்டதால் இப்பெண்கள் அனைவரும் சென்று சாராய பாக்கெட்டுகளை அழித்தனர் . அதற்காக 26 பெண்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு பின்னர் அத்மாகூர் நீதிபதி அவர்களால் பெயிலில் வெளிவந்த பின் அப்பகுதியில் 144 தடையுத்தரவு அமுல் செய்யப்பட்டது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களில் பெரும்பாலானோர் தலித்துக்களே. இப்போராட்டத்தின் விளைவால் அரசின் நேரடி ஆண்டு வருமானம் ரூ.850 கோடியும், மறைமுக வருமானம் ரூ.2500 கோடியும் இழந்ததோடு, யாராலும் அசைக்கமுடியாத சாராய சாம்ராஜ்யம் அதிபதிகளான ராஜசேகரரெட்டி, புத்த வெங்கால் ரெட்டி, மொகமெட் ஜிலானி போன்றோரை அசைத்தது இப்பெண்களின் வெற்றியாகும் .

**போத்கயா போராட்டம் - பீகார்**

1974ம் ஆண்டு இந்தியாவில் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், லஞ்சம் ஆகியவற்றை எதிர்த்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல மக்கள் இயக்கங்கள் தோன்றின. சமுதாய மாற்றம் என்ற நோக்கில் 1975ல் உருவானதே சத்ர யுவ் சங்கர்ஷ வாகினி என்ற அமைப்பு. இவ்வமைப்பு நீண்ட காலத்திட்டம் ஒன்றை உருவாக்க 1978 ஜனவரி 17, 18 ல் பீகாரில் ஒன்று கூடியது. அப்போது ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களை ஒன்றுதிரட்டி,உழுபவனுக்கு நிலம் என்ற. கருத்துடன் , முதலில் நிலப்பிரச்சனையை எடுத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. 1978ம் ஆண்டு மார்ச் மாதம் வாசினி போத் கயா என்ற இடத்தை தேர்ந்தெடுத்து செயல்படுத்த ஆரம்பித்தது. இப்பகுதியில் 12,000 ஏக்கர் நிலம் ஒரு மடத்தலைவரின் கீழ் இருந்தது. இவர் இங்குள்ள உழைக்கும் மக்களின் உழைப்பை சுரண்டியதோடு பெண்களை அதிகமாக பாலியல்

கொடுமைக்குட்படுத்தினார் . வாகினி பொதுவாக எல்லா நடவடிக்கைகளையும் முன்னரே அறிவித்து விடும். அதன்படி நிலத்தின் அறுவடை எல்லாம் விவசாயிகள் வீட்டிற்கு கொண்டு செல்ல போகிறோம் என அறிவித்துவிட்டனர் . இப்போராட்டத்தின் முதல் நடவடிக்கையை பெண்களே மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வயல்களில் இறங்கி அறுவடைகளை தங்கள் வீடுகளுக்கு எடுத்து சென்றனர் . பின்னர் வாகினி, குடி மற்றும் பெண்கள் பிரச்சனை போன்றவற்றை ஒழிக்க பல முயற்சிகள் எடுத்தது. ஆனால் நில பிரச்சனைக்கு கொடுத்த முக்கியத்துவம் பெண்கள் பிரச்சனைகளுக்கு கொடுக்கவில்லை. பின்னர் வாகினியில் உள்ள பெண்களின் முயற்சியினால் , வாகினியின் உறுப்பினர்கள், நிலப்பிரச்சனை போன்று பெண்கள் பிரச்சனையும் முக்கியமானது என்பதை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாலும் நடைமுறை படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது.நடைபெறுகின்ற போராட்டங்களில் பெண்கள் பங்கேற்பு அதிகமாக இருந்தாலும் முடிவெடுக்கும் நிலைக்கு பெண்கள் வரமுடியவில்லை. பெண்களுக்கு தலைமை பொறுப்பும் மறுக்கப்பட்டது. ஏனெனில் பெண்களுக்கு வயல் வேலை, வீட்டுவேலை இத்தோடு போராட்டங்களிலும் கலந்து கொள்வது என்பது மிகவும் கடினமாக இருந்தது. அவர்களை வரவழைக்க முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. வாகினியில் உள்ள பெண் கீழ்க்காணும் நிலைகளில் போராட வேண்டியிருந்தது.

1. மடத்தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள்.

2. நில உரிமைக்காக

3. தங்கள் வீட்டு ஆண்கள் மற்றும்

4. இயக்கத்தின் மற்ற ஆண் உறுப்பினருடன்.

இயக்கம் நில உரிமைக்காக போராட ஏற்படுத்திக் கொடுத்த சூழ்நிலைகளை மற்ற போராட்டத்திற்கு கொடுக்கவில்லை என்பது தெரிகிறது. வாகினியின் தொடர் போராட்டத்தின் விளைவால் 1981ல் அரசு 1000 ஏக்கர் நிலங்களை மட்டும் பிரித்து கொடுக்க முன் வந்தது. அப்போது வாகினி நிலமற்ற, கூலி விவசாயிகள் மற்றும் விதவைகளுக்கு, நிலம் உரிமை வழங்க

கூறியது. ஆனால் பெண்கள் , விதவைக்கு மட்டுமின்றி அனைத்து பெண்களுக்கும் நில உரிமை வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர் . ஆனால் அரசாங்கம் நிலமற்ற விவசாயிகள் மற்றும் விதவைகளுக்கு மட்டும் நில உரிமையை கொடுத்தது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்களில் பெரும்பகுதி நிலமற்ற கூலி விவசாயத்தில் ஈடுபடும் தலித் மக்களே

**சிப்கோ இயக்கம் - இமாச்சல பிரதேசம்**

1973ல் சமோலி மாவட்டத்தில் மலைநகரான கோபேவரில் தோன்றியது. சிப்கோ என்றால் மரங்களை அழிக்க விடாமல் தழுவுதல் என்பதாகும் . ஒரு குறிப்பிட்ட பகுதியை சார்ந்த பெண்கள் அப்பகுதி மரங்களை அணைத்துக் கொண்டு மரங்களை வெட்ட அனுமதிக்கவில்லை. பெண்கள் தானே என நினைத்து திரும்பிய பண முதலைகள் மறுநாளும் பெண்கள் இது போன்று நின்றதைக் கண்டு, குண்டர்களை கொண்டு இவர்களை துரத்த முயன்றபோதும் அப்பெண்கள் அகலவில்லை. மலையின் ஒரு பகுதியில் ஒரு சிறு தீக்கனல் போன்ற இந்நவீன போராட்டம் துவங்கி வெற்றி பெற்றதால் , மற்ற பகுதிகளுக்கும் காட்டுத் தீ போல் பரவியது. இப்போராட்டத்தில் பெண்கள் மிக அதிக அளவில் கலந்து கொண்டனர். ஏனெனில் காடுகள் அழிக்கப்படுவதால் எரிபொருள் , தண்ணீர் கிடைக்காது. துன்பப்படுவது பெண்களே. அதற்காக இவர்கள் மிக அதிக தூரம் செல்ல வேண்டியுள்ளது. இவர்கள் நம் குடும்பத்து ஆண்களையும், குத்தகத்தாரர்களையும் எதிர்த்து போராட வேண்டியிருந்தது. இப்பெண்கள் ஒரு புறம் காட்டை பாதுகாத்ததோடு மறுபுறம், வெட்டப்பட்ட இடங்களில் புதிய மரங்களையும் நட்டார்கள் . இப்போராட்டத்தின் விளைவால் கர்நாடக மாநிலத்திலும் காடுகளை பாதுகாக்கும் அப்பிகோ சாலுவாலி இயக்கம் துவங்கி மேற்கு தொடர்ச்சி மலைகளை பாதுகாத்து வருகிறது.

**தமிழ் நாடு**

**போடி கலவரம்**

1989ம் ஆண்டு போடி நாயக்கனுரில் முத்துப்பிள்ளை என்ற 50 வயது தலித் பெண் ஒரு ஆதிக்க சாதிகாரரால் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் .

இப்பிரச்சனையை ஆதிகக சாதியினரும் , தலித் தலைவர்களும் , சாதி பிரச்சனையாக ஆக்கியதால் மேலும் பலர் கொல்லப்பட்டு ஏராளமான பொருள் சேதமும்

ஏற்பட்டதே தவிர, பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்திற்கு நீதி கிடைக்கவோ குற்றாளி தண்டிக்கப்படவோ யாரும் முயற்சி எடுக்காதோடு, எந்த ஒரு பெண்ணுரிமை இயக்கமும் இப்பிரச்சனையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்பது கண் கூடு. **அல்லாளபேரி பிரச்சனை**

விருதுநகர் மாவட்டம் , காரியாபட்டிக்கு அருகில் உள்ள அல்லாளபேரி. இங்கு பஞ்சவர்ணம் வயது 12 என்கின்ற தலித் சிறுமியை சிவன் வயது 19 என்கின்ற ஆதிக்க சாதிக்காரன் பாலியல் பாலாத்காரம் செய்த போது அது சாதிக்கலவரமாக்கப்பட்டு தலித் விடுதலை இயக்கம் அவ்வழக்கை நடத்திக் கொண்டிருந்தபோது, அவர்கள் மதுரை பெண்ணுரிமை இயக்கத்தின் உதவியை நாட, அது தலையிட்டு உண்மைகளைக் கண்டறிந்து, அரசு அதிகாரிகளிடம் கூறி ஒரு சில நிவாரணங்கள் பெற உதவி செய்தது.

**அரக்கோணம் அனுபவம்**

1990ல் அரக்கோணத்திற்கு அருகிலுள்ள கிராமத்தில் கலா வயது 25, தலித் பெண் தனது கணவனின் கொடுமை தாங்காது வயலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள் . அருகில் உள்ள கிராம பெண்கள் விடுதலை இயக்கம் இப்பிரச்சனையில் ஈடுபட்ட போது உள்ளூர் அம்பேத்கார் மன்றத்தினர் வழக்கின் எதிர்தரப்பு நபர் தலித்தாக இருப்பதால் வழக்கை தொடர முட்டுக்கட்டை போட்டனர். அவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது, தலித் போன்ற இதர பொது வழக்குகளுக்கு ஆதரவு தருவதாகவும் இதில் தலையிட வேண்டாம் எனக் கூறியதாக தெரிய வருகிறது. இதிலிருந்து சமூக மாற்றம் என்பதை அடித்தளமாகக் கொண்டு செயல்படும் தலித் விடுதலை இயக்கங்களில் ஆணாதிக்க சிந்தனை போக்கும் தெரிய வருகிறது. மேலவளவு படுகொலை தொடர் மதுரை மாவட்டம், மேலூருக்கு அருளே உள்ளது. மேலளவு கிர்மம். கடந்த ஊராட்சி மன்ற தேர்தலில் இங்கு பல தலித் தலைவர்கள் வெற்றிபெற்று பொறுப்பெடுத்தனர் . சகித்து கொள்ள முடியாத ஆதிக்க சாதியினர் , தலித் தலைவர் முருகேசன் உள்பட 7 நபர்களை

கொலை செய்த சம்பவம்போட்டியிட்டு தலைவரானார் . ஆனால் பண்ணையார் அவரைப் பணி செய்ய விடாமல் தானே அதிகாரம் செலுத்தி வருவதோடு பல வழிகளிலும் அவரை துன்புறுத்தி வெளியில் விடாமல் வைத்துள்ளார். இது பற்றிய தகவலை சென்னை பெண்ணுரிமை இயக்கத்திற்கு அவரின் கணவர் கூற, இவர்கள் சென்னையிலுள்ள பிற இயக்கங்களின் உதவியுடன் அவ ருக்கு உதவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மேற்கூறியவாறு தலித் பெண்கள் சந்திக்கும் அவர்கள் மீது தொடுக்கப்படும் வன்முகைளுக்கு எதிராக குரல் கொடுத்தாலும் சில நேரங்களில் அது செயற்பாட்டாளவில் ஒரு தொய்வினையே. நம்மிடையே ஏற்று நடத்திய போராட்டங்களின் வெற்றியாக பிரேமானந்தா மற்றும் பத்மினி வழக்குகளின் தீர்ப்புகள் சான்றுபகர்கின்றன.

தற்போதைய ஆணாதிக்க பார்ப்பனிய சமுதாயத்தின் அடிவேருகளைக் களைந்து, சமுதாய மாற்றம் என்று ஒரே குறிக்கோளை அடித்தளமாகக் கொண்டு பணியாற்றி வரும் நாம் , நம்முடைய இயக்கங்கள் இக்கட்டுரையில் நாம் விவாதித்த கருத்துக்களை, தலித் பெண்களின் பிரச்சனையை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய சூழல் ஒருபுறம்
இருக்க, மறுபுறம் தலித் பெண்களுக்கென அவர்களின் பிரச்சனைகளை உணர்வுபூர்வமாக உள்வாங்கி செயலாற்ற, தலித் பெண் தலைமை கொண்ட தனி அமைப்புகளோ அல்லது இருக்கின்ற இயக்கங்களில் தலித் பெண்கள் துலைமையேற்பதற்காக தளங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எனது ஆலோசனையாக வைத்து எனது கட்டுரையை நிறைவாக்குகிறேன் .

வினாக்கள்

1. தலித் பெண்ணியவாதம் குறித்து எழுதுக.
2. பெண்நிலை குறித்த செயற்பாடுகளை விளக்குக.
3. தலித் பெண்களின் சமூக நிலை பற்றி விவரி.
4. தலித் பெண் மற்றும் உளவியல் பற்றி எழுதுக.
5. வரதட்சணைக்கு  எதிரான அறப் போராட்டம் குறித்து எழுதுக.
6. தலித் பெண்களின் உரிமை மீறல் மற்றும் உள்ளக் குமுறல் பற்றி எழுதுக.
7. சுதந்திரத்திற்கு முன்,பின்  பெண்கள் இயக்கங்களின் நிலையை விவரி.
8. பெண்களின் ஈடுபாட்டிற்கு தடையாக இருக்கும் காரணிகளை எழுதுக.
9. இந்திய பெண்கள் இயக்கங்களும் அவற்றின் நோக்கங்களும் பற்றி எழுதுக.
10. சிப்கோ இயக்கம் தமிழ்நாடு போடி கலவரம் குறித்து விவரி.

### அலகு 2

## தலித் இயக்கங்களில் தலித் பெண்ணியப் பார்வை – ரஜினி

தலித்தியம் ; பெண்ணியம் குறித்த சொல்லாடல்கள் எழுச்சி. பெற்று முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் . நின்று கொண்டிருக்கிறோம் . தலித் . அரசியல் , பண்பாடு, கலைகள் குறித்து தொடர்ந்து விவாதங்கள் நடந்த வண்ணமுள்ளன. இன்னும் சொல்லப்போனால் தலித் அரசியல் என்ற கருத்தாக்கமே இன்று இந்த நாட்டின் அரசியல் நிகழ்ச்சி நிரலாக மாறிவருகிறது. இது இந்த நூற்றாண்டில் அம்பேத்கார் நூற்றாண்டில் தலித் மக்களின் போராட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் . ஆனால் இந்த அளவுக்குத் தலித் பெண்ணியம்: குறித்த படைப்புகளோ, கருத்தாக்கங்களோ விவாதங்களோ வரவில்லை. அவர்களுக்கான. முற்றிலும் சுயேச்சையான தலித் பெண்கள் அமைப்புகளை உருவாக்கும் பணி இன்னும் தொடங்கியதாகக்கூட கூற இயலாத நிலையில் தான் நாம் இருக்கிறோம். இவை குறித்து கரிசனங்களுடன் தான் இத்தகைய கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன் .

உலக அளவில் வெள்ளைப் பெண்ணியவாதிகளாகவும் , இந்திய அளவில் பார்ப்பன மற்றும் மேல்சாதிப் பெண்ணியவாதிகளாலும் செய்யப்படுவதை நாம் அறிவோம் . உலக அளவில் கருப்பினப் பெண்ணியவாதிகள் (BLACK FEMINISTS) இத்தகைய முயற்சிகளை எதிர்த்துப் போராடி முறியடித்து வருவதை நாம் . அறிவோம் . இன்னும் சொல்லப்போனால் ஒரு கருப்புப் பெண்ணுக்கு இன்னொரு வெள்ளைப்பெண் காட்டும் SOLIDARITY ஐ விட இன்னொரு கருப்பு ஆண் காட்டும் SOLIDARITY தான் உண்மையாக இருக்கிறது. இத்தகைய புரிந்துணர்வுடனும் எச்சரிக்கையுணர்வுடனுமே இந்தப் பிரச்சனைடைய அணுக வேண்டியுள்ளது. (SLAVERY- பற்றி கருப்பினப் பெண்களின் அனுபவ பகிர்விலிருந்து)

அதே போல் இந்திய அளவில் தலித் பெண்கள் பார்ப்பன, மேல்சாதி, காந்திய, இந்துத்துவ மற்றும் Eco feminist -கள் என்றழைக்கப்படும் வந்தனா சிவா, மேனகா காந்தி மற்றும் மேதா பட்கர்

போன்றவர்களோடு சேர்ந்து செயல்படுவது நினைத்துப் பார்க்க இயலாத ஒன்றாக இருக்கிறது. இந்துத்துவ, பார்ப்பனிய, வெள்ளாள, சாதியாதிக்கம் கோலோச்சுகிற இந்தியச் சூழலில் தலித் பெண்கள் தங்களுக்கான முற்றிலும் சுயேச்சையான பெண்கள் அமைப்புகளை நிறுவும் வேலையை உடனடியாகத் தொடங்க வேண்டியதாக இருக்கிறது. தலித் ஆண்களுக்கு நேர் எதிராகத் தலித் பெண்களை முன் நிறுத்தும் 'பார்ப்பன' 'இந்தியப் ' பெண்ணியவாதிகளின் ,கருத்துக்களை முற்றிலும் மறுதலிக்கும் அதே Cousmarusled Hodis PATRIARCHY உட்பட எந்தப் PATRIARCHY - ஐயும் இனியும் தாங்கள் ஏற்பதற்கில்லை எனப் பிரகடனம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம் . இந்துத்துவத்தை பார்ப்பனியத்தை, சாதியாதிக்கத்தை முற்றிலும் மறுதலித்து தலித் அரசியலின், தலித் பெண்ணியத்தின் தனித்துவத்தை எவர் ஏற்றுக் கொள்கின்றனரோ அவரே, அவர்களே இனி தலித் பெண்களின் இயற்கையான கூட்டாளிகளாக (natural alies) ஆக இருக்கமுடியும் என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட வேண்டியதாக இருக்கிறது.

இந்திய அளவில் பெண்கள் இயக்கங்கள்

இன்று இந்திய அளவில் செயல்படும் பெண்கள் இயக்கங்களை மூன்று

பிரிவுகளாக வகைப்படுத்தலாம் .

1. மைய நீரோட்டம் (MAINSTREAM POLITICAL PARTIES) அரசியல்

கட்சிகளின் துணை அமைப்புகள்

2. சுயேச்சையான பெண்கள் அமைப்புகள்.

3. சுயேச்சையான பெண் விடுதலைக் கோட்பாட்டாளர்கள்.

1. மைய நீரோட்டக் கட்சிகளில் துணை அமைப்புகள்

அ) இந்த மைய நீரோட்டக் கட்சிகளின் துணை அமைப்புகளின் வேலை என்னவாக இருக்கிறதென்றால் சம்பந்தப்பட்ட கட்சிகளின் கொள்கைகளை நிறைவேற்ற பெண்கள் மத்தியில் ஆதரவு தேடுவதேயாகும் .

ஆ) இந்த நிர்வாகிகளாகப் பெரும்பாலும் கட்சித்தலைவர்களின் மனைவிகளும், மகள்களுமே உள்ளனர் .

(எ.கா) பாப்பா உமாநாத், பிருந்தா காரட்

இ) இவர்கள் சார்ந்துள்ள கட்சி பட்ஜெட்டை எதிர்ப்பதென்று முடிவு செய்தால் இவர்கள் காய்கறி விலையுயர்வை எதிர்த்துப் போராடுவர் . ஏனெனில் காய்கறி விலை, வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால்'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' பெண்கள் தொடர்பான, பெண்களுக்கு மட்டுமே தொடர்பான விசயமன்றோ? மேற்சொன்ன தன்மைகள் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் குறிப்பாக, CPI,CPM பெண்கள் அமைப்புகளான AIDWA,AIWF ஆகியவற்றிற்குப் பொருந்தும் .

ஈ) BJPயின் பெண்கள் பிரிவான மகிளா மோர்ச்சா"இந்தியப் பாரம்பரியம் " முன் வைத்து ஏற்றுக் கொண்ட பாலியல் சமத்துவத்தை பெண்களுக்கு மீட்டுத்தருவதே தனது நோக்கமென்கிறது. இந்தியப் பாரம்பரியம் எத்தகைய சமத்துவத்தை முன் வைத்தது என்பதை நாம் அறிவோம் . 'தீட்டு' என்ற கொள்கையின் அடிப்படையில்பெண்களை ஒதுக்கி வைத்தது இந்தியப் பாரம்பரியம். உலக மொழிகளிலே மாதவிலக்கு (MENSURATION) &G தீட்டு என்ற பெயர் . இழிவு இங்குதான் கற்பிக்கப்பட்டுள்ளது.

புரட்சியாளர் அம்பேத்கார் அவர்களால் இயற்றப்பட்ட இந்து விதவை மறுமணச்சட்டம் , இந்துப் பெண்கள் சொத்துரிமைச்சட்டம் (1937) சிறப்புத் திருமணச் சட்டம் (1954) இந்துத் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் (1955) போன்றவை பெண் விடுதலை. நோக்கில் வெகுதூரம் செல்லக்கூடியவை. இவை குறித்தும் பெண்ணியலாளரின் 'குடும்ப அமைப்பு' பற்றிய நோக்குப்பற்றியும் கவலை தெரிவித்து சென்ற முறை உத்திரப்பிரதேசத்தில் பா.ஜ.க. 'ஆட்சியில் இருந்த போது பாடபுத்தகங்களில் பாடங்கள் கொண்டு வந்துள்ளது. இவை 'குடும்ப அமைப்பில் சிதைவு ஏற்படுத்தக் கூடிய சட்டங்கள் : என்று அந்தப் பாடப்புத்தகங்கள் போதிக்கின்றன. பா.ஜ.க.வின் இந்தியப் பாரம்பரியம் , இந்தியப் பெண் , இந்திய மரபு (குறிப்பாக பெண்கள் விசயத்தில் ) குறித்து எத்தகைய கருத்துக்களையும்

முன் வைக்காமல் மௌனம் சாதிப்பதன் மூலம் 001, 014 008058 –போன்ற கட்சிகளின் பெண்கள் அமைப்புகள் தங்களது மறைமுக ஆதரவை முன்மொழிகின்றன என்றே கருத வேண்டியுள்துள.

2. சுயேச்சையான பெண்கள் அமைப்புகள்

(AUTONOMOUS WOMENS MOVEMENTS)

இந்திய அளவில் சொல்லப் போனால் 'ஷேத்காரி சங்காத்னா: (மகாராஷ்டிரா), சஹேவி மற்றும் தமிழத அளவில் தமிழினப் பெண்கள் விடுதலை இயக்கம் ஆகியவற்றை இதில் வகைப்படுத்தலாம் . இது தவிர ஏராளமான NGO - அமைப்புகள் இந்திய அளவிலும் தமிழக அளவிலும் பணியாற்றி வருகின்றன.

3. சுயேச்சையான பெண்ணுரிமைக் கோட்பாட்டாளர்கள்

இதில் தமிழகத்திற்கு அப்பால் கெய்ல் ஓம்வெட், சுசிதாரு கே. லலிதா ஆகியோரையும் தமிழகத்தில் நிறப்பிரிகை குழுவினரையும் குறிப்பிடலாம் . பெண்ணியச் சிந்தனையொட்டித் தமிழில் பெரும்புயலைக் கிளப்பியதாகக் கூறலாம் .

**தலித் அமைப்புகளும் , தலித் பெண்களும்**

தலித் விடுதலை நோக்கிய தலித் அரசியல் இந்திய அரசியல் மையம் கொண்டிருக்கும் தருணம் இது. மேலும் தலித் ஆண்களும், தலித் பெண்களும் ஒருங்கிணைந்து. தலித் மக்களின் விடுதலைக்கான போரைத் தொடர வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கும் . அதே தருணத்தில் தலித் பெண்கள் தங்களுக்கான இடத்தை மறு உறுதி செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் . இந்தியன் , தமிழன் போன்ற அடையாளங்களைப் (Identity) போல தலித் என்ற அடையாளமும் ஆணை அடையாளப்படுத்துவதாக, மையப்படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் . ஆண்களைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் ஒடுக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவராக இருப்பினும் தங்களையறியாமல் தங்களுக்குள் செயல்படும் ஆணாதிக்க கூறுகளை இனங்கண்டு களைவதில் முனைப்பாக இருக்கவேண்டியுள்ளது. இந்திய அளவிலும் தமிழக அளவிலும் செயல்படும் தலித் அரசியல்

கட்சிகளின் (Ex: BSP,RPI கட்சிகள் ) மற்றும் பல்வேறு தலித் அமைப்புகளில் பெண்களின் இடம் அல்லது பங்கு என்பது குறிப்பிடும் படியாக இல்லை.

ஆயினும் பல விசயங்களைப் போலவே இவ்விசயத்திலும் பிற அரசியல் கட்சிகள் / அமைப்புகள் நிலையில் சமப்படுத்தி, தலித் அமைப்புகளைக் குற்றம் சாட்டத் தேவையில்லை தான் . இருப்பினும் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட வேண்டிய நேரமிது. தலித் அமைப்புக்கும் அதில் செயல்படுகின்ற பெண்களுக்குமான நடைமுறைப் பிரச்சனையைக் கணக்கிலெடுக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக அமைப்பிற்குள் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே பிரச்சனை வரும்போது அமைப்பு பெரும்பாலும் ஆண்கள் பக்கமே நிலையெடுக்கின்ற நடைமுறைதான் இங்கும் நிலவுகிறது. ஒருமுறை, ஒரு தலித் அமைப்பில் பெண்கள் அணியை விரிவுபடுத்தலாம் என்று அந்த அமைப்பின் தலைவரிடம் சொன்னபோது 'பெண்கள் உள்ளே வந்தால் பாலியல் ரீதியான பிரச்சனைகள் அதிகமாக வருகிறது. அதை தீர்க்கவே நேரம் போதவில்லை' என அவர் கூறினார் . மேலும் பெண்களை சரியான நோக்கில் அரசியல் படுத்துவதை தவிர்த்து அல்லது அதற்கு எந்த முயற்சியும் எடுக்காமல் சில போராட்டங்களுக்கு தங்களின் தேவைக்கேற்ப குறியீடுகளாக பெண்களை பயன்படுத்தும் போக்கும் நிலவுகிறது. (சந்திரிகா எதிர்ப்பு போராட்டம் ) இத்தகைய போக்குகள் எவ்வகையிலும் ஆரோக்கியமானதாய் இருக்க இயலாது. பெண்கள் இயக்கத்தில்(ACTVE PARTICIPATION) செயலாக்கம் உள்ள முறையில் பங்கெடுப்பதும் ஏன் ஆயுதம் தாங்கிப் போராடுவதும் கூட பெண் விடுதலையை அதன் முழு அர்த்தத்தில் சாதிக்குமா என்பது இன்னும் கேள்வியாகவே உள்ளது. ஈழத்தில் பெண்கள் வீடு துறந்து ஆயுதந்தரித்து, களத்தில் எதிரிகளுடன் போரிட்டு வென்ற போதிலும் அவர்களும் கூட பெண்ணிய நோக்கில் முழுமையான 'விடுதலை' அடைந்த நிலையில் உள்ளனரா என்பது விவாதத்திற்குரிய பொருளாகவே உள்ளது. இது குறித்து ஒரு முக்கியமான பெண் நிலைவாதியான ராதிகா குமாரசாமிக்கும் பெண் புலிக்களுக்கும் நடைபெற்று வரும் முக்கியமான விவாதங்களை “சரி நிகர் ' இதழில் காணலாம் . இத்தகைய விவாதங்கள் தலித் இயக்கங்களுக்கும் தலித் பெண்களுக்குமிடையே நடைபெற வேண்டும் .

தலித் இயக்கங்களின் (DECISION MAKING) ல் தலித் பெண்களுக்கு உரிய இடம் கிடைக்கவில்லை. அவர்களின் குரலும் மிகக் குறிப்பிட்ட அளவே உள் வாங்கப்படுகிறது. அமைப்புகளில்

குறிப்பிடத்தக்க அளவு தலித் பெண் தலைவர்கள் இல்லை; உருவாக்கப்படவும் இல்லை. எனவே தலித் பெண்கள் ஏற்கனவே உள்ள தலித் அமைப்புகளின் ஓர் அங்கமாகத் தொடர வேண்டுமா அல்லது அவர்களுக்கான தனியான,

குறிப்பாக, முற்றிலும் சுயேச்சையான அமைப்புகளை நிறுவிக்கொள்வதா என்கிற கேள்வியினை இன்று மையத்திற்குக் கொண்டு வரவேண்டியுள்ளது. இது குறித்து பலதரப்பட்ட ஆழமான விவாதங்கள் இன்றைய சூழலில் அவசரத் தேவையாக உள்ளது.

**தலித் பெண்களுக்குத் தனி அமைப்பு தேவை**

தலித் பெண்களுக்கான தனித்துவமான பிரச்சனைகள் உள்ளன. இவை பார்ப்பன, மற்றும் மேல் சாதிப் பெண்களின் பிரச்சனைகளிலிருந்து பெருமளவிலும் தலித் ஆண்களின் பிரச்சனைகளிலிருந்து குறிப்பிடத்தக்க அளவிலும் வேறுபட்டவை.

1.ஒரு தலித் பெண்ணுக்கு பெண் என்ற அளவில் தான் அனுபவிக்கும் பெண் அடிமைத்தனமும், தலித் என்ற அளவில் அனுபவிக்கும் கொடூரமான சாதியாதிக்கமும் , சாதி இழிவும் அவளுக்கு எதிராக 'இரட்டைக்குழல் துப்பாக்கி' போல் செயல்படுகின்றது. இந்த வகையில் அவளுடைய பிரச்சனை என்பது மேல்சாதிப்பெண்கள் பிரச்சனையிலிருந்தும் , ஓரளவு தலித் ஆண்கள் 'பிரச்சனையிலிருந்தும் வேறுப்பட்டதாகும் . இந்த வகையில் ஒரு தனித்துவமிக்க, மிகுந்த அடக்கு முறை எதிர் கொள்ளும் உயிரி ஆக இருக்கிறாள் . உலகளாவிய அளவில் கருப்பினப் பெண்கள் மீதான அடக்கு முறையைக் காட்டிலும் இந்திய தலித் பெண்கள் சந்திக்கும் அடக்குமுறை, இழிவு கூடுதலானது என்பதை மட்டும் இந்த இடத்தில் நாம் நினைவு: கூற வேண்டியவர்களாக இருக்கிறோம் .

2. தீண்டாமைக்குரிய, இழிவானதாக, அசுத்தமானதாகக் கருதப்படக்கூடிய தொழில்கள் அவளுக்காகவே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மலம் அள்ளுதல் , (LATRINE,SEPTIC TANK) சுத்தம் செய்தல் உள்ளீட்ட இந்த வேலைகளில் ஆண்களைக் காட்டிலும் கூடுதலாக

உழைக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறாள் .

3. இது தவிர தலித் ஆண்களால் பிரயோகிக்கப்படும் ஆணாதிக்க அடக்குமுறை நடவடிக்கைகளை வேறு, எதிர் கொள்ள வேண்டியவளாக உள்ளாள் .

4. மேலும் மேல்சாதி ஆண்களால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது தலித் பெண்களுக்கே உரிய தனித்த பிரச்சனையாக உள்ளது.

5. சமீபத்தில் நடைபெற்ற தென்மாவட்ட கலவரங்களில் தலித் பெண்களின் மீதான காவல்துறையின் வன்முறை மிகவும் உச்சகட்ட அளவில் இருந்ததை நாம் காண நேர்ந்தது. வீடு புகுந்து அடித்து நொறுக்குதல், அவமானப்படுத்தித் துன்புறுத்துவது, பெருமளவில் கைது செய்து சிறையில் தள்ளுவது, ஏன் சுட்டுக் கொல்வது போன்றவை சாதாரணமாக, அன்றாட நடவடிக்கைகள் போல் மாற்றப்பட்டன. இத்தகைய சூழல் பார்ப்பனப்

பெண்களுக்கோ அல்லது மேல்சாதிப் பெண்களுக்கோ பழக்கப்படாத ஒன்று. எனவே தலித் பெண்கள் தங்களுக்காக முற்றிலும் சுயேச்சையான பெண்கள் அமைப்புகளை நிறுவிக் கொள்வது அவசியமான ஒன்றாக இருக்கிறது.

**இருவகைப் பெண்ணிய நோக்குகள்**

இந்தியாவில் நிலவி வரும் பெண்ணிய நோக்கை இருவகையாகப் பிரிக்கலாம் . அவை மிகவும் சுருக்கமானவை என்று நாம் குறிப்பிட அஞ்சத் தேவையில்லை.

அநேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தியப் பாரம்பரியத்தைத் தூக்கிப் பிடிக்கும் நோக்கு. INDIAN WOMEN ஐ INDIAN WOMEN HOOD ஐக் கட்டமைக்கும் போக்கு

ஆ) எல்லா வகையிலும் இந்திய மரபை மறுதலிக்கும் அம்பேத்கர் ,பெரியார், ஜோதிபாபுலே நோக்கிலான பெண்ணியப் போக்கு

* ஒரு சுயேச்சையான தலித் பெண்களின் அமைப்பு 2வது வகையைச்

சார்ந்ததாக மட்டுமே இருக்கமுடியும் .

*அது இங்கு புழக்கத்தில் உள்ள மதிப்பீடுகளை மறுத்து பெண்களுக்கும் , தலித்துக்களுக்கும் சாதகமான மாற்று மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிப்பதரகவே இருக்கமுடியும் .

* தலித் கலாசாரமென்பது பார்ப்பனிய, மேல்சாதிக் கறை பெருமளவில் படியாத நிலையில் இருப்பது தலித் பெண்கள் அவர்கள் இயக்கத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான சாதகமான அம்சமாக உள்ளது.

* தலித் பண்பாடு குறித்த ELITE,PURITAN மதிப்பீடுகளை தகர்த்து நொறுக்க வேண்டிய சூழலில் தலித் பெண்கள் உள்ளனர். தலித் பழக்கவழக்கங்கள் , கலாசாரம் குறித்து அவர்கள் மேல் உயர்சாதியினர் சுமத்தியுள்ள 'குற்ற உணர்வை ' நீக்க தலித் பெண் கள் களத்தில் நிற்பர் . மேலை நாடுகளில் பெண்ணியச் சிந்தனைகள் பரவத்தொடங்கிய பல காலம் ஆன பின்பே, பெண்களிலும் மோசமாக 'ஒடுக்கப்படுகின்ற கருப்பினப் பெண்களின் குரல்கள் எழுந்தன. ஆனால் இந்தியத் தமிழகச் சூழலில் இப்போதே தலித் பெண்களின் குரல் ஒலிக்கத் தொடங்கியிருப்பது மகிழ்ச்சிகரமான ஒன்று. தலித் கலாசாரமென்பது இயல்பிலேயே பல முற்போக்கான கூறுகளைக் கொண்டுள்ளதை தலித் பெண்கள் இயக்கத்திற்கான மிகவும் சாதகமான அம்சமாகக் கூறலாம் (உ.ம் திருமண உறவுகள் ! முறிவுகள் சுலபமாக இருப்பது, விதவை (WOMEN HOOD) இல்லாமல் இருப்பது இன்னும் பல)

**கருப்பினப் பெண்கள் இயக்கமும் தலித் பெண்கள் இயக்கமும்**

பாலியல் ரீதியான வகையில் உலகம் முழுவதுமுள்ள பெண்கள் அனைவரும் ஒன்றாகக் கருதப்படினும் உலகம் முழுவதுமுள்ள கருப்பினப் பெண்களோடு தான் இந்திய தலித் பெண்கள் தங்களை 'இனம் ' கண்டு கொள்ள இயலும் . குறிப்பாக இந்தியச் சூழலில் பெண்கள் இயக்கமென்பது மேல்சாதிப் பெண்களாலேயே குறிப்பாக பார்ப்பனப் பெண்களாலேயே இயக்கப்பட்டு வந்திருக்கிறது. 1882 ல் புனேயில் பண்டித ரமாபாய்

அவர்களால் துவக்கப்பட்ட 'ஆர்ய மகிளா சமாஜ் ' என்ற அமைப்புத்தான் இந்தியாவிலேயே முதன்முதலில் தொடங்கப்பட்ட சுயேச்சையான பெண்கள் அமைப்பு ஆகும் . பல்வேறு முற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருந்த ரமாபாய் கூட தன்னுடைய ஒரு சில பார்ப்பனப் பழக்க வழக்கங்களைத் தவிர்க்க முடியவில்லை. குறிப்பாக மரக்கறி உணவுப் பழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார் . அதை தனது 'இந்திய” மற்றும் 'இந்து' அடையாளத்தின் ஒரு பகுதியாகவே கருதினார் . இதே போல் 1920ல் தொடங்கப்பட்ட அகில இந்தியப் பெண்கள்

காங்கிரசும்' இதையொத்த பிற அமைப்புகளும் மேட்டிமைத்தனமும் , மேல்சாதித்தன்மையும் நிறைந்தவையாக நின்று, சீதையையும், சாவித்திரியையும் ஆணாதிக்கத்தின் குறியீடுகளாகப் பார்க்காமல் (INDIAN WOMEN HOOD) ன் மாதிரியாகப் பார்த்தன.

எண்பதுகளின் (80) ஆரம்பத்தில் இருந்து செயல்பட்டுக் கொண்டிரு க்கின்ற மதுகிஷ்வர் (ஆசிரியர் , மனுஷி) மற்றும் (KALI FOR WOMEN) குழுவைச் சேர்ந்த - 'பெண்ணிய அறிவு ஜீவிகள் ' ஆகியோர் மதக் குறியீடுகளைக் கொண்டே இந்தியப் பெண்ணின் "WOMEN POWER' ஐ கட்டமுடியும் . பெண் விடுதலையைச் சாதிக்க முடியும் என்பதற்கான போக்கை மேற்கொண்டனர். சாதியாதிக்கம் குறித்த எந்த கேள்வியும், பார்வையும் இன்று வரை இவர்களுக்கில்லை. அதே போல் மேனகா காந்தி, மேதாபட்கர் வந்தனா சிவா போன்ற சுற்றுச்சூழல் தூய்மைவாதிகள் ஏதோ ஒரு வகையில் சுத்தம் அசுத்தம் கோட்பாட்டைப் பிரதிப்பலித்த பெண்ணிய அறிவு ஜீவிகள் என்று நாம் கருத வேண்டியதாகவே உள்ளது. இத்தகைய மேட்டிமைத்தன்மைமிக்க சுற்றுச்சூழல் பெண்ணியலாளரின் குரலும் , தலித் பெண்களின் குரலும் ஒன்றாக இருக்க முடியாது. சுருங்கக்கூறின் இந்தியாவில் சாதிப் பிரச்சனையை, தலித் பிரச்சனையை இந்துத்துவ, பார்ப்பானிய எதிர்ப்பை முன் வைத்துப் பேசாத எவரும் இந்துத்துவ, பார்ப்பன சக்திகளோடு ஏதோ ஒரு தருணத்தில் கரம் கோர்த்துக் கொள்ள நேரிடுவது இயற்கையானதே. காந்தியவாதிகள், சுற்றுச் சூழல் வாதிகள் அது சார்ந்த பெண்ணியலாளர் , இந்துத்துவ சக்திகள் போன்றவை ஒரே அணியில் நிற்பதும் இயற்கையானதேயாகும். இவர்கள் எந்த வகையிலும் தலித் பெண்களின் பிரதிநிதிகள் ஆக முடியாது; இவர்களோடு தலித் பெண்ணியத்திற்கு எந்த ஒட்டும் உறவும் இருக்க முடியாது: ஏனெனில் அது இயல்பிலேயே புரட்சிகரமதான. இது போன்ற வேறொரு அணி சேர்க்கையையும் சமீபத்தில் நாம் காண நேர்ந்தது. இந்தப் பாராளுமன்றத்தில் 33% இடங்கள் பெண்களுக்காக ஒதுக்குவது தொடர்பான பிரச்சனை வந்த போது சமூக நீதியை ஆதரிக்கும் எல்லா அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் “33 சதவீதத்தை மொட்டையாகப் பெண்களுக்கு ஒதுக்கக்கூடாது. அதில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்கீடு தேவை” யென்று குரல் கொடுத்தன. உள் இட ஒதுக்கீடு இல்லையென்றால் அந்த 33 சதத்தில் பெருமளவில் உயர்சாதிப்

பெண்களே தேர்ந்தெடுக்கப்பட்டு வருவர் என்பது வெளிப்படை. இந்தப் பிரச்சனையிலும் CPI,CPM,BJP உட்பட அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் நின்று SC/BC பெண்களில் இட ஒதுக்கீட்டை எதிர்த்தனர் . எனவே தலித் பெண்கள் : தங்கள் சகோதர தலித் ஆண்களோடு

இணைந்து நின்று சாதியாதிக்க எதிர்ப்புப் போரை, தலித் விடுதலை (யுத்தத்தை நடத்துவர்) எல்லா வகையிலும் ஆணாதிக்க மதிப்பீடுகளை தகர்த்து நொறுக்குவர். தலித் ஒற்றுமையும் தலித் பெண்கள் ஒற்றுமையும் இரு கண்களாகக் கருதுவர் .

தலித் கவி வாமன் கர்டக் (WAMAN KARDAK)ன் கவிதையுடன் இக்கட்டுரையை முடிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

இருளின் படையை அடித்து விரட்டு.

வானையும் , நிலவையும் , நட்சத்திரங்களையும் தேடு!

வெளிச்சம் உனக்குள் உள்ளது!

வெளிச்சம் உனக்குள் உள்ளது!

நாளைய சூரியன் நீயே!

**தலித் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம் - ஒரு வரலாற்று பார்வை – எப்சிபா**

இயக்கத்தின் தோற்றத்தைப் பற்றிக் கூறுவதற்கு முன், இப்பெண்களின் இயல் நிலை குறித்து கூற விரும்புகிறேன் . இப்பெண்களை தலித் , எஸ்.சி, எஸ் .டி, அரிசன் என்று பல பெயர்கள் சூட்டி அழைக்கின்றனர். அதற்கு பல விதமான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. 'தலித் ' என்றால் ஒடுக்கப்பட்டவர்கள் என்றும், தாழ்த்தப்பட்டோர் என்றும், எஸ்.சி.எஸ்.டி என்பதை அட்டவணைசாதி என்றும் 'அரிசன்' என்பதற்கு ஆண்டவன் பிள்ளைகள் என்பன போன்ற பல அர்த்தங்கள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் சமூகத்தில் இப்பெண்கள் தீண்டப்படாதவர்களாக கருதப் படுகின்றனர் . ஆனால் நானோ, எங்கள் இயக்கத்வர்களோ “தலித் ” எனும் சொல்லுக்குக் கொடுக்கும் விளக்கம் யாதெனில் , “தல் ” (dal) என்ற ஹீபுரு வார்த்தைக்கு கொடுக்கப்படும் 'நிலம் ' என்கிற அர்த்தம் . தலித்துக்கள் என்றழைக்கப்படும் இம்மக்கள் உழைப்பு-தொழில் ரீதியாக

பிரதானமாக நிலத்தோடு தொடர்புடையவர்கள். இந்த தலித்துக்கள் அதிலும் அதிக அளவில் தலித் பெண்கள் நிலத்தோடு தொடர்புடையவர்கள் . நிலத்தோடு தொடர்புடைய விவசாய வேலைகளிலேயே அதிகம் ஈடுபட்டிருக்கிறவர்கள் . ஒரு விதத்தில் பார்ப்போமானால் இந்த பூமியை பண்படுத்துகிறவர்கள், பூமியின் வளங்களை பயன்படுத்தி மனித குலம் உயிர் வாழ உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்கள். அப்படி ஈடுபட்டு உழைக்கும்போதும் பூமியின் வனப்பை சிதைக்காதவர்கள். அப்படியே பூமியின் வனப்பு சிதைவுற்று சிதிலம் அடைந்தாலும் (சுத்தம் செய்கின்றவர்கள்) அழகாக்குகின்றவர்கள் . இந்த நிலத்தை பாதுகாக்கின்றவர்களாகவே இந்தப் பெண்கள் இருக்கின்றார்கள். நிலத்தோடு தொடர்புடைய பணிகளைச் செய்கின்ற காரணத்தினாலேயே, சிறுசிறு குழுக்களாக சிதறிப்போய், ஒருங்கிணைக்கப்படாதவர்காளக இருக்கின்றார்கள். இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்களான இந்தப் பெண்கள், இந்த மண்ணை வளம் குன்றாமல் செம்மைப் படுத்தும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இதன் மூலம் இவர்கள் மட்டுமல்ல இந்த பூமியில் வாழ் அனைத்து ஜீவராசிகளும், மனித ஜீவன்களும், உயிர் வாழக்கூடிய அளவிற்கு இந்த மண்ணைப் பேணிகாத்து விவசாய உற்பத்தியில் ஈடுபட்டார்கள், ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பலரை வாழவைத்த பெருமை, இவர்களையே சாரும். இந்தவகையில் தலித் பெண்கள் இந்நிலத்தின் பாதுகாவலர்கள் என்று கூறினால், அந்தக் கூற்றும் உண்மையே.

தலித் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம் 1992ம் ஆண்டு தொடங்கப்பட்டது. பின்னணி என்று பார்த்தால் 1992-ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தாலுகா. பொன்னூர் என்ற கிராம தலித் மக்கள் அதிலும் குறிப்பாக தலித் பெண்கள் , குழந்தைகள் மீது காவல் துறையும் செங்குந்த முதலியார்களும் சேர்ந்து தொடுத்த தாக்குதல்கள் என்றே கூறமுடியும் . 1992-ல் தமிழகப் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கத்தின் முதல் மாநாடு திருச்சியில் நடத்தப்பட்டது. அப்படி மூன்று நாட்கள் நடந்த கூட்டத்தில் தலித் பெண்கள் மீதான வன்முறையைப் பற்றியும் விவாதிக்கப்பட்டது. பெண்கள் மீது, குறிப்பாக தலித் பெண்கள் மீது தொடுக்கப்படும் வன்முறை-வரலாறு பல தீர்மானங்களை கொண்டது. குழந்தைப் பருவத்தில் தொடங்கம் வன்முறை, பருவடைந்தவுடன் திருமணத்திற்ப்பின், மாதவிலக்கு நின்ற நிலையில் , வயதானபின் என்று தொடரும் வன்முறையாக நிலவுவது பற்றி இம்மாநாட்டில் பேசப்பட்டது. பொன்னூரில் நடந்த தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது ஏவிவிடப்பட்ட வன்முறையைப் பற்றி ஒலிபெருக்கியில் பேச உரிமை மறுக்கப்பட்டு ஒலி பெருக்கி

இன்றியே பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அப்படி பெண்கள் மீதான வன்முறைப்பற்றி. பேச அனுமதிமறுக்கப்பட்டதும் , அதனுடைய தாக்கமும் , தலித் பெண்களுக்கென்று ஒரு தனி அமைப்பை தொடங்குவதற்கு திருப்புமுனையாக இருந்தது. 1989-ஆம் ஆண்டு நடந்த போடிக்கலவரத்தில் தலித் பெண்கள் குழுவாக பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டபோது, முற்போக்கு மாதர் இயக்கங்களோ, ஜனநாய மாதர் இயக்கங்களோ, பெண்ணுரிமை இயக்கங்களோ குரல் கொடுக்கவில்லை என்ற நிலையைப் பார்த்து, தலித் பெண்கள் பலரின் உள்ளத்தின் ஆழத்தில் இருந்த குமுறல் பல நேரங்களில் வெடித்தாலும் , அது ஒரு தலித் பெண்கள் இயக்கமாக உருவாக்கம் பெற வாய்ப்பில்லாது இருந்தது. 1992-ம் ஆண்டு பொன்னூர் கிராம தலித் பெண்களுக்கு ஏற்பட்ட கொடூரம் ஒரு திருப்பு முனையாக இருந்து, தலித் பெண்களின் உணர்வுத் திரட்டு ஒரு தனி இயக்கமாக உருப்பெற்றது. இப்படி கூறுகின்ற பொழுது, தலித் பெண்கள் இயக் கம் ஒரு பெரிய இயக்கமா? அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இருக்கிறார்களா? என்ற கேள்விகள் பலருக்கு எழலாம் . இந்த இயக்கம் ஒரு மாபெரும் இயக்கமல்ல. எண்ணிக்கையில். குறைந்தவர்களே ஆனாலும் உறுதியானவர்கள் , தங்கள் சிந்தனையில் தெளிவுள்ள, செயல்பாட்டுத்தெளிவு கொண்ட வீராங்கனைகள், பல அரசு சாரா நிறுவனங்களில் பணி செய்யக் கூடியவர்கள், இயக்கங்களில் முக்கியப் பொறுப்பில் உள்ள பெண்கள் இதில் இருக்கிறார்கள் .

இந்த இயக்கத்தின் தொலைநோக்கு, கொள்கை, கோட்பாடு, செயல்பாடுகள் என்று எடுத்துக் கொண்டால் சாதீ ஒழிப்பே பிரதானமானதாக இருந்தபோதும் , ஆங்காங்கே தலித் பெண்களுக்கு ஏற்படும் 'கொடுமைகள்' பற்றி செய்தி அறிந்தவுடன் அங்கு சென்று, உண்மை அறிந்து, சட்ட ரீதியாகவும், மனிதாபிமான ரீதியாகவும் துயர்துடைப்பு, தோழமை என்று அவர்களுக்கு ஆறுதல் அளித்து, ஊக்கமளித்து, ஆலோசனைக் கூட்டம் மற்றும் தலீத் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைக்கு எதிராக போராட்டத்தை நடத்துவது; மற்ற இயக்கங்கள் இத்தகைய கொடுமைக்கு எதிராக நடத்துகின்ற போராட்டத்தில் கலந்து கொள்வது; பாதிக்கப்பட்ட பெண்கள் இருக்கும் இடத்திற்கே சென்று இயக்க உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவது அவர்களுக்கு எங்கள் துணை எப்பொழுதும் உண்டு என்பதை காண்பிப்பது; வழக்கு சம்பந்தமாக அதிகாரிகளைச்

சந்திக்கும் பொழுது, பாதிக்கப்பட்ட பெண்களோடு உடன் செல்வது, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் போராட்டம் நடத்துவது என்பவை எங்கள் இயக்கத்தின் தொடர் நடவடிக்கைகள். தலித் பெண்கள் பற்றிய வரலாற்றைப் பற்றி தெரிந்து கொள்வதும் சமூகத்தில் அவர்கள் குறித்த இழிவான நிலையை எடுத்துக்காட்டி, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டனம் செய்து தலித் பெண்களுக்கான தனித்த விடுதலைப்பாதையை சுட்டிக்காட்டுவது என்பன, தலித் பெண்களின் இயக்க ரீதியான தொடர் பணிகள் மேலும் இத்தலித் "பெண்ர்கள் பற்றி எதார்த்தமான இயல்பான நிலைபற்றி இந்த சமூகத்திற்கு எடுத்துக் காட்டுவதும் இவ்வியக்கத்தின் முக்கியப் பணியாகும் . குறிப்பாக இந்தப் பெண்கள் பற்றி பேசும் பொழுது இவர்கள் எதற்கும் லாயக்கற்றவர்கள், பயந்தவர்கள், அழகற்றவர்கள், ஒழுங்கீனமானவர்கள், அறிவுகுறைந்தவர்கள் , உணர்வற்றவர்கள் என்று பலரும் பலவிதமாக இந்தப் பெண்களைப் பற்றி நினைக்கிறார்கள் பேசுகிறார்கள் . உண்மையில் அவர்கள் நினைவிலும் நோக்கிலும் உண்மை இல்லை என்று அவர்களுக்கே தெரியும். உழைப்பாளிகளாக இந்தப் பெண்கள் , பலவீனர்களாக, பயந்தவர்களாக எப்படி இருக்க முடியும் ? மேலும் இவர்கள் பண்பாட்டு கலாச்சார ரீதியிலும் உயர்ந்து நிற்கிறார்கள். இவர்களை நேரிடையாக சந்தித்துப் பேசி அவர்களைப் பாடச் சொல்லுங்கள் எவ்வளவு அழகாகப் பாடுவார்கள். அவர்களுடைய ஆட்டம், நடனம் எப்படி இருக்கிறது என்பதை நேரில் பார்ப்பவர்களுக்குத்தான் புரியும் நான் ஒரு பெண்மணியைச் சந்தித்து உங்கள் கணவரை எப்படிதெரிந்து கொண்டீர்கள் அவரைப்பற்றி என்ன சொல்வீர்கள் என்ற பொழுது அந்தப் பெண்மணி ஒரு அழகான பாடல் பாடினார் :

"கம்மங் கருதுலையும்

கடுகளவுகோணலுண்டு,

என்னைத் தொட்டமன்னவர்க்கு

எள்ளளவு கோணலில்லை"

இந்தப் பெண்மணிக்கு இப்பொழுது 50வயது இருக்கும் . அவளுடைய மூத்த மகனுக்கும் திருமணமாகிவிட்டது. இவர்கள் எந்த இசைக்கல்லூரியிலும் சென்று பயிலவில்லை. இவர்களுக்கு கல்வி என்ற எழுத்தறிவு வேண்டுமானால் இல்லை என்ற சொல்ல முடியுமே ஒழிய, அவர்கள்.

அறிவில் சிறந்தவர்கள் . இவர்களுக்கு தாளங்களின் எண்ணிக்கையும், இசையின் வகைப்பாடுகளும் தெரியாததாயிருக்கலாம், ஆனால் இசையின் நளினமும் தாளங்களின் துள்ளலும் அவர்களிடம் உள்ளது என்பதை யாரும் மறுத்து கூற முடியாது. ஒரு சகோதரி தன் இளையசகோதரி இறந்ததற்கு அழும்போது,

தாழம் பூ பூத்துருச்சு

தங்கச்சி - தங்கமும் வாங்கியாச்சு

தாலி கட்ட நேரமாச்சு

என்றிருந்தேன் எம்பிறப்பே

தாழம் பூ பூக்கவில்லை.

தாலி கட்ட நேரமில்லை

எம்பிறப்பே - எமனே

தாலியானான் எம்பிறப்பே

என்ற ஒப்பாரிப் பாடலைக் கேட்டவுடன், இறந்த சகோதரி திருமணமாகாதவள் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது தன் தங்கையைக் குறித்து மூத்த சகோதரி எப்படி பாசமுள்ளவளாக பொறுப்புள்ளவளாக அவளுடைய திருமணத்தைக் குறித்து திட்டமிட்டிருந்தாள் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது. இவர்கள், அடுத்தவர்கள் இன்பதுன்பங்களில் கலந்து கொள்பவர்கள் . இறந்தவர்கள் சொந்த ஜனமானாலும் , மற்ற இனத்தைச் சார்ந்தவர்களானாலும், அதற்கு ஏற்றாற் போல் ஒப்பாரி பாடல் பாடுவதை காண முடியும். வாழ்ந்த வாழ்க்கை, வாழ்க்கையில் அனுபவித்த துன்பம், இப்படி அனைத்தையும் சாவு வீட்டில் சொல்லி அழுகிறார்கள் . இந்தப் பெண்களுக்கு, இவர்கள் பயன்படுத்தும் ஒப்புவமைகளை, உருவகங்களை, இவற்றை இசையோடுப் பண்ணமைக்கும் திறத்தை, கல்லூரியோ பள்ளியோ கற்பிக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் .

“மூங்கியளவு பள்ளத்திலே

மூஞ்சி கழுவ போனீகளோ? அய்யா

மூங்கில் முள்ளா குத்தீருச்சோ-

உங்கள் முகம் வாடீருச்சோ”

தலித் பெண்களிடம் கணவனை கண்கண்ட தெய்வமாக வழிபடும் வழிப்பாட்டுக் கோட்பாடு இல்லை. ஏனெனில் ஆண் பெண் "இருவரும் உழைப்பாளிகளாக இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் ஒரே விதமான மரியாதையைப் பார்க்க முடியும் . இவர்களிடம் விதவைத் திருமணம் , மறு திருமணம் விவாகரத்து எல்லாம் உண்டு. நிலத்தோடு தொடர்புடைய இந்தப் பெண்களுக்கு இந்த நிலமே பலமாக இருந்தது. இந்த நிலம் இவர்கள் கைகளிலிருந்து பறிபோனபோது நிலைமை தலைகீழாக மாறியது. சார்புத் தன்மை. வளர்ந்தது. இதனால் இவர்கள் சக்தியற்றவர்களாய் , மழுங்கடிக்கப்பட்ட நிலைகுள்ளாகியிருக்கிறார்கள் ஆனால் ஆதி காலம் தொட்டு இந்தப் பெண்கள் வீர மங்கைகளாக இருப்பதைக் காணலாம். சென்றமாதம் கதிரவன் பத்திரிக்கையில் வாசிக்கும்

பொழுது வீரன் சுந்தரலிங்கம் காதலித்தப் பெண் மாடு மேய்க்கின்றவள். அவரின் உறவுக்காரப் பெண், தாய் மண்ணிண் சுதந்திரத்திற்காக வீரன் சுந்தரலிங்கத்தோடு இணைந்து முதல் மனித வெடிகுண்டாக, ஆங்கிலேயர்கள் படைக் கிடங்கை தகர்த்தாள் என்பதை அறிய முடிகிறது. பகத்சிங் ஆங்கிலக் கிளப் (English Club) பைத் தகர்க்க தேவையான வெடி பொருட்களை ராணி என்ற தாசிப் பெண் தன்வீட்டில் பதித்து வைத்திருந்தாள் என்பதை “எரிமலை எதார்த்தம் ” என்ற புத்தக வா.அலாக அறியமுடிகிறது. இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டங்களில் தலித் பெண்களும் தங்களின் கணவர்களோடு கலந்து கொண்டதற்கான ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன. ஆதிகாலம் தொட்டு இக்காலம் வரை இந்தப் பெண்கள் தங்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வன்முறைக்கு

எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்பதை வாய்மொழி வரலாறுகளிலிருந்து எடுத்துக் காட்டலாம்.

ஒரு தாலாட்டுப் பாடல் மூலம்

ஆராரோ ஆரிராரோ கண்ணே நீ

ஆராரோ ஆரிராரோ

ஆரடித்தார் நீ அழுகக் கண்ணே

அடித்தாரைச் சொல்லி அழு

என்பதின் மூலமே தெரிகிறது.

சம்பல் பள்ளத்தாக்கின் அழகி பூலான் தேவியைப் பற்றி யாவரும் அறிந்திருப்பீர்கள் தன்னையும் தன் சமூகத்தையும் தொல்லைக்கு (கொடுமைபடுத்திய) உட்படுத்திய ஆதிக்கமனப்பான்மைக் கொண்ட சாதியினரைச் சுட்டுத் தள்ளினாள் . கையில் துப்பாக்கி ஏந்தினாள் . இத்தலித்மகளின் வீரமன்றோ வீரம் , பத்திரிக்கையோ அவளை கொள்ளைக் காரியாக, கொலைகாரியாக சித்தரித்தது. அவள் அப்படி மாறக் காரணமான இந்த

சமூகத்தில், தங்களை சாதிரீதியாக உயர்த்திக் கொண்ட சமூக விரோதிகளை பத்திரிக்கைகள் என்னவென்று சொல்லும் ? 1945-ல் சுவாதீன் -ஜீன் மெராஜிகோரி என்ற தாழ்த்தப்பட்ட சாதிப் பெண் , பிரம்மாசில் , கலிமான் , அப்டேப் என்ற மூன்று காவலர்கள் மீது 376,341, 310 354 என்ற சட்டப் பிரிவின் கீழ் மாவட்ட நீதிபதி மெக்பூப்சுலமிடம் வழக்குப் பதிந்தார் என்பதை அறிய முடிகிறது. ராஜஸ்தானில் பன்வாரி என்ற பெண் பாலியல் வன்முறைக்கு ஆளானாள் . அந்த கிராமத்தில் நடந்த குழந்தைத் திருமணத்தை தடுக்க வேண்டும் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் அவள் கணவரை அடித்து துன்புறுத்தி, இவளை பாலியல் வன்கொடுமை செய்தவர்கள் மீது தொடர்ந்து 3 வருடம் நடத்திய போராட்டத்தின் பேரில் 0.8.1. விசாரித்து வழக்குத் தொடுத்தது.

**தலித் பெண்களும் உள்ளாட்சித் தேர்தலும்**

உள்ளாட்சி தேர்தல் பற்றி இரண்டு முறை இந்த தலித்ப் பெண்கள் இயக்கத்தவர்கள் அமர்ந்து விலாவாரியாக ஆதாரங்களோடு அலசி ஆராய்ந்தனர் . காரணம் அரசியல் கட்சிகளும், ஆளும்கட்சியும் , பத்திரிக்கையும் உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு பற்றி ஏதேதோ பிதற்றுகின்றனர். இதில் தலித் பெண்களுக்கும் , சிறுபான்மையினப் பெண்களுக்கும் உரிய பங்கில்லை என்பதை களத்திலிறங்கி நடைமுறையைப் பார்த்தவர்களுக்குப் புரியும் . பல இடங்களில் தலித் பெண்கள் தேர்தலில் நிற்க முடியவில்லை. அப்படியே துணிந்துபோட்டியிட்டவர்களும் அச்சுறுத்தல்களை, சில இடங்களில் கொடுமைகளை சந்திக்க

வேண்டியிருந்தது, இன்னும் சில இடங்களில் தலித் மக்கள் வாழும் பகுதிகளை (வார்டுகளை) இரண்டாகப் பிரித்து இனி எப்பொழுதுமே தலித் பிரதிநிதிகள் , வார்டு கவுன்சிலராகக்கூட வர இயலாத நிலை.எடுத்துக்காட்டாக முகவை மாவட்டத்துப் பஞ்சாயத்துக்களான வெள்ளையபுரம் மற்றும் ஒரிக்கோட்டைகளைச் சொல்லலாம். எங்கள் தலித் பெண்கள் இயக்கத்தினர் , பொதுவாக பெண்களுக்கு, அதிலும் குறிப்பாக தலித் பெண்களுக்கு, சுழற்சி முறையில் தொகுதி ஒதுக்கீடு தேவை என்பதையும் மற்றும் பெண்கள் ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடும் அவசியம் என்பதை வலியுறுத்துகிறோம் . கடந்த சில பத்தாண்டுகளில் பெருகிவரும் பக்தி முயற்சிகள் அதனால் தலித் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்பைப் பற்றியும் தலித் பெண்கள் இயக்கத்தினராகிய நாங்கள் விவாதித்தோம் . தலித் மக்கள் மத்தியில் இதைப்பற்றி எடுத்துக் கூற வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, பழனி (01) திருச்செந்தூர் முருகனுக்கோ, ஐயப்பனுக்கோ, வேளாங்கன்னிக்கோ மாலை போட்டவுடன், சாமி போகுது என்று சொல்லி பெண்ணுடைய உறவினர்கள் வந்து மோதிரம் வேஷ்டி பணம் வைக்கின்ற புதிய நடைமுறைப்பழக்கம் , பெண் வீட்டாரை வருத்துவதைப்பார்க்க முடியும் . மேற்கூறிய புதிய நடைமுறைப்பழக்கம் உருவாக பல காரணங்கள் இருப்பினும் , ஒரு சில காரணங்களைச் சுட்டிக் காட்டலாம். முதலாவதாக, வியாபார நோக்குடன்கூடிய இறைவழிபாடு, இரண்டாவதாக, பணப்பயிர் உற்பத்தியையும், சந்தைப் பொருளாதாரத்தையும் காரணங்களாகப் பார்க்கலாம். மேலும் தொடர்புச் சாதனங்கள் அடித்தள மக்களை, குறிப்பாக தலித்பெண்களை எப்படியெல்லாம் எதிர்மறையாகப் பாதிக்கிறதென்பதையும் ஆழ்ந்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. திரைப்படங்களும், தொலைக்காட்சியும் தலித் பெண்களின் எதார்த்தமான பேச்சையும், நடையுடை பாவனைகளையும், இயல்பாக எதிர்த்துப் போராடும் குணத்தையும், மாரடித்து அழுவதையும், வாய்விட்டுச் சிரிப்பதையும் கூட எதிர்மறையாகப் பாதித்து, மூளைச் சலவை செய்துவிடுகின்றன. எல்லாவற்றையுமே பண்டமாக்கி விற்கின்ற பத்திரிக்கைகளும் , அழகு, அழகு என்று கூவி அழகை விற்கத் துடிக்கின்றன. குறிப்பாக இந்த தலித் பெண்களின் கள்ளம் கபடமற்ற அழகையும், செய்திக் கதைகளாக இம்மக்களின் வாழ்க்கை அவலங்களைப் பற்றியும் எழுகி விற்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. தலித் பெண்களுக்கு எதிரான நீதிமன்ற தீர்ப்புகள் பற்றியும் ,இம்மக்கள்

பாதிக்கப்படுகின்ற பொழுது அரசு அமைக்கின்ற தனிநபர் விசாரணை ஆணையத்தின் அறிக்கை பற்றியும் , அறிவதும் அதை விமர்சிப்பதும் எங்கள் இயக்கத்தின் ஒரு நடைமுறையாகும். ராஜஸ்தான் மாநிலத்தில் பன்வாரி என்ற தலித் பெண்ணுக்கு எதிரான தீர்ப்பு குற்றவாளிகளை தப்பிக்கவிட்டது. சிதம்பரம் அண்ணாநகர் பத்மினியின் பாலியல் வன்கொடுமை நிரூபனம் ஆனது. ஆனால் அதே வேளையில் அவள் கணவன் நந்தகோபால் காவல் நிலையத்தில் கொலை செய்யப்பட்டது தற்கொலையாக மாற்றப்பட்டது எப்படி?1989ம் ஆண்டு மணப்பாறை வையம்பட்டிக்கு அருகில் லாரி விபத்தில் தாயம்பட்டவருக்கு கொடுக்கப்பட்ட ரூ.5000 பணம் காணவில்லை என்று புகாருக்காக, இந்திரா நகரில் வசிக்கும் லட்சுமியின் கணவரை, (செருப்புத்தைக்கும் தொழிலாளியை) கைது செய்து, பணத்தை மனைவி வைத்திருந்ததாக, பொய்யாகக் குற்றஞ்சாட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜாமணி லட்சுமியைப் பாலியல் பலாத்காரம் செய்த வழக்கு இன்னொரு எடுத்துக்காட்டு. தலித் பெண்கள் இயக்கதினர் போராட்டத்திற்குபின், மறுபடியும் மருத்துவப் பரிசோதனை மூலம் குற்றம் நிரூபணம் ஆகிவிட்ட பின்னும் , சென்னை உயர்நீதி மன்றம் , அந்தப் பெண்ணுக்காக போட்ட ரிட் மனுவை தள்ளுபடி செய்தது. காரணம் ஏற்கனவே அரசு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்க உத்தரவிட்டுள்ளதாலும் பாலியல் பலாத்காரம் செய்தபொழுது, போலீஸ் இன்ஸ்பெக்டர் பணி உடையில் இல்லை, லுங்கியில் இருந்தார் என்றும் கூறி, குறிப்பிட்ட நாட்களுக்குள் அரசு ஆணையிட்ட பணம் கிடைக் கவழிகாட்டுதல் கூறுவதாகக் கூறி முடித்துவிட்டது. இப்படிப்பட்டதான, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கும் எதிராக கொடுக்கப்படும் அறிக்கைகள், தீர்ப்புகள் குறித்து முதலில் நாங்கள் உரையாடி பின் வெளிக் கொண்டுவருவதும் எங்கள் செயல்பாடுகள் .சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பையும் உள் வாங்கிய அரசு, கடைபிடிக்கக்கூடிய தீண்டாமை குறித்தும் எங்களுக்குத் தெரியவரும்போது, அதை மக்களுக்கு விளக்குவது: அரசு அமுலாக்கும் நலத்திட்டம், முன்னேற்றத் திட்டங்களில், அரசே நேரடியாக, மறைமுகைமாக கடைபிடிக்கும் தீண்டாமை மற்றும் ஒப்பந்தங்களை மேல்தட்டு மேல்சாதியாருக்கு தாரைவார்த்துக் கொடுப்பது, நலத்திட்டங்கள் மூலமாக இருக்கின்ற மிச்ச சொச்சங்களையும் அவர்களையே சென்று அடையும் படியான திட்டங்கள்போடுவது, எடுத்துக்காட்டாக மேயர் ட்ரஸ்ட் மூலம் கொடுக்கப்பட்ட ஜீவன் தாரா

கிணறுகள் திட்டம். கிணறு வெட்ட அரசு பணம் கொடுக்க, இடையில் வரும் இடைத் தரகர்கள், எந்த நிலத்திற்காக கிணறு தோண்டப்பணம் கொடுக்கப்பட்டதோ அந்த நிலத்தையும் சேர்த்து சுருட்டிக் கொண்டு போய்விடுகிறார்கள் .

நவீனமயமாதல், இயந்திரமயமாதல் என்று சொல்லும் அரசு, மற்ற அரசுத் துறைகளில் , காலத்திற்கேற்ற மாற்றங்களைக் கொண்டுவருவது போல, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஏன் அப்படிப்பட்டதான நவீனமயமான இயந்திரங்களைக் கொடுக்கவில்லை. கால் உறை, கைஉறை ஏன் கொடுக்கவில்லை. இதெல்லாம் அரசே (மேல்தட்டு-மேல் சாதி) தொடுக்கும் தீண்டாமை. ஆனால் தீண்டாமை ஒழிப்பு மாநாடுகள் நகரங்களில் நடக்கிறது. கிராமங்களில் நடக்கும் தீண்டாமைக்கு நகரங்களில் இப்படிப் பல விதமான அரசின் தீண்டாமை ஒழிப்பு மாயஜாலங்களை பெண்களுக்கு எடுத்துக் கூறுவதற்குமுன் அனைத்து விதமான கூறுகள் பற்றி நாங்கள் கற்று பின் அதை மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதும் ஒன்று. சாதி ஒழிப்பின் உச்ச கட்டமாக சாதீயப் பிரச்சனையும், தலித் பிரச்சனையை இனப்பிரச்சனையாகக் காட்டவேண்டும். சாதிப்பிரச்னையும், இனப் பிரச்சனையும் ஒன்றே என்று உலக அளவில் எடுத்து இயம்பவேண்டும். ஏன், இனப்பிரச்சனையை விட சாதீயப் பிரச்சனை மோசமானது என்று. தெரிவிக்க வேண்டும். இனவேறுபாடு இருந்தபோதிலும் , நீக்ரோக்கள் (கறுப்பர்கள் ) கல்விக்கு 1865-1930க்கு மிடையில் 13,50,00,000 டாலர்கள் கல்விக்கு செலவிடப்பட்டது. இவற்றில் அமெரிக்கர்கள் (வெள்ளையர்கள்) 8,50,00,000 டாலர்கள் தந்துள்ளனர் . ஆனால் இங்கு இருக்க கூடிய தீண்டத் தகாதவர்களின் வளர்ச்சிக்கு மேல் தட்டு-மேல் சாதியினர் செய்த பணிகள் , அளித்த கொடைகள் என்னென்ன என்று பார்த்தால் அரிசனசேவா சங்கம் என்ற அமைப்புக்களை ஏற்படுத்தியது மட்டுமே. தலித்துக்களின் அடிப்படை முன்னேற்றத்திற்காக நல நிதியாக அதிகப்படியாக ஒன்றும் செலவிடவில்லை. அவர்களின் வாக்குகளை மேல்தட்டு-மேல்சாதிப் பிரதிநிதிகளுக்காக திரட்டும் ஒரு அரசியல் நிதி அமைப்பே அரிசனசேவா சங்கம் . இப்பொழுதும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் வைத்திருக்கும் . 5.0.5.7. பிரிவில், தலித் ஓட்டுகளை வாங்குவதற்காக ஒரு தலித்தை தலைமையாக போட்டிருக்கின்றதை அம்பலப்படுத்த வேண்டும் . ஒரு மாவட்டச் செயலாளர்பதவி கொடுக்காத அரசியல் கட்சிகள் எப்படி சாதீயத்தை கடைபிடிக்கிறது என்பதை இனப்பிரச்சனையாக உலக அளவில் எடுத்து இயம்புவது நம்முடைய கடமையாக கருதுகிறேன். இதையே லால லஜபதிராய்

அவர்கள் திருமாயோ எழுதிய அன்னை இந்தியா புத்தகத்திற்கு பதிலளிக்கும் முகமாக துயரமான இந்தியன் என்ற புத்தகத்தில் வெள்ளயைர்கள் கறுப்பர்கள் மீது தொடுத்துவரும் கொடுமை, உலகிற்கு தெரிந்திருப்பதை போல இந்துக்கள், இந்துக்கள் அல்லாத தலித்துக்கள் மீது நடத்தும் கொடுமைகளை எடுத்துக் கூற வேண்டும். கடைசியாக தலித் பெண்கள் அம்பேத்கார் காலத்திலேயே இயக்கமாக செயல்பட்டனர் . 1935-ம் ஆண்டில் தலித் பெண்கள் மாநாடு நடத்தியதாகவும் 15 ஆயிரம் பேர் அதிகம் கலந்து கொண்டார்கள் என்பதையும் அம்பேத்கார் எழுதிய புத்தகங்கள் வாயிலாக அறிய முடிகிறது. தலித் பெண்கள் இப்பொழுதும் பல இயக்கங்களில் தங்களை இணைத்துக் கொண்டு போராடியிருக்கிறார்கள், போராடிக் கொண்டிருக்கிறார்கள், குறிப்பாக சிப்கோ இயக்கம், தெலுங்கானாப் போராட்டம் , ஆந்திரத்தில் சாராய ஒழிப்பு இயக்கம் இப்படிப் பல இயக்கங்களில் தங்களை இணைத்துக் கொண்டு .போராட்டங்களில் இந்த பெண்கள் தங்களை கரைத்து கொண்டனர் . தமிழ்தேசியம் பேசும் இக்காலக் கட்டத்திலே தீண்டாமையும் பெண் இழிவும் சாதித் தமிழ் சமுதாயத்தைப் பிடித்திருக்கும் பெருநோய்கள், தலித் விடுதலை இல்லையேல், தமிழின விடுதலை அமையாது. எவ்வாறு இன்று 'பெண்கள் இயக்கங்கள் உலகிற்கு அறை கூவல் விடுகின்றதோ அதுபோல பெண்கள் பார்வையில் குறிப்பாக தலித் பெண்கள் பார்வையில் ,வளர்ச்சி, சமத்துவம் அமைதியை நோக்க வேண்டும் . அதுபோலவே இந்தியாவிற்கும் , தமிழகத்திற்கும் , தலித் பெண்கள் விடும் அறைகூவல், 50 ஆண்டுகால சுதந்திரம் தலித்துக்களுக்கும், தலித் பெண்களுக்கும் என்னசெய்தது? இனியும் என்ன செய்ய முடியும் என்பது தான்?

**தலித் விடுதலையில் தலித்பெண்ணியப் பார்வை – சக்குபாய்**

முற்படுத்தப்பட்டோருள் பல சாதிகள் உள; பிற்படுத்தப்பட்டோருள் பல சாதிகள் உள; தாழ்த்தப்பட்டோருளும் பல சாதிகள் உள. நம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பார்ப்பனர் நீங்கலாக முற்படுத்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர் , தாழ்த்தப்பட்டவர் ஆகிய அனைவருக்குமே. தீண்டாமை உண்டு. அடக்குமுறை உண்டு. ஒடுக்குமுறை உண்டு. ஆனால் அளவில் தான் வேறுபாடு. தீண்டாமையும் அடக்குமுறையையும், ஒடுக்குமுறையையும் கட்டிக் காப்பது

சாதிபடிமுறைகள். சாதிப்படிமுறைகளைப் படைத்தது கடவுள். கடவுளைத் தாங்கி நிறுத்துவது இந்து மதம் எனப்படும் வைதீக சமயம். இம்மூன்றையும் நிலை நிறுத்திக் காப்பது வேத, சாத்திர புராணங்கள். இவற்றை இன்றைக்கும் விட்டு விடலாகாதென தூக்கி நிறுத்தியுள்ள இந்திய அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியான இந்துச் சட்டம் ; மக்கள் மறந்தும் திருந்திவிடலாகாதென அல்லும் பகலும் அயராது கருத்துப் பரப்பும் சங்கராச்சாரிகள் , ஜீயர்கள் : மக்கள் மனதில் பதியவைக்கும் கலை, இலக்கிய, பழமொழிகள். இதன் காரணமாக அடித்தட்டிலே சிக்கி அல்லற்படும் தாழ்த்தப்பட்ட மக்களின் அவலங்கள் சொல்லி முடியாதன. சூத்திரர்கள் என அழிவு செய்யப்பட்ட மக்களான முற்படுத்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர்களும் கூட மிதிக்கும் இரட்டைக் கொடுமைகளுக்கு உள்ளாயினர் .

1. இம்மக்கள் (தாழ்த்தப்பட்டவர்) தங்கள், வெள்ளி நகையணியக் கூடாது.

2. இச் சமூக ஆண்கள் சட்டை பனியன் அணியக் கூடாது.

3. இச் சமூக ஆண்கள் இடுப்புக்கு மேலும், முழங்காலுக்குக் கீழும் ஆடை அணியக் கூடாது.

4. இவர்கள் மட்பாண்டம் மட்டுமே வைத்துக் கொள்ளலாம்.

5. இச் சமூகப் பெண்கள் மார்பகங்களை மறைக்கும் ரவிக்கை கச்சை ஆகியவை அணியக் கூடாது.

6. இப்பெண்கள் மலர் சந்தனம் ஆகியவை உபயோகிக்கக் கூடாது.

7. குடை பிடித்துச் செல்லக் கூடாது; செருப்பணிந்து செல்லக் கூடாது.

8. இவர்கள் கோயில் பக்கமே வரக்கூடாது.

என திருச்சி மாவட்டக் கூத்தப்பார் கிராம கள்ளர்களும் ,

இராமநாதபுரம் மாவட்ட மறவர்களும் தீர்மானங்கள் இயற்றினர் . இராமநாதபுரத்தில் 1931 சூன் திங்களில் கூடிய மேற்கூறிய வகுப்பினர் மேலும் செய்த சில தீர்மானங்கள் வருமாறு:-

1. தாழ்த்தப்பட்டோரின் குழந்தைகளைப் படிக்க அனுப்பக் கூடாது.

2. குழந்தைகள் மிராசுதார்களின் கால்நடைகளை மேய்ப்பதற்காக விடப்பட

வேண்டும் .

3. ஆண்களும், பெண்களும் பண்ணைகளில் அடிமை வேலையே செய்ய

வேண்டும் .

4. குத்தகைக்கோ வாரத்திற்கோ நிலம் உழக்கூடாது.

5. இவர்களில் சொந்த நிலம் வைத்திருப்போர் குறைந்த விலைக்கு விற்றுவிட வேண்டும். மறுத்தால் பயிரிட நீர் மறுக்கப்படும் .

6. காலை 7 மணி முதல் மாலை 6மணி வரை உழைக்க வேண்டும்.

சுருங்கக்கூறின் உணவு, ஆடை, அணிகலன், ஒப்பனை நடமாட்டம், கல்வி, தொழில் , சொத்துடமை ஆகிய அனைத்துமே மறுக்கப்பட்ட நிலைதான். சாணிப்பாலைக் குடிக்கக் கொடுப்பதும் , சவுக்கால் அடிப்பதும் தஞ்சை மாவட்டத்தில் சாதாரண நிகழ்ச்சிகள் .

இதனால் தான் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், "ஆதிதிராவிட சமூகத்தாருக்கு மற்ற சமூகத்தார்கள் செய்யும் கொடுமைகளைப் பற்றிக் கேட்க எனக்கு ஆத்திரமாக வருகிறது. ஆனால் இதற்கு யார் ஜவாப்தாரி? என்பதைப் பற்றி யோசித்துப் பார்க்கையில் உங்களைக் கொடுமை செய்பவர்கள் ஜவாப்தாரியல்லர் . ஏனெனில் அவர்கள் தங்களது நம்பிக்கையில் பேரில் , தங்களது மத உணர்ச்சி, மத ஆதாரம் ஆகியவைகளில் உள்ள பற்றுதலின் பேரில் , தங்கள் முன் ஜென்மத்தின் கர்மம் – பூர்வ புண்ணியம் - தலைவிதி என்கின்ற சுதந்திரத்தின் பேரில் ஒரு உரிமை பாராட்டி அம்மாதிரி செய்கின்றார்களேயொழிய வேறில்லை", என்று மனம் நொந்துக் கூறுவதுடன் அதற்கான காரணத்தையும் ஆய்ந்துரைக்கிறார். சாதிகள் இங்கு அடுக்கு முறையில் அமைந்திருப்பது ஒரு பக்கம் . இவற்றுக்கிடையில் தொழில் வகைப்பட்ட உறவுகள் உண்டு. ஆனால் சமநிலையில் இல்லை. இவ்வுறவுகளில் ஒடுக்குமுறை உள்ளது. தொழில்களையே இழிவு செய்யும் மனப்பாங்கு அத்தொழில் செய்யும் மக்களையும் இழிவு படுத்தத் தவறவில்லை. இதில் மனிதத் தன்மையற்ற வக்கரிப்பும், கயமைப் பண்பும் கலந்திருப்பதை நம்மால் மறுக்க முடியாது. இன்னொரு புறம் சாதிகள் ஒவ்வொன்றும் தனித் தனிக் குழுக்களாக அதாவது கதவடைப்புச் செய்து கொண்ட பிரிவுகளாக உள்ளன. ஒவ்வொரு சாதியும் தனக்குக் கீழான சாதியினரைத் தன்னுள் புக அனுமதிப்பதில்லை. தன் சாதியினரும் வெளியில் போகாமல் தடைசெய்கிறது. சாதி நடைமுறையை மீறுகின்றவர்கள் தன் சாதியினராலும், உயர்ச் சாதியினராலும் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

தண்டிக்க இயலாத நிலையில் தன்னினும் உயர் சாதியினருக்கு மட்டும் கதவைத் திறந்து ஏற்கும். தன்னினும் கீழ்ச் சாதியுடன் உறவு கொண்யால் கதவைத் திறந்து வெளியில் தள்ளிவிட்டு கதவடைத்துக் கொள்ளும். கொள்வினை கொடும் வினைகள் சாதிக்குள் அமைவதால் இரத்த உறவும் அதனுள் அமைகிறது. அதனால் பிறப்பு முதல் இறப்பு வரை அவ்வச் சாதி உறுப்பினர் பங்கேற்கின்றனர். அது கடமையாகவும் அமைந்துள்ளது. இந்நிலையை, "அகமணம் அல்லது கதவடைத்த. அமைப்பு இந்து சமூகத்தின் ஒரு பாணியாக இருந்தது. அகமணம் பார்ப்பனர்களிடமிருந்து பிறந்தது. ஆதலினாலே ஏனைய பார்ப்பனர் அல்லாத உட்பாகுபாடுகளிலும் அல்லது வர்க்கங்களிலும் முழுமனதோடு பின்பற்றப்பட்டது. எனவே பார்ப்பனர் அல்லாதோரும் தம்முறையாக அகமணப்பாங்கு கொண்ட சாதிகளாக ஆகி நின்றனர். பாகுபடுதலை நோக்கிப் பயணம் மேற்கொண்டிருந்த "இந்த உட்பாகுபாடுகளை, பார்த்தொழுகும் தொற்றுநோய் தொற்றிக் கொண்டு அவற்றைச் சாதிகளாக மாற்றிவிட்டது" என்று அம்பேத்கார் ஆய்ந்துரைப்பார். சாதிகள் இவ்வாறு நிலைப்படுத்தப்பட்டுப் பேணிக் காக்கப்பட்டு வருவதால் சாதிகளை முறியடிக்க ஒழிக்க முயன்ற முயற்சிகள் எல்லாம் தோல்வியைத் தழுவின என்று தான் சொல்ல வேண்டும் . இதனால்தான், "தாழ்த்தப்பட்ட மக்கள் சமத்துவம் பெறுவதும் தீண்டாமைத் தத் துவம் மனித சமூகத்திலிருந்து விலக்கப்படுவதும் வெறும் வார்த்தையாலோ, பிரச்சாரத்தினாலோ, மேல்சாதிக்காரர்களைக் கேட்டுக் கொள்வதினாலோ ஆகக் கூடிய காரியம் என்று யாராவது நினைத்தால் அவர்களது வாழ்வு வீண் வாழ்வு என்று தான் சொல்லுவேன்". என்று தந்தை பெரியார் கூறினார் .

மனித நலச் சிந்தனையாளரான அம்பேத்கார் சாதி ஒழிப்பிற்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவத்துக்காகவும் காலமெல்லாம் உழைத்தார். போராடி கால விரயமும் , பொருள் விரயமும் , உழைப்பு விரயமும் ஏற்பட்டதுதான் கண்ட பயன் . அதனால் தம் உழைப்பு எல்லாம் வீணாகி விட்டது என்று கூறியதுடன் , "நானோர் இந்துவாகச் சாக மாட்டேன், என்று சூளுரைத்தார் . மக்கள் சமத்துவம் பேணும் புத்த . நெறியைத் தழுவிக் கொண்டதுடன் தம் கூட்ட மக்களின் ஒரு பெரும் பகுதியினர் அதனைத் தழுவுமாறும் செய்தார் . தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்கள் உண்மையில் தாழ்ந்தவர்களல்லர் . இதில் ஒரு பிரிவினராம் பள்ளர் எனப்படும் மள்ளர்கள் உழுவார் உலகத்துக்கு ஆணி' என்னும் பெருமைக்குரியவர் . போர்க் காலத்தில் வீரர்களாகச் செயல்பட்டவர்கள் . மூவேந்தரினம் என்று இன்று ஆதாரங்களை அள்ளித்

தருகின்றனர். பறையர்கள் வாழ்வு, சாவு, போர் , அறிவிப்பு ஆகிய அனைத்திலும் முன்னின்று பறைகொட்டும் முதன்மைத் தகுதிக்கு உரியர் அத்துடன் தமிழ்ச் சமூகத்தில் தோல் பதனிடும் கலையை அறிந்து பெருமைக்கு உரியவர் . மேலும் உழவுத் தொழிலையும் மேற்கொள்பவர் . தமிழகம் முழுமையிலும் வாழும் ஒரே சாதியினர் இவர்கள் மட்டும்தான். பாணர் இசை மரபுக்கு உரியவர். கணியர் வானியல் அறிந்தவர். வள்ளுவர் கல்வி கற்பிக்கும் பெருமைக்கு உரியவர். இன்றைக்கும் தமிழ்நாட்டின் பெருமையை உலகுக்கு அறிவிக்கும் தலைசிறந்த திருக்குறளை எழுதிய வள்ளுவனை ஈன்றெடுத்த பெருமிதம் சார்ந்த குடியாகும் . சக்கிலியர் என்பவருள் தமிழ் பேசுபவர் உளர். (தம் தாய் மொழியாம் பிறமொழியை மறந்தனரா என்பது ஆய்வுக்கு உரியது). பிறமொழியாம் தெலுங்கு, கன்னடம் பேசுவோரும் உளர் . இவருள் தமிழ்பேசும் (தாய் மொழியாகக் கொண்ட) சக்கிலியரை மட்டும் நம் மண்ணில் தாழ்த்தப்பட்டவருள் அடக்கலாம். பிற மொழியாளர்களை இப்பிரிவிற்குள் கொண்டு வந்து தமிழரின் உரிமைகளைப் பெற அனுமதிக்கலாகாது. பிற மொழியாளர் ஒவ்வொருவரும் தமிழரைத் தாழ்வாக நினைக்கும் மனப்போக்கினர் . இதற்கு விதிவிலக்காகச் சிலர் இருக்கலாம் . இவர்

எவராயினும் , அரசில் , ஆட்சியில் , நிர்வாகத்தில் பங்கு பெற அனுமதிக்கக் கூடாது. வகுப்புரிமையில் அவ்வாறு உள் விட்டதால் நம் பங்கைக் (அதாவது மண்ணின் மைந்தர் பங்கை) கொள்ளையிடுவதுடன் , நம் சகோதரர்களுக்கும் நம் மண்ணுக்கும் எதிராகச் செயல்படுவதுடன் வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் தங்கள் தாய்மொழிக்குரிய நாட்டுக்காக நமக்குத் துரோகமிழைக்கத் தயங்கார் . “தமிழ் நாட்டில் பிற மொழியினர் ” என்ற ம.பொ.சி. நூல் ஆதாரங்களைத் தருகின்றார் . தமிழரின் நிலங்கள் எவ்வாறு பிறமொழியினர் கையில் சென்றன என்ற பட்டியலை வே.ஆனைமுத்துவும், குணாவும், டாக்டர் மு.வ.வும் தருகின்றனர். ஆற்று நீர்ச்சிக்கலில் பிறவற்றில் பிறமொழியினர் செய்துள்ள கேடுகளைப் பழ.நெடுமாறன் எடுத்துக்காட்டியுள்ளார். நமது பக்கத்து நாடுகளான கன்னட நாட்டில் , தெலுங்கு நாட்டில், கேரள நாட்டில் வகுப்புரிமை வாயிலாகத் தமிழர் உள் நுழைய முடியாதபடி செய்துள்ளனர். அவர்களை நான் குறை சொல்ல முன்வரவில்லை. நமக்கும் அவர்களையொத்த உணர்வு தேவை என்று தான் சொல்கிறேன். சமத்துவம் பெறுவதற்கான் வழிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதலில் தாம் எவருக்கும் தாழ்ந்தவர் அல்லர் என்ற எண்ணம் தேவை.

“என்னைப் போலொரு மனிதன்

என்னை எப்படித் தாழ்த்தலாம் - அவன்
அன்னையைப் போலவென்
அன்னையும் ஆக்கினள் - நான்
என்ன தாழ்வா”

என்று ஈழக் கவிஞர் காசி ஆனந்தன் சிங்களவனைப் பார்த்துக் கேட்டாரே அதே கேள்வியை இன எதிரிகளிடத்து மட்டுமல்ல தமிழின உயர்சாதி, பிற்படுத்தப்பட்ட சாதியினரிடத்திலும் கேட்க வேண்டும் . மற்றவர்கள் தங்கள் சாதிப் பெயர்களைக் கூறிக் கொள்வதில் எவ்வளவு மதிப்பும் பெருமையும் கொள்கிறார்களோ, அதைப் போலவே தாங்களும் தங்கள் சாதிப் பெயர்களைக் கூறிக் கொள்வதில் மதிப்பும் பெருமையும் கொள்ள வேண்டும் . இதனை மாயாவதி அவர்களும் வற்புறுத்தியுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டும். நாளேடுகளில் இடம்பெறும் மணமேடைப்பிரிவில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சாதிப் பெண்களையே, ஆண்களையே மண உறவுக்குக் கேட்க ஆதிதிராவிடர் எனப்படும் பறையர் சமூகத்தவர் மட்டும் சாதி. தடையில்லை என்று கேட்பதைப் பார்க்க முடிகிறது. (விதிவிலக்காக கலப்பு மணத்தின் வாயிலாக பிறந்தவர் சாதி தடையில்லை என்று கூறினாலும் தாழ்த்தப்பட்டவராக இருத்தலாகாது என்று தான் விரும்புகின்றனர்) பொருளாதார வசதியற்ற நிலையில் தான் பிற சாதிப் பெண்களே இம்மண உறவுக்கு முன் வருவர் . பிற சாதிப் பெண்கள் இங்கு வருவதில் இடைஞ்சலில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட பெண்ணை ஏனைச் சாதியினரில்எத்தனைபேர் முன்வந்து மணக்கின்றனர் ? அப்படியே மணந்தாலும் அப்பெண்ணுக்கும் அவள் குழந்தைக்கும் உரிய மதிப்பும் மரியாதையும் கணவன் சாதியினரால் தரப்படுகின்றனவா? இல்லை என்பது உறுதி. தங்கள் வீட்டுப் பெண்களைப் பிற சாதியினர் மணக்க முன்வராதபோது தாங்கள் மட்டும் பிற சாதியினர் பெண்களை மணக்க முன்வருவது .தங்கள் சமூகத்திற்கு இழைக்கும் பெரும் துரோகம் என்பதை ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட ஆணும் சிந்தனையில் கொள்வது நல்லது. தன்னிலும் உயர்சாதிப் பெண் தன்னை மணக்க முன்வருவது அவளுடைய பெருந்தன்மையாக அமைய, தான் உயர்சாதிப் பெண்ணை மணந்துள்ளோம் என்பது போலித்தனமான மனநிறைவு மட்டுமே என்பதைக் கருத்தில் இருத்த வேண்டும் .கட்டுக்கோப்பாக இருந்து சாதி ஒதுக்கல் செய்வதுடன் இழிவுபடுத்துவதுடன் அமையாது, தாங்கள் கல்வியினால் வளரவும் பதவிகளைப் பெறவும்விடாது தடுக்கும் உயர் சாதியிலிருந்து பெண்களை

மணப்பது என்பது, தாங்கள் பிறந்த சாதிக்குரிய மக்களுக்குச் சென்று சேர வேண்டிய நலன்களை உயர்ச் சாதியினருக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதாகவே முடியும் . அத்தகைய பிழையை, இல்லை, குற்றத்தைச் செய்ய வேண்டிய தேவை இல்லை. அதைப் போலவே பிறமொழிக்குரிய பெண்களை மணக்க வேண்டியதும் இல்லை. அதுவும் பிறமொழியாளருக்கு நலன்கள் சென்று சேர உதவுவதாகவே அமையும். தாம் பிறந்த சாதியைத் தாழ்வாகப் பிறர் கூறுவதை ஏற்காத மனநிலை வேண்டும் . இல்லாவிட்டால் தாழ்வு மனப்பான்மை வளர்ந்து விடும் . இது தன்னையும் தன் சாதியையும் மறைத்துக் கொள்ளவும், பிற சாதியினரைப் போல் நடிக்கவும், தங்கள் சாதியினரிட்மிருந்து அன்னியப்பட்டு வாழவும் இட்டுச் செல்லும் தன் சாதியினரிடம் தொடக்கத்தில் அன்னியப்பட்டு தங்கள் பிள்ளைகள் தங்கள் சாதி மக்களின் அவலங்களை அறியாது வளரவும், தங்கள் சாதியினரைப் புறந்தள்ளிவிட்டு உயர் சாதியினருடன் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளவும் முன் வரச் செய்யும் . படித்தவர்கள் என்ற வட்டத்திலிருந்து படிக்காத மக்களை நெருங்கவும் விடாது செய்து விடும். தங்கள் சாதியைப் பிறரைப் போலவே தாங்களும் கருதுவதால் தான் வேறொரு பெயருக்குள் மறைந்து கொள்ள முற்படுகின்றோம் . மற்றவர்கள் தரும் -புனைப் பெயர்களை ஏற்க முன் வருகிறோம் . நம்க்கு புதிதாகப் பெயரிட மற்றவர்களுக்கு உரிமை தந்தது யார்? தமிழராகிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதிதிராவிடர் என்ற பெயர் எதற்காக? இப்பெயராலேயே நம்மை வழங்க வேண்டும் என ஆணையிட மலையாள எம் .ஜி.ஆருக்கு அவ்வளவு பெரிய அக்கறை என்ன? தமிழ் , தமிழர் என்பதைச் சொல்லத் தெரியாதவன் திரித்து ஒலித்த சொல் நமக்குத்

தேவைதானா? தெலுங்கன் தெலுங்கனாக இருக்க, மலையாளத்தான் மலையாளத்தானாக இருக்க, கன்னடத்தான் கன்னடத்தானாக இருக்க தமிழன் மட்டும் திராவிடனாக இருக்கலாமா? தமிழ் நாட்டில் உள்ள பிறமொழியினர் இதனுள் மறைந்து கொள்ள இப்பெயர் உதவுமே தவிர நமக்கு அதனால் பயனென்ன என்று தாழ்த்தப்பட்டவர் நினைக்க வேண்டாமா? 'அரிசனர்' (Harijans) என்ற பெயரை காந்தி சூட்டினார். அம்பேத்கார் கூறியது போல் காந்தி எங்களின் தலைவர் இல்லை எனவும், காந்திக்கு அவ்வுரிமையை நாங்கள் வழங்கவில்லை எனவும் கூற வேண்டும் . நாங்கள் அரிசனங்களாயின் மற்றவர் அரிசனுடைய பகைவனின் மக்களா? என்று கேட்க வேண்டும். 'தலித் ' என்ற மராட்டியச் சொல் ஜோதிபா பூலே பயன்படுத்தியது. மண்ணில் வேர் கொண்ட மக்கள்

அல்லது மண்ணின் மக்கள் என்பது இதன் பொருள் என்பார் ஆய்வாளர் அந்தோனி குரூஸ் தமிழ் மண்ணின் மக்களுக்கு இன்னொரு மொழிச்சொல் பெயராக ஏன் அமையவேண்டும் ?மற்றத் தமிழர்கள் என்ன வேற்று மண்ணின் மக்களா? ஆதலின் அவ்வம் மண்ணின் மக்களுக்கு அவ்வம் மண்ணின் மொழிப்பெயர் அமைவதே சாலச் சிறந்தது. ஒரு காலத்தில் பள்ளனையும், பறையனையும் தொட்டால் தான் நீட்டு. ஈழவர்களைப் பார்த்தாலே தீட்டு என்று இழிவுப்படுத்தப்பட்டனர். ஆனால் அம்மக்கள் அந்த சாதிப்பெயரைப் பெருமையுடன் கூறிக் கொள்ளவும், தீண்டாமையை நீக்கிக் கொள்ளவும் முடிந்துள்ளதே! படையாச்சி சமூகத்தினருக்குப் பள்ளிகள் என்ற பெயரும் , தீட்டும் இருந்ததே. அது இன்று எங்கேயோ போய் ஒழிந்து கொண்டதல்லவா? இவர்களின் சாதிப் பெயர்கள் தீண்டாமையை ஒழிக்க இடையூறாக இல்லையே! சாதிப்பெயரை விடாமலேயே தீண்டாமையை ஒழித்துக்கொள்ள நம்மாலும் இயலும் . வேண்டுவது ஒன்று தான். அது சாதி ஒற்றுமையும், சாதிக்குள் உதவிக் கொள்வது என்பதும் தான். விடுதலை என்பது அடிமைத் தொழிலிலிருந்து விடுபடுவது என்பதாகத்தான் பொருள் கொள்ள வேண்டும் . தனித்தனியாக வேலை பார்த்து அடிமைப்படுவது என்றில்லாமல் ஒவ்வொரு ஊருக்கும் இளைஞர்கள் கூட்டுப் பொறுப்பில் குறிப்பிட்ட நேரம் வேலை; அதற்குரிய கறாரான ஊதியம் என வரையறுத்துப் பெறவேண்டும். வேலைக்களத்தில் கொடுமைக்கோ, பாலியல் வன்முறைக்கோ இடமில்லாதபடி தடுக்க வேண்டும். பாலியல் வன்முறைக்குக் கொலைத் தண்டனை விதிக்கவேண்டும். உயர்ச்சாதியினருக்குத் தேவையான அடியாட்களாக மாறக்கூடாது. தன் சாதியினரை இழிவுபடுத்துவோரை அழிக்கும் அடி ஆட்களாக மாறவேண்டும். “நம்மீதும் உங்கள் மீதும் சுமத்தப்பட்ட இழிவுகள் ஒழியவேண்டும் அதற்காக, உயிரையும் விட உங்கள் பெண்டு பிள்ளைகளும் நீங்களும் தயாராயிருங்கள் ”. “உங்களை யாராவது கிராமவாசிகள் துன்புறுத்தினால் இழிவாய் நடத்தினால் எதிர்த்து நிற்கவேண்டும்.” எனத் தந்தை பெரியாரும் இதனை வற்புறுத்துகிறார். அடிமைத் தொழிலிலிருந்து விடுபட்டு சொந்தத் தொழில் பார்க்க வசதியாக அரசின் புறம்போக்கு நிலங்களைத் தாழ்த்தப்பட்டோருக்குச் சொந்தமாக்கும்படி தந்த பெரியார் மாநாடுகளில் தீர்மானம் கொண்டுவந்தார். அதனை நடைமுறைப்படுத்தச் சொல்லி அரசை வற்புறுத்த வேண்டும். தங்களைச் சமத்துவமாக நடத்தாத கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் குடிபெயர்ந்து விடுவது மற்றொரு வழி. தங்களைச் சமத்துவமாக நடத்தாத மதத்திலிருந்து விலகி

சமத்துவமாக நடத்தும் சமயத்தைத் தழுவிக் கொள்ளலாம். இது அம்பேத்கார் காட்டிய வழி. தந்தை பெரியார் அவர்களும் . "தீண்டாமை ஒழிப்புக்கோ, சாதி ஒழிப்புக்கோ நீங்கள் முதலில் உங்கள் மதத்தை அழித்தாகவேண்டும். மதத்தை ஒழிக்க உங்களால் முடியவில்லையானால் மதத்தை விட்டு நீங்களாவது விலகியாக வேண்டும் . உங்கள் மதம் போகாமல் ஒரு நாளும் உங்களது தீண்டாமைத் தன்மையோ, பறைத்தன்மையே ஒழியவே ஒழியாது என்பதுகல்லுப்போன்ற உறுதி" என மதமாற்றத்தை வற்பு றுத்தினார் .'இழிவு நீக்க இசுலாமே சிறந்த வழி' என்றார். சமயம் மாறிய ஈழவரைக் காக்க இசுலாம் கேரளாவில் முன் வந்தது. அதனால் மாப்பிள்ளைக் கலகம் வந்தது.

தமிழகத்திலும் பின்னாளில் மீனாட்சிபுரங்கள் அதனால் உருவாயின. சமயமாற்றம் என்பது பண்பாட்டுக் கூடங்களையே மாற்றிக் கொள்ள மக்களை வற்புறுத்துகின்றது என்பதையும் ,அன்னிய மொழியும், அன்னிய மதத்தலைவர்களும், வழிபாட்டுத் தலங்களும் கூட மாறிவிடுகின்ற ஆபத்தும் இதில் உண்டு என்றாலும் பிறருக்குச் சமமானவர் என்ற சமத்துவ எண்ணத்தைத்தர வல்லது. ஆத்துடன் சமயப் பாதுகாப்பும் உண்டு என்பதை மறுக்க இயலாது. நாம் எவருக்கும் தாழ்ந்தவர் அல்லர். எவருக்கும் பகைவர் அல்லர்; தம்மை அடிக்கத் தூண்டினாலும் கொல்லும் வேலையில் சாவோம் . தமிழ்மொழியும் , தமிழ் மரபும் காப்போம் என்னும் உணர்வுகளைத் தூண்டும் கலை இலக்கியங்கள் -படைக்கப்பட வேண்டும். போராட்ட உணர்வுடையவர்களையும், போராட்டக் களத்தில் முன்னிற்போரையும், வீர மரணமடைந்தோரையும் முதன்மைப்படுத்தி கலை இலக்கியங்கள் நாடங்கள் படைக்கப்பட வேண்டும். ஆண்மக்கள் நடுவில் உள்ள குடிப்பழக்கம் குடும்பத்தைச் சீர்குலைப்பதுடன் வருங்காலச் சந்ததியை நாசமடித்து விடும் . ஆதலின் குடிப்பது சாதிக்கட்டுப்பாடுகள் வாயிலாகத் தடுக்கப்படவேண்டும் . இளம்

பருவத்திலிருந்தே இதன் தீமையை இளம் உள்ளங்களில் பாதிப்பது நல்லது. குடியைத் தடுக்குமாறு அரசை வற்புறுத்துவது நல்லது. ஆந்திரத்தில் மக்கள் விடுதலைக் குழுவைச் சேர்ந்த பெண்கள் சாராயக் கடைகளை எதிர்த்தது போல் : எதிர்க்க முன்வரவேண்டும் .

எந்த அரசியல் கட்சியில் இருப்பினும் ஒத்த குரலில் பேசுவோராக இருக்கவேண்டும் . நம்மைப் பகடைக் காயாகப் பயன்படுத்தி நம் சமூக நன்மைகளைப் பறிக்க அனுமதிக்கலாகாது. தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்களின் விடுதலையின்றி தாழ்த்தப்பட்டவர் விடுதலை என்பது முழுமை பெறாது. தொழிலாளர் விடுதலை எப்படி

தொழிலாளரால் வென்றெடுக்கப்பட வேண்டியது தேவையோ அதைப்போலவே உழைக்கும் பெண்களின் விடுதலையும் அவர்களாலேயே வென்றெடுக்கப்படவேண்டியது என்பார் லெனின் . தாழ்த்தப்பட்ட பெண்களின் - விடுதலையும் அப்பெண்களாலேயே

வென்றெடுக்கப்படவேண்டும் என்பதை நாம் சேர்த்துக் கொள்ளலாம். பொதுவாகவே பெண்கள் சமூகம் ஆண்களின் காலடியில் மிதிபட்டுக் கொண்டுள்ளது. தாழ்த்தப்பட்ட பெண்களோ அடிமையாக உள்ள உயர்சாதிய பெண்களாலும் இழிவாக நோக்கவும் பேசவுமான நிலையில் உள்ளனர். உயர்சாதி, பிற்படுத்தப்பட்ட சாதி ஆண்களின் அடிமைகளாகத் தள்ளப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட ஆண்களின் அடிமைகளாகவும் இப்பெண்கள் உள்ளனர். பெரும்பாலும் உழவுக் கூலிகளாகவும், பிறவகைக் கூலிகளாகவும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களில் பெண் தொழிலாளிகளின் கூலி, ஆண்களின் கூலியைக் காட்டிலும் மிகவும் குறைவு. வேலை பார்க்கும் இடங்களில் நில உடைமையாளரின் கோணல் பார்வைக்கும் , வக்கரிப்புப் பேச்சுக்களுக்கும் , பாலியல் வன்முறைக்கும்

இப்பெண்கள் உள்ளாகின்றனர் . பெற்றோரின் குறைந்த வருவாய் காரணமாக நல்ல ஊட்டச்சத்தின்றி வளரும் பெண் குழந்தைகள் தம் உடன் பிறந்த தங்கை, தம்பிகளைப் பார்த்துக் கொள்ளும் ஆயாக்களாக இளம் பருவத்திலேயே ஆக்கப்படுகின்றனர் . தொடக்கப்பள்ளிப் படிப்பை முடிப்பதென்பதே இயலாததாகி விடுகின்றது. போதிய கல்வியறிவின்மையுடன் வளரும் இவர்கள் தாய்க்குச் சமையலில் உதவ நீர் எடுத்து வருவது, விறகு பொறுக்கி வருவது வீட்டைக் கூட்டி வைப்பது, பாத்திரங்களைத் துவக்கி வைப்பது என்று விளையாட்டுப் பருவத்திலேயே பெற்றோரால் இரக்கமின்றி வேலை வாங்கப்படுகின்றனர். படிப்படியாக தாயுடன் சேர்ந்து வேலைக்குச் செல்வது என்பதும் வந்துவிடுகின்றது. இவர்கள் ஈட்டும் சிறு தொகைகூட பெற்றோரின் குறைந்த வருவாய் குடும்பத்திற்குப் போதாத நிலையில் , ஈடுகட்ட உதவுகிறது. இதனால் பெற்றோரே தம் பிள்ளைகளைச் சுரண்டும் அவல நிலை உருவாகியுள்ளது. உயர்சாதிப் பெண்களைப் போல் இவர்களின் நடமாட்டச் சுதந்திரம் மட்டும் அவர்களிடமிருந்து பறிக்கப்படவில்லை. நடுத்தர வர்க்கத்தில் வீட்டில் அடைபட்டுக் கிடக்கும் பெண்களைப் போல் ஏதுங்கெட்டவர்களாக இவர்கள் இல்லை. குறைந்த -வருவாயினும் தம் சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்பு இவருக்குண்டு. அதனால் தட்டுத் தடுமாறியாவது கணவன் குடிகாரனாயினும் குடும்பத்தைப் பேணுகின்றனர். இச்சமூகத்துப் பெண்கள் அறிந்ததெல்லாம் உழைப்பு, உழைப்பு,

உயிர்போகும் வரை உழைப்பு தான். பெற்றதெல்லாம் போதாத கூலி தான். இன்னொரு பெரிய அவலம் என்னவென்றால் காவல்துறை தாழ்த்தப்பட்ட மக்களின் ஊருக்குள் நுழைகின்றதெனில் ஆண்கள் பெரும்பாலும் தப்பித்து விடுவர் . சிக்கிக் கொள்பவர் இப்பெண்மக்களே. அடி, உதை, மிதி, மிகச் சாதாரணம் . வசவுச் சொற்கள் செவியால் கேட்க இயலாது. பாடுபட்டு இப்பெண்மக்கள் வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி சேர்த்ததெல்லாம் சிதைத்தழிக்கப்படுகின்றன. கற்பழிப்பு செய்வதென்பது இயல்பான ஒன்றாகிப்போனது. கீழ்வெண்மணியில் இச்சமூகத்துப் பெண்கள் கொளுத்தப்பட்டதை எவர் தான் மறக்க முடியும்? ஏனைச் சாதியினர் நினைத்த போதெல்லாம் தீயிட்டுக் கொளுத்துவது இவர்களின் குடிசைகளைத்தான் . தாழ்த்தப்பட்ட பெண்மக்கள் வேலையின் பொருட்டு கைகளில்

அரிவாள், வெட்டரிவாள், களைக்கொத்தி முதலான கருவிகளை ஏந்தியவர்கள். இக்கருவிகள் தங்களைத் தற்காத்துக் கொள்ளவும், எதிரியைத் தாக்கி அழிக்கவும் பயன்படும் என்பதை மறந்து விடாது உயர்த்த வேண்டும் . முதலில் தம் சாதியினர் விடுதலை வென்றெடுக்க முன் வர வேண்டும் . பின்னரே பெண்மக்களின் விடுதலையைப் பெறப் போராட வேண்டும். தாழ்த்தப்பட்ட ஆண் மக்களும் பெண்களின் விடுதலையில் தான் தம் விடுதலை அடங்கியுள்ளது : என்பதை அறிந்து பெண் மக்களின் விடுதலையையும் உடன் வைத்து போராட்டக்களத்துக்கு பெண் மக்களை ஈர்க்க வேண்டும். பெண் எழுத்தாளர்கள் தம் மக்களிடம் பொதிந்துள்ள மனிதப் பண்புகளை வெளிப்படுத்தவேண்டும் .காலம் காலமாக இம்மக்கள் பேணி வரும் தமிழ் மரபுகளையும் , மொழித் தூய்மையையும் பிறர்அறியச்செய்யவேண்டும் . சாதி விடுதலைப் போராட்ட மங்கையரைப் படைத்துக் காட்டவேண்டும். பாலியல் வக்கிரங்களையும், நாவால் சொல்லவும், கண்ணால் பார்க்கவும் காதால் கேட்கவும் கூசும் வசவுச் சொற்களையும் எதார்த்தம் என்ற பெயரில் பொதிந்து வைத்து தம் சமூக மக்களை இழிவுக்குள்ளாக்கக்கூடாது. பிறசாதியினர் தம் சமூகப்பெண்களை இழிவுப்படுத்தும் போக்கில் எழுதும் படைப்புகளை எதிர்க்கவேண்டும். இத்தகையோரை இகழ்ந்து தள்ளவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சமூகத்தின் விடுதலை என்பது பாதுகாக்கப்படவேண்டும் என்றால் தேசிய இன விடுதலை என்பது இன்றியமையாதது. சமயச் சட்டங்களைத் தூக்கி எறிந்துவிட்டு சமத்துவச் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள அதுவே வாய்ப்பளிக்கும். இந்திய அமைப்பு என்பது உள்ளவரை இந்து மதச் சட்டங்களை அகற்ற முடியாது. அது நீங்காதவரை இழிவு போகாது. சமயச்சட்டங்கள் உள்ளவரை மதம் மாறினாலும்

பெண்ணடிமைத்தனம் ஒழியாது. ஆதலின் தன் சமூக விடுதலைக்காகவும், பெண் விடுதலைக்காகவும், தேசிய இன விடுதலைக்காகவும் பெண் மக்கள் போராட முன் வர வேண்டும்.

வினாக்கள்

1. இந்திய அளவில் பெண்கள் இயக்கங்களின் வகைகளை விளக்குக.
2. பெண்ணிய நோக்குகள் பற்றி எழுதுக.
3. கருப்பின பெண்கள்,தலித் பெண்கள் இயக்கம் குறித்து எழுதுக.
4. தலித் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம் குறித்து வரையறுக்க.
5. தலித் பெண்கள் உள்ளாட்சித் தேர்தல் நிலையை எழுதுக.
6. தலித் பெண்ணியப் பார்வையில் தலித் விடுதலை – விளக்குக.
7. தாழ்த்தப்பட்ட மக்களின் அவலங்கள் – விவரி.
8. சமத்துவம் பெறுவதற்கான வழிகள் குறித்து எழுதுக.

## அலகு 3

# தலித் பெண்ணியமும் சுற்றுச்சூழலும் – காபிரியேல் டீட்ரிச்

கோட்பாட்டு பிரச்சனை

"தலித் பெண்ணியம்" என்ற பதமே முழுமையாக விளக்கப்படாமல் இருக்கும் ஒன்றாகும். தலித் இயக்கங்கள் தீண்டாமை மற்றும் மனித உரிமை மீறல்களில் அதிக கவனம் செலுத்தி வந்துள்ளதால் தலித் பெண்ணை பற்றிய தெளிவான நிலைப்பாட்டை எடுக்க இயலாத சூழலில் உள்ளனர். மேலும் தலித் பெண் எனும் பார்வையில் சமுதாயத்தின் விரிந்த பிரச்சனைகளில் தலித் பெண்கள் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை. பெண்கள் இயக்கங்களில் தலித் பெண்கள் தீவிரமாக ஈடுபட்டாலும், கடந்த பத்தாண்டுகளில் தான் இவ்வியக்கங்கள் சாதியம், தீண்டாமை போன்ற பிரச்சனைகளில் தீவிரமாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டன. ஆனால் அதே நேரத்தில் தலித் ஆண்கள் , தங்கள் பெண்களிடம் உள்ள சுதந்திரத் தன்மையைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கு ஆதரவான அறிக்கைகளை முன் வைத்து வருகின்றனர். ஆனால் இக்கூற்று பெண்கள் இயக்கத்தையும் , பெண்ணியத்தையும் உயர்சாதிய, நகர்புற, மேல்மட்டம் சார்ந்த ஒன்றாக காட்டுகிறது. நாம் நமது சுதந்திர போராட்டம் மற்றும் அதன் பின்னுள்ள காலங்களில் பெண்களின் ஈடுபாட்டை பார்க்கும் போது இக்கூற்று உண்மையல்ல என்பதை நாம் கண்கூடாக அறியலாம். பெண்ணியத்தை பற்றிய தலித் நிலைபாடு பல்வேறு தெளிவின்மைகள் நிறைந்த ஒன்றாகும். அதே நேரம் பல தலித் பெண்கள் கூறும் போது தலித் கலாச்சாரமும் ஆண் ஆதிக்கத்திற்கு விதி விலக்கல்ல என்று கூறுகின்றனர் . தலித் இயக்கங்களின் அமைப்புகளில் ஆணாதிக்கத்தை கண்கூடாக காண முடிகிறது. தலித் இயக்கங்களில் கட்டமைப்புகளில் தெளிவாக வெளிப்படும் ஆணாதிக்க நிலையிலிருந்து விடுபட்டு முன்னேற நிறைய வாய்ப்புகள் உள்ளது. அதை போன்று சுற்றுக் சூழல் பிரச்சனைகளில் தலித் இயக்கங்களின் கரிசனை மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. "தண்ணீர் எடுப்பதற்கே உரிமையில்லாத போது எதற்காக நிலத்தடி நீர் குறைந்து வருவதை பற்றி நாங்கள் கவ்லைப்பட வேண்டும் " என்பது அடிக்கடி சொல்லப்படும் ஒரு கூற்றாகும் . ஆனால் பெண்கள் அல்ல, ஆண்களே இது போன்ற கூறுகளை கூறுகின்றனர் என்பது தெளிவு. மேலும் சுற்று சூழலியல் என்பது பார்ப்பனியப் பொய் என்ற சிந்தனையும் மேலோங்கியுள்ளது. இதற்குக்காரணம் சுற்றுக்சூழலியயில் சாதியத்தைக் குறித்த அக்கறை துளியும் இல்லாதது தான் . எனது கருத்து என்னவெனில் தலித் பெண்கள் நேரிடையாக சுற்றுக்சூழலை சார்ந்துள்ளனர் . ஏனென்றால்

அவர்களுக்கு எந்தவிதமான சொத்துரிமையும் இல்லை. தலித் பெண்கள் மற்றும் சுற்றுக்சூழலைப் பற்றி பேசும்போது நாம் நகர்புற கிராம மற்றும் பல்வேறு பணிச் சூழல்களை வேறுபடுத்திப் பார்க்கவேண்டும் இயற்கை வளங்களை கையாளுவது பெரும்பாலும் தீண்டாமையோடு தொடர்புடையது, என்றாலும் தீண்டாமையால் அவை முன்னிறுத்தப்படவில்லை.

**சுற்றுச் சூழலும் வளர்ச்சியும்**

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் "வளர்ச்சி" என்பது கட்டுப்பாடற்ற பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதன் விளைவாக தொழில் வளர்ச்சி அதிகரித்துள்ளது. 1944-யில் இருந்து நிதித்துறை சந்தைகள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று பிரட்டன் உட்ஸ் Souls Fists (Bretton Woods Institutions) suiu srevsslev உருவாக்கப்பட்ட உலக வர்த்தக அமைப்பும் (WTO) இக்காலக் கட்டத்தில் வேர் ஊன்றப்பட்டதாகும். ரோமாபுரி சங்கம் (CLUB OF ROME) தான் முதன்

முதலாக 1922-யில் பயனற்ற பொருளாதார அமைப்பை எடுத்துரைத்தது. பகிர்வில் உள்ள அநீதியைப் பற்றி பொதுவுடைமை நாடுகள் குறை கூறினாலும், பொருளாதார வளர்ச்சியில் மேற்கத்திய நாடுகளுடன் போட்டியிட முற்படுகின்றனர். ஆயினும் அவர்களது சுற்றுச்சூழல் ஈடுபாடு என்பது முதலாளித்துவ நாடுகளை விட மிக மோசமான நிலையில் உள்ளது. அதிக வளர்ச்சியடைந்த நாடுகளாகிய அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஐரோப்பா, உலக வளங்களின் பெரும் பகுதியை அனுபவித்து வரும் நிலையால் உலக அளவில் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுள்ளது. மேலைநாடுகள் தங்களின் வளர்ச்சி கோட்பாடுகளை ஏழ்மையான. நாடுகளாகிய ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளின் மேல் திணிப்பதால் பெரும் சமத்துவமின்மை ஏற்படுகிறது. இதனால் பல வளர்ச்சி உதவிகள் குறைக்கப்பட்டு நேரிடையான அன்னிய முதலீடு அதிகரிக்கப்பட்டது. இதற்கிடையில் சுற்றுச்சூழல் அழிவுகள் மிகவும் அதிகரித்துள்ளது. இன்று எரிபொருட்கள் மிகவும் குறைந்து வருகிறது. இதன் விளைவாக ஒசோன் படலம் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. உலகளவில் தண்ணீர் கட்டுப்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. இந்தோனேக்ஷியா மற்றும் லத்தீன் அமெரிக்கா காடுகள் காட்டுத்தீயினால் பெரும் அளவில் குறைந்துள்ளது. 1992-ல் ரியோவில் நடந்த உச்சி மாநாட்டில் வெளியிட்ட புருண்ட்லாண்ட் (Brunds Land) அறிக்கையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நட்பம் , சுற்றுச்சூழலை தாக்கும் (Green

House) வாயுக்களை குறைப்பது போன்றவை கூறப்பட்டுள்ளது. ஆனால் இவை ஒன்றும் சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை. ஐக்கிய நாடுகளின் சிறப்பு கூடுகையில் நடந்த மறு ஆய்வு மாநாட்டில் ரியோ மாநாட்டின் பல முடிவுகள் செயலாக்கப்படாமல் பழைய நிலைக்கு மாற்றப்பட்டு விட்டன. சுற்றுச்சூழல் பிரச்சனையால் ஏழை நாடுகள் அதிகமாகபாதிக்கப்பட்டுவருகிறது. சுற்றுச்சூழல் கரிசனைகள் - "பாதுகாப்பு" என்ற போர்வையின் கீழ் பயன்படுத்தக் கூடாது என்று ஏழை நாடுகள் கூறுகின்றது.

இந்த சர்வதேச நிகழ்வு பலவகையில் ஏழை மற்றும் பணக்கார நாடுகளின் மேல் மட்டுமில்லாமல் , நாட்டுக்குள்ளே உள்ள ஏழை மற்றும் "பணக்காரர்களின் மேல் பிரதிபலிக்கிறது. மட்டுமல்லாமல் தலித்துகள் மற்றும் சுற்றுச்சூழல் இயக்கங்கள் ஆகியவற்றுக்கிடையேயான உறவின் மீதும் தாக்கம் மேற்படுத்துகிறது.

பல தலித் மக்களுக்கு பாரம்பரியமாகவே நிலம் இல்லை. ஆகவே தங்களை முன்னேற்றுவதற்காக கல்வி மற்றும் நகரமயமாக்குதலில் ஈடுபட்டனர். இது மற்றொரு பிரச்சனையாகும். இதற்கு சிறந்த உதாரணம் டாக்டர். அம்பேத்காராகும். வளர்ச்சியடைந்த பல கல்வி கற்ற தலித் மக்கள் உலகமயமாக்குதலின் வளர்ச்சியில் நம்பிக்கை வைத்துள்ளனர் . தற்கால கல்வி, மற்றும் சொத்துரிமை சமீப கால சாதிய கலவரங்களை மீண்டும் தமிழ்நாடு போன்ற தென் பகுதிகளில் தலைதூக்கச் செய்துள்ளது. ஆகவே

இப்படிப்பட்ட வளர்ச்சி எந்தவிதத்திலும் தலித் மக்களுக்கு பயனளிக்கும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

**தலித் மக்களுக்கு நிலையான சுற்றுச்சூழல் தேவையா?**

தலித் பெண்களுக்கும் , ஆண்களுக்கும் நிலம் மற்றும் நீர் மேலான உரிமம் கட்டாயம் தேவை என்பதில் எந்த கேள்வியும் இல்லை. ஆனால் புதிய பொருளாதார கொள்கையின் அடிப்படையில் மேற்கூறிய வளங்களின் மேலுள்ள அழுத்தம் அதிகரித்து வருகிறது.

பாரம்பரியமான தீண்டாமையினால் தண்ணீர் மேலுள்ள உரிமை மறக்கப்பட்டது. ஆனால் தற்போது இப்பிரச்சனை ஆண்களைவிட பெண்களை அதிகமாக பாதித்துள்ளது. ஆந்திரா மாநிலத்திலுள்ள வறட்சியான பகுதியான தெலிங்கானாவில் காணப்படும் தண்ணீர் போராட்டம் பற்றி பிரச்சனையில் இருந்து ஒரு உதாரணத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் . கோதாவரி மற்றும் கிருஷ்ண நதிகளின் பிறப்பிடமான தெலிங்கானாவில் தற்போது நிரந்தரமான வறட்சி

காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் கால்வாய்கள் மூலம் பசுமை புரட்சியை அறிமுகப்படுத்திய நிலையற்ற அரசியல் திட்டங்களாகும் . தென்
தெலுங்கானா பகுதியில் நிலத்தடி நீர் நிரந்தரமாக அதிகளவில் குறைந்துள்ளது. கடலோரமாக உள்ள பணக்கார உயர்சாதிய விவசாயகிள் நிலத்தின் பலனை அனுபவித்து வருகின்றனர் . 17.68% ஆதி திராவிடர் மற்றும் 9.66% மலை வாழ் மக்கள் வாழும் பகுதியான நலகோண்டா அடிக்கடி எற்படும் கடும் வறட்சியை சந்திக்கின்றது இப்பகுதியில் ஜோவார் , பாஜ்ரா போன்ற வறட்சியை தாங்கும் பயிர்கள் பயிரிடுவது. மாற்றப்பட்டு பிளகாய் , பருத்தி மற்றும் சூரியகாந்தி போன்ற பணப்பயிர்கள் பயிரிடப்படுகிறது. ஆழ்குழய் கிணறுகள் (Bore wells) நிலத்தடிநீரை அதிகமாக உறிஞ்சியெடுக்கின்றன. மேய்ச்சல் நிலங்கள் அழிக்கப்படுகிறது. இடையர்கள் இடம் பெயர்க்கின்றனர் . குடிநீரில்
அபாயகரமான அளவிற்கு ஃபுளூரின் (Fluroin) காணப்படுகிறது.

இந்த போராட்டமானது சிரிசைலம் இடது வாய்க்கால் பகுதியில் ஜெபசதானா சமிதி என்ற இயக்கத்தால் 1990 வரை நடத்தப்பட்டு வந்தது. இந்த போராட்டத்தின் தன்மை மற்றும் சூழலுக்கு செல்வது முடியாத ஒன்றாக இருந்தாலும் நம்முடைய தலித் பெண்ணியம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு தேவையான சில முக்கிய கூறுபாடுகளை இதில் பார்க்கலாம் . இந்த போராட்டமானது மிகப்பெரிய அளவில் , சாத்வீக முறையில் நடத்தப்பட்டது.

பாத யாத்திரைகளும், சாலை மறியல்களும் நடத்தப்பட்டது. மாணவர்கள் கூட மறியல்களில் ஈடுபட்டனர் . 1991-ல் ஆறு லட்சம் கையொப்பங்கள் பெறப்பட்டு,

இந்திய குடியரசு தலைவருக்கு அனுப்பப்பட்டது. இதில் 18 முதல் 55 வயதுள்ள ஆண்கள் சேர்க்கப்பட்வில்லை. ஏனென்றால் இவர்கள் தான் இவ்வித தவறான வளர்ச்சிக்கு காரணம் என்று பெண்கள் கருதினர். பள்ளி மாணவர்களால் ஒரு லட்சம் தபால் அட்டைகள் பிரதம
மந்திரிக்கு அனுப்பப்பட்டது. மாணவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் 67 நாட்கள் தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்டனர் . சிரி சைலம் இடது கால்வாய் கட்டுவதற்கு மாணவர்கள் பணம் திரட்டினர். மேலும் குடிநீர், விவசாயம் ஆகியவற்றின் தேவை வலியுறுத்தப்பட்டது. இந்த போராட்டம் முதலில் ரெட்டிகளால் தொடங்கப்பட்டாலும் பின்னர் தலித் இயக்கங்களால் தீவிரமாக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த ஒருவர் இதற்கு பொறுப்பாளாராக

நியமிக்கப்பட்டார் . பல நேரங்களில் இச்சாதிய சமத்துவம் சுற்றுச்சூழலியல் என்ற பெயரால் திசை திருப்பும் முயற்சிகள் நடைபெற்றது.

இதில் இருந்து நாம் அடிப்படை தண்ணீர் உரிமைக்காக பல்வேறு சாதிய அரசியல் சூழலிலும் தலித் மக்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளின் போராட்டத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாகும் .

**நிலம் பற்றிய கேள்வி**

நிலம் அதிகமாக அன்னியமாக்கப்படும் போது, நிலமற்றவர்களுக்கு நிலம் மீதுள்ள உரிமம் அதிகமாக குறைந்து வருகிறது. தொழிற்சாலைகள் மற்றும் மரம் நடும் திட்டங்கள் அதிகரித்து வருவதால் பல நிலங்கள் வேலியடைக்கப்படுகிறது. இதனால் மக்கள் ஆடு மாடு மேய்ப்பதற்கும், நீர்நிலைகளை அணுகுவதற்கும் தடை ஏற்படுகிறது. சமீப ஆண்டுகளில் மகராக்ஷ்டராவில் மகர் வாதன் நிலங்களும் தமிழ்நாட்டில் பஞ்சமி நில போராட்டங்களும் முக்கிய இடம் வகிக்கின்றது. தரிசு நிலங்களை பண்படுத்தவும் , நீர் நிர்வாகம் பற்றிய திறமைகளை தலித் மக்கள் கற்றுக் கொள்ளும் போது தான் இது பொருள் கெறிவு பெறுகிறது. மகாராஷ்டராவில் இந்த திறமைகள் தலித் மற்றும் ஆதிவாசிகளால் வளர்க்கப்படுகிறது. இதே மாநிலத்தில் மற்ற சாதிய விவசாய பெண்கள் சேத்காரி

சங்காதனாவோடு இணைந்து நிலத்தை வளப்படுத்தும் திறமைகளை வளர்க்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். மாற்று விவசாயத்தை பின்பற்றி தலித் பெண்கள் வாழ்கின்றனர். இந்த காரியத்தை தலித் பெண்ணியம் பார்ப்பது முக்கியமான ஒன்றாகும் . நில உரிமமே சாதி வன்முறைக்கு அடிப்படையான காரணமாகும் . மேலூர் அருகே மேலவளவில் 1977 ஜீன் மாதம் கொல்லப்பட்ட 7 தலித் மக்களின் பிரச்சனை நிலம்

சம்பந்தப்பட்டதாகும் . கோயில் நிலத்தை பயன்படுத்தியதால் சாதிய வன்முறைகள் தலை தூக்குகின்றது. ஆகவே வளங்களை பயன்படுத்துவது பற்றிய பிரச்சனை இன்று வாழ்வா, சாவா என்ற நிலையில் உள்ளது. நிலம் பற்றிய கேள்வி பலகாலமாக மையப் பிரச்சனையாக இருந்து வந்துள்ளது. இப்போராட்டங்களில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அறுபதுகளில் கிழக்கு தஞ்சாவூர் பகுதிகளில் பசுமை புரட்சி காலத்தில் விவசாய போராட்டம் தொடங்கியது. இதன் விளைவாக 1969-ல் கீழ் வெணிமணியில் 44 தலித் பெண்களும் , குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதன்பின் கிராம சுயராஜிய இயக்கம் குத்தகைகாரர்களை நிலம் பற்றிய காரியங்களில் ஒருங்கிணைத்தது. இன்று இப்பகுதியில் உள்ள தலித் விவசாய தொழிலாளப் பெண்கள் இறால்

பண்ணை எதிர்ப்பில் பங்கு வகிக்கின்றனர். கிருஷ்ணம்மாள் ஜெகநாதன் அறுபதுகளின் இறுதியில் இப்படிப்பட்ட பெண்களை ஒருங்கிணைத்துள்ளார் . கிராம சுவராஜ் இயக்கம் இப்பிரச்சனையை உச்ச நீதி மன்றம் வரை கொண்டு சென்று 1996 டிசம்பரில் வெற்றியும் கண்டது. ஆனால் அதே உச்ச நீதி மன்றம் இதற்கு தடை உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

கடற்கரை பகுதியில் இறால் பண்ணைகளை அகற்றவும், புயலுக்கு பாதுகாப்பாக மரம் நடுவது போன்ற காரியங்களை வலியுறுத்தி பல யாத்திரைகள் நடைபெற்றன. இது போன்ற போராட்டம் மற்றும் வளர்ச்சி திட்டங்களை தலித் இயக்கங்கள் மேற்கொள்ளலாம் அரக்கோணத்தில் உள்ள தலித் பெண்கள் விடுதலை இயக்கம் மாற்று விவசாய முறையை

பரிசோதித்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது. இது போன்ற பரிசோதனைகள் தலித் இயக்கங்கள் மத்தியில் சுற்றுச்சூழல் கரிசனையை வளர்க்கிறது.

**நகர்புறச் சூழல்**

நகர்புறத்தில் தலித் மக்கள் குறிப்பாக தலித் 'பெண்கள் ' வாழ்வு மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளை குறிப்பிட்ட வழிகளில் சந்திக்கின்றனர். அதில் முக்கியமான குழுவினர்

பெண் சிறு வியாபாரிகளாகும். இவர்கள் சாலையோரம் வாழ்வதால் வாழ்வு மற்றும் வாலியல் அடக்கு முறையை ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டியுள்ளது. உலக வங்கியின்

திட்டப்படி இந்தியாவின் முக்கிய நகரங்களாக கல்கத்தா, டில்லி, மும்பை, சென்னை மற்றும் மதுரையில் அழகுபடுத்தப்படும் திட்டங்கள் உருவாக்கப்படுகிறது. போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதும், கால்வாய்களை தூய்மைப்படுத் துவதும் முக்கியப்படுத்தப்படுகின்றது. அதிகமான கார் உற்பத்தியினால் சாலையோர வியாபாரிகள் இருந்த பகுதிகள் வாகனங்களை நிறுத்துமிடமாக மாற்றப்படுகிறது. சென்னையில் உள்ள பாரிமுநையில் நாற்பதாண்டு காலமாக நடைபாதையில் வாழ்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வலுக்கட்டாயமாக மாற்று ஏற்பாடின்றி அப்புறப்படுத்தப்பட்டனர். சந்தைகள் நகரை விட்டு வெளியிடங்களுக்கு தள்ளப்பட்டதால் , பெரிய வியாபாரிகள் மட்டுமே லைசென்சு பெற்று வியாபாரம் நடத்த முடிகிறது. லைசென்சு இல்லாத காரணத்தினால் சிறு வியாபாரிகள் காவல்துறை மற்றும் தரகர்களால் துன்புறுத்தப்படுகின்றனர் .

மதுரையில் மக்களின் போராட்டத்தின் விளைவாக டென்டர் ரத்து செய்யப்பட்டது. சென்னை மற்றும் மதுரையில் பெண்ணுரிமை இயக்கம் இவ்வித சாலையோர வியாபாரிகளுக்காக பல்வேறு வகையில் போராடி வருகிறது. அகமதாபாத்தில் (SEWA) உலக தொழிலாளர் நிறுவனம்

(ILO) மற்றும் பிற நிறுவனங்களோடு இணைந்து போராடி வருகிறது. போக்குவரத்து துறை தனியார் மயமாக்கப்பட்டால், காற்று பெருமளவில் மாசுறும் . இந்த பிரச்சனையோடும் இப்போராட்டம் தொடர்புடையது. இந்த நிறுவனங்கள் ரிக்ஷா ஒட்டுநர் மற்றும் மாட்டு வண்டி ஓட்டுநர்களோடு இணைந்து போராடுவதற்கு வாய்ப்பு உண்டு.

**குடிசைவாசிகளான தலித் பெண்கள்**

குடிசைப்பகுதிகள் அடிக்கடி நடுத்தர வர்க்கம் மற்றும் அரசின் கண்ணை உறுத்தி வருகிறது. ஆனால் குடிசைப் பகுதியில் வாழும் பெண்கள் வீட்டு வேலை பணியார்களாக, கட்டுமான பணியாளர்களாக, விற்பனையாளர்களாக பணியாற்றி வருகின்றனர். ஆனால் இவர்களின் பணி அங்கிகரிக்கப்படுவதில்லை. வேலைச் செய்யும் இடத்திற்கு அருகிலே வாழும் உரிமை மறுக்கப்படுகிறது. சுற்றுச்சூழல் மற்றும் அழகுபடுத்தல் என்றப் பெயரில் இன்று மக்கள் இடம் பெயர்க்கப்படுகின்றனர். உலக வங்கியின் துப்புரவு திட்டத்தின் கீழ் மதுரையில் கடந்த எட்டு ஆண்டுகளில் பல குடிசைப்பகுதிகள் அகற்றப்பட்டன. இவர்களுக்கு எவ்வித மாற்று ஏற்பாடும் செய்யப்படவில்லை. சென்னையில் வளர்ச்சி என்ற பெயரில் கூவம் , பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் அடையார் ஆகிய கால்வாய்கள் ஐரோப்பிய நிறுவனத்தோடு இணைந்து துப்புரவு செய்யப்பட்டது. ஆனால் இன்றும் சென்னையில் உள்ள கால்வாய்களில் பயங்கரமான துர்நாற்றம் வீசுகிறது. இதற்கு என்ன காரணம் என்றும் , இதை எவ்வாறு சரி செய்வது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. மதுரை மற்றும் சென்னையில் சரியான கழிவு நீரோட்ட அமைப்பு இல்லாத காரணத்தினால் அனைத்து கழிவுகளும் நீர் நிலைகளில் கலக்கிறது. ஆய்வுகளின் படி குடிசைவாசிகள் 5 முதல் 10 சதவீதம் மாசுறுதலுக்கு மட்டுமே காரணம் என்று புலப்படுகிறது. ஆனால் பொது மக்களும் , நிர்வாகமும் குடிசைவாழ் மக்களே மாசுறுதலுக்கு முக்கிய காரணம் என்று குறை கூறுகின்றனர் . சமீப காலத்தில் சென்னையில் ஏற்பட்ட பல திடீர் தீ விபத்துக்களினால் பலர் இடம் பெயர்க்கப்பட்டனர் . இங்கு தான் தலித் பெண்கள் இந்த புதிய தீண்டாமைக்கு எதிராக போராட வேண்டும். இதன் விளைவாக. ஒருங்கிணைக்கப்படாத பணிகளில் ஈடுபடும் பலர் நகரத்தின் மையப்பகுதியில் இருந்து துரத்தப்படுகின்றனர். போலியான சுற்றுச்சூழல் அணுகுமுறையினால், மக்களின் அடிப்படை வாழ்வே கேள்விக்குறியாக மாறி வருகிறது.

**துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் சலவைத் தொழிலாளர்கள்**

தீண்டாமை இத்தொழில்களோடு நெருங்கிய தொடர்புடையது. ஆகவே தான் துப்புரவுத் தொழில் தீட்டாக கருதப்படுகிறது. சரியான கழிவு நீரோட்ட வசதி இல்லா காரணத்தால் துப்புரவு தொழிலாளர்கள் மத்தியில் பல்வேறு சுகாதார பிரச்சனைகள் ஏற்படுகிறது. புதிய பொருளாதார திட்டத்தின் கீழ் துப்புரவு தொழில் தனியார் மற்றும் இயந்திரமயமாக்கப்பட திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளது. இதில் முதலில் பாதிக்கப்படுகிறவர்கள் பெண்களாகும். ஆகவே துப்புரவு தொழிலாளர் இயக்கங்கள் சர்வதேச அளவில் இதற்காக போராட வேண்டும் . சுகாதாரத்தை பாதுகாக்கின்ற தொழில் நுட்பங்கள் கண்டுப்பிடிக்கப்பட வேண்டும். பெண்கள் பணி செய்யும் இடங்கள் முக்கியப்படுத்தப்பட வேண்டும். சலவைத் தொழிலாளர்கள் நதிகள் மாசுறுகிறது என்ற பிரச்சனையின் அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றனர் . சரியான கழிவு நீரோட்ட அமைப்பு இல்லாமல் இன்று உள்ளது. ஆனல் குடிசைப் பகுதிகள் அகற்றப்பட்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் கட்டப்படுகிற நிலை எதிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

**தலித் பெண்களின் முன்னோடியான பங்கு**

மேலே கூறப்பட்டதில் இருந்து நிலம் மற்றும் தண்ணீர் போராட்டங்களில் தலித் பெண்கள் முன்னோடியான பங்கு வகிக்க வேண்டு., தங்களை தலித் , பெண்கள் மற்றும் சுற்றுச்சூழல் இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்த சிறப்பு பொறுப்பை நிறைவேற்றுவது எவ்வகையிலும் எளிதான ஒன்றல்ல.

அ) தலித் பெண்கள் தங்களுக்குள்ளாகவே ஒரு மாற்றத்தை எதிர் கொள்ள வேண்டும். தங்கள் அமைப்புகளிலே ஆணாதிக்க அமைப்புகளை கையாள வேண்டும் . இதன் மூலமாக வளங்களின் மேலுள்ள உரிமை குறித்த கேள்வியை எழுப்ப வேண்டும் .

ஆ) ஒருங்கிணைக்கப்படாத அமைப்புகளில் மற்றும் சுற்றுச்சூழல் இயக்கங்களில் ஆணாதிக்கம் மற்றும் சாதியம் பற்றிய கேள்விகளை தலித் பெண்கள் எழுப்ப வேண்டும் .

இ) இந்துத்துவாவின் வலைக்குள் விழுந்து விடாமல் உலகமயமாகுதலின் அழிவுக்கேதுவான விளைவுகள் பற்றிய தெளிவான பார்வை நமக்குத் தேவை.

ஈ) தீண்டாமை, சாதியம் , வன்முறை மற்றும் பெண்கள் இயக்கங்களில் தங்களின் அடையாளம் போன்றவற்றில் உள்ள தலித் பெண்களின் சிறப்பு பங்கு பற்றிய கேள்விகளை எழுப்ப வேண்டும். ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர், உழைக்கும் விவசாயிகள், தலித்துகள் , பெண்கள் , ஆதிவாசிகள் , சுற்றுச்சூழல் போராட்ட இயக்கங்கள் ஆகியவற்றில் உள்ள தொழிலாளர்கள் பரந்த

அளவிலான கூட்டமைப்பை உருவாக்க வேண்டும். தலித் பெண்கள் பல தொழில்களில் ஈடுபடுவதால் இவ்வமைப்புகளை இணைக்க பெரிதும் உதவுவர் .

உ) தலித் பெண்கள் பால் அடிப்படையில் வேலைப் பகிர்வின் காரணத்தினால் ஆண்களைவிட சுற்றுச்சூழல் பற்றி விழிப்பாக உள்ளனர் . ஆகவே தலித் மற்றும் பிற கிராம மற்றும் நகர்புற ஏழைகளின் வளர்ச்சி பற்றிய விவாதத்தை எழுப்ப தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். தலித் ஆசிவாசி மக்களுக்காவும் இவர்கள் பணி புரியலாம் . சுற்றுச்சூழல் என்ற போர்வையில் செயல்படும் மக்களுக்கு எதிரான திட்டங்கள் முறியடிக்கப்பட வேண்டும். மனிதர் மற்றும் இயற்கை எதிராக வன்முறைகள் ஒரே நேரத்தில் முறியடிக்கப்படவேண்டும் . நாம் அனைவரும் நம் தாய் பூமியை நேசிக்க பழக வேண்டும் . நீர் நிலைகளை பொது சொத்தாக கருதி, உயிர்களை பாதுகாக்க பாடுபட வேண்டும்.

**ஜோதிபா பூலேவின் தலித் பெண்ணியக் கூறுபாடுகள்-ஜோஸ்பின் மேரி**

இந்திய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு சுதந்திரத்திற்காகத் தீவிரப் போராட்டம் எழுந்த காலம். மாபெரும் புரட்சியாளர்களும், சமூக சீர்திருத்தவாதிகளும், சிந்தனையாளர்களும் தோன்றிப் புது வரலாறு படைத்தனர். ஆதிக்க அமைப்பினாலும், சாதியக் கொடுமையினாலும், வரலாற்றில் இடம் பிடிக்க முடியாத சிலரது வரலாறு மறைக்கப்பட்டநிலையில், புதைக்கப்பட்டுள்ளது. புதைக்கப்பட்ட வரலாற்றுக்குச் சொந்தமான முன்னோடிப் பு ட்சியாளர் தான் ' 'மகாத்மா ஜோதிபா பூலே' ஆவார். தீவிர

சமூக மாற்றச் சிந்தனையாளர். செயல்வீரர். மாண்பிழந்த மனிதத்திற்காக, மனித உரிமைகளுக்காக, புண்பட்ட பெண்ணியத்திற்காகப் போராடியவர். ஜோதிபா வாழ்வின் நீரோட்டத்தில் பின்னிப் பிணைந்துள்ள தலித் பெண்ணியக் கூறுபாடுகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம் .

**காலப் பின்னணி**

பூர்ஷ்வாக்கள் காலம் பார்ப்பனியம் கோலோச்சிய காலம். பஞ்சகாலத்தில் பசியால் வாடிய பிராமணர்களுக்கு மட்டும் உணவு வழங்கப்பட்டது. வரி செலுத்தாத விசாயிகளின் பிள்ளைகளின் மேல் கொதிக்கும் எண்ணெய் . ஊற்றப்பட்டது. துப்பாக்கிக் கந்தகப்பொடி அவர்கள் தொப்புளில், காதுகளில் தடவப்பட்டது. சூத்திரர் என்று கருதப்பட்ட ஏழை விவசாயிகள், அன்றாடக் கூலிகள், கலைஞர்கள், ஆகியோருக்குக் கல்வி கற்க உரிமையில்லை. நிலங்களை உடைமையாக்க

வழியில்லை. அவர்கள் வாழ்வு மதிப்பிழந்த வாழ்வு, மாண்பிழந்த நிலை; அடிமை மனநிலையும் ஏழ்மை நிலையும் , பல ஆண்டுகளாக அனுபவித்து வந்தனர் . சூத்திரர்க்கு, இந்த நிலை என்றால் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வை என்னவென்று சொல்வது? தரணியில் தாழ்நிலையில் இருக்கும் தலித் பெண்களின் வாழ்வினை நினைக்கவும் முடியுமோ?

**ஜோதிபா பூலே குழந்தை, மண அனுபவம்**

மகாராஷ்டிராவில் 1827 ஆம் ஆண்டு, 'மாலி' இனம் சார்ந்த திரு.கோவிந்தராவ், சின்னம்பாய் ஆகிய தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். சிறு விவசாயக் குடும்பம், ஒரு வயதான போது அன்பிலும், அறநெறியிலும், பக்தியிலும், பாசத்திலும் வளர்த்த அன்னையை இழந்தார். ஐந்து வயது நிரம்பும் வரை வளர்ப்புத் தாயாரால் மாண்போடும்,

மதிப்பீடுகளோடும் வளர்க்கப்பட்டார். பெயரைப் போலவே அறிவிலும், பண்புகளிலும், சமூக ஈடுபாட்டிலும் சுடர்விடத் தொடங்கினார். 'மாலி' இனப் பெண்ணான “சாவித்திரிபாய் ' என்ற எட்டு: வயது சிறுமியை மணம் செய்து கொண்டு இல்வாழ்வைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது பதினைந்து.

**அடிப்படையை அணுகிய போது....'**

'வேதம் கேட்கும் சூத்திரன் காதில் ஈயம் காய்ச்சி ஊற்ற வேண்டும்; என்ற மனுதர்மத்தை மாற்றியமைக்க எண்ணினார் . பிராமணர் மட்டுமே கல்வி கற்க உரிமை உண்டு என்கிற உரிமை நிலவிய அக்காலச் சூழலில் ஜோதிபா 1835 ஆம் ஆண்டு கல்வி பயில பள்ளிக்குச் சென்றார் . மூன்று ஆண்டுகள் கல்வி பயின்றார் . பிற சாதியினர் கல்வி பயின்றால் “தங்களுக்கு இழுக்கு; தங்கள் வேலைகளுக்கு முழுக்கு”, என்றெண்ணிய பார்ப்பனர் இருவரின் சதியாலோசனையாலும், தவறான கொள்கையினாலும், பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டார்.

**பிரம்பு எதற்கு? மண் எதற்கு?**

'பாண்டோஜி' என்பவர் பிராமண ஆசிரியர். வகுப்பறையில் பார்ப்பன மாணவரை அடிக்க பிரம்பையும், பிறகுல மாணவனை (சூத்திரரை). அடிக்க மண்ணையும்,வைத்திருந்தார் . 'ஆதம் ' என்ற ஆய்வாளர் வகுப்பறையில் மண் எதற்கு என வினவ, பிரம்பால் பிற கீழ்குல மாணவனை

அடிக்கும் போது, அவனது தீட்டானது பரவி என் உடல் முழுவதும் அசுத்தமாகிவிடும் இதனைத் தவிர்க்க இழிகுலத்தவன் தவறு செய்தால் 'மண் ' எடுத்து அவன் மேல் தூவுவேன். பறந்து போய் விட்டால், மீண்டும் தூவுவேன் என்றாராம் . மனிதம் சிதைக்கப்படுகிறது.

**ஒரு மகார் -பத்து தீங்குகள்**

'மகார் * (தாழ்த்தப்பட்ட இனம்) இன மாணவன் வகுப்பறையில் விரிக்கப்பட்ட பாயின் வழி நுழைந்த போது வகுப்பறை முழுவதும் தீட்டுப்பட்டதாக எண்ணிப் 'பாயை' எடுத்துவிட்டனர். “ஒரு மகார் பத்துத் தீங்குகளுக்குச் சமம் ' எனக்கூறிப் பார்ப்பன மாணவர்களை வேறு வகுப்பிற்கு மாற்றினர் . இச்சூழலில் 1842இல் மிஷினரிப் பள்ளியில் 14ம் வயதில் மீண்டும் சேர்க்கப்பட்டார் . 1847 ஆம் ஆண்டு படிப்பை முடித்தார். மேற்கூறிய அவலங்கள் சாதிய ஒடுக்குமுறை காயத்தை அவர் மனதில் எற்படுத்தியிருக்க
வேண்டும் .

**அனுபவங்களே.... பாடங்களாக**

மனிதர்களை மதிக்காத சாதியம் , மனிதத்தைக் கொல்லும் தீண்டாமை, இதனைச் சட்டங்களாக்கிய மனுதர்மம் , வேதச் .சட்டங்களைக் கடைப்பிடிக்கும் பார்ப்பனியம் ஆகியவற்றைக் கேள்விக்குட்படுத்தினார் . 1848 ஆம் ஆண்டு தனது பார்ப்பன நண்பனின் திருமண நிகழ்ச்சியில் பங்கெடுக்கச் சென்றார். அந்நேரத்தில் பிராமணர்களால் சூத்திரர்தானே என்று நாயை விடக் கேவலமாக துச்சமென எண்ணி அவமானப்படுத்தப்பட்டார் . அவர் மனிதம் புண்படுத்தப்பட்டு, மாறா வடுக்களாக மாறி, வாழ்வை, சமூகச் சூழலைச் சிந்திக்க வைத்தது. இந்த மாறா வடுக்களே புரட்சிக்கு வித்துக்களாக உருவெடுத்தன. 'தாமஸ் பெயின் ' என்பவரின் 'மனிதனின் உரிமைகள் எற நூலில் உள்ள உரிமைப் போராட்டங்களைப் படித்து அனுபவங்களாக்கிக் கொண்டார் ஜார்ஜ்வாஷிங்டன் வாழ்க்கையைப் படித்து அனுபவங் களாக்கிக் கொண்டார் . புரட்சி வித்துக்கள் வளர ஆரம்பித்தன. அமெரிக்கக் கறுப்பின விடுதலைப் போராட்ட நிகழ்வுகளும் , பிரஞ்சு புரட்சியின் சுதந்திரம் , சமத்துவம் , சகோதரத்துவம் , என்ற தாரக மந்திரங்களும் , ஜோதிபாவின் அடிமனதில் ஆழப்பதிந்து வேர்விட ஆரம்பித்தன. சாதியின் பெயரால் உரிமைகள் மறுக்கப்பட்டு,

ஒடுக்கப்படும் தாழ்த்தப்பட்டவர்களுக்காக, பெண்களுக்காகப் போராட வேண்டும் என்ற முடிவுக்கு தள்ளப்பட்டார் .

**மும்முனைப் போராட்டம்**

சாதியம் , முதலாளித்துவம் , ஆண் ஆதிக்கம் , தீண்டாமை இவைகளுக்கு எதிராகவும் , தமது வாழ்வு முழுவதும் போராடும் சூத்திரர் , ஆதிசூத்திரர் , தலித் பெண்கள் ஆகிய இவர்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும் , போராட உறுதிக் கொண்டார். எந்த ஒரு நன்மையும் , மீபோராட்டம் இல்லாமல் வராது, சமூகச் சீர்திருத்தம் தானாகத் தோன்றாது: துணிச்சல் , துன்பம் வழிதான் பிற மக்களைச் சீர்த்திருத்தங்களை ஏற்குமாறு செய்யவேண்டும் ". அரசியல் அடிமைத் தனத்தை விட சமூக அடிமைத்தனம் தான் மிக மோசமானது என்றார் . எனவே சமூக மாற்றத்திற்காகப் போராடத் துணிவு கொண்டார் .

**மனப்புரட்சியே அடிப்படை மாற்றத்துக்கு முதன்மைவழி**

'சமுதாயத்தில் புறந்தள்ளப்பட்ட மக்களின் சீர்கேடுகளுக்குக் காரணம் ' தன்நிலை உணரா அடிமை மனநிலை; பஞ்சமர்களாக, அவர்ணர்களாக வாழ வழி வகுக்கும் வேத நியதிகளையும், சடங்குகளையும் நம்பும் மனநிலை; கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என எதையும் ஏற்கும்,'தலைவிதிமனநிலை', வர்ணாசிரமத்தால் மழுங்கடிக்கப்பட்ட 'சிந்திக்காத மனநிலை', சமுதாய அமைப்பால் இயல்பான தன்னெழுச்சி உணர்வுகளைப் புதைத்து நடைப் பிணங்களாகத் திரியும் 'சடவாழ்வு மனநிலை', ஆகிய இம்மனநிலைகளுக்குக் காரணம் 'கல்வியறிவு இன்மை, அறியாமை' என உணர்ந்தார் . ஆங்கிலேயர் கல்விமுறை, பிராமணர்களுக்கு மட்டுமே சாதகமாக பயன்பட்டதை உணர்ந்து கொதித்தெழுந்தார். பின் கிறிஸ்தவ மிஷினரிகள் தொடங்கிய பள்ளிகளில் அனைத்து மக்களும் சேர்க்கப்பட்டதை எண்ணி மகிழ்ந்தார். மனிதச் சிந்தனையைக் கூராக்கும் கல்வி இன்மையால் சமூகம் தாழ்த்தப்பட்ட மக்கள் , தலித் பெண்கள் வாழ்வில் அறியாமையும் கல்வியின்மையும், மூட நம்பிக்கையும் தான் எல்லா அடிமை நிலைமைகளுக்குக் காரணம் என்றெண்ணி செயல்பாட்டில் இறங்கினார் .

**மனிதம் ...தலித் பெண்ணியம் வளர்க்க உதவும் கல்வி**

“ஓர் ஆண் கல்வி கற்றால் தனிமனிதன் பயன் பெறுகிறான். ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் சமுதாயமே பயன் பெறுகிறது” என்பதால் பெண் கல்வியை ஆதரித்தார் . “சூத்திரர் , ஆதிசூத்திரர் , தலித் பெண்கள் ஆகியோர் கல்வி கற்பது கடவுள் விருப்பத்திற்கு எதிரானது” பெண் கல்வி இந்து மத தர்மத்திற்கே எதிரானது என்கிற அடிமைப்படுத்துகிற கோட்பாட்டைத் தகர்த்தார் . 1851 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3ஆம் நாள் 8 பெண் குழந்தைகளை வைத்துப் பெண்களுக்கெனப் பள்ளியைத் தொடங்கினார். பின்பு 1852 ஆம் ஆண்டு "மே' மாதம் "மகார் ' மங்கு இனத்தவர்க்குத் தமது சொந்த செலவில் பள்ளி ஆரம்பித்தார் . எண்ணற்ற தலித் பெண்கள் வரலாற்றில் முதலில் ஏடு தூக்கி வந்தனர் .

தாழ்த்தப்பட்ட மகார், மங்கு இனப் பெண்களுக்குக் கல்வி கற்பிக்க, ஆண் ஆதிக்க சிந்தனை கொண்ட ஆசிரியர்கள் மறுப்புத் தெரிவித்து, ராஜினாமா செய்தனர். “ஓர் ஆணின் வளர்ச்சிக்கும் பின் ஒரு பெண் கட்டாயம் இருப்பாள் ” என்ற: நம்பிக்கை ஜோதிபா வாழ்வில் நடைமுறையாகிறது. அவர் மனைவி சாவித்திரி, கணவரின் உயர்ந்த பணிகளில் ஈடுபட்டு தலைமையாசிரியராக பொறுப்பேற்று பல ஆண்டுகள் பணிபுரிந்தார்.

“இந்து மதத்தில் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. கல்வி கோடரி போன்றது'. அறியாமையைப் பிளக்கக் கூடியது. வாழ்வுக்கு முழுமை தருவது. சமுதாய மாற்றத்துக்கு வழி வகுப்பது. திறனாய்வுச் சிந்தனையைத் தூண்டி தன் மதிப்பைத் தரவல்லது. 'தொட்டிலை ஆட்டுங்கை, தொல்லுலகை ஆளும் கை”. பெண் கல்வி கற்றால் , குழந்தைகளும் கல்வி பெறுவார்கள் . இதன் வழி சமுதாயம் மாற்றம் பெறுவது உறுதி” என்பதால் கல்வி கற்கும் தலித் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஜோதிபா உழைத்தார்.

தலித் பெண்கள் கல்வி கற்பதால் , தாழ்வு மனம் மறைந்து விடுகிறது. தன்னம்பிக்கை அதிகரிக்கிறது. தன்மானம் உயர்வடைகிறது. தாராள சிந்தனை கூராக்கப்படுகிறது. பரந்த அறிவு ஆழமாக்கப்படுகிறது. அனுபவங்களை ஆய்வுக்குட்படுத்த வாய்ப்பு ஏற்படுகிறது, என்பதை மெய்ப்பித்தார். சுதந்திரமும், சுயமரியாதை உணர்வும் பெற்றவர்களாக "இருந்தார்கள் . ஆணாதிக்க அடக்குமுறையை ஒழித்தார் .

**மண்ணும் , மொழியும் பெண்மை நோக்கிலே**

ஜோதிபா தாயை அதிகம் நேசித்தார் . அதுபோலவே மொழியையும் தாய்போல் பாவித்தார் . தாய்மொழியான மராத்திய மொழி வழி பாடம் கற்பிக்க வழி செய்தார் . தாய் மொழியில் பல நூல்களை எழுதி, சமூக எதார்த்தங்களை எடுத்துச் சொன்னார். ஆரியர்களாலும், ஆங்கிலேயர்களாலும் அடிமைப் படுத்தப்பட்ட 'தாய் மண்ணை' மீட்க

முயன்றார் . இந்த நாட்டின் மண்ணின் மைந்தர்களாகிய 'சூத்திரர் ' 'ஆதிசூத்திரர் நாடோடிகளாக வந்த ஆரியர்களின் சூழ்ச்சிக்குப்பின் தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்ற உண்மையை உணர்த்தினார் .

மண்ணும் , மொழியும் ' மானிட வாழ்வுக்கு அடித்தளம் ' இதன் முக்கியத்துவத்தை தாயோடு ஒப்பிட்டு அரசியல் அடிமைத் தனத்தையும் , கலாச்சார அடிமைத் தனத்தையும் உணர்த்தினார் .

**அத்துமீறல்கள்**

தலித் பண்பாட்டு அம்சங்களில் ஒன்று அத்து மீறல் . ஜோதிபா வாழ்வு முழுவதும் அத்துமீறல்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. பெண்களுக்கு, தலித் பெண்களுக்கு என பள்ளிகள் திறந்தவுடன் பெண் ஆசிரியர்களை நியமித்தார் . தலித் பெண்கள் சிந்திக்க. ஆரம்பித்தனர். ஜோதிபா பள்ளியில் படித்த தாழ்த்தப்பட்ட மங்கு இனத்தைச் சார்ந்த 14 வயது குமரிப் பெண் கூறினாள் "பார்ப்பனர்களுக்கு மதம் உண்டு. வேதம் படிக்கிறார்கள் . அன்றாட வாழ்வில் வெளிப்பட வேண்டும்! ஆனால் எங்களுக்கு வேதம் படிக்க உரிமையில்லையென்றால் அப்படிப்பட்ட மதம் எங்களுக்கு தேவையில்லை" என்றாள்.

வழிபாடுகளில் வேத மொழியான சமஸ்கிருதம் புறக்கணிக்கப்பட்டது. தாய்மொழி பின்பற்றப்பட்டது. சமூக சேவையில் பிற பெண்களையும் ஈடுபட வைத்தார் ஜோதிபா. தொழிலாளர்களின் ஒடுக்கப்பட்ட நிலைகளை அம்பலப்படுத்தினார் . குழந்தைத் தொழிலாளர்களை நியமிக்க எதிர்ப்புத்தெரிவித்தார். நடைமுறையில் இல்லாத விதவை மறுமணத்தை ஆதரித்தார். நடைமுறையில் இருந்த குழந்தை திருமணத்தை எதிர்த்தார் . ஜோதிபா மனைவி பள்ளிக்குச் "செல்லும்போது கற்கள் வீசப்பட்டன. பார்ப்பனர் தூண்டுதலால் ஜோதிபா தந்தையை மிரட்டி 'ஜோதிபா செயல்களுக்கு தாம் ஆதரவு இல்லை: எனக்கூற வைத்தனர் . இருவரையும் வீட்டை விட்டு வெளியேற்றினர். இருவரும் இன்னும் தீவிரமாக, அடிமைப்படுத்தும்

மனநிலைகளை மாற்றிச் சுதந்திர உணர்வு உருவாக சூத்திரர் , ஆதி சூத்திரர் , தலித் மக்கள் , தலித் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கினர் .

**புரோகித ஒழிப்புச் செயல்பாடுகள்**

ஜோதியின் உறவினர்களுள் ஒருவர் மனைவியை இழந்தவர் . ஜோதிபா தமது ஒய்வு நேரத்தில் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தார் . அவர் சாவித்திரி பூலேயின் தோழியின் மகளை திருமணம் முடிக்க விரும்பினார். சீர்திருத்தத் திருமணம் பூசாரியின் சடங்குகளின்றி, சம்ஸகிருத மொழியின்றி, ஆச்சாரங்களின்றி 1873 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் நாள் திருமணம் நடந்தேறியது. ஆண் , பெண் இருவருக்குமிடையே திருமண வாக்குறுதி வழங்கப்பட்டு, புரோகித ஒழிப்பு இந்துத் திருமணமாக நடந்தது உறவினர்கள் ஜோதிபாவை எதிரிபோல் எண்ணினர் . சமயங்களும் , சடங்குகளும் பிராமணர்களின் வாழ்வை வளப்படுத்திட உதவின. பெண்கள் சமயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வழக்கம். சடங்குகளில் தவறினால் அபராதம் செலுத்துவது வழக்கம். தட்சணை

கொடுப்பது என்பது: மாறி தட்சணை பறிக்கப்படுவது' என நிர்ப்பந்திக்கப்பட்ட து. இதன்வழி பொருளாதாரச் சுரண்டலை வலியுறுத்தினர். 1827 ஆம் ஆண்டு சங்கராச்சாரியார் பூனேவுக்குவந்தபோது கடவுளுக்கு விரும்பித்தரும் காணிக்கை கட்டாயப்படுத்தப்படுகிறது எனப் புகார் கொடுக்கப்பட்டது. ஆங்கில அரசு தலையிட்டு

“மக்கள் மனம் ஒன்றிக் கொடுப்பதை ஏற்க வேண்டும். மக்களைக் கட்டாயப்படுத்தக்

கூடாது"என்று தடைவிதித்தது. இவ்வாறு பார்ப்பனிய புரோகித ஒழிப்புக்கு ஆதரவான வரலாற்றுச் சூழலும் ஓரளவு இருந்தது.

**மூடச்சடங்குகளுக்கு மூடுவிழா**

சமயச்சடங்குகள் பெண்களை அடிமைப்படுத்துகின்றன. இரவு முழுவதும் கண்விழித்து லட்சம் அரிசி அல்லது கோதுமையை எண்ணிச் சொரிந்து வழிபாடு செய்ய வேண்டும் என்ற மூடப்பழக்கம் பெண்களிடையே நிலவியது. நாளெல்லாம் நிலத்தில் உழைத்தவர்கள் இந்த மூடச் சடங்கினால் ஓய்வுநேரம் இழந்து தம்மையே வருத்திக் கொண்டனர் . உடல் நலமும் பாதிக்கப்பட்டது. அவர்களுக்கென வைத்திருக்கும் உணவுப் பொருள்களும் வீணாக்கப்பட்டன.

'ஜோதிபா மகளிரிடம், “சமயங்கள் மக்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டுமே யொழிய, மக்களின் சுரண்டல்களுக்கு வழிவகுக்கக் கூடாது என்பதை விளக்கினார். சடங்குகளின் மூலம் பெண்கள் பாதிக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. விழிப்புணர்வுச் செயல்பாடுகளுக்குப் பெண்களை இட்டுச் சென்றார். சுயவளர்ச்சிக்குத் தடையாக இருந்த பிராமணிய செயல்பாடுகளைத் தடுத்தார் .

**விதவை மறுமணம் ஆதரித்தல்**

விதவைகள் சமுதாயத்தில் .-விலக்கப்பட்டவர்களோடு, ஒதுக்கப்பட்டனர் . 1856ஆம் ஆண்டு ஜீலை 25ஆம் நாள் விதவை மறுமணச்சட்டம் இந்திய அரசால் நடை முறைக்கு வந்தது. 1860 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் நாள் 'சென்னாவி' என்ற 18 வயது இளம் விதவைக்கு மறுமணம் செய்து வைத்தனர் . 'ஒரு பெண் விதவை வேறு ஆடவனோடு உறவு கொண்டதால் கருவுற்றாள் . இதற்குக் கழுவாயாகச் சங்கராச்சாரியாரின் பாதங்களைப் புனித நீராலும் பசுவிடமிருந்துப் பெறப்படும் ஐந்து பொருளாலும் கழுவ வேண்டும் . பின்பு மரப் பொந்தில் வைத்து கொளுத்தப்பட வேண்டும் .அதினின்றும் உயிர் தப்பினால் ஆயிரம் பிராமணர்களுக்கு விருந்து தர வேண்டும் . அப்படிச் செய்தால் தான் பாவ விமோச்சனம் கிடைக்கும் ', என்று அவளுக்கு விதிக்கப்பட்டது. இவ்வாறான, அட்டூழியங்களைக் கண்ட ஜோதிபா எதிர்த்தார் .

பெண்களின் மனச்சுதந்திரம் மானபங்கமடைகிறது. இச்செயல் பெண்களை இழிவுபடுத்தும் தன்மானச்சுரண்டல். ஏழைகளை ஏழைகளாகத் தாழ்த்த மேற்கொள்ளப்படும் தந்திரமான அப்பட்டமான பொருளாதாரச் சுரண்டல் . பெண்களின் உளவியல் வன்முறையைச் சார்ந்த 'உயிர்வதை", என்பதை ஜோதிபா உணரச் செய்தார் . வழிபாட்டு உரிமையைப் பார்ப்பன புரோகிதர்கள் தீர்மானிப்பதைப் புறக்கணிக்க வேண்டும் என்பது ஜோதிபாவின் பெண்ணிய வழிமுறை!

**மனைவியின் மனச்சுதந்திரத்தை மதித்தல்**

குழந்தைப் பேறு இல்லாத தம்பதியரில் ஆண் மறுமணம் செய்வதைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டது. குழந்தையில்லா ஜோதிபாவை அவருடைய தந்தை மறுமணம் செய்துகொள்ள வற்புறுத்தியபோது மறுத்துவிட்டார் . ஏன் ? குடும்பத்துப்பெண்குழந்தைப் பேறில்லா நிலையில் வேறு ஒர் ஆடவனைப் பெண் மறுமணம் செய்து கொள்ள இந்த சமுதாயம் அனுமதி தருமா?

சமுதாயம் பாரபட்சமாக ஆண் மட்டும் , மறுமணம் செய்து கொள்ளும் உரிமையை ஜோதிபா, தமது வாழ்வில் ஏற்கவில்லை. பெண்ணின் உணர்வினை மதித்தார் . தம் மனைவி சாவித்திரி பால் மாண்புடன் அன்பு செலுத்துவதை வாழ்ந்து காட்டும் முறையில் மனைவி, இருக்கும் போது, வேறு பெண்ணைமணமுடிப்பதை நினைத்தும் பார்க்கவில்லை!

**கூட்டு ஒருமைப்பாட்டுணர்வு**

இந்தியாவில் முதன் முதலாகச் சமுதாய மாற்றத்திற்காக அமைக்கப்பட்டது சத்ய ஹோதகக் சமாஜ் இயக்கம் . இதனை நிறுவியவர் , ஜோதிபா ஆவார் . 1873 ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் நாள் பூனேயில் தொடங்கப்பட்டது. பார்ப்பனர் அல்லாத கும்பியர், மாலிக், முடித்திருத்துவோர் , தச்சு கலைஞர், தலித் மக்கள் , காட்டு வாசிகள் ஆகியோர் உறுப்பினராக இருந்தனர் .

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:-

- ❖ நாம் கடவுளின் பிள்ளைகள் . கடவுளுக்கும் , மனிதனுக்குமிடையே
- ❖ பிராமணக் குருக்களின் தலையீட்டை ஒழித்திட உழைப்பது.
- ❖ -மதச்சடங்குகளைச் சாதாரண மக்கள் செய்ய வழி வகுப்பது.
- ❖ “சாதிய முறைகளை அடியோடு ஒழித்திட செயல்படுவது.
- ❖ “மத சார்ப்பில்லா விஞ்ஞான நோக்கமுடைய கல்வியைக் கற்பிப்பது.
- ❖ பெண் கல்விக்கு முக்கியத்துவம் -கொடுப்பது ஆகியன.

இதன்படி முதலாளித்துவம், பார்ப்பனியம், ஆணாதிக்கம், சாதியம் ஆகியவற்றைப் பலவழிகளில் அவ்வியக்கம் ஒழிக்க செயல்பட்டது. தலித் இன மக்களின், தலித் பெண்களின் அடிமை விலங்கு அறுத்திட ஆர்வமாய் செயலாற்றியது. ஜனநாயக சமத்துவம் உருவாக்க உதவியது. அடிமனதில் ஆழமாக வேறான்றிய மத வேர்களை அறுத்தெறிந்தது. சமத்துவ உணர்வை ஊட்டியது.

தலித் பெண்களுக்கென பள்ளிகள் நடத்துவதில் பேராதரவு காட்டியது. மக்களிடையே அடிமை எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியது. எதிர்ப்புக் கலாச்சாரத்தை நோக்கி மக்களை இட்டுச் சென்றது.

இந்த இயக்கம் மக்கள் கலைகளின் வழி மக்களிடையே விழிப்புணர்ச்சியைக் கொடுத்தது. மூடநம்பிக்கை, பிராமணிய மேலாதிக்கம், வட்டிக்காரன் கொடுமை ஆகியவற்றை பற்றி மக்களுக்கு அம்பலப்படுத்தியது.

**சாவித்திரியின் பெண்ணியப் பாதை**

'ஜோதிபா' வின் துணைவி தலைமையாசிரியையாகப் பொறுப்பேற்று 1873 ஆம் ஆண்டு வரை பணி புரிந்தார். விடுதியில் தங்கியிருந்த தலித் மாணவிகளிடம் சிறப்புக் கவனம் செலுத்தினார் . கல்வி கற்க, அரசு உதவி பெற்றுக் கொடுத்து மனிதாபிமானத்தை வளர்த்தார் . தம்முடன் பிற பெண்களையும் பணிபுரிய இணைத்துக் கொண்டார் . கூட்டுப் பொறுப்பும், குழு உணர்வும் நிறைந்திருந்ததால், கணவனோடு தோழமையுடன், சம உரிமை உடையவராக சுதந்திரத்தினை மதிப்பவராக விளங்கினார் . இந்தியப் பெண்கள் அரசியலிலும் , பொது வாழ்விலும் ஈடுபடுமாறு. வழி நடத்தி முதல் அடி எடுத்து வைத்தவர் சாவித்திரி பூலே!

**ஜோதிபா வென்றெடுத்த பெண்ணிய தத்துவங்கள்**

“பெண் ஆணைவிட உயர்ந்தவள். ஒருவனுக்கு எவ்வளவு பொருள் பலமும், உறவினர் பலமும் இருந்தாலும் 'தாய்'க்கு ஈடுசெய்ய உலகில் எதுவும் இல்லை. வீட்டிற்கு அழகு செய்பவள் தான் , அவள். கனிவான பார்வை கொண்டவள் . அனைவரையும் வழி நடத்துபவள் . ஆண்களும் பெண்களும் சுதந்திரமாகப் பிறக்கின்றார்கள். உண்மையை மகிழ்வுடன் வாழ எல்லாத் தகுதியும் இருவருக்கும் சம அளவில் உண்டு.

ஆண் பேராசைக்காரன் . பெண் இயல்பிலே பலவீனமுள்ளவள் என்று கருதிப் பெண்ணை, ஆண் தம் விருப்பப்படி நடத்துகிறான். தன்னலத்திற்காக உலகியல் அறிவு பெறாதவாறு பெண்கள் வளர்க்கப்படுகிறார்கள் . இதனால் பெண்ணை ஆண் தான் விரும்பியவாறு நடத்த நேரிடுகிறது.

ஆண் தீய நாட்டமுள்ளவன் . கணவன் ஒரு மனைவிக்கு மேல் திருமணம் செய்தால் குடும்பத்தில் நரகத்தை உண்டாக்குகிறான் . தீயப்பழக்கம் உள்ள ஆண் நோய்களுக்கு இரையாகிறான் . ஆண் மாதவிடாய் நேரங்களில் உடல் உறவு கொண்டால் பால்வினை நோய்களால் அழிய நேரிடும் !

கிழவனான ஆண் , குமரிப் பெண்ணை மணப்பது கண்டிக்கத்தக்கது.பார்ப்பனர்கள் இளம் விதவை ஒருத்தி மறுமணம் செய்வதைத் தடுக்கிறார்கள். முதியவர் தமது வயதான காலத்தில் குமரிப் பெண்ணை மணப்பதைப் பார்ப்பனர் தடுக்கவில்லை. இளம் விதவைகள் ஆண் உறவினர்களால் தங்கள் இச்சைக்கு உடன்படுமாறு துன்புறுத்தப்படுகிறார்கள். சட்டத்தின் முன் ஆண் , பெண் இருவரும் சமம் .

ஒரு ஆண் மூன்று பெண்களைத் திருமணம் செய்து கொள்ளளலாம் , என்று அன்று ஏற்கப்பட்டது. ஆனால் ஒரு பெண் மூன்று ஆண்களைத் திருமணம் செய்து கொள்வது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கணவன் மனைவி உயிருடன் இருக்கும்போது, மறுமணம் செய்துக் கொள்ளக்கூடாது. ஆசையுள்ளவன், தன்னலகத்திற்காகச் சட்டத்தைப் பயன்படுத்துகிறான். சட்டத்தின் முன் 'பார்ப்பனர்' என்றும் 'சூத்திரர்' என்றும் வேறுபாடில்லை. இவ்வாறு ஜோதிபா பெண்ணிய விடுதலைக் கருத்துக்களைத் தத்துவங்களாகத் தந்துள்ளார் .

**எழுத்துப் பணிகளில் புரட்சி**

ஜோதிபா, தம் நூல்களிலே சாதியத்தை தூக்கிப்பிடித்த இந்து மதத்தைச் சாடினார் . “அடிமைத்தனம்” என்ற நூல் 'பார்ப்பனர்களுக்கு எதிரான நச்சுத்தன்மை கொண்ட பிரச்சாரம் ” எனக் கருதப்பட்துட. “சர்வஜனிக் சத்திய தர்மா புத்தக” என்ற நூலில் மதம் மற்றும் சமுதாய பிரச்சனைகளைப் பற்றி எழுதினார். ஆண் , பெண் இருபாலரையும் பாலின அடிப்படையில் வேறுபடுத்துவதைப் பாவம் என்று கருதினார். “உழவர்களின் கோடரி” என்ற நூலில் கிராம முன்னேற்றம் எல்லோருக்கும் கல்வி; நிலத்தைப் பாதுகாத்தல் , கிணறு வெட்டுதல் , அணை கட்டுதல் , அறிவியல் முறையில் விவசாயம் செய்தல் , கால்நடை வளர்த்தல் ஆகியவற்றைப் பற்றி தெளிவாக விளக்கினார்.

ஜோதிபா எழுதிய 'சத்சார் ' என்ற நூல் பெண்களின் எதார்த்த நிலை குறித்தும் , 'அகண்டாஸ் ' என்ற நூலில் இஸ்லாம் மத சமத்துவத்தைப் பாராட்டியும் , சத்ய சோதா நிபாண்ட மாலா' தொழிலாளர் நிலை பற்றியும் கூறுகிறது.

ஒட்டுமொத்தமாக அவர் நூல்கள் முழுமனித விடுதலைக்கு வித்திடுகின்றன. அவை மராத்திய மொழியில் எழுதப்பட காரணம் ஒரளவு படிக்கத் தெரிந்த மக்களும் , தலித் மக்களும் , தலித் பெண்களும் வாழ்வில் படித்துப் பயன் பெறுவதே, அவரது நோக்கம் .

**மகாத்மா பூலே**

நாற்பது ஆண்டுகளாக, தலித் மக்கள் , தலித் பெண்கள் , பிற்பட்ட சமூக ஏழைகள் ஆகியோருக்காகப் பாடுபட்டார். தனி மனிதனாக நின்று மனிதனை அடிமைப்படுத்தும் சமூகத்தினை எதிர்த்தார் . சாதீயம் , தீண்டாமை, ஆண் ஆதிக்கம் ஆகியவற்றை எதிர்த்து, சமத்துவ மாற்றுச் சமுதாயம் உருவாகப் பாடுபட்டார் . இவர் செய்த சமூகத் தொண்டுகளை எண்ணி 'மகாத்மா' என்ற பட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாக ஜோதிபாவுக்குக் கொடுக்கப்பட்டது. 1890ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் நாள் ஜோதி விளக்கு அணைந்தது. தலித் பெண்ணிய உருவாக்கத்தில் , இவரது கூட்டுத் தமைமை தலைசிறந்த முன்மாதிரி எனலாம் .

**முடிவுரை**

இந்தியாவில் முதன்முதல் தீண்டத் தகாதவர்களும் , தலித் பெண்களும் சமூக ரீதியில் உயர்வு பெற முழுமூச்சுடன் ஈடுபட்டார். கலாச்சாரப் புரட்சி செய்தார். மகாத்மா பூலே சிறந்த அறிஞர் , ஆய்வாளர் , சமூகப்புரட்சியாளர் என்பதால் தான் அண்ணல் அம்பேத்கர் அவரை தம் . 'அரசியல் குருவாக முன்னோடியாக ஏற்றுக் கொண்டார். ஜோதிபா பூலே இந்தியாவின் மார்ட்டின் லூதர் ' என்று புகழப்பட்டார் . அவர் விடுதலைச் சுடரை ஏற்றி, எங்கும் ஒளிரச் செய்வோம் .

சாதியம் ஒழிப்போம் .
தலித் பெண்ணியம் வளர்ப்போம் .

**பாமாவின் படைப்பபுகளில் காணும் பெண்ணியம் – பாமா**

பெய்ஜிங்கில் கூடிய சர்வதேசப் பெண்கள் மாநாடு, பெண்கள் உரிமைகளைப் பெறுவதற்கான செயல்திட்டங்களையும் , அத்திட்டங்களை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கான அணுகுமுறைகளையும் உருவாக்கி இருக்கிறது. இதன் குறிக்கோள் விளக்கத்தில் தரப்பட்ட ஒரு செயல்திட்டத்தோடு இக்கட்டுரையைத் தொடங்கலாம் .

“ஆண்களோடு சமமாக இணைந்து பணியாற்றுவதன் மூலம் தான் பெண்களின் பொதுவான பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்பதையும் , எல்லாப் பெண்களின் நிலையும் ஒரே தன்மையானதல்ல என்பதையும் , சில சமூகச் சூழல்களிலுள்ள பெண்கள் உரிமைகளைப் பெறுவதற்கு மற்ற பெண்களை விட கடுமையான தடைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதையும் இந்த செயல்திட்டம் அங்கீகரிக்கிறது".

உலகிலுள்ள எல்லாப் பெண்களுடைய பிரச்சனையும் பொதுவானது அல்ல. இந்தியப் பெண்களின் நிலை மேல் நாட்டுப் பெண்களின் நிலையிலிருந்து வேறுபட்டது. அடிப்படைத் தேவைகள் இல்லாமை, சாதி முதலியவற்றால் இந்தியப் பெண்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்பது நாமறிந்ததே. சில சமூகச் சூழல்களிலுள்ள பெண்கள் உரிமைகளைப் பெறுவதற்கு மற்ற பெண்களைவிட கடுமையான தடைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பெய்ஜிங் மாநாட்டின் குறிக்கோள் விளக்கத்தில் கூறப்பட்டுள்ளபடி, அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கே பெரும் அடி, உதைக்கு உள்ளாகுபவர்கள் தலித் பெண்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. வீட்டுக்குள்ளும் வீட்டு வெளியிலும் பல்வேறு வேலைகளைச் செய்து பிழைக்கும் தலித் பெண்களின் அவலங்களைப் பற்றியும், அவஸ்தைகளின் மத்தியிலும் வாழ்க்கையின் பரவசங்களை நிசத்தன்மையோடு தரிசிக்கத் துடிக்கும் அவர்களது மன எளிமை, சுதந்திரம், விசாலமனப்போக்கு, ஒளிவுமறைவற்ற கலப்படமில்லாத நசைச்சுவையும், கலகலப்பும் கலந்த எதார்த்த நிலை பற்றியும் பாமாவின் படைப்புகளில் காணலாம் .

தலித் பெண்கள் , தாங்கள் பெண்களாக, தலித் பெண்களாக பிறப்பெடுத்த காரணத்தால் சந்திக்க வேண்டிய பிரச்சனைகளையும் ,

மன உளைச்சல்களையும் , சிக்கல்களையும் , இயலாமையினையும் ,ஏக்கங்களையும் வறுமையின் பிடியில் வெறுமையாகிப் போகும் வாழ்க்கையினை வாழ்வதற்கு அவர்கள் அனுபவிக்கின்ற அவமானங்களையும் தன்படைப்புகளில் பாமா பதிவு செய்துள்ளார் . தலித் பெண்களின் விடியலுக்கான தனது எண்ணங்களையும் , ஆசைகளையும் , தீர்வுகளையும் ஆங்காங்கே பகிர்ந்து கொண்டுள்ளதையும் அவரது படைப்புகளில் பரவலாகப் பார்க்க முடிகிறது.

பெரும்பாலான தலித் மக்கள் இயற்கை வளங்களைச் சார்ந்து இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் . இதில் குறிப்பாக தலித் பெண்கள் தங்களது உணவு, எரிபொருள் , கால்நடைத்தீவனம் ; எசு, மருத்துவ மூலிகைகள் போன்ற பல அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கு சுற்றுச் சூழலையே சார்ந்திருக்கின்றனர். மனிதகுல வரலாற்றின் ஆரம்ப காலத்திலிருந்தே பெண்களுக்கும் ,

இயற்கைக்கும் நெருக்கமான தொடர்பு இருந்து வந்திருக்கின்றது. பல்வேறு வரலாற்றுச் காரணங்களால் இவ்வுறவில் மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் , இன்றளவு தலித் பெண்கள் நிலம் , நீர் , நெருப்பு, காற்று, ஆகாயம் இவற்றோடு கொண்டுள்ள உறவு பல்வகை மாற்றங்களுடன் நெருக்கமாகத்தான் இருநது கொண்டிருக்கிறது. இவ்வுறவினால் உண்டாகும் தாக்கங்கள் பலவற்றையும் பாமா தன் படைப்புக்கள் மூலம் வெளிக்கொண்டு வந்திருக்கிறார்.

தலித் பெண்களிடம் இயல்பாகவே சில அம்சங்கள் தூக்கலாகக் காணப்படுகின்றன. இவ்வியல்புத் தன்மைகளே பெரும்பாலான நேரங்களில் அவர்களின் இருப்புக்கு ஆதாரங்களாகின்றன. இத்தன்மைகளினால் இவர்கள் கலகம் செய்யவும், கவலைகளை மறந்து கலகலவென சிரிக்கவும், மிகச் சாதுர்யமாகத் தங்களை அடக்குவோரின் ஆணவத்தை ஆட்டங்காணச் செய்யவும், சோம்பலின்றி உழைக்கவும், உழைப்பின் களைப்பை மறக்கவும், குடும்ப பாரத்தை ஒருவித குதாகலத்துடன் சுமக்கவும் ,சுமை நிறைந்த வாழ்க்கையிலும் சுகங்காணவும் முடிகிறது. பாமாவின் பாத்திரப் படைப்புகளில் இத்தன்மைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது.

**தலித் பெண்களிடம் இயல்பாகவே உள்ள சிறம்பம்சங்கள்**

**சமத்துவம்**

தலித் பெண்கள், தலித் ஆண்களுக்குச் சமமாக உழைப்பிலும், உற்பத்தியிலும் பங்கேற்கின்றனர். ஆண்களோடு இணைந்து பணியாற்றுவதன் மூலம் இவர்களின் பல பிரச்சனைகளுக்கு இவர்களால் தீர்வு காண முடிகிறது. ஆணுக்குப் பெண் இளைத்தவளில்லை என்ற சமத்துவ மனப்பாங்கு உறுதியாக்கப்படுகிறது. தங்களால் முடியும் என்ற தன்னம்பிக்கை வளர்த்தெடுக்கப்படுகிறது. சமத்துவமான உழைப்புச் சுதந்திரம் பெற்ற இவர்கள் பிற நடுத்தர, மேல்மட்டத்துப் பெண்களைப் போல எல்லாவற்றுக்கும் ஆணையே முழுவதுமாகச் சார்ந்து நின்று தங்களை அடிமையாக்கிக் கொள்வதில்லை. பெரும்பாலான தலித் குடும்பங்கள் , பெண்களாலேபே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. பெண்களின் உழைப்பினால் தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆண்களோடு இணைந்து அத்தனை வேலைகளையும் செய்வதால், நடுத்தர, மேல்கட்டு வர்க்கப் பெண்களின் மதிப்பீடுகளான அழகு, நளினம் , மென்மை, பொறுமை, நாணம் ,

அச்சம், கவர்ச்சி, போன்றவை தகர்க்கப்பட்டு விடுகின்றன. மாறாக வீரம் , உறுதி, உரம் , அஞ்சாமை, துணிச்சல் , நியாயமான கர்வம் , கோபம் , ஆக்ரோஷம் முதலியவைக் கட்டி

எழுப்பப்படுகின்றன. இதனால் ஆண் -பெண் சமத்துவ உறவு ஆழமாக்கப்படுகிறது. பாமாவின் பச்சையம்மாள், காளியம்மாள், பொன்னுத்தாயி போன்றோர் இதனை வலியுறுத்துகின்றனர் .

**கலகலப்பு**

எத்தனை தான் உழைத்துக் களைத்தாலும், தலித்துகளிடம் குறிப்பாக தலித் பெண்களிடம் காணப்படும் கலகலப்புத் தன்மை மிகவும் ஆச்சரியப்படத்தக்க ஒன்றாக இருக்கிறது. வீட்டிலும் , வெளியிலும் பாடுபட்டு உழைத்து உயிர் சுமக்கும் இவர்களுக்கு வாழ்க்கைச் சுமையினை " இலகுவாக்க, உழைப்பின் களைப்பை மறக்க, உல்லாசமாகப் பாடவும், ஆடவும், சிரிக்கவும், சிரிக்க வைக்கவும் செய்வது இயல்பாகவே கை வந்த கலையாக இருக்கிறது. 'சங்கதியில்' வரும் சம்மூகக்கெழவி, பாக்கியம், மைக்கண்ணி, மைக்கூழ்க் கெழவி, 'மொளகாப்பொடி' யில் வரும் பச்சையம்மாள் போன்றோர் நம்மைச் சிரிக்க வைப்பதுடன் சிந்திக்கவும் தூண்டுகின்றனர். இவர்களது கலகலப்புக்கு இவர்களிடம் காணப்படும் அசாத்தியமான துணிச்சலும், வாழ்க்கையை மிக எளிதாக எடுத்துக் கொண்டு அதைச் சுளிவாக வாழ்ந்து விடும் மனநிலையும், இருக்கின்ற கட்டுப்பாடுகளை, அடக்கு முறைகளை அப்படியே புரட்டித் தள்ளுகிற மனத்திண்மையுடன்கூடிய நகைச்சுவை உணர்வுமே காரணங்களாகின்றன என்பதைக் காண முடிகிறது.

**நையாண்டித்தனமும் நகைச்சுவையும்**

கோவிலுக்குள் கோழியை காணிக்கையாக கொண்டு செல்லும் பாக்கியம்பண்ணையாரின் குடிநீர் குடத்தில் சிறுநீர் பெய்யும் சம்முகக்கெழவி, தீப்பெட்டி ஆபிசில் வேலை செய்யும் போது கழிவறையைக் கண்டுபிடித்து அதற்கு பீரும்பு எனப் பெயரிட்டுச் சிரிக்கும் "சிறுமி மைக்கண்ணி, உடைந்துபோன பிளாஸ்கில் கூல் ஊற்றிக் கொண்டு களை எடுக்கச் செல்லும் மைக்கூழ்க்கிழவி, மொளகாப்பொடி அம்மாளை இடக்காகப் பேசி நையாண்டி செய்யும் பச்சையம்மாள் , போன்ற பாத்திரப்படைப்புகள் நம்மை அதிசயிக்க வைக்கின்றன. இவைமட்டுமின்றி இவர்கள் உருவாக்கியுள்ள ரெண்டுபல்லி, தொப்ளான் , வகுறுதள்ளிக்கெழவி, பச்சமூக்கி, மெதந்தாள் , கழிஞ்சா, ஒத்தமுருகஞ் சொனப்பண்ணி, மண்டையன் , வட்டவகுறான் போன்ற பட்டப் பெயர்களும் , இவர்களது நையாண்டித்தனத்தையும் , நகைச்சுவை உணர்வையம் பறைசாற்றுகின்றன. நாம் எந்த மனநிலையில் இருந்தாலும் இவர்களைப் பற்றி அறிய வரும்போது நம்மிடம் நகையுணர்வு பொங்கி எழுவதை தடைபோட முடிவதில்லை.

**சுதந்திரம்**

தங்கள் கைகளையும் கால்களையும் பெருஞ்செல்வமாகக் கொண்டு உழைக்கும் தலித் பெண்கள், பிற பெண்களைக் கட்டிலும் சுதந்திரமாகவே இருப்பது தெளிவு. ஆண்களோடு சமமாக அனைத்து வேலைகளையும் பகிர்ந்து செய்யும் பெண்கள், உளச்சுதந்திரத்துடன் அனைவருடனும்

உரையாட, உறவு கொண்டாட முடிகிறது. இலக்கியங்கள் கற்பிக்கும் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு போன்ற குணாதிசயங்கள் இவர்களைக் கட்டிப் போடுவதில்லை. தனது தேவைகளை பூர்த்தி இடையாத நிலையில் , நாளைய தேவைக்குச் சேர்த்து வைக்க எதுவுமில்லாத நிலை:பில் , இழப்பதற்கென்று ஒன்றுமில்லாத நிலையில் , அன்றையத் தேவைகளுஃகாக அல்லும் பகலும் உழைத்து, உண்டு வாழும் இவர்களைச் சிறைப்படுத்துவது எதுவுமில்லை. இயற்கையோடு இணைந்து வாழும் இவர்கள் காட்டாற்று வெள்ளத்தின் சக்தியும், சுதந்திரமும் ஒருங்கே கொண்டவர்களாக காட்சியளிக்கின்றனர் . பெரியார் கூறினார் , “எந்த ஒரு பெண், தனக்குச் சம உரிமையும் , சம அந்தஸ்தும் சர்வ சுதந்திரமும் உண்டென்று கர்ஜனை செய்கின்றாளோ, அவளே நாகரிகமானவள் என, நாம் கருதுகிறாம் ”. வரது கூற்றுப்படி தலித் பெண்களே நாகரிகமானவர்கள் என்று தயங்காமல் கூறமுடிகிறது. பாமாவின்

பொன்னுத்தாயி, ராக்கம்மாள் , வெள்ளையம்மா, மைக்கண்ணி போன்றோரின்

உளச்சுதந்திர வெளிப்பாடு இதற்குச் சான்றாக அமைகின்றது.

**எளிமையே இனிமை**

பாமாவின் படைப்புகளில் வரும் அத்தனை கதைமாந்தர்களும் எளிமையும் இனிமையும் நிறைந்தவர்களே. இவர்களது எளிமையே இவர்களை இனிமையாக்குகின்றது. இவர்களது வாழ்க்கை முறை, உறவு கொள்ளும் முறை, கபடற்ற சொல்லாடல்கள், போலித்தனமற்ற உணர்வு வெளிப்பாடுகள், மனித நேயமிக்க மதிப்பீடுகள் போன்ற அனைத்துமே இவர்களின் எளிமையையும், இனிமையையும் பறைசாற்றுகின்றன. எத்தனையோ திறன்கள் தலித் பெண்கள் ஒருங்கிணைப்பு இயக்கம் இவர்களிடம் இருந்தும், அவற்றை வளர்த்தெடுக்க வாய்ப்பு வசதிகள் இல்லாதபோதும் , அவரவர் சூழலில், ஆரவாரமற்ற வகையில் இவர்களது திறமைகள் மின்னுவதைக் காணமுடிகிறது.

பழகுவதற்கு இனிமையும் , பரிவுணர்வும் , பாசமும் , பகிர்ந்துண்ணும் மனப்பாங்கும் கொண்ட இவர்களது பரந்த மனமே பாமாவின் பாத்திரங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. வெள்ளையம்மா பாட்டியின் விவேகமும் , எளிமையான வாழ்க்கைத் தத்துவமும் , படிப்பறிவின்றியே பட்டறிவினால் அவள் பிரசவம் பார்க்குத் திறனும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. உழைக்கும் நேரங்களில் தாங்களாகவே மெட்டமைத்துச் சூழலுக்குத் தகுந்தவாறு எளிமையும் , இனிமையும் கலந்து பாடலியற்றி பல பெண்களைச் சங்கதியில் காணலாம் .

**பரவசம்**

எத்தனைத் துன்பங்கள் வந்தாலும் அத்தனைத் துன்பங்களுக்கும் மத்தியிலும் , வாழ்க்கையை வாழ்வதற்கு அனுபவிக்கும் அத்தனை இடர்கள், துயரங்கள்,

சித்தரவதைகளுக்கிடையிலும் கூட, வாழ்வில் பரவசத்தைப் பருக தலித் பெண்கள் தயங்குவதில்லை. அதற்கு அவர்களுக்குத் தடையேதும் இல்லை. இருந்தாலும் அதனை உடைத்தெறிய அவர்களிடம் உள்ள மனத்தின்மைக்கும் . உறுதிப்பாட்டுக்கும் அளவேதும் இல்லை எனலாம். மழையோடும், மலையோடும், கிளையோடும், இலையோடும், பூவோடும், 'பிஞ்சோடும், ஆட்டோடும், மாட்டோடும் , பசும்பயிரோடும் , நீலவிசும்போடும், மண்ணோடும் மனம் விட்டு உறவாடித் திளைக்கும் இவர்களின் வாழ்க்கை பரவசத்தால் நிரம்பியது.

அழுதக் கண்ணீர் காயுமுன்னே சிரிக்கத் தெரிந்தவர்கள் இவர்கள். ஆழமான காயத்தோடும் அன்பு செய்யும் மனத்தவர்கள் . இவர்களது உறவு வட்டத்துக்குள் நுழையாத சீவராசிகளே இல்லை எனலாம். இதனால் தான் இருண்டுபோன வாழ்விலும், ஒளிக்கீற்றைக் காணும் சக்தி இவர்களிடத்தில் தூக்கலாகக் காணப்படுகிறது. இப்பரவச நிலையினை பிறரோடும் பகிர்ந்து கொண்டு, பாரங்களைக் குறைத்து விட முடிகிறது. பாமாவின் பாத்திரப்படைப்புக்களில் குறிப்பாக 'சங்கதி' யில் வரும் பெண்களுக்கு எதையும் இலகுவாக மாற்றி நம் சங்கடத்தைக் குறைத்துவிடும் சக்தி இருப்பது தெளிவாகிறது.

**மறுமணம்**

பிற பெண்களுக்கு இல்லாத ஒருவசதி தலித் பெண்களுக்கு உண்டு. அதுதான் 'மறுமணம் ' செய்து கொள்ளுதல் . தனக்கு பிடித்த கணவனைத் திருமணம் செய்து கொள்ளவும் , மணவாழ்க்கை மரண வாழ்க்கையாக ஆக்கப்படும்போது, அதனோடு மல்லுக்கட்டிக் கொண்டு வாழும் நிர்ப்பந்தத்தை விடுத்து, ஒத்துவராத மண உறவை வெட்டிக் கொள்ளவும் , மீண்டும் மனதுக்குப் பிடித்த உறவினை மலரச் செய்யவும் இவர்களால் முடியும். அதுபோலவே கணவன் இறந்து விட்டால் விதவை என்ற அவச்சொல்லைச் சுமந்தபடி வாழ்நாள்களை வீண் நாள்களாக்க இவர்களுக்கு அவசியமில்லை. மாறாக மனதுக்குப்பிடித்தவனை மறுமணம் செய்து கொள்ளவோ, விதவை கோலமின்றி விருப்பமான முறையில் வாழ்ந்து விடவோ இவர்களுக்கு உரிமையுண்டு.

பொதுவாக பிற இனப் பெண்களிடம் காணப்படும் விதவை, அமங்கலி,
அருதலி, வாழாவெட்டி போன்ற அமங்கலச் சொற்கள் தலித் பெண்களின் புழக்கத்தில் இல்லை. இதுபோலவே திருமண ஒப்பந்தத்தின்சின்னங்களாகிய தாலி, குங்குமம் , பூ, மெட்டி போன்றவற்றைப் புனிதங்களாக இவர்கள் போற்றுவதுமில்லை. இவற்றை ஏற்கவோ, தூக்கி எறியவோ இவர்களுக்கு உறுதியும் , மனச்சுதந்திரமும் உண்டு. பாமாவின் சங்கதியில் வரும் வெள்ளையம்மாபாட்டி, ராக்கம்மா, பொன்னுதாயி போன்றவர்கள் இத்தன்மை கொண்டவர்களாக இருக்கின்றனர் .

இத்தனை விடுதலைக்கூறுகள் தலித் பெண்களுக்கு இருந்தபோதிலும்ஆணாதிக்கம் மேலோங்கியுள்ள இச்சமுதாயத்தில் பெண்ணாகப் பிறந்ததாலும் , சாதியமைப்பைக் கட்டிக் காத்து மனிதனை விலங்கிலும் கீழாக நடத்தும் இச்சமுதாயத்தில் தலித் பெண்ணாகப் பிறந்த காரணத்தாலும் தலித் பெண்கள் படுகின்ற அவஸ்தையும், அல்லல்களும் கொஞ்சநஞ்சமில்லை. அவர்களின் வேதனையின் : வெளிப்பாடுகளையம், பாமா தன் படைப்புகளில் வேதனையோடு பதிவு செய்துள்ளார் .

**குடிகாரக் கணவனின் குரங்குப்பிடி**

பெரும்பாலான: தலித் : ஆண்கள் பகல் முழுவதும் கடினமான உடலுழைப்பில் ஈடுபட்டுத்தான் பொருளீட்ட வேண்டிய . சூழலில் இருக்கின்றனர் . இவ்வாறு உடல்நோக வேலை செய்யும் போது சாதி, பணம், அதிகாரத்திமிர் கொண்ட பண்ணையார் முதலாளிகளின் ஆணவத்துக்கும், அடக்குமுறைகளுக்கும் அடிபணிந்தாக வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படுகின்றனர். உடலும் , உள்ளமும் நொந்து, வெந்துபோன நிலையில் கிடைக்கும் கூலியை குடியிலேயே செலவழித்துவிட்டு, வீட்டில் வந்து தன்
அதிகாரத்துக்குக் கட்டுப்பட்ட மனைவி, குழந்தைகளிடம் மல்லுக்கட்டுவதும், அடித்துத் துன்புறுத்துவதும் வாடிக்கையாக நிகழ்வதைக் காணமுடிகிறது.

**சமயங்களின் பங்களிப்பு**

பாமாவின் 'சங்கதி' சொல்லி வரும் பெண்கள் பலரும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாகக் காட்டப்படுகின்றனர். ஒரு சிலரே இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். விடுதலைப்படுத்த வேண்டிய சமயங்களே பெண்களே அடிமைப்படுத்துவது வேதனையாகத்தான் இருக்கிறது. மறுமணம் செய்து கொள்ளும் உரிமை தலித் பெண்களுக்கு உண்டென்று கண்டோம் . ஆனால் கிறிஸ்துவத்தைத் தழுவும் : தலித் பெண்களுக்கு மதத்தின் பெயரால் இவ்வுரிமை மறுக்கப்படுகிறது. திருமணம் செய்துகொண்ட காரணத்தால், எப்படிப்பட்ட கணவனாக இருந்தாலும் இறக்கும்வரை அவனோடுதான் வாழ்ந்ததாக வேண்டிய நிர்பந்தம் இவர்களுக்கு.

கடவுள், சொர்க்கம், நரகம், பாவம், புண்ணியம் போன்ற வார்த்தைகளால் பெண்களை எளிதில் மதிமயங்கச் செய்து ஆணாதிக்க மதிப்பீடுகளுக்கு அங்கீகாரம் வழங்குகிறது. அது எந்த மதமென்றாலும் ஆணுக்குப் பெண் அடங்கி நடப்பதே சுகமென்றும் , அதுவே கடவுளின் விருப்பமென்றும் , பெண் ஆணை விட அனைத்திலும் குறைபாடு உடையவளே என்றும் போதனை செய்து விடுகின்றன. சமூகத்தின் அனைத்து நிலையிலும் வஞ்சிக்கப்படும் தலித் பெண்களுக்கு கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கையே,

புத்துணர்வை, திடனை ஒரு பிடிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் எளிதில் இக்கருதித்தினை ஏற்றுக் கொண்டு விருப்பத்துடனே தங்களை அடிமைநிலைக்கு அர்ப்பணித்து விடுவதைக் காண முடிகிறது.

**கல்வியின்மையும் கண்மூடித்தனமான நம்பிக்கைகளும்**

வறுமையின் காரணமாய் கல்விகற்க வேண்டிய வயதில் பள்ளி செல்லாமல் பட்டாசுத் தொழிற்சாலைக்கும் , பண்ணையாரின் பணம் கொழித்திட உழைக்கவும் செல்லும் தலித் பெண்கள் கண்திறந்து பார்த்திட வழிவகையில்லாமல் தவிக்கின்றனர் . இதனால் பேய் பிடித்து ஆடுவதும், தங்களை ஏய்ப்பவர்களை எளிதில் நம்பிவிடும் தன்மையும் கொண்டு மேலும் மேலும் கீழ்நிலைக்குத் தள்ளப்படுகின்ற பெண்களைப் பாமாவின் படைப்புகள் காட்டுகின்றன.

உடனடித் தேவைகளான உணவு, உடை, உறையுள் இவற்றைத்தேடிக்கொள்ளவே பெரும்பாடுபடுகின்ற இவர்களுக்கு பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பி படிக்க வைக்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாக இருந்தபோதிலும் , அதனைச் செயல்படுத்த முடியாமல் இவர்கள் திணறிப் போவதைக் காணமுடிகின்றது. வறுமையின் கொடுமையால் உயர்சாதியினரின் நிலங்களில் மட்டுமில்லாது, அவர்களின் இல்லங்களிலும் அடிமைத்தொழில் செய்ய வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றனர் . அத்துடன் உயர்சாதிப் பெண்களின் சாதிவெறிக்கும் இரையாக வேண்டிய சூழலில் தலித் பெண்கள் பல அடக்குமுறைகளுக்கு இலக்காகின்றனர் .

இறுதியாக பாமாவின் படைப்புகளில் காட்டப்படும் பெண்கள் ; தாங்கள் முகமிழந்தவர்களாக, சுயமிழந்தவர்களாக ஆக்கப்படும் சூழலில் கூட, நம்பிக்கையும் , துணிவும் மன உறுதியும் கொண்டு எதிர் நீச்சல் போடும் தன்மையுடையவர்களாக இருப்பதை உணர முடிகிறது. தலித் பெண்களிடம் காணப்படும் பலம் , பலவீனம் இரண்டையும் கூறும் பாமா, தங்களை அடிமைப்படுத்தும் அத்தனையையும் தகர்த்தெறிந்துவிட்டு விடுதலையை நோக்கி விரைந்திட, வேண்டுமெனக் கூறுகிறார் . இயல்பாகவே தங்களிடம் நிறைந்துள்ள நியாயமான கோபம் போராட்டக்குணம், எதிர்ப்புணர்வுகளைக் கூர்மைப்படுத்திட வேண்டியது கட்டாயத் தேவையாக உள்ளது. பல்லாண்டுகளாக, தங்களிடம் இருந்து வரும் பொறுமை, சகிப்புத் தன்மை, கருணை, பரிவு, பாசம் யாரையும் எதற்கும் எளிதில் நம்பிவிடும் போக்கு, மென்மைத்தன்மை, நம்பிக்கையுறுதி, நன்றியுடைமை போன்ற குணங்களால் தாங்கள் எளிதில் வசப்படுத்தப்பட்டு, வஞ்சிக்கப்படுவதைப் புரிந்து கொண்டு செயல்படுவது அவசியமாகிறது.

வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றங்களால் சுற்றுப்புற சூழலில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் , தொழில் மயமாக்குதலால் உண்டாகும் பாதிப்புக்கள் , பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்புக்கள், தாராளமயமாக்குதலினால் ஏற்படும் தாக்கங்கள் , அத்தனையையும்

கணக்கிலெடுத்துக் கொண்டு, காலத்தின் மாறுதலுக்கேற்ப நமது சிந்தனையையும் விடுதலைக்கான செயல்பாடுகளையும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இத்தகைய மாற்றங்களால் இயற்கை சார்ந்த உறவுகளும் , மனிதநேய மதிப்பீடுகளால் கட்டப்படும் நம் வாழ்க்கை உறவுகளும் சிதைக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மாற்றங்களுக்கேற்ப நம்மைத் தயாரித்துக் கொண்டு நமது முழுமையான ஆளுமைத் தன்மையை, நமது தனித்துவம் அழிந்துவிடாத வகையில் கட்டி எழுப்ப வேண்டியுள்ளது. பாமாவின் பாத்திரப் படைப்புக்களில் பல பெண்கள் கலகக்காரிகளாக, குசும்புத்தனம் உள்ளவர்களாக,
அதிகாரத்தை அலட்சியப்படுத்துபவர்களாக, சித்தரிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய போர்க்குணம் இவர்கள் மீத வலிந்து ஏற்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக, தலித் பெண்களுக்கே உரிய எதிர்ப்புக் கலாச்சாரத் தன்மை இது. இத்தகைய அத்துமீறல்கள் துணிச்சலையும் , மனச்சுதந்திரத்தையும் பறைசாற்றுகின்றன.

குழு உணர்வு கொண்ட தலித்துக்கள் ஆங்காங்கே தங்களின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராட்டங்கள் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் . பாமாவின் சங்கதியில் கிராமத்து பஞ்சாயத்தில் பெண்களின் பங்கேற்பு புறக்கணிக்கப்பட்ட நிலையில் அநீதியான முறையில் மரியம்மா என்ற பெண் செய்யாத குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுகிறார். இது கிராமங்களில் மட்டுமின்றி, வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும், பல்வேறு இடங்களிலும் பெண் அதுவும் தலித் பெண் என்றால் அத்தனைபேருக்கும் ஓர் இளக்காரமான பிறவியாக, பொருளாகத்தான் எண்ணத் தோன்றுகிறது. அவளை அற்பமாகத்தான் நடத்த முற்படுகின்றனர் . பள்ளிப்பருவத்தில்
பாமாவும் சேரிப்பெண் என்பதால் தேங்காய் திருடி இருப்பாய் என்று தீர்க்கமாக, எந்த விசாரணையுமின்றி மேல்சாதி ஆசிரியரால் முடிவெடுக்கப்படுகிறதைப் பாமாவின் 'கருக்கில்' காண முடிகிறது. மேல்சாதியின் அதிகாரத்தைத் தக்க: வைத்துக் கொள்ளும் பொருட்டு ஏற்படுத்தி வைத்துள்ள ஒழுக்கக் கோட்பாடுகளை மீறுவதே தலித்துகளுக்கு
ஒழுக்கமாக அமைய முடியும். இத்தகைய மீறல்களால் தலித் பெண்கள் ஓர் அரசியல் சக்தியாக உருவெடுக்க வேண்டும். அரசியல் சக்தியாக உருவெடுத்து, அதிகாரத்தைக் கைப்பற்றுவதினால் மட்டுமே நமக்கு விடுதலை கிடைக்கும் . பெண்விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் பெண் இயக்கங்களும், ஓர் அரசியல் சக்தியாக திரண்டெழுந்து போராட முன்வர வேண்டும். தலித் பெண்களுக்குத் தேவையானது கழிவிரக்கமோ, தற்கால நிவாரணங்களோ, இழப்பீட்டுத் தொகையோ அல்ல. மாறாக அவர்களை அரசியல் சக்தியாக்கி, அதிகாரத்தை கைப்பற்றிட

அவர்களை விழிப்படையச் செய்வதும், அவர்களோடு இணைந்து போராடுவதுமே பெண் இயக்கங்களின் பெரும் பங்களிப்பாக இருக்க வேண்டும் .

வினாக்கள்

1. தலித் பெண்ணிய கோட்பாட்டு பிரச்சினைகளை எழுதுக.
2. தலித் மக்களுக்கு நிலையான சூற்றுச்சூழல் தேவையா என்ற நிகழ்வை எழுதுக.
3. தலித் பெண்களின் முன்னோடியான பங்கு குறித்து வரையறுக்க.
4. தலித் இயக்கங்களில் பெண்ணியப் பார்வை குறித்து வரையறுக்க.
5. ஜோதிபா பூலேயின் தலித் பெண்ணியக் கருத்துகளை விளக்குக.
6. மனபுரட்சியே அடிப்படை மாற்றத்துக்கு வழி என்ற கூற்றை ஆராய்க.
7. தலித் பெண்ணியம் வளர்க்க உதவும் கருவி மனிதம் – விளக்குக.
8. பாமா படைப்புகளில் பெண்ணியம் – விளக்குக.

# அலகு - 4

## பெண்ணியம் சொற்பொருள் விளக்கம்

‘பெண்ணியம்’ என்பது உலகளாவியது. உலகில் உள்ள அனைத்து மனிதகுலத்துள்ளும், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்க ஏற்பட்டது. குறிப்பாக, பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாகும்.

‘Feminism’ என்ற ஆங்கிலச் சொல் ‘Femina’ என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்;ததாகும். Femina என்ற சொல்லுக்குப் ‘பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள’ என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே, பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது.

1889 வரை ‘Womanism’ என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினையையும் அதனடிப்படையிலான போராட்டத்தையும். உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. 1890 ஆம் வருடம் ‘Womanism’ என்ற சொல்லினிடத்தை ‘Feminism’என்ற சொல் பெற்றது. 1894 ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது. Feminism’ என்ற சொல்லுக்குத் தன் வாழ்வின் மூலம் அர்த்தம் ஏற்படுத்திக் கொடுத்தவர் ‘ரே ஸ்ரேசே’ என்ற பெண்மணி ஆவார்.

பெண்ணியம் என்பதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்றன. அவ்விளக்கங்களுக்கிடையே வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படையில் அவை பெண்ணியம் என்பதற்கு, ‘பாலியல் சமத்துவம்’ என்ற பொருளைத் தந்து நிற்கின்றன. பரந்த அளவில் ‘பெண்ணியம்’ என்ற சொல் ‘பெண் எந்த ஆணுக்கும் நிகரானவளே! எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும், அவள் அடக்கி வைக்கப்படக் கூடாது. தனிமைப்படுத்தி வைக்கப்படக் கூடாது சார்பு நிலைப்படுத்தக் கூடாது’ என்று பொருள்படுகிறது.

பெண்ணியம் என்பதைத் ‘தத்துவம்’ என்ற நிலையிலும் ‘இயக்கம்’ என்ற நிலையிலும், கோட்பாடு என்ற நிலையிலும் தனித்தனியாக விளங்கிக் கொண்டோமேயானால், பெண்ணியம் என்பதன் முழு வளர்ச்சியையும் அறிந்து கொள்ள இயலும்.

பெண்ணியம் என்ற தத்துவமானது, ‘ஆண் மேலாதிக்கத்தில் வழி வழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில், பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதையும், ஆண்களின் பாலியல் தேவைக்குப் பயன்படு பொருளாகத் தள்ளப்பட்ட

விதத்தையும், ஆண்களைச் சார்ந்து, அவர்களின் நலன் பேணுவதையே வாழ்வாகக் கொண்டுள்ள நிலையையும் எடுத்துரைக்கின்றது.

பெண்ணியம் என்ற இயக்கமானது, பெண்கள் தாமாக முடிவெடுத்து, அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்குவதாகும். இஃது பெண்களிடையே பலமாற்றங்களை ஏற்படுத்தி, அவர்களின் மேற்கூறிய இலக்கை அடைவிக்க உதவும் புரட்சிகரமான செயற்பாடு உடையதாகும்.

பெண்ணியம் என்ற கோட்பாடானது, ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகிறார்களோ, அந்த அளவுக்குப் பெண்களுக்கும் மேற்கூறிய துறைகளில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று கூறுவதோடு, அதனடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பை உருவாக்கித் தரவும் முயலுகிறது.

பெண்ணியத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள, மேலும் சிலரது விளக்கங்களும் உதவி செய்கின்றன. 'பெண்ணியம்' என்பது பெண்களின் சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம், உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார் சார்லட் பன்ச்.

இதையே, பார்பரா ஸ்மித்தின் கூற்றில் சற்று விரிவாகக் காணமுடிகிறது. 'பெண்ணியம்' என்பது எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளையிலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப் பெண்கள், தன்னினச் சேர்க்கையுடைய பெண்கள், வயதான மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும், மரபு மணமுறையிலும் துன்புறும் பெண்கள், இவர்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்காகும். இன்றி, இயல்பான அல்லது சற்றுக் குறைவான முயற்சியில் ஈடுபடுவது பெண்ணியம் ஆகாது என்று அவர் விளக்கியுள்ளார்.

டோனா ஹாக்ஸ்ஸ்ட் மற்றும் சூ மாரோ என்பவர்ள் பெண்ணியம் என்பது தீவிர செயல்பாடுடையது என்று கூறுவது முற்கண்ட பார்பரா ஸ்மித்தின் கருத்தோடு ஒத்துச் செல்கிறது. இவர்கள் 'பெண்ணியம் தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி, அரசியல் மற்றும் தத்துவ நிலையாகவும் செயல்பட வேண்டி இருப்பதால், இதற்குத் தேவை தீவிர நடைமுறை செயல்பாடுதான். தீவிரம் இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற சொல் அர்த்தமற்றதாகி, தானே இல்லாமல் போய்விடும்' என்று அப்பெண்கள் கருதுகின்றனர்.

சார்லட் பன்ச், பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். என்கிறார். அதாவது இவர் பெண்ணியத்தை ‘சமுக நிலை மாற்றக் கோட்பாடு’ என்ற விளக்குகிறார். தெரசா ப்ளிங்டன் என்ற பெண்மணியும் ‘பெண்ணியம் உலகையே மாற்றியமைக்கும் இயக்கம்’ என்று கருத்துரைக்கிறார்.

பெண்ணியம் என்பது பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம் என்பது ரோஸலிண்ட் டெல்மார் கருத்தாகும். பெண்களாசை; சமுதாய அளவில் முன்னேற்றுவது என்பது பெண்ணியத்தின் மையச் செயற்பாடாக அமைந்துள்ளதால், இதை ஒரு சிறந்த சமுதாய இயக்கமாகக் கருத இயலும் என்பது இவருடைய எண்ணமாகும். காரணம் என்ற பெண்ணியம் விளக்க நூலை எழுதிய ரே ஸ்டான்சி அம்மையாரும், பெண்ணியத்தன் மையச் செயற்பாடு சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றுவதாகும் (அடிமைத்தனத்தைக் களைதல்) என்று எடுத்துரைக்கிறார்.

பெண்ணியவாதி என்பவர் யார்? என்ற வினாவிற்கு ரே ஸ்டான்சி பதிலுரைக்கும் போது பெண்ணியவாதி என்பவர் பெண்களின் போராட்டத்திற்குத் துணை நின்று, அவர்களின் அடிமைத்தனத்தைக் களைந்தெறிய உதவுவதோடு, அவரின் மையக் கொள்கையே சமுதாயத்தில் பெண்களின் நிலைமாற்றம் என்பதைப் பற்றியதாக இருக்க வேண்டும்’ என்கிறார்.

சைமன்-டி-பெவாயர் என்ற அம்மையாரும் பெண்ணியவாதியை இனம் காட்ட முற்படுகையில், ‘பெண்களின் நிலை மாற்றம்’ குறித்து அழுத்தமாகப் பேசியுள்ளார். “பெண்ணோ ஆணோ- சமுதாயத்தல் பெண்களின் நிலையை மாற்றப் போராடுவதோடு, வகுப்பு வேறுபாடின்றி எல்லா நிலைகளிலும் பெண்களின் உயர்வுக்கு உழைப்பவராக இருக்க வேண்டும்” என்கிறார்.

மேற்கூறிய கருத்துக்களை வைத்து ஆராய்கின்ற போது, பெண்ணியம் என்பது பெண்களின் அடிமை நிலையை மாற்ற முற்படும் கோட்பாடு என்பதும் பெண்ணியவாதி என்பவர் பெண்களின் நிலை மாற்றத்திற்காகக் குரல் கொடுப்பவர் அல்லது பாடுபடுபவர் என்பதும் விளக்கம் பெறுகிறது.

**பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

பெண்ணியம் என்ற இயக்கம் ஒரு நீண்ட வரலாறுடையது. இந்த இயக்கத்தின் வித்து கி.பி.1400 இல் இடப்பட்டது. கி.பி. 1400 லிருந்து கி.பி.1789 வரையிலான ஆண்டுகளில் இவ்வியக்கம் கீழ்க்கண்ட மூன்று நிலையை அடைந்தது.

நிலை 1: பெண்கள் தங்களை அவமதிக்கும் துன்புறுத்தும் ஆண் வர்க்கத்தை எதிர்த்துப் போராட நினைத்த நிலை நாடுகளின் மொழிவாரியாக இவ்வுணர்வு இருந்ததாகக் கூறலாம்.

நிலை 2: பாலியல் உறவு என்பது வெறும் உடற்கூறு சம்பந்தமானது என்று மட்டும் நினைத்த உணர்வு மாறி, அதை நாகரிமானதாகக் கருதிய நிலை.

நிலை 3: ஆண் வர்க்கத்தினரின் குறுகிய மனப்பான்மையையும், பாரபட்ச மனப்பான்மையையும் எதிர்த்து, நாங்கள் சமூகத்தில் உண்மையான அந்தஸ்தும் மதிப்பும் பெற வேண்டும் என்ற நோக்கு உண்டான நிலை.

பெண்களிடையே நாங்கள் துன்புறுத்தப்படுகிறோம் என்ற உணர்வு தலைதூக்கி, அதை எதிர்த்து ஒரு புராட்சி உருவாக வேண்டும் என்ற எண்ணத்தை (உள் மனதில்) தோற்றுவித்தது இக்காலக்கட்டமாகும். இம் முதல் காலக்கட்டம் பெண்களிடையே கருத்து மாற்றம் உருவாகத் தூண்டு கோலாக இருந்தது என்றால், பின்வந்த காலக்கட்டம் அவர்களின் கருத்தைச் செயல்படுத்தி வெற்றிகாண வைத்தது எனலாம்.

பின்வந்த காலக்கட்டத்தில் பெண்ணிய வரலாற்றில் இரு பெரும் அலைகள் உண்டாயின. முதல் அலை 1830 -ல் அமெரிக்காவில் தோன்றி, ஐரோப்பாவிற்கு விரைவாகப் பரவியது. இவ்வலையின் காரணமாகப் பெண்கள் ஓட்டுரிமை பெற்றனர். 2-வது அலை 1960-ல் தொடக்கத்தில் அமெரிக்காவில் தோன்றி உலகத்தின் பல பாகங்களுக்குப் பரவி, மிகப் பெரிய பண்பாட்டுப் பாதிப்பை ஏற்படுத்தியது.

இவ்விரண்டின் வரலாறே பெண்ணியத்தின் வரலாறாகக் கருதப்படுகிறது. 1830 களின் முதன் முதலாகப் பல பெண்கள் ஒன்று சேர்ந்து ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தனர். இவர்கள், ஆண்களை எதிர்த்து, பெண்களின் உரிமையை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். சூசன் ஆண்டனி அண்டாய்னட்ரௌன், லூசி ஸ்டோன் போன்ற பெண்மணிகள் இவ்வியக்கதின் முக்கிய உறுப்பினர்களாக விளங்கினர்.

1840 -ல் லண்டனில் ‘உலக அடிமை ஒழிப்பு மகாநாடு’ நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவில்லை. முதன் முதலில் இதைப் பெண்ணியவாதிகள் வன்மையாகக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டனர். ஆண் பெண்

எல்லோரும் சமமாகவே படைக்கப்பட்டுள்ளனர், என்ற கருத்து அவ்வறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்டது. பெண்கள் ஒடுக்கப்படுவதை முழுவதுமாக அழிப்பது என்பது அடிமைத்தனத்தை ஒழிப்பதை விடக் கடினமானதாகும் என்று மற்றும் சில பெண்ணியவாதிகள் அப்பொழுது கருத்து தெரிவித்தனர்.

1848 -ல் அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள செனகாபால்ஸ் என்ற இடத்தில் நடந்த மாநாடு உலகப் பெண்ணிய வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். லுக்கிரிடியாமாட் எலிஸபெத் கேடி ஸ்டான்டன் என்ற இரு பெண்மணிகள் இம்மாநாட்டை நடத்தினர். அப்பொழுது அவ்விருவரும் பெண்களுக்கான இயக்கம் ஒன்றை முறையாகத் தொடங்கினர். இம்மாநாட்டில் பெண்களுக்குக் கீழ்க்கண்ட சில இன்றியமையா சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

1. திருமணமான பெண்களுக்குச் சொத்தில் உரிமை

2. கல்வியில் பெண்களுக்கு அதிக வாய்ப்பளித்தல்

3. தொழில், வணிகத் துறை மற்றும் வழிபடும் இடங்களில் பெண்களுக்கு வாய்ப்பளித்தல்

1840 -களிலும், ஐம்பதுகளிலும் அமெரிக்காவில் சோசலிசப் பெண்ணியத்தின் சில கருத்துக்கள், பெண்ணுரிமைக்காக நடத்தப்பட்ட கூட்டங்களில் இணைந்து வலியுறுத்தப்பட்டன. இதன் எதிரொலியாக ஓகையோ மாநிலத்தில் ‘சேலம்’ நகரில் நடந்த ஒரு மாநாட்டில் ஆண்களை அனுமதிக்கவில்லை. அத்துடன் ஆண்களை வெளிப்படையாக அம்மாநாட்டில் எதிர்த்துப் பேசினர். இம்மாநாட்டில் கலந்து கொண்ட பெண்கள் தாங்கள் ஆண்களுக்கு நகரானவர்கள் என்ற கருத்தை எதிரொலிப்பது போல், ஆண்கள் அணிவது போன்ற தொளதொளப்பான கால் சராய்களை அணிந்து கொண்டு வந்திருந்தனர்.

இதே காலக்கட்டத்தில் அமெரிக்கப் பெண்கள், குடிஒழிப்பு குழுக்களைத் தோற்றுவித்து, பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். கணவன்மார்களின் குடிப்பழக்கத்தால் தாங்கள் மிகவும் துன்புறுவதாகப் பல பெண்கள் வெளி உலகிற்கு முதன் முதலில் துணிந்து இனம் காட்டினர்.

1869-ல் பெண்ணிய செயற்பாட்டாளர்கள் மற்ற உரிமைகளை அடைய ஓட்டுரிமை இன்றியமையாதது என்று கருதினர். அதன் பொருட்டு அமெரிக்கப் பெண்கள் ஓட்டுரிமைகோரும் சங்கம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். இதைத் தொடர்ந்து 1890ல் சூசன் ஆண்டனி, எலிஸபெத் கேடி ஸ்டான்டன் என்ற இருவரும் தலைமை ஏற்ற தேசிய பெண்கள் ஓட்டுரிமை அமைப்பு தோற்றம் பெற்றது. இது பெண்களின் ஓட்டுரிமைக்காகத்

தீவிரமாகப் போராடியது. இந்த அமைப்புக்களோடு மேல்மட்ட, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து போராடினர். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஓட்டுரிமை இயக்கங்கள் நிறைய தோன்றி ஒன்றோடு ஒன்று இணைந்து ஒட்டுரிமை என்ற ஒரே இலக்கை வலியுறுத்தத் தொடங்கின.

சுமார் 50 ஆண்டுகள் போராடியதன் விளைவாக 1920 ல் ஆண்டனி சட்டச் சீர்திருத்தம் அல்லது 19 வது சட்டத் திருத்தம் பெண்களுக்கு ஓட்டுரிமையை அளித்தது. பெண்கள் போராட்டத்தின் முதல் வெற்றிப்படியாக இச்சட்டச் சீர்திருத்தம் அமைந்தாலும் இஃது பெண்களின் எல்லா உரிமைகளுக்கும் வழி வகுக்கவில்லை எனலாம்.

பிரிட்டன் பெண்ணியவாதிகள் தங்களின் கொள்கைகளிலோ, காரண காரியங்களிலோ அமெரிக்கப் பெண்ணியவாதிகளுக்குச் சற்றும் குறைந்தவர்கள் அல்லர். சிலர் கருத்துக்களும், உணர்வுகளும் அமெரிக்கப் பெண்ணிய இயக்கங்களின் மூலமே இவர்களுக்குக் கிடைத்தன. இப்பெண்ணியக்கங்களின் நூல்கள், இதழ்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவை பிரிட்டன் பெண்மணிகளால் மிகவும் வரவேற்கப்பட்டன. பிரிட்டன் பெண்மணிகளைக் கவர்ந்த அமெரிக்கப் பெண்ணிய வாதிகளுள் எலிசபெத் கேடி ஸ்டான்டன் முக்கியமானவராவார். பலமுறை அவரும் லண்டன் நகருக்குச் சென்று உரைகளாற்றிப் பிரிட்டனின் பெண்ணியம் வளர உறுதுணையாக இருந்தார்.

இங்கிலாந்தில், மேரி வோல்ஸ்டன் கிராப்ட் என்ற பெண்மணி எழுதிய ‘பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு’ என்ற நூலும், ஜான் ஸ்டுவர்ட்மில் எழுதிய ‘பெண்ணடிமைத்தனம்’ என்ற நூலும் பெண்ணிய வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தன.

இங்கிலாந்தில் 1903 -ல் ஓட்டுரிமை கோரும் அமைப்புகளின் போராட்டம் வலுப்பெற்றது. ‘பெண்களின் சோசலிச அரசியல் கூட்டமைப்பு போன்ற இயக்கங்கள் ஓட்டுரிமை பெறுவது பெண்ணியத்தின் ஒரு முக்கிய கடமையாகும் என்று வாதாடின.

முதல் உலகப் போரில் இங்கிலாந்துப் பெண்மணிகள் பெரும் பங்கு வகித்தனர். அது கண்டு, இங்கிலாந்து அரசாங்கம் தன் கொள்கையைத் தளர்த்திக் கொண்டு பெண்களின் ஓட்டுரிமைக்குச் சம்மதித்தது. 1918 ல் பிரிட்டன் பாராளுமன்றத்தில் பெண்கள் வாக்குரிமை பற்றிய மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி இங்கிலாந்தில் உள்ள முப்பது வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஓட்டுரிமை அங்கீரிக்கப்பட்டது. அதன் பின் வந்த ஆண்டுகளில் இருபத்தியோரு வயதைக் கடந்த கல்யாணமாகாத இளம் பெண்களுக்கும் அவ்வுரிமை வழங்கப்பட்டது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை முன்பே கூறியபடி ஓட்டுரிமை எதிர் பார்த்த அளவிற்குப் பெரிய வெற்றியைத் தந்துவிடவில்லை. குறிப்பாகத் தொழிலாளர் வர்க்கம், கறுப்பர் பெண்கள், நடுத்தர வர்க்கம் இவற்றைச் சார்ந்தவர்கள் எந்தப் பயனும் அடையவில்லை.

இதற்கு மூன்று முக்கிய காரணிகள் சொல்லப்படுகின்றன.

1. பெண்களுக்கென்ற தனி அரசியல் கட்சி இல்லை.

2. அவர்கள், தங்களின் பிரச்சினைகளுக்காக ஓட்டுப்போட இயலவில்லை.

3. எண்ணிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு அரசியல் பெண்கள் ஈடுபடவில்லை.

ஒரு குடியாட்சி மாற்றம் பெற்று பெண்களுக்குச் சமூக அளவில் சீர்த்திருத்தம் ஏற்பட வேண்டுமானால், மேற்கண்ட இந்த மூன்று குறைகளும் நீக்கப்பட்டாக வேண்டம் என்பது வல்லுநர்கள் கருத்தாக அமைந்தது.

1920 -க்குப் பின், ‘ஓட்டுரிமை கோரும் இயக்கங்கள்’ நான்கு குழுக்களாகப் பிரிந்துவிட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை வலியுறுத்திச் செயல்படத் தொடங்கினர். அதில் முக்கிய பெரிய குழு சமதர்ம நோக்கைச் சார்ந்து செயல்படத் தொடங்கியது. அது, பெண் வாக்காளர்கள் குழு என்ற பெயரில் இயங்கியது பெண்களை ஆண்களில் இருந்து வேறுபடுத்தும் சட்ட நிலையை நீக்கக் கோரி, அதனடிப்படையில் சட்டச் சீர்த்திருத்தம் கொண்டுவரப் போராடியது. மேலும் இவ்வமைப்பு பெண்களின் நலன், அரசியல் பங்கு, அதிக வேலை வாய்ப்பு, கல்வியில் அதிக வாய்ப்பு, கருச்சிதைவு உரிமை, குழந்தைப் பராமரிப்பு இவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தியது. இதன் பயனாக அமெரிக்கப் பாராளுமன்றத்தில் அதிகளவு, பெண்கள் நலன் பற்றிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவ்வமைப்பு விவாகரத்தைச் சட்டபூர்வமாக்கியது.

இரண்டாவது குழுவானது அமைதி இயக்கமாகச் செயல்பட்டது. அமைதி மற்றும் விடுதலைக்கான அகில உலகப் பெண்கள் குழு என்பது அதன் பெயர். இக்குழு, பேராயுதங்கள் ஒழிப்பு பற்றியும் சமாதானம் பற்றியும் தொடர்ந்து மாநாடுகள் நடத்தியது. இம்மாநாடுகள் ‘போரிடுதல்’ என்பது ஆணின் குணம் என்றம், பெண்கள், விடுதலையையும் சமாதானத்தையும் விரும்புவார்கள் என்றம் வற்புறுத்தின.

மூன்றாவது குழு, தேசிய வணிக ஒருங்கிணைப்பு என்றும் வேலை பார்க்கும் பெண்களின் சங்கம் என்றும் சிறுசிறு குழுக்களைத் தொடங்கிப் பெண்களுக்கான சமூக வேலை வாய்ப்புகளை வலியுறுத்தி வந்தன.

நான்காவது குழுவானது தீவிரவாத இயக்கமாக மாறியது. அலிஸ் பால் என்பவரது முயற்சியால் தேசிய பெண்கள் கட்சி தொடங்கப்பட்டது. இக்காட்சி தீவிரமாகச் செயல்பட்டது. இதன் முதல் கொள்கை, சமவுரிமை மசோதா கொண்டு வருவதாகும். 1923-ல் இக்கட்சி அமெரிக்கப் பாராளுமன்றத்தில் இம்மசோதாவைத் தாக்கல் செய்தது.

இங்கிலாந்திலும் ஓட்டுரிமைக்குப் பின் பெண்ணுரிமை என்ற போராட்ட விளக்கு சரியாகத் தூண்டப்படவில்லை. 1918-ல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் ஓட்டுரிமை மசோதா ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், சுமார் 10 வருவடங்கள் கழித்தே அதாவது 1928 க்குப் பிறகே பெண்களுக்கு முஜ வாக்குரிமை கொடுக்கப்பட்டது. இதன் பயனாக, முப்பதுகளில் இங்கிலாந்துப் பெண்களிடம் குறிப்பிடத்தக்க மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்படத் தொடங்கின.

1930 களில் இங்கிலாந்தில் பெண்கள் குட்டை முடி வைத்துக் கொண்டு, அரை கால்சராய் அணிந்து கொண்டும், சிகரெட் பிடித்துக் கொண்டும், வீட்டைவிட்டு வெளிவந்து பொதுக் காரியங்களில் ஈடுபடத் தொடங்கினர். கார் ஓட்டப் பழகிக் கொண்டனர். ஆண்களுக்குச் சமமாக நாகரிகமாக நடக்கத் தொடங்கினர். அநேகப் பெண்கள் திருமணம் வேண்டாம் என்று முடிவெடுத்தனர். திருமணம் செய்து கொண்ட பெண்களும் ஆண்களுக்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை. இதன் காரணமாக வழிவழியாக இருந்து வந்த ஆணாதிக்கம் சரியத் தொடங்கியது.

அமெரிக்காவிலும் 1920 தொடங்கி பெண்களிடையே மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இளம் பெண்களிடம் சோஷலிச உணர்வு தலைதூக்கியது. அதன் விளைவாக அவர்களிடம் தோற்ற மாற்றம், உடை மாற்றம், நவீன சிகை அலங்காரம், புகை பிடிக்கும் பழக்கம் போன்றவை ஏற்பட்டன.

சூசன் லாஃபாலட் என்பவரின் பெண்கள் சம்பந்தப்பட்ட என்ற நூலும், வெர்ஜினியா வுல்ப் என்பவரின் ஒருவரின் சொந்த அறை என்ற நூலும் அமெரிக்கப் பெண்களிடையே அதிகப் பாதிப்பை ஏற்படுத்தி மேற்கூறிய மாற்றத்திற்கு மற்றமொரு தூண்டுகோலாக அமைந்தன.

முப்பதுகளில் அமெரிக்காவில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது. அதைச் சீர்செய்ய, வேலையில் இருந்த மணமான பெண்களை நீக்கிவிட்டு, பதிலாக ஆண்களை

வேலைக்கு அமர்த்தினால் தான் முடியும் என்ற எண்ணம் அநேக முதலாளிகளுக்கு ஏற்பட்டது. அதனடிப்படையில் செயல்படவும் தொடங்கினர். மேலும், அவர்கள், ஆண்கள்தான் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. எனவே அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதாடினர். இவ்வாதம் பெண்களிடையே மனத்தளவில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றாலும் அவர்கள் எடுத்த நடவடிக்கை பல பெண்களின் பொரளாதார நிலையைச் சீர்குலைத்தது.

இதற்கிடையே, 1923-ல் இருந்து, தொடர்ந்து சமவுரிமை மசோதா மீண்டும் மீண்டும் சீர்த்திருத்தத்திற்காக வலியுறுத்தப்பட்டது. 1950-லும், 53 லும் இம்மசோதா சீர்திருத்தப்பட்டது. இதனடிப்படையில் பல மாகாணங்கள் பெண்களுக்கு, ஆண்களுக்கு நிகரான சமவூதியம் தரச்சம்மதித்தன.

இரண்டாவது உலக மகாயுத்தம் அமெரிக்கப் பெண்களின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தது. யுத்தகாலத்தில் ஆண் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரணமாகப் பெண்களின் வேலை வாய்ப்பு அதிகரித்தது. பல மாகாணங்கள் பெண்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளையும் எதிர்ப்புகளையும் நீக்கத் தொடங்கின. அதனால், மணமான பெண்களுக்கு, குழந்தை பெற்ற பெண்களும் வேலையில் சேருவது அதிகமாகியது. உற்பத்தி துறையில் மட்டும் பணிபுரிந்த பெண்கள், எழுத்தர் மற்றும் விற்பனையாளர் போன்ற அலுவலகப் பணிகளிலும் அமர்த்தப்பட்டனர்.

1920 -ல் இருந்து 60 வரையிலான காலக்கட்டத்தினைப் பெண்ணிய நோக்கில் மதிப்பிடுகையில், அக்காலக்கட்டத்தில் அமெரிக்காவில் பெண்களுக்கான சமூக நிலை ஆதாயங்கள் பல இருந்தும், பெண்களின் உரிமைக்காகச் செயல்படும் சமூக இயக்கங்கள் அருகிவிட்டன என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தனிப்பட்ட பெண்களின் நலம் நாடும் அமெரிக்கப் பல்கலைக்கழகப் பெண்கள் சங்கம், தேசிய கத்தோலிக்க பெண்கள் சங்கம் என்பன போன்ற அமைப்புகள்தான் இக்காலக்கட்டத்தில் செல்வாக்கு பெற்றிருந்தன.

பிரிட்டனில் 1953 -ல் ராணி எலிசபெத் பதவி ஏற்ற பிறகு பெண்களின் நிலைமை சீர்படத் தொடங்கியது. இவர் ஆட்சியில் பாலியல் சமன்பாடு ஏற்பட்டது. உழைக்கும் வர்க்கத்தினரின் குடும்பங்களில் ஆண் பெண் இருவரும் வேலைக்குச் சென்று, வருமானத்தைப் பெருக்கி மேல்நிலை அடைந்தனர். பெண்கள் தங்கள் உழைப்பால் கிடைத்த சொந்தப் பணத்தில் தங்கள் விருப்பம்போல் வெளியே சென்று வேண்டியதை வாங்கவும் செலவு செய்யவும் தொடங்கினர். 1950 களில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வேலைக்குச்

செல்லும் பெண்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒன்று போல் இருந்தது என்று வல்லுநர்கள் கணக்கிட்டு உரைக்கின்றனர்.

அறுபதுகளில் பெண்ணியத்தின் இரண்டாவது அலை எழுச்சி பெற்றது. இக்காலக்கட்டத்தில் புதிய பெண்ணிய இயக்கத்தின் விளக்கங்களும், செயல்பாடுகளும் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தின. இதனால் பெண்கள் பலர் ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட முன்வந்தனர். இஃது பெண்களுக்கென ஒரு புதிய பாதையைத் திறந்து வைத்தது.

1961 டிசம்பர் 14 அன்று ஜனாதிபதி ஜான் எப், கென்னாடி பெண்களனின் தகுதி பற்றி ஆராய ஒரு குழுவை நிறுவினார். இக்குழு பெண்களின் நலன், வேலை மற்றும் முழு உரிமை இவற்றை பற்றி ஆராய்ந்தது. 5 வது சட்டச் சீர்திருத்தத்தின் படியும், 14 வது சட்டச் சீர்திருத்தத்தின்படியும் பெண்கள் தக்க வசதிகளையும், தகுந்த பாதுகாப்பையும் வேலை வாய்ப்பையும் பெற்றுள்ளதாக இக்குழுவின் ஆய்வறிக்கைக் கூறியது. 1963 -ல் ஜான் எப்.கென்னடி ‘சம சம்பள மசோதாவில்’ கையெழுத்திட்டது அமெரிக்கா பெண்கள் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

1963 -ல் பெட்டி ஃப்ரைடன் என்ற பெண்மணி ‘பெண்ணியல்பு புதிர்நிலை’ என்ற நூலை எழுதினார். அமெரிக்காவின் புறநகர் பகுதியில் வாழும் சாதாரண பெண்மணிகளின் சாதாரண கனவுகள் பற்றிப் பகிரங்கமாகப் பேசியது இந்நூல்.

சமுதாயக் கட்டுப்பாடு அமெரிக்கப் பெண்களை எவ்வளவு தூரம் முன்னேற விடாமல் தடுத்திருக்கிறது என்பதை அப்பெண்மணி தன் நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார். பெண்கள் பற்றிப் பலரும் சொல்லத் தயங்கிய பயந்த சில புரட்சிகரமான கேள்விகளை இவர் துணிந்து கேட்டது அமெரிக்கா ஆண்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியது. அடிமை வேலை செய்வதை விட்டு, குடும்பத்தில் ஓர் உயர் நிலையைத் தாங்கள் அடைய வேண்டும் என்ற எண்ணத்தைப் பெண்களிடையே ஏற்படுத்தியது இந்நூல் மேலும் இஃது ‘சமுகத்தில் பாலியல் என்பதையும், பராய்ட் மனோதத்துவத்தையும் அமெரிக்க விளம்பரத்தையும் கடுமையாக விமர்சித்துள்ளது. மொத்தத்தில் இந்நூல் வழி, பெரும்பான்மையான அமெரிக்கப் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்கும் மாறுதலுக்கும் பெட்டி ஃப்ரைடன் வழி அமைத்துத் தந்தார்.

‘டெட்டாலஸ்’ (Daedalus) என்ற இதழில் 1964 ஆம் வருடம் ஆலிஸ் ரோஸி (Alice S.Rossi) என்பவரின் கட்டுரை ஒன்று வெளியானது. ‘இருபாலினரிடையே சமநிலை - ஒரு துணிவான புதுமைக் கருத்து என்பது அக்கட்டுரை தலைப்பு. அக்கட்டுரை கல்வியாளர்களிடையே

பெருத்த வரவேற்பைப் பெற்றது. பெண்களின் நிலையை வெவ்வேறுபட்ட சூழலில் ஆராய்ந்தது அக்கட்டுரை. மேலும், பாலியல் வேறுபாட்டில் மாறுதல் வரவேண்டுமென்றால் பெண்சமுதாயத்தில் கீழ்க்கண்ட மூன்று மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்ற அக்கட்டுரை பரிந்துரைத்தது.

1. பெண் குழந்தைகளுக்குப் போதுமான அளவு பராமரிப்புப் பாதுகாப்பும் கொடுத்தல்.

2. குடும்ப அமைப்பில் மாறுதல் ஏற்பட்டு, அதன் மூலம் பெண்கள் பள்ளிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் செல்ல வாய்ப்பளித்தல், மேலும் பள்ளிகளையும் தொழிற்சாலைகளையும் புறநகர் பகுதியிலும் அமைத்தல்.

3. சமுதாயத்தில் எல்லா நடவடிக்கைகளிலும் பெண்கள் சமமாகப் பங்கேற்க முனைதல்.

இது போன்ற, பல கட்டுரைகளும், நூல்களும் அக்காலக் கட்டத்தில் பெண்களின் நிலையை எடுத்துக்காட்டவும், முன்னேற்றவும் பலரால் எழுதப்பட்டன. அவை அனைத்தும் பெண்ணிய வரலாற்றில் எழுச்சிக்குரிய காரணிகளாக அமைந்தன.

1964 முதல் 1968 வரையிலான ஆண்டுகளுக்கு பெண்ணிய இயக்கம்,

1. தாராளவாதப் பெண்ணியக்கம்

2. தீவிரவாதப் பெண்ணியக்கம்.

3. சமதர்மவாதப் பெண்ணியக்கம்

என முப்பெரும் பிரிவாகச் செயல்படத் தொடங்கியது.

1966 அக்டோபரில் சுமார் 300 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய பெண்கள் அமைப்பு (NATIONAL ORGANISATION FOR WOMEN) 'NOW' என்ற சுருக்கப் பெயருடன் தொடங்கப்பட்டது. அதன் தலைவர் பெட்டி ஃப்ரைடன் ஆவார். அந்த அமைப்பு பெண் குடியுரிமையையும், சமூகச் சீரமைப்பையும் வலியுறுத்தித்தன செயல்பாட்டைத் தொடங்கியது. பெண்கள் சமூக நடவடிக்கைகளில் தங்களை முழுவதும் ஈடுபடுத்தி அதன் மூலம் எல்லாவற்றிலும் ஆணுக்கு நிகராக மதிப்பையும், பொறுப்பையும் பெற வேண்டும் என்ற கொள்கையையும் கொண்டிருந்தது இவ்வமைப்பு, தன்னைப் 'பெண்களால் ஆன அமைப்பு' என்று சொல்வதைவிட, பெண்களுக்கான அமைப்பு' என்று சொல்லிக் கொள்வதிலே பெருமையடைந்தது. இவ்வமைப்பில் 10% ஆண் உறுப்பினர்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1967-ல் இவ்வமைப்பின் வலியுறுத்தலினால் அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன், அரசாங்கத்திற்கு பாலியல் வேறுபாடு கூடாது என்று ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். இஃது அமெரிக்க அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டது. இக்கட்டளையின் காரணமாக வேலைவாய்ப்பு விளம்பரங்களில் ஆண், பெண் என்று தனிப்பட்டுக் குறிப்பிடுவது கூட தடை செய்யப்பட்டது. இந்த அமைப்பு 1967 -ல் பெண்ணுரிமை மசோதா கொண்டு வந்து அதன் மூலம் கருக்கலைப்பு உரிமைக்கான சட்டத்தைக் கொண்டு வர அரசாங்கத்தை முதன் முதலில் வற்புறுத்தியது. 300 நபர்களைக் கொண்டு தொடங்கிய இவ்வமைப்பு இன்று 1,75,000 -க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மிகப் பெரிய இயக்கமாக விளங்குகிறது.

1967 -ல் சிகாகோவில் 'தேசிய மாநாடு' ஒன்று நடத்தப்பட்டது. இதில், பெண்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேச முனைந்த ஜோ.ப்ரிமேன், சுலாமித் ஃபயர் ஸ்டோன் என்ற இரு பெண்மணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அத்துடன் அம்மாநாடு அவர்களின் செயல்பாடுகளையும் குற்றம் என்று கூறி ஒதுக்கியது. இஃது இவ்விரு பெண்மணிகளையும் தங்கள் கருத்தைச் செயல்படுத்துவதற்கென்று அமைப்பை ஏற்படுத்த தூண்டுகோலாக அமைந்தது, ப்ரிமேன், சிகாகோவிலேயே 'சிகாகோ வெஸ்ட்சைட் குரூப்' என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினார். ஃபையர் ஸ்டோன் நியூயார்க்கில் 'தீவிரவாதப் பெண் அமைப்பு' என்ற ஒரு இயக்கத்தைத் தொடங்கினார். அதன் பின் அமெரிக்கா நகரங்களில் சிறுசிறு தீவிரவாத அமைப்புகள் தோற்றம் பெற்றன. இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 1968 ஜனவரி 15-ல் வாஷிங்டனில் ஓர் அமைப்பு' நடத்தினர். இதில், 'மரபு வழிவந்த பெண்மையைக் குழி தோண்டிப் புதைப்போம்' என்ற கருத்தை வீதி நாடகமாக நடத்திக் காட்டினார். இதை மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரிதாக விளம்பரப்படுத்தின. இதனால் இவ்வியக்கத்திற்குப் பெருத்த விளம்பரம் கிடைத்தது.

1968 செப்டம்பரில் அமெரிக்காவில் அட்லாண்டிக் சிட்டியில் உள்ள நியூஜெர்ஸியில் 'மிஸ் அமெரிக்கா' போட்டி நடத்தப்பட்டது. தீவிரவாதப் பெண் இயக்கம் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இவ்வியக்க உறுப்பினர், ராபின் மார்கன் என்பவர் தலைமையில் அழகிப் போட்டி நடக்கும் இடத்திற்கு வெளியே பெண்களின் உள்ளாடைகள், ஒப்பனைப் பொருட்கள், பெண்களை மரபுகளிலேயே வைத்துப் பார்க்கும் மகளிர் இதழ்கள், மரபுவழி பெண்களைப் பெருமையாகப் பேசும் கட்டுரைகள் ஆகியவற்றைக் குவித்து எரித்தனர். கற்பனை மிகுந்த ஒரு நிருபர் இந்நிகழ்ச்சியை 'உள்ளாடை எரிப்பு' என விமர்சித்தார். பெண் சுதந்திரத்திற்கு அடையாளமாக இந்நிகழ்ச்சி வர்ணிக்கப்பட்டது.

நரகத்தைச் சார்ந்த அகில உலகப் பெண்கள் தீவிரவாத இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 68-69 களில் நூதனப் போராட்டங்களை நடத்தினர். இதற்கு எதிர்ப்புச் செயற்பாடு என்ற பெயரிட்டு அழைத்தனர். பால் வேறு பாடற்ற நிலையை வலிபுறுத்தி, பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை ஊட்டும் செயலில் ஈடுபட்ட இவர்கள் தங்கள் செயல்களை வித்தியாசமாக மக்கள் கவனத்தை உடனடி ஈர்க்கும் வகையில் செய்தனர். 1968 -ல் நடந்த அழகிப் போட்டியின் போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒரு ஆட்டிற்கு மகுடம் சூட்டி ஊர்வலம் நடத்தினர். மேலும், இவர்கள் 1970 மார்ச்சில், சுய கருகலைப்பினால் இறந்துபோன பெண்களுக்காக மௌன இறுதி ஊர்வலம் நடத்த, இதனால் தூண்டப்பட்ட மிச்சிகள் சட்டசபையின் கருக்கலைப்புச் சட்டச்சீர்திருத்த மசோதாவைக் கொண்டு வந்தனர். இவ்வகைப் புதுமைப் போராட்டங்கள் பலரைக் கவர்ந்து பிரபலமடைந்தன.

‘New’ இயக்கத்தின் முன்னால் தலைவி டைகிரேஸ் அட்கின்சன் என்ற அம்மையார் அக்டோபர் 17 இயக்கம் ஒன்றைத் தொடங்கினார். இவ்வியக்கத்தினர் தீவிரமாகப் ‘பரிவினையியம்’ பேசினர். அதாவது ஆண் மேலாதிக்கத்திலிருந்து விலகி வாழ்வதிலும், தாங்கள் தனிப்பட்டவர்கள் என்ற காண்பிப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

1969 -ல் நியுயார்க் தீவிரவாதப் பெண்ணிய இயக்கம் தங்களைச் சிவப்புக் காலுறையாளர்கள் என்று அழைத்துக் கொண்டனர். சுலாமித் பயர்ஸ்டோக் இக்குழுவைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர். பெண்களிடையே சகோதரித்துவத்தை வளர்ப்பதையும், விழிப்புணர்வை ஊட்டுவதையும் அவர்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

1969-ல் அமெரிக்காவில் எல்லா மாகாணத்திலுமாகச் சுமார் 500 தீவிரவாதக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஒவ்வொரு நகரத்திலும் ஆங்காங்கே உள்ள குழுக்கள், உள்ளூர் அரசியலிலும் பெண்களைப் பற்றிய பிரச்சாரங்களிலும் ஈடுபட்டனர். குறிப்பாகப் பல்கலைக்கழகங்களில் தங்களுடைய கொள்கைகளை முன்னேற்றியும் பெண்கள் தொடர்பான இதழ்களை, துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் தீவிரப் பணியாற்றினர்.

1969 நவம்பர் 24-ல் நியூயார்க்கில் அனைத்துக் குழுக்களையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. இதில் Now இயக்கத்தின் சார்பாக, 10 கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. சம வேலைவாய்ப்பு, சம கல்வி வாய்ப்பு, கருக்கலைப்பு, உரிமை, தொடர்பு சாதனங்களில் பெண்களுக்கு முன்னுரிமை, பெண் விடுதலை என்பன அவை. 24 மணி நேரக் குழந்தைப் பராமரிப்பு மையங்கள் நாடெங்கிலும் நிறுவப்பட வேண்டும் என்பது மற்றொரு முக்கிய கோரிக்கையாக இம்மாநாட்டில் வைக்கப்பட்டது.

தீவிரவாதப் பெண் குழுக்கள் தங்களின் முழு தன்னாட்சி உரிமையைக் காப்பாற்றிக் கொண்ட, தீவிரப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்ததால் அடுத்து வந்த சில ஆண்டுகிளல் அமெரிக்காவில் ஒரு பெரிய எழுச்சியை அவர்களால் ஏற்படுத்த முடிந்தது.

பிரிட்டனைப் பொறுத்தவரைத் தீவிரவாதப் பெண்ணிய இயக்கம் அதிகப் பாதிப்பை ஏற்படுத்த முடியவில்லை. இங்கிலாந்தின் அரசியல் அமைப்பும், வகுப்புவாதப் போக்குமே இதன் எழுச்சிக்குத் தடைக்கல்லாயின. இங்கிலாந்தைப் பொறுத்தவர 'பெண்ணியம்' என்பதே புரட்சிகரமான ஒன்றாகும்.

அமெரிக்காவில் தீவிரவாதப் பெண்கள் நடத்திய புதுமைப் போராட்டமான எதிர்ப்புச் செயற்பாட்டுக்கு இங்கிலாந்தில் வரவேற்பு கிடைக்கவில்லை. எனவே, லண்டனில் நடந்த அழகிப் போட்டியின் போது மிகவும் கண்ணியமான முறையில் பெண்ணியவாதிகள் போராட்டம் நடத்தினர். அழகிப் போட்டியை எதிர்த்துப் பிரச்சாரங்கள் நடத்தித் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தனர்.

1970 -ல் ஆக்ஸ்போர்ட்டில் சில முக்கிய பெண் பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து தேசிய அளவிலான பெண்கள் கருத்தரங்கு ஒன்றை நடத்தினர். இங்கிலாந்தைப் பொறுத்தவரை இதுவே பெண்ணியாவாதிகள் நடத்திய பெரிய அளவிலான பொது மக்கள் சம்பந்தப்பட்ட கருத்தரங்காகும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை 1960 முதல் 1970 லான காலக்கட்டம் 'தீவிரவாதப் பத்தாண்டாகக்' கணக்கிடப்படுகிறது.

**1970-1975 ஆம் ஆண்டுகளில் பெண்ணிய வளர்ச்சி**

1970 முதற்கொண்ட பத்தாண்டுகள் பெண்கள் பத்தாண்டுகள் என்று கட்டப்படுகின்றது. எழுபதுகளில் பெண்ணியம் பிரிட்டன் அமெரிக்காவில் மட்டுமல்லாமல் பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, இத்தாலி, ஸ்பெயின், அஸ்திரேலியா, ஜப்பன் மற்றும் வளர்ந்து வரும் பல நாடுகளிலும் ஆக்க பூர்வமான வளர்ச்சி பெற்றது. எழுபதுகளின் தொடக்கத்தில் ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் பெண்கள் சம ஊதியம், சமவேலை வாய்ப்பு, கருச்சிதைவு உரிமை இவற்றைப் பெற்றனர். ஆனால் மூன்றாம் உலக நாடுகளின் பெண்களுக்கும், பணம் படைத்த அமெரிக்க மற்றும் பிரிட்டனில் உள்ள பெண்களுக்கும் உள்ள பிரச்சினைகள் வேறுபட்டவைகளாக அமைந்திருந்தன. அதிலும், கத்தோலிக்க இஸ்லாமிய நாட்டுப் பெண்களுடைய பிரச்சினைகள் வெளிப்படையாகவே வேறுபட்டிருந்தன. ஆனாலும், உலகளாவிய அளவில் பெண்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதை ஒத்துக் கொள்ளுதல் வேண்டும். அடுத்து வந்த சில ஆண்டுகளில் பெண்விடுதலை என்பது உலகளவிலான

செய்தியானது. பாலியல் பாகுபாடு பெண்ணியம், ஆண் மேலாதிக்கம் போன்ற சொற்கள் அந்தந்த நாட்டு மொழிகளில் அன்றாடப் புழக்கத்திற்கு வந்தன. பெண்ணிய இயக்க எழுச்சியால் உலகளவில் அந்தந்தச் சமுதாயங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தோன்றத் தொடங்கின.

1970-75 வரைவியலான காலக்கட்டத்தில் பெண்ணிய இயக்கம் மேலும் சக்தி வாய்ந்ததாக உருப்பெற்றது. எழுபதுகளின் மத்தியில் பெண்ணிய எதிர்ப்பு இயக்கங்களும் தோன்றத் தொடங்கின.

‘இங்கிலாந்து இயக்கத்தின் முதல் தேசிய கூட்டம் பிப்ரவரி 1970-ல் ஆக்ஸ்போர்டில் உள்ள ரஸ்கின் கல்லூரியில் நடந்தது. இக்கூட்டத்தில் 600க்கும் மேற்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் செயல்முறைத் திட்டம் ஒன்று வகுத்து முன்மொழியப்பட்டது. உடனடியாகத் தீர்க்கப்படட வேண்டியவைகளாகக் கீழ்க்கண்ட 4 கோரிக்கைகள் தீர்மானிக்கப்பட்டன.

1. சம வேலை, சம ஊதியம்.

2. சம கல்வி வாய்ப்பு

3. இலவச, தன் விருப்பக் கருத்தடையும் கருக்கலைப்பும்

4. இலவச 24 மணி நேரக் குழந்தைப் பராமரிப்பு

1970-ல் மார்ச்சில் முதன் முதலாக இக்கோரிக்கைகள் மக்கள் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டன. பல நூற்றிற்கும் மேலான பெண்கள், ஆண்கள், குழந்தைகள் முதலானோர் ஹைடு பார்க்கிலிருந்து டிரபால்கர் சதுக்கம் வரை ஊர்வலமாக நடந்து சென்று இக்கோரிக்கைகளைப் பிரதமரிடம் ஒப்படைத்தனர். இக்கோரிக்கைகள் சட்டசபைக்கு வந்தபோது முதலிரண்டும் அதிக எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டன. அடுத்த இரண்டு கோரிக்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் பல எதிர்ப்புகளும் சிக்கல்களும் எழுந்தன.

1969 -ல் இலண்டனில் தொடங்கப்பட்ட ‘லண்டன் மகளிர் விடுதலைப் பயிற்சிப்பட்டறை’ என்ற அமைப்பு 1973 -ல் பிரபலமடைந்தது. பிரிஸ்டல், லங்கஷைர், கார்டிப், எடின்பர்க் போன்ற நகரங்களுக்கும் இதன் கீர்த்தி பரவியது. 1971 -ல் ‘சிஸ்விக்’ என்ற நகரில் கைவிடப்பட்ட பெண்களுக்காக மையம் ஒன்று தொடங்கப்பட்டு, அதுவும் பிரபலமடைந்தது. 1973, 74 ஆம் ஆண்டுகளில் தற்சார்புடைய தலைமை வேண்டாத பெண்களின் விடுதலைக் குழுக்களைத் தீர்மானிக்க மாநாடுகள் நடத்தப்பட்டன.

அமெரிக்காவில் 1970 ஆகஸ்ட் 26-ல் பெண்கள் ஓட்டுரிமை பெற்ற ஐம்பதாண்டு நிறைவு நாள் விழாகொண்டாடப்பட்டது. அன்றைய தினம் NOW அமைப்பைச் சேர்ந்தவர்கள் சமத்துவம் வேண்டி தேசிய அளவிலான போராட்டம் ஒன்றை நடத்தினர். இஃது தேசிய மகளிர் போராட்டம் என்றழைக்கப்பட்டது. தொடர்ந்து நாடெங்கிலும் இது போன்ற பல போராட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன.

‘NOW’ அமைப்பைச் சேர்ந்தவர்களும். தீவிரப் பெண்ணியவாத இயக்கமும் இணைந்து நியுயார்க் நகரில் ஓர் ஊர்வலத்தை நடத்தினர். அதில் 50, 000 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு, 5வது அவன்யூ வழியாக முழக்கமிட்டுச் சென்றனர். இது மிகப் பெரிய பெண்கள் ஊர்வலம் என்ற பெயரைப் பெற்று சரித்திரத்தில் நிலை பெற்றது.

இதுபோன்ற போராட்டங்கள், ஊர்வலங்கள் காரணமாகப் பெண்ணியக்கங்கள் பத்திரிகையாளர்களின் கவனத்தை ஈர்த்தன. அவர்களும், பெண்ணியக்கங்களின் செயல்பாடுகளுக்குச் சிறப்பு கொடுத்து வெளியிடலாயினார்.

1971 க்குப் பிறகு ‘NOW அமைப்பு தம் உறுப்பினர்களை 300 லிருந்து 15,000 ஆகவும் 74-ல் 40,000 ஆகவும் பெற்று மகிழ்ச்சியான அதிர்ச்சிக்குள்ளாகியது. உறுப்பினர்கள் அதிகமாக அதிகமாகச் சில வரன்முறைகளை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது. சான்றாகப் பணப்பற்றாக்குறை அனுபவம் மிக்க அலுவலர் இல்லாமை, தேசிய அளவிலான தொடர்புகொள்ள இயலாமை போன்ற நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன.

1971 -ல் பெட்டி ப்ரைடன் பெல்லா அப்சக் ஷெர்லி சிஸ்ஸோம் மற்றும் பலரும் தேசிய மகளிர் அரசியல் குழு என்ற ஓர் அமைப்பை நிறுவி, அதன் முலம் தேர்தலில் பெண்களின் பங்கை வலியுறுத்தினர். 1973 -ல் எல்லா மாநிலங்களிலும் இதன் கிளைகள் தொடங்கப்பட்டன. இவ்வமைப்பு, அரசியல் பால் இடைவெளி கூடாது என்ற இடைவிடாது வற்புறுத்தி, அரசியலில் பெண்களின் பங்கை 13% லிருந்து 39% உயர்த்திய சாதனை செய்தது.

1972 -ல் வயதான பெண்களுக்கான விடுதலை அமைப்பு ஒன்றை, அதன் மூலம் கறுப்பர் இனப் பெண்களுக்காகப் போராடினர். 1973-ல் தேசிய பெண்கள் கருக்கலைப்பு செயற்பாட்டுக் கழகம் நிறுவியும் அமெரிக்கக் குடியுரிமைக் கூட்டுக் கழகம் என்பதை நிறுவியும் வெற்றி கண்டனர். இவ்வமைப்புகளின் மூலமாகப் பெண்கள் பெரும்பான்மையான தங்களின் கோரிக்கைகளை அரசியல் ரீதியாக நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது.

தீவிரவாதிகள் மற்றும் சமதர்மவாதிகளின் பெண்ணியக் கொள்கைகள் பல இடங்களில் பரவினாலும். அவை எல்லா இடங்களிலும் முழுமையான வெற்றி பெறவில்லை. பல சிறய பெண் அமைப்புகள் தோன்றியும், மறைந்தும் தங்களின் கொள்கைகளிலும் முன்னேற்றத்திலும்

வெற்றி பெறாது போயின. 1970 -ல் தீவிரப் பெண்ணிய இயக்கத்தின் வெளியீடான இரண்டாம் ஆண்டின் முக்கிய குறிப்புகள் என்ற பிரதி 40,000 க்குப் மேலாக விநியோகிக்கப்பட்டது. இதன் மூலமாகத் தீவிரப் பெண்ணிய இயக்கத்தின் செயற்பாடுகள் 1971-ல் உச்சக்கட்டத்தை அடைந்தன ஆனாலும், அமெரிக்கா அரசியல் அமைப்புகளின் அடிப்படைக் கொள்கைகளினால் இவ்வியக்கம் சற்று வீழ்ச்சியைக் கண்டது.

1970 முதல் பெண்ணியக் கருத்தை எதிரொலிக்கும் பத்திரிகைகள் அதிகம்; தோன்றலாயின 1970 -ல் ஸ்ரூ என்ற பெண்கள் பத்திரிகை தன் ஏப்ரல் வெளியீட்டில் பெண்ணிய இயக்கத்திற்காக அதிக இடத்தை ஒதுக்கியது. அஃது மேலும் தங்களின் கொள்கைகளை முன்னேற்றிக் கொண்டு, பத்திரிகைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தையும் விளக்கியது.

இதே ஆண்டு, லண்டனில் ‘தொடர்பு சாதனப் பெண்கள் குழு’ ஒன்று பெண்ணியக்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது. அக்குழுவினர் எழுபதுகளின் தொடக்கத்தில் மக்கள் தொடர்பு சாதனங்களில் காணப்பட்ட பால் பேதம் பற்றித் தொடர்ந்து எடுத்துரைத்து, அதை ஓரளவு நீக்கி வெற்றி கண்டனர்.

பர்மிங்ஹாம் போஸ்ட் தி டைம்ஸ் தி கார்டியன், போன்ற பத்திரிகைகள் மகளிர் பக்கத்தில் சமையல் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், பெண்களைத் தாக்கி எழுதும் கட்டுரைகள் போன்றவற்றை வெளியிட்டன. இவ்வாறான பெண்களை அடிமைப்படுத்தும், தாக்கி எழுதும் போக்கை, பெண்ணிய அமைப்புகள் எதிர்த்துத் தடை செய்தன. 1975 -ல் தேசிய பத்திரிகையாளர் சங்கம் பெண்களின் கருத்துப்படிவம் என்ற நூலை வெளியிட்டது. அந்நூலைப் பெண்ணிய இயக்கங்கள் பெரிய அளவில் வரவேற்கவில்லை.

முன்பு கூறிய ஸ்ரூ என்ற பெண்கள் பத்திரிகை இங்கிலாந்தில் அதிகமாக விற்பனையாகி சாதனை படைத்தது. 74-ல் ஒரே வருடத்தில் பலமுறை 500 படிகளுக்கும் மேலாக விற்பனையாகியது. என்றாலும் ஆசிரியர் குழுவின் செயற்பாடுகள் அரசியலில் சில தொல்லைகளை ஏற்படுத்தியதால் அவ்வாண்டின் முடிவிலேயே பத்திரிகை நின்று போனது மீண்டும் 76, 77-ல் வெளி வந்தது.

சமதர்ம பெண்கள் என்ற பத்திரிகை 1970 -ல் தொடங்கப்பட்டது. இது அகில உலக மார்க்சிய கொள்கையைத் தழுவி வெளிவந்தது. உழைப்பாளி வர்க்கத்தையும், தீவிர தொழிற்சங்கம் பிரச்சினைகளையும் ஆராய்ந்த இதுவும் 500 படிகளுக்கு மேலாக விற்பனையாகியது.

1972 -ல் ஸ்பேர் ரிப் என்ற பெண்கள் பத்திரிகை தொடங்கப்பட்டது. இதுவே, இங்கிலாந்தில் அதிக அளவில் விற்னையான பெண்கள் பத்திரிகையாகும். 20,000 பிரதிகள், தொடங்கிய ஆண்டே விற்பனையாது. இப்பத்திரிகையின் முக்கிய நோக்கம் பெண் விடுதலையை முதற் செய்தியாக்குவதாகும். இன்றளவில் 32,000 பிரதிகள் விற்பனையாகின்றன.

1972-ல் பெண்களின் குரல் என்ற பத்திரிகையும் வெளிவந்தது. இது அகில உலகச் சமதர்மவாதிகளின் குரலை ஒலித்தது.

பெண்ணியக்கத்தில் உள்ள கல்வியாளர்களின் ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் பெண்களுக்கான நூலகமும் பெண்கள் பற்றிய ஆராய்ச்சி மையங்களும் 1975-ல் லண்டனில் தொடங்கப்பட்டன. ஃபாஸ்ட் நூலகம் என்பது இதன் பெயர். அங்குப் பெண்ணிய இலக்கியங்களின் தொகுப்பு வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும், எழுபதுகளில் மகளிர் இதழ்கள் அதிகம் தோற்றம் பெற்றன. 1968 -ல் பெண் விடுதலை இயக்கத்தின் குரல் என்ற பத்திரிகையும், 1969 -ல் பெண்கள் என்ற பெண் விடுதலை பற்றிய பத்திரிகையும் தொடங்கப்பட்டு வெளியாயின. அதன் பின் நாடு முழுவதும் புதிய புதிய பெண்ணியப் பத்திரிகைகள் தோன்றின. முதுகுக்குப் பின்னால் நான் ஒரு பெண் இல்லையா நான் ஒரு பெண், குழந்தை அல்ல என்பன போன்ற வித்தியாசமான பெயர்களைத் தாங்கிய பத்திரிகைகள் வெளியாயின.

'மிஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிகை மிகவும் புகழ் பெற்றது. இது, தொடங்கிய சில மாதங்களிலேயே மூன்று லட்சம் பிரதிகள் விற்றுச் சாதனை புரிந்தது. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் இப்பத்திரிகையை விமரிசித்து வெளியாயின. க்ளோரியா ஸ்டைனம் என்ற அம்மையார் இதன் ஆசிரியர் மாதாந்திரப் பத்திரிகையான மிஸ், வியாபார நிலையிலும் பெரும் வெற்றியைக் கண்டது.

1974-ல் வெளியான அமெரிக்கா மகளிரியல் கல்வியாளர்களின், தேடல் என்ற பத்திரிகையும், 1975 -ல் வெளியான அடையாளம் என்ற பத்திரிகையும் பெரும் வெற்றியைக் கண்டன. பெண்ணிய நூல்களை வெளியிடத் தனி வெளியீட்டகங்கள் தோன்றின. எழுபதுகளில் சுமார் 30, தேச அளவிலான பெண்கள் பற்றிய பத்திரிகைகளும், சுமார் 20, கல்வியாளர்கள் பத்திரிகைகளும் பெண்ணியம், பெண்கள் பிரச்சினை மற்றும் பெண் கல்வி இவற்றைப் பேசின. இங்கிலாந்தை விட அமெரிக்காவில்தான் பத்திரிகைகள் மூலம் அதிக அளவு பெண் விடுதலை, பெண்ணியம், பெண்கள் பிரச்சினை போன்றவை பேசப்பட்டன.

எழுபதுகளின் பிற்பகுதியில் பெண்ணிய இயக்கங்களின் பிரச்சாரம் அதிகமானது. அவர்களின் கவனம் ஏழைப் பெண்களின் மீதும், ஒரு பெற்றோரை உடைய குடும்பங்களின் மீதும் திரும்பியது.

வீட்டு வேலை, அதற்கான ஊதியம் பற்றிய பிரச்சினையை முதல் முதலில் 1972 -ல் இத்தாலிய பெண்ணியவாதிகளான மரியரோஸா டெல்லா கோஸ்டா மற்றும் செல்மா ஜேம்ஸ் என்பவர்களின் பெண் அடிமைத்துவமும் அவர்களின் சக்தியும் என்ற பெயரில் ஒரு கட்டுரையாக எழுதி, தேசிய பெண்கள் மாநாட்டில் வாசித்தளித்தனர். இம்மாநாட்டில் இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை இருந்த போதிலும், ஓரளவிற்குப் பெண்ணியவாதிகளும், சமதர்மவாதப் பத்திரிகையாளர்களும் அதை வரவேற்றனர். பின்பு, பெண்கள் விடுதலை இயக்கம் தங்கள் கோரிக்கைகளுள் ஒன்றாக ‘வீட்டு’ வேலைக்கான ஊதியம் என்பதை எடுத்துக் கொண்டனர். இஃது அவர்களால் பல மாநாடுகளில் எடுத்துரைக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. அவர்களின் விடாமுயற்சி காரணமாக மார்ச்சு 1975 -ல் லண்டனில் வீட்டு வேலைக்கான ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டிய, முதல் பொதுமக்கள் பிரச்சாரம் நடந்தது. அத்துடன் பெண்களின் கூட்டு சக்தி, பெண் ஓரினச் சேர்க்கையாளரின் உரிமை, கறுப்பர் இனப்பெண் உரிமை, விலை மாதர் உரிமை பாலியல் வன்முறை எதிர்ப்பு என்பனவற்றைப் பற்றியும் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன.

தொடக்கத்திலிருந்தே, வீட்டு வேலைக்கான ஊதியம் பற்றிய பிரச்சாரம் பொது மக்களிடையே வரவேற்பு பெற்றது. அதற்குக் காரணம் அதனின் புதிய கண்ணோட்டமும், தீவிர நோக்குமாகும். 1981 -ல் தி சன், டெய்லி மெயில், டெய்லி ஸ்டார் போன்ற பத்திரிகைகள், பெண்கள் உலகம், என்ற பத்திரிகை முழுக்க முழுக்க பெண்கள் பற்றிய தகவல் தரும் பத்திரிகை, வெளியிட்ட வீட்டு வேலை ஊதியம் பற்றிய ஆய்வுக் கட்டுரையை ஆராய்ந்து அதனடிப்படையில், ஒரு குடும்பப் பெண்ணின் ஊதியம் ஒருவாரத்திற்கு E180 என நிர்ணயித்தன. இந்தக் காலக்கட்டத்தல் பல நூல்களின் மூலமும் இந்தப் பிரச்சாரம் பிரபலமடைந்தது. பின் ‘அகில உலக’ வீட்டு வேலைக்கான ஊதியம் என்ற ஒரு செய்தித் தொகுப்பு லண்டன் உள்ளிட்ட பல நகரங்களில் nளியானது. இவ்வாறு பதிய பெண்கள் விடுதலை இயக்கத்தின் வீட்டு வேலைக்கான ஊதிய நிர்ணயப் பிரச்சாரங்களும் அறிக்கைகளும் ஒரளவு வெற்றியைத் தந்தன.

அமெரிக்காவிலும், இதற்கு நிகரான போராட்டம் ஒன்று நடந்தது. சமூகப் பாதுகாப்பும், வீட்டு வேலைக்கான சம்பளமும் என்று பெயர்பெற்ற அப்போராட்டமும் வெற்றி கண்டது.

1977 -ல் லண்டனைச் சார்ந்த ஒரு குழு ‘ஏன் நீ மனைவியாக இருக்க வேண்டும்? என்ற புதுமைப் போராட்டம் ஒன்றை நடத்தி திருமணமான பெண்களின் கவனத்தைக் கவர்ந்தது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

லண்டன் கருக்கலைப்புச் செயற்பாட்டுக்குழுவைச் சேர்ந்தவர்கள் தேசிய பெண்கள் கருக்கலைப்பு மற்றும் கருத்தடை போராட்டம் ஒன்றை நடத்தினர். இப்போராட்டத்தின் அடிப்படைத் தத்துவம் ‘பெண் தனக்கு வேண்டியதைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல்’ என்பதாகும்.

1975 -ல் தேசிய கருக்கலைப்பு போராட்டக்குழு தன் தீவிரச் செயற்பாடுகளைத் தொடங்கியது. இக்குழுவினர் 1967 ஆம் வருடத்திய ‘வெள்ளை அறிக்கை’ என்ற சொல்லக்கூடிய சட்ட மசோதாவை 1976 -ல் செயலிழக்கச் செய்தனர். சுமார் 7 வருடங்கள் தொடர்ந்து போராடி, கருக்கலைப்புக்கு எதிரான கொள்கைகளைச் சட்டமன்ற அளவில் முறியடித்தனர்.

அமெரிக்காவில் நடந்த கருக்கலைப்பு பிரச்சாரங்களில், அங்குள்ள 52 மாநிலங்களும், கருக்கலைப்புப்பற்றித் தங்கள் தங்களுக்கென சட்ட திட்டங்களைத் தனித்தனியாக நிர்ணயித்துக் கொண்டன. 1972 -ல் ‘மிஸ்’ என்ற பத்திரிகையில் 52 முக்கிய பெண்பிரமுகர்கள் சுதந்திரக் கருக்கலப்பை வற்புறுத்தி ஒரு விண்ணப்பத்தை வெளியிட்டனர். 1973 -ல் தேசிய கருக்கலைப்பு உரிமைசெயற்பாட்டுக் குழு தோற்றுவிக்கப்பட்டத. எழுபதிலேயே ஹவாய் மற்றம் அலாஸ்கா தீவுகளும் மற்றும் 17 மாநிலங்களும் கருக்கலைப்புச் சட்டங்களைத் தளர்த்தி விட்டன என்றாலும், நாடு முழுவதுமான சட்டத்தைக் கொண்டுவர இக்குழு பாடுபட்டது. முடிவாக அவ்வாண்டு இறுதியில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் கருக்கலைப்பைச் சட்ட பூர்வமாக்கியது. தன்விருப்பக் கருக்கலைப்பு மற்றும் கருக்கலைப்புச் சாதனங்களின் முன்னேற்றத்தினால் பெண்கள் பாலியல் ஈடுபாட்டில் அதிக உரிமை பெற்றனர்.

ஜெர்மெய்ன் க்ரீர் மற்றும் எரிகா ஜாங் என்ற பெண்கள் இயற்கைப் புணர்வு முறை என்ற சொல்லப்பட்டு வரும் ஆண்-பெண் பாலுறவு முறை பெண்ணியத்தின் புனிதத் தன்மையைக் கெடுத்துவிடும் என்று ஆய்ந்துரைத்தனர்.

1970 முதல் அநேகமாக எல்லாப் பெண்ணியப் பிரிவுகளும், பாலியலைப் பொறுத்தவரை, ஆண், பெண் இருபாலாரும் அவர்கள் விருப்பப்படி வாழ்க்கையை அனுபவித்து தங்களின் பாலியல் உணர்வைப் பயமோ,பொறாமையோ, வேறுபாடோ இன்றி வெளிப்படுத்தலாம் என்று கருதினர். ஆனாலும், பெண் ஓரினச் சேர்க்கைக்கு எல்லாப் பெண்ணியக் குழுக்களின் முழு ஆதரவும் கிட்டவில்லை.

1970 -ல் அமெரிக்கப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் தங்களுக்கென சில கொள்கைகளை உடைய அமைப்புகளைத் தொடங்கினர். ஆனி கெய்ட்டின் 'புணர்ச்சிப் பரவச புனைகதை' என்ற கட்டுரை மக்களிடையே பரவலாகப் பரப்பபட்டது. அது அவர்களிடையே மிகப் பெரிய விவாதத்தையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது. அதே வருடத்தில் நியுயார்க் தீவிரவாதப் பெண் ஓரினச் சேர்கையாளர்கள் பரப்பில் 'பெண் பெண்ணை அடையாளம் கண்டு கொள்ளல்' என்ற துண்டுப் பிரசுரமும் விவாதத்திற்குரியதாக அமைந்தது. மேலும் 1970 -ல் கேட் மில்லட்டின், பாலியல் அரசியல் என்ற நூல் வெளியாகி ஆணின் பாலியல் மேலாதிக்கத்தை எடுத்துரைத்தது. அவ்வருடம் டிசம்பரில் நியுயார்க்கில் கருக்கலைப்பு மற்றும் குழந்தைப் பராமரிப்பு இவற்றை மைய பொருளாக்கி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் பெண்கள் கூட்டம் ஒன்று தங்களை ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பதை இனம் காட்டிக் கொள்ள (செஞ்சாயலுடைய) இளநீலநிற கைப்பட்டையை அணிந்து சென்றனர். மேலும் அவர்கள் பெண்ணைப் பெண் நேசிப்பது என்ற கருத்தில் எந்த மாசும் வராத வரையில் தங்கள் அனைவரையும் பெண் ஒரினச் சேர்க்கையாளர்கள் என்று கூறிக் கொள்வதில் தவறில்லை என்றும், சகோதரித்துவம் சக்தி வாய்ந்தது என்றம் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். இந்த ஊர்வலத்தைப் பத்திரிகையாளர்கள் அதிகமாகப் பிரபலப்படுத்தினர். அதன் விளைவாகப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் உலகளவில் உணரப்பட்டனர். 'மேற' அமைப்பாளர்கள் இது குறித்து மிகுந்த கவலையடைந்தனர். பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் இந் நடவடிக்கை மூலம் தங்களை நேர்மை உடையவர்களாகவும் உறுதி உடையவர்களாகவும் உலகினருக்கு உணர்த்தினர்.

1971 -ல் கவலையில்லா விடுதலை முன்னனி என்ற அமைப்பு தங்கள் கொள்கை விளக்க அறிவிப்பைப் பிரிட்டனில் வெளியிட்டது. 1973 -ல் இவ்வணி பலமாக வேரூன்றத் தொடங்கியது. 'ஸ்ரூ' பத்திரிக்கையில் இவ்வணியினர் 'பாலியல் அரசியல்' பற்றிய கட்டுரைகளை வெளியீட்டு தங்களது கொள்கைகளை நிலைநாட்டிக் கொண்டனர்.

1974 -ல் எடின்பர்க்கில் தேசிய பெண் ஓரினச் சேர்க்கையாளர்களின் மாநாடு நடந்தது. இதில் 300 பெண்கள் கலந்து கொண்டனர். அவ்வருட முடிவில் பெண் விடுதலை இயக்கம் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களைத் தனித்து இனம் காட்டுதல் கூடாது என்றும், பாலியலில் சுய விருப்பு வெறுப்பு மதிக்கப்பட வேண்டும் என்றும தம் கொள்கையை வெளியிட்டது. 75, 76 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களின் மாநாடு நடத்தப்பட்டது. 1976 -ல் பிரிஸ்டலில் நடந்த மாநாட்டில் பங்கெற்பாளர்கள் பலர் ஆண்களால் தாக்கப்பட்டனர்.

1975 ஆம் வருடத்தில் சம ஊதியச் சட்டம் பாலியல் பாகுபாட்டுத் தடைச் சட்டம் என்பன பெண்ணிய இயக்கங்களின் முயற்சியால் செயல்பாட்டுக்கு வந்தன. சம ஊதியச் சட்டத்தல் பல ஓட்டைகள் இருந்ததால் பெண்ணியவாதிகள் இச்சட்டத்தைத் தாக்கினர். அதை ஈடுகட்டும் வகையில் ‘பாலியல் பாகுபாட்டுத் தடைச் சட்டம்’ அமைந்தது. இங்கிலாந்தில் தொழில் கட்சியில் பெண்களுக்குச் சமத்துவம் அளித்தல் என்ற கொள்கை பெரும் வெற்றி கண்டது.

1975 ஆம் ஆண்டை ஐக்கிய அமெரிக்கா அரசு பெண்கள் ஆண்டாக அறிவித்தது. அடுத்து வரும் பத்து ஆண்டுகளையும் பெண்கள் பத்தாண்டுகள் எனப் பிரகடனப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து மெக்சிகோ நகரில் நடந்த உலக மாநாட்டில் 5000 க்கும் மேற்பட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் தீவிரவாதப் பெண்ணியவாதிகளும், பெண் ஓரினச் சேர்;க்கையாளர்களும் சமதர்ம பெண்ணியவாதிகளும தாங்கள் ஒதுக்கப்பட்டதாகப் பயன்நதனர். பெர்லினில் நடந்த அகில உலகப் பெண்கள் மாநாட்டிலும் மேற்கூறியவர்கள் இதே உணர்வை அடைந்தனர். அதே சமயத்தில தாராளப் பெண்ணியவாதிகள், ஓரினச் சேர்க்கையாளர்களும சமதர்மபெண்ணியவாதிகளும் அமெரிக்கப் பாரம்பரியத்தைப் பாதிப்புக்கு உள்ளாக்குகிறார்கள் என்று பயந்தனர்.

இதற்கிடையில் 1975 -ல் பிலடெல்பியாவில் நடந்த ‘Now’ இன் மாநாட்டில், அதற்குள்ளேயே இருந்த ஒரு தீவிரவாதக்குழு ‘ழேற’ இன் தலைவர்களைக் குற்றம் சாட்டியது. இதனால் இம்மாநாட்டில் குழப்பம் ஏற்பட்டு மாநாடு தோல்வியைத் தழுவியது. இதையொட்டி, பெட்டி ஃப்ரைடன் ‘Now’ இன் தீவிரச் செயல்பாட்டிலிருந்து விலகிக்கொண்டார். அந்த அமைப்புக்கு அப்பொழுது மனம் திறந்த கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில் ‘Now’ கொள்கைகளும், செயற்பாடுகளும் திசை திருப்பப்படுவதாகவும் விரைவில் இவ்வமைப்பிற்கு ஏற்படும் அபாயநிலை பற்றியும் பின் விளைவுகளைப் பற்றியும் எச்சரித்திருந்தனார்.

ஆக, எழுபத்தைந்து முடிவில் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பெண்ணிய இயக்கங்கள் ஒன்றை ஒன்று குற்றம் சாட்டிக் கொண்டு, திசை தெரியாமல் நின்றன.

**1975 க்குப் பின் பெண்ணியம்**

1975 க்குப் பின் வந்த ஆண்டுகளில் பெண்ணிய இயக்கங்களின் நடவடிக்கைகளை ஆராயும் போது, இக்காலக்கட்டத்தில் பெண்ணியத்திற்குள் மிகப் பல பிரிவுகள் இருந்தன என்பது அறியப்படுகிறது. அப்பிரிவுகள், தங்களுக்கென்று தெளிவான கொள்கைகளைக் கொண்டிருக்கவில்லை. ஒரு சாரார், இன்னொரு சாராரோடு முழுவதுமாக ஒத்துப் போகாமல் ஒரு பாதி ஒத்துப் போகும் நிலை காணப்பட்டது. தொடக்கத்தில், சமதர்ம

பெண்ணியவாதிகளுக்கும் தலைமை வேண்டாப் பெண்ணியவாதிகளுக்கும் இடையில் நேரடியான பிரிவினை இருந்தது. சமதர்மவாதிகள் அரசியல் அமைப்புகளில் ஆர்வம் காட்டினர். தலைமை வேண்டாப் பெண்ணியவாதிகள் அமைப்புகளை அடியோடு வெறுத்தனர். 1976 -ல் இருபால் சேர்க்கையை ஆதரிக்கும் சமதர்மவாதிகளுக்கும், பெண் ஓரினச் சேர்க்கையை ஆதரிக்கும் தீவிரப் பெண்ணியவாதிகளுக்கும் இடையே ஒரு பிளவு காணப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் எல்லாப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களும் இருபால் சேர்க்கையை எதிர்த்து விடவில்லை. அதுபோல், எல்லாச் சமதர்மவாதிகளும் பெண் ஓரினச்சேர்க்கையை ஒதக்கவில்லை. அதாவது அவரவர் தம் பாலியல் அடிப்படை நோக்கை வைத்து அவர்களை இனம் பிரித்துப் பார்க்க இயலவில்லை. 1975 -ல் சிவப்பு காலுறையாளர்கள் 'பெண்ணிய புரட்சி' என்ற கட்டுரைத் தொகுப்பை வெளியிட்டனர். இக்கட்டுரை, தாராளப் பெண்ணியம் தாங்கள் குறித்த இலக்கை அடைந்துவிட்டது என்றும், தற்போது பெண்ணிய வரலாற்றில் தீவிரப் பெண்ணியவாதமே குறிப்பிடத் தக்க சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது என்றம், முழு பெண்ணிய இயக்கமும் புரட்சியை நோக்கித் திசை திருப்பப்பட்டுள்ளது என்ற கூறுகின்றது.

1975 -ல் பெண்ணிய இயக்கத்தில் தீவிரவாதிகளின் கை ஓங்கியது. குறிப்பாக, அமெரிக்காவில் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் செல்வாக்குப் பெற்றனர். இவர்கள், 'பிரிவினையியம் என்ற கொள்கையை வளர்த்தனர். இதன் வழி ஆ;ணகளிடமிருந்து விடுதலை வேண்டும் என்ற கருத்தாக்கத்தைப் பரப்பினர்.

பிரிவினை வாதத்தோடு தொடர்புடைய கொள்கைகளைக் கொண்ட 'புரட்சிப் பெண்ணியம்' என்ற ஒன்று 1977-ல் தொடங்கப்பட்டது. இது, ஆணை எதிரியாகக் கருதி, அவர்களிடமிருந்து முற்றிலுமாக நீங்கி வாழ்வது என்பதைக் கொள்கையாகக் கொண்டு அதற்கு வித்திடும் திருமண முறையை ஒதுக்கியது.

தீவிரவாதிகள், தாங்கள் வலிமையாகக் கால்ஊன்றி நின்ற பின் தாராளவாதிகளைக் குறைக் கூறத் தொடங்கினர். பிரபலம் வாய்ந்த தாராளவாதிகளின் பெயரை ஒடுக்குவது தீவிரவாதிகளின் நோக்காக இருந்தது. 'மிஸ்' பத்திரிகையின் ஆசிரியர் க்ளோரியா ஸ்டைனும், பெட்டி ஃபிரைடனும் சக்தி வாய்ந்த தாராளப் பெண்ணியவாதியாவார்கள். தீவிரவாதிகளின் குறிக்கோள், குறிப்பாக இவர்களைக் குறை கூறுவதாகும்.

1975-ல் சிவப்புக் காலுறையாளர்கள், க்ளோரியா ஸ்டைன், மத்திய உளவுத் துறையுடன் கொண்டிருந்த தொடர்பை வன்மையாகக் கண்டித்தனர். ஸ்டைன், தான் சார்ந்துள்ள

பெண்ணிய இயக்கத்தின் மூலமாக அதற்குப் பதிலுரைத்தார். அவருக்குப் பிரபல பெண்ணியவாதிகளின் ஆதரவும் கிடைத்தது.

1977 -ல் தேசிய மாநாடு லண்டனில் நடந்தது. அதில் பங்கேற்ற அநேக பெண்கள் பெண்ணிய இயக்கம் ஆணின் வன்முறையை வன்மையாகக் கண்டித்துக் குரல் எழுப்ப வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தனர்.

1978 -ல் பிர்மிங்காம் தேசிய மாநாட்டிலும் இதே கோரிக்கை வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் புரட்சிப் பெண்ணியக் கழு ஒன்று பெண் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு ஏழு கோரிக்கைகளை வைத்தது. அதில் ஏழாவது கோரிக்கையானது, பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறையானது ஆண் மேலாதிக்கத்தையும், பெண்ணை அடக்கி ஆளும் நிலையையும் உணர்த்துகிறது. எனவே நாங்கள் வேண்டுவது, 'அச்சுறுத்துவதிலிருந்தும் வன்முறையிலிருந்தும் பாலியல் வன்கண்மையிலிருந்தும் விடுபட வேண்டும்' என்பதாகும்.

இந்தப் புதிய கோரிக்கையானது, சம ஊதியம், சமவாய்ப்பு, கருக்கலைப்பு, பண உதவி மற்றும் சட்ட உதவி போன்ற கோரிக்கைகளுக்குச் சமமாக வைக்கப்பட்டது. இதற்குப் பல எதிர்ப்புக் குரல்கள் எழும்பின. இதைத் தொடர்ந்து எழுந்த விவாதங்களில் தீவிரவாதிகள் ஆண்கள் தங்க்ள எதிரிகள் என்றும், சமதர்மவாதிகள், ஆணாதிக்க அமைப்புத் தங்களுக்கு எதிரானது என்றும், கருத்துரைத்தனர். இறுதியில் புதிய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எழுபதுகளின் மத்தியில் தொடங்கிப் பெண்ணியக் குழுக்கள் வன்முறை, பாலியல் வன்முறை, ஆபாச இலக்கியம் இவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடலாயின. 1976-ல் லண்டனில், பாலியல் வன்முறை எதிர்ப்பு மையம் ஒன்று பெண்ணியக்கத்தில் தொடங்கப்பட்டது. அதைப் பின்பற்றிப் பிரிட்டனில் உள்ள மிகப்பெரிய நகரங்களிலும் இவ்வமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இஃது பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவு தந்து வழிகாட்டும் உன்னத் தொண்டாற்றியது.

அமெரிக்காவிலும் பாலியல் வன்முறைக்கு எதிரான பிரச்சாரங்களில் சில பெண்ணியக் குழுக்கள் ஈடுபட்டன. 1977 -ல் இராணுவ வீரன் ஒருவன் 17 வயது பெண்ணைப் பலாத்காரம் செய்ததை, இக்குழுக்கள் எதிர்த்துக் குரல் கொடுத்தன. 1977, 78 இல் பிரிட்டனில் சில குழுக்கள் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் ஆபாசத் திரைப்படம் மற்றும் இலக்கியம் இவற்றிற்கு எதிராகவும் இரவு நேர ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தினர். இதைச் 'சீர்படுத்தும் இரவு' என்று பெயரிட்டு அழைத்தனர். இஃது லீட்ஸ், மான்செஸ்டர், பிரிண்டல்யார்க் போன்ற இடங்களில் நடத்தப்பட்து. சோஹோ என்ற இடத்தல்

திரைப்படத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்ட போது காவல் துறையினர் அதை முறியடிக்க தடிஅடி நடத்தினர். அப்பொழுது 16 பெண்கள் கைது செ;யயப்பட்டனர். இதைப் பெண்ணியவாதிகள் 'சோஹோ பதினாறு' என்று குறித்தனர்.

ஆபாச இலக்கியம் மற்றும் திரைப்படத்தை எதிர்த்து அமெரிக்கப் பெண்ணியக் குழுக்களும் பல போராட்டங்கள் நடத்தின. ஆபாசத்திற்கு எதிரான பெண்கள் குழு ஒன்றும், பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்க்கும் பெண்கள் குழு ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது.

1979 -ல் 'வயர்ஸ்' செய்தி மடலில் லீட்ஸ் புரட்சிப் பெண்ணிய வாதிகளின் 'அரசியல் பெண் ஓரினச் சேர்க்கையியம், இருபால் சேர்க்கையை எதிர்த்த வாதம்' என்ற கட்டுரை வெளியானது. இதில் எல்லாப் பெண்ணியவாதிகளும் அரசியல் ஓரினச் சேர்க்கையாளராக இருக்க வேண்டும் என்ற கருத்துக கூறப்பட்டுள்ளது. அதாவது. பெண்ணியாவதிகள் என்பவர்கள். கட்டாயமாக ஆண்களோடு உறவு வைத்துக் கொள்ளக்கூடாது. ஆனால் கட்டாயமாகப் பெண்களோடு உறவு அல்லது புணர்வு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை என்று விளக்கியுள்ளது. மேலும், இக்கட்டுரை, பெண்கள் ஆண்வழிச் சமூக அமைப்புக்கு எதிராகப் போராடி வெற்றி பெற வேண்டுமானால், பாலியல் நெறியில் ஆண்களோடு உறவு வைத்துக் கொள்ளாமை ஒன்றே வழிமுறையாகும் என்கின்றது. மேலும், சில கட்டுரைகள் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மிகச் சிறிய குழுக்களாக இயங்கினாலும் அக்குழுக்கள் பெண்ணியக்கத்திற்கு ஒரு முன்னணிப் படையாகத் திகழ்கின்றன என்று கருத்துரைக்கின்றன. அரசியல் பெண் ஓரினச்சேர்க்கையாளர்கள் எல்லாப் பெண்களும் ஆண்களோடு கொள்ளும் பாலியல் உறவை விலக்கிக் கொண்டார்களேயானால் புரட்சிகரமான மாற்றம் ஏற்படும் என்கின்றனர். அத்துடன் பெண்ணியம் என்பது கோட்பாடு, பெண் ஓரினச் சேர்க்கை என்பது செயல்முறை என்றும் பெண்ணியம் என்பது ஒரு முறையிடு, அதற்குத் தீர்வு பெண் ஓரினச் சேர்க்கை என்றும் வெளிப்படையாகப் பிரகடனம் செய்தனர். தீவிரவாதப் பெண்ணியவாதிகள் ஒரு பெண்ணின் பெண்ணியக் கொள்கை அவருடைய பாலியலால் உறுதிப்பட வேண்டும் என்றம், அதன் மூலம்தான் அப்பெண் தன்னை ஒரு அடிப்படையில் ஆதாரமிக்க பெண்ணியவாதியாக இனம் காட்டிக் கொள்ள முடியும் என்றம் உறுதியாக கருத்துரைக்கின்றனர். இவ்வாறு தீவிவாதப் பெண்ணியவாதிகளும், அவர்களைச் சார்ந்தவர்களும் 'பாலியல் அரசியலை' அடிப்படைப் பெண்ணிய நோக்காகப் பிரகடனப்படுத்த, தாராளவாதிகள் அப்போக்கிலிருந்து அடியோடு விலகி நின்றனர். அதாவது பிரிவினை வாதிகள் அல்லாதவர்கள் அல்லது ஆணை இனங்கானும் பெண்ணிய வாதிகள்

அல்லது இருபால் சேர்க்கையாளர்கள் என்று கருதப்படும் தாராளவாதிகள் தங்களின் பெண்ணியக் கொள்கையைப் பாலியலின் மூலம் இனங்காட்டிக் கொள்ளவில்லை.

எழுபதுகளின் இறுதியில் சமதர்ம பெண்ணியம் வீழ்ச்சியை நோக்கி அடியெடுத்து வைக்கத் தொடங்கியது. அதில் ஆண் மேலாதிக்க இடதுசாரிகள் லைதூக்கத் தொடங்கினர். குறிப்பாக, தேசிய கருக்கலைப்புப் பிரச்சாரம் என்ற அமைப்பில் பெண்கள், ஆண்களோடு சேர்ந்து பணியாற்றுவதில் மிக இடர்ப்பாடுகள் அனுபவித்தனர். 1977 -ல் பாரிஸிலும் ஆம்ஸ்டர்டாமிலும் நடந்த மாநாடுகள் சமதர்ம பெண்ணியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்ந்தன.

எழுபதுகளில், பெண்ணியக் கொள்கைகளையும், கருத்துக்களையும் எழுதிய அட்ரைன் ரிச், மேர்லின் ப்ரென்சு, கேட்மில்லட், நான்ஸி ப்ரைட், ரீட்டாமே ப்ரௌன் போன்ற பெண்மணிகள் பிரபலமடைந்தனர். இவர்கள் வெளியீடுகள் வணிக நிலையிலும் பெரும் வெற்றி கண்டன.

மிக நெடுங்காலமாகக் கலைத்துறையில் பெண்கள் சார்பு நிலையில் இருந்து வந்திருக்கின்றனர். இந்நிலை எழுபதுகளின் பிற்பகுதியில் மாற்றம் பெறத் தொடங்கியது. பாட்டு, அரங்கு, ஓவியம், சிற்பம், புகைப்படக்கலை, திரைப்படம், அச்சுக்கலை, இலக்கியப் படைப்புகள் இவற்றில் பெண்கள் தங்களின் திறமைகளை வெளிக்காட்டி, புதிய போக்கையும் நோக்கையும் வேறுப்படுத்திக் காட்டினர். இதற்குப் பெண்ணிய இயக்கங்கள் போதிய அளவு துணை நின்றன.

பெண்ணியவாதிகள் கல்வித்துறையிலும் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தனிர். 'மசளிரியல் கல்வி' என்ற புதிய துறையைத் தோற்றுவித்த வளர்த்தனர். இதன் மூலம் பெண்கள் பற்றிய ஆய்வுகள் வளர்ச்சி பெற்றன. எழுபதுகளில் 'அனைத்துலக மகளிர் தகவல் தொடர்பு சேவை' மற்றும் அனைத்துலகப் பெண்ணிய கூட்டமைப்பு என்பவை தோற்ம் பெற்றன. இவை, உலகெங்கிலும் உள்ள மகளிரிடையே தகவல் தொடர்பை ஏற்படுத்தின.

**எண்பதுகளில் பெண்ணியம்**

எழுபதுகளின் கடைசியில் (அமெரிக்கா மற்றும் பிரிட்டனில்) பெண்ணிய இயக்கத்தில தோன்றிய பல குழுக்கள், அவ்வியக்கத்தின் அடித்தளத்தைப் பாதித்தன. பாலியல் அரசியலுக்கும் பொரளாதார தேவைக்கும் இடையே சமநிலை இல்லாமல் மிகவும் சக்திவாய்ந்ததாகவும் கவர்ந்திழுப்பதாகவும் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதே சமயத்தில், எண்பதுகளின் பெண்ணியம் உலகளவிலான இயக்கமாக உருப்பெற்று, மக்களின் அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாகிவிட்டது. அரசு, அரசியல், வணிகச் சங்கங்கள், கல்வி நிலையங்கள், தொடர்பு சாதனங்கள் என்ற பலதர அமைப்புகளிலும் பெண்களின் எழுச்சி அதிகரித்தது. மகளிர் நலவாழ்வு மையங்கள், பெண் எழுத்தாளர்கள் அமைப்பு, வேலை பார்க்கும் மகளிர் சங்கங்கள், மகளிர் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் புத்தக வெளியீட்டாளர் சங்கங்கள், சமதர்ம பெண்கள் சங்கம், தேசிய கருக்கலைப்பு பிரச்சாரக்குழு, பாலியல் வன்முறை எதிர்ப்புக் குழு, மகளிர் பாதுகாப்பு மையங்கள் என்ற உலகெங்கிலும் பெண்களுக்கான பலவித அமைப்புகள் தோற்றம் பெற்றன.

1981 -ல் அனைத்துலகப் பெண்ணியக் கூட்டம் ஒன்று இஸ்ரேலில் ஹபியா என்ற இடத்தில் நடந்தது. இதில், ஐரோப்பா, இந்தியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், ஜப்பான், லத்;தீன் அமெரிக்கா, வடஅமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பெண்ணியக் கல்வியாளர்களும், செயற் பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் குடும்பம், குழந்தைப் பிறப்பு, குழந்தை நலம், பொருளாதார விடுதலை இவற்றைப் பற்றிய விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

1981 -ல் ‘இருபால் சேர்க்கைப் பெண்ணிய வாதத்திற்கும் அரசியல் பெண் ஓரினச் சேர்க்கையியத்திற்கும் இடையேயான வாதப் பிரதிவாதங்கள் என்ற துண்டுப் பிரசுரம் வெளியானது. இதில், இருபால் சேர்க்கைப் பெண்ணியம் ஆணின் மேலாதிக்கத்தை ஆதரிப்பது என்றும், இருபால் சேர்க்கைப் பெண்ணியவாதிகள் பகைவருடன் உறவு வைத்துக் கொண்டவர்கள் என்றம் கூறப்பட்டுள்ளது. அட்ரைன் ரிச் என்பவர் ‘கட்டாய இருபால் சேர்க்கையும் பெண் ஓரினச்சேர்க்கை முறையும் என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டார். இந்நூல் இருபால் சேர்க்கையைப் பெண்ணிய நோக்கில் பகுத்தாய்ந்துள்ளது.

1981 -ல் பெட்டி ஃப்ரைடன் ‘இரண்டாவது கட்டம்’ என்ற நூலை எழுதி வெளியிட்டார். இந்நூலில் தாய்மைப்பேறு என்பது ஒரு குறிப்பிட்ட நபரின் உரிமைப் பிரச்சினையாகும் என்று விமர்சித்துள்ளார். அதாவது ஆண்களின் மூலம் குழந்தை பெறுவது தவறு என்ற கருத்தை அவர் ஆதரிக்கவில்லை. மேலும், அவர் தீவிரப் பெண்ணியவாதிகளைப் பெண்களின் எதிரியாகக் கருதினார். அத்துடன் மட்டுமன்றி, ‘நம் இயக்கம் ஆபத்தில் இருக்கிறது. எதிர் சக்திகள் நம்மை ஒடுக்கப் பார்க்கின்றன’ என்று எச்சரிக்கையும் விடுத்தார். இதனால், பெட்டி ஃப்ரைடன் பலரால் பலவிதமாக விமர்சிக்கப்பட்டார். ஃப்ரைடனின் இம்மாற்றத்தை வைத்து சில்லா எய்சன்ஸ்டீன் என்பவர், அவரைத் ‘தற்காலத்திய பாரம்பரிய பெண்ணியவாதி’ என்றும் மறுபார்வை கொண்ட தாராளப் பெண்ணியவாதி என்றும் மதிப்பிட்டுள்ளார்.

பெண்ணியம் என்ற இயக்கத்தின் செயல்பாடுகளை மதிப்பீட்டுப் பார்க்கும் போது, அஃது உலக அளவில் ஒரு மறுமலர்ச்சிக்கு வித்திட்டதை அறிய முடிகிறத. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் பெண்ணியம் பல வளர்ச்சியை எற்படுத்தியுள்ளது. மரபு வழிப்போக்கை மாற்றியது. அமெரிக்காவில் தாராளப் பெண்ணியம் ஏற்படுத்தியுள்ள அமைப்புகள் சுமார் 3 லட்சம் நடுத்தர வர்க்கப் பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறது. பெண்ணிய இயக்கங்கள், மக்கள் தொடர்பு சாதனங்கள், கல்வித்துறை, வணிகச் சங்கம் இவற்றில் பெருமளவு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அரசியலில் பெண்களுக்குப் பல அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தந்துள்ள. மேலும் இவ்வியக்கம் பெண்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மரபுவழி வந்த பழம் பண்பாட்டைக் கொண்ட பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி, ஸ்பெயின், பெல்ஜியம், கிரீஸ் போன்ற நாடுகளில் பெண்ணியம் மிகப் பெரிய சவாலை எதிர்த்து வேரூன்றி, குறிப்பிடத்தக்க வெற்றியும் பெற்றுள்ளது. கத்தோலிக்க நாடான இத்தாலியில் கூட இவ்வியக்கம் விவாகரத்து உரிமை, கருக்கலைப்பு உரிமை என்பவற்றைப் பெற்றுத் தர முடிந்தது ஒரு சாதனையாகும்.

பெண்ணியவாதிகள் அவரவர் நோக்குப்படி மாறுபட்ட கருத்துக்களைக் கொடுத்துக் கொண்டு வருவதால் மக்களின் மனத்தில் தாங்கள் ஒரே அமைப்பைச் சோந்;தவர்கள் என்ற நம்பிக்கையை உண்டாக்கவில்லை. மேலும், பல்வேறு குழுக்களாகப் பிரிந்துவிடட இயக்கமாக, தெளிவான ஆணித்தரமான கொள்கைகளைத் தராத இயக்கமாக, பெண்ணிய இயக்கம் இன்ற மக்களால் உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில் உலக அரங்கில் பெண்ணிய இயக்கத்தின் முன் மூன்று கேள்விகள் வைக்கப்படுகின்றன.

1. நாளைய உலகில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துமா?

2. சமூகச் சீர்த்திருத்தத்தை இலக்காகக் கொள்ளுமா?

3. ஆண் வேறு, பெண் வேறு என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளுமா?

ஆண், பெண் சமம் என்ற கொள்கையை மேற்கொள்ளுமா? இவற்றுள் எதைத் தன் பாதையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும், நெருக்கடி சமயத்திலும், இடர்பாடுகளை எதிர்கொள்ளும் போதும், உலக அளவில் பெண்ணிய இயக்கங்கள் ஒன்றிணைந்து ஒருமைப்பாட்டுடன் கருத்து வேறுபாடுகளின்றித் தீவிரமாகச் செயல்பட்டால்தான் தொடர்ந்து வெற்றிப் பாதையில் செல்ல இயலும்.

வினாக்கள்

1. பெண்ணியம் –சொற்பொருள் விளக்கம் தருக.

2. மேலை நாட்டுப் பெண்ணியத்தின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரை வரைக.

3. 1970-1975 ஆம் ஆண்டுகளில் பெண்ணிய வளர்ச்சி பற்றி எழுதுக.

4. 1975ஆம் ஆண்டுக்குப் பின் பெண்ணியம் குறித்து எழுதுக.

5. எண்பதுகளில்  பெண்ணியம்  குறித்து வரையறுக்க.

# அலகு 5

## பெண்ணிய வகைகள்

பெண்ணியம் என்பது ஒரே கொள்கை உடைய இயக்கமல்ல, இதில் இணைத்துள்ள பெண்களின் வாழ்க்கைச் சூழலுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப இவ்வியக்கத்தில் பலவிதமான கருத்துக்கள் கால்கொண்டு எழுச்சி பெற்றுள்ளன. அவற்றில் தாராளப் பெண்ணியம் சமதர்ம பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம் என்பன, வெகு முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாக்கங்களாகும்.

இப்பெண்ணியவாதங்கள் பெண் விடுதலை, பெண் உரிமை என்பவற்றை மைய இலக்காக் கொண்டிருந்தாலும் தங்களுடைய சில கொள்கைகளிலும், செயற்பாட்டிலும் வேறுபட்டிருந்தன. அதற்கேற்ப அவர்களிடையே மிதவாதப் போக்கும், தீவிரவாதப் போக்கும் எழுச்சிப் பெற்றன.

பெண்ணடிமைத் தனத்தை நீக்கவும் பெண்களுக்கு உரிமை பெற்றுத் தரவும் தோற்றம் பெற்ற பெண்ணியவாதம், காலப் போக்கில் எழுந்த கொள்கை வேறுபாட்டால் ஆணாதீக்க எதிர்ப்பு பிரச்சாரமாகத் திசை திரும்பி, பின் ஆண் சமூகத்தை ஒதுக்கும் போக்காக வளர்ந்தது. அதற்கான சூழலையும் காரணங்களையும் மூன்றுவிதக் கொள்கைகளை ஆராய்வதால் தெளிவுபடும்.

**1. தாராளப் பெண்ணியம் (Liberal Feminism)**

தாராளப் பெண்ணியத்தின் தொடக்க காலம் 178-ம் நூற்றாண்டு. அக்காலக்கட்டத்தில் ஏற்பட்ட தத்துவப் புரட்சி மூலமே முதன் முதலாகத் தாராளப் பெண்ணியத்தின் கொள்கைகள் வேர்விட ஆரம்பித்தன. மேற்கத்திய நாடுகளில் அரசியல் கலாச்சாரத்தில் பகுத்தறிவு வாதம் இடம் பெறத் தொடங்கியது. இதனால் ஆட்சி ஆதிக்கக் கொள்கையை எதிர்த்தல், குடியாட்சி, பேச்சுரிமை என்ற இலையெல்லாம் பெருமளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இக்காலக்கட்டத்தில் அதே பகுத்தறிவு எழுச்சியினால் விடுதலை உணர்விற்கும், பெண்களின் அடிமை நிலைக்கும் ஒரு நல்லுறவு தோன்றித் தாராளப் பெண்ணிய இயக்கத்திற்கு வித்திட்டது.

இவ்வியக்கம் தனி ஒருவரின் விடுதலை, மன மகிழ்ச்சி இவை அரசாங்கத்தாலும் சமூகத்தாலும் பாதுகாக்கப்பட்ட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையோடு தொடங்கப்பட்டது.

18-ஆம் நூற்றாண்டில் தத்துவவாதிகள் மற்றும் எழுத்தாளர்கள் அண்களாகவே இருந்தனர். அவர்கள் விடுதலை பற்றிய பேசிய போதும் அவர்களின் வாதங்கள் யாவும்

ஆணினத்தின் மேம்மபாடு பற்றியும், அவர்களின் விடுதலையைப் பற்றியும் மட்டுமே இருந்தது. பெண்கள் தங்களுக்காகப் படைக்கப்பட்ட, தங்களுக்கென்றே அடிபணிந்து போக வேண்டிய பகுத்தறிவில் வாத பால் வர்க்கம் என்பது அவர்கள் கருத்தாக இருந்தது.

அக்கருத்தை மாற்றியவர் மேரி வோல்ஸ்டோன் கிராப்ட் என்பவராவார். இவர் 1790 களில் அதிகம் படித்த பெண் தத்துவ ஞானியாவார். இவரே பெண் விடுதலை பற்றிப் பேசி ‘தாராளப் பெண்ணியத்தின்’ தோற்றத்திற்கு வித்திட்டார். சமூகத்தில் பெண்களுக்குச் சம உரிமை, எல்லா நிலைகளிலும் அவர்களுக்குச் சம வாய்ப்பகள் கொடுத்தல் என்பதே இவரது வாதமாகும். 1792 -ல் இவர் எழுதிய ‘பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு’ என்ற நூலில் ஆண்கள் தங்களுக்கான உரிமையைச் சரிநிகராகப் பெண்களுக்கு விட்டுக் கொடுத்தும் அவர்களுக்கு ஓர் உயர்வான நிலையைக் கொடுத்தும் வாழ வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இவரின் கருத்துக்கள் படிப்படியாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் அதிகம் பரவித் தாராளவாதத்திற்கு அடிகோலியது. தாராளவாதத்திற்கு மேலும் துணை போனவர்கள் ஜான் ஸ்டூவர்ட் மில் மற்றும் ஹேரியட் டெய்லர் என்பவர்களாவர். 1869 -ல் ஜான் ஸ்டூவர்ட் மில் எழுதிய ‘பெண் அடக்கு முறை’ என்ற நூல் தாராளவாதக் கருத்தை வளர்த்தது. பெண்களின் முன்னேற்றத்தை இந்நூல் விரிவாக ஆராய்ந்துள்ளார். மீல், பெண்கள் தம் கௌரவத்தைக் காத்துக் கொள்ள தாம் விரும்பியபடி பற்பல பணிகளை ஏற்பதும், சொத்தில் பங்கு பெறுவதும், ஓட்டுரிமை பெறும் தகுதியைப் பெறுவதும் மிக இன்றியமையாதது என்று எடுத்துரைக்கின்றார். கல்வி அறிவு ஒன்றுதான் பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்க முடியும் என்றும் திருமண ஒப்பந்தம் மாற்றப்பட வேண்டும் என்றும், பெண்கள் வேலைக்குச் சென்று கொண்டே குடும்பத்தையும் நிர்வகித்து, அதில் ஆணுக்கு நிகரான சமத்துவ இடத்தை நிலைநாட்ட வேண்டும் என்றும் போதித்தார்.

சமூகத்தில் தங்களுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என்பதே தாராளவாதிகளின் கோரிக்கையாகும். தாராளப் பெண்ணியமானது ஏற்கனவே இருக்கும் சமூக அமைப்பை முன்னேற்றி, தேவையான மாறுதல்களைச் செய்த அதன் மூலம் பெண்களுக்குத் தேவையான அளவு விடுதலையும் மதிப்பும், தகுதியும் பெற்றுத் தர முயன்றது.

தாராளப் பெண்ணியம் புரட்சியின்றிப் பொருளாதாரத்திலும், சட்டத்திலும் மாறுதலைக் கொண்டுவர முயன்றது. இஃது அரசியல் மற்றும் பொருளாதாரத துறைகளைப் பெரிய அளவில் தழுவி தனி ஒரு பெண்ணின் பிரச்சினை முதல் அரசியிலில் பெண்களின் பங்கு, உயர்கல்வி, மக்கள் தொடர்பு ஊடகம், சமஊதியம், பாலியலில் சமபங்கு நிலை போன்றவை வரை ஆராய்கிறது.

தற்போதைய காலாச்சாரத்தில் காணப்படும் 'பாலியல் பங்கு' என்பது இன்று புதிதாகத் தோன்றியதல்ல. பண்டைக் காலத்திலேயே உண்டானது. பாலியல் பங்குநிலை என்பது மனிதரால் உருவாக்கப்பட்டது. எனவே, அது மனிதராலேயே அழிக்கப்பட வேண்டும் என்பது தாராளவாதிகளின் கருத்தாகும்.

தனிநபர் ஒருவன் குடும்பம், சமூக அமைப்பு, கல்வி, மக்கள் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றின் மூலமாகப் பயிற்றுவிக்கப்படுகிறான். அவனுக்குள் இவறறின் தாக்கம் அவனறியாமலேயே ஏற்பட்டு விடுகிறது. இப்புறத் தாக்குதல்கள் இளைஞர்களிடம் போட்டி போடும் மனப்பான்மையையும் எதற்கும் உணர்ச்சி வசப்படாமல் இருக்கும் ஒரு தன்மையையும், தன்னை ஆண்மகன் என்ற அடையாளம் காண்பித்துக் கொள்ளும் திறனையும் வளர்க்கிறது. அதே சமயத்தில் பெண்களிடம் எதிலும் கூச்சத்துடன் அடங்கி இருக்கும் தன்மையை வளர்க்கிறது. இப்படி சமூகக்கருவிகளால் உருவாக்கப்படும் ஆண் பெண் என்ற பங்குநிலைகள் பெண்களின் தாழ்வு நிலைக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. இதையே சிமோன் தெபவார். 'ஒருத்தி பெண்ணாகப் பிறப்பதில்லை, பெண்ணாக உருவாக்கப்படுகிறாள்' என அழகாக வர்ணித்துள்ளார். பாலியல் வேறுபாடு இல்லாத சமூகம் உருவாக வேண்டுமானால் குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண் பெண் வேறுபாடு இன்மை என்ற கருத்தைச் சமூக நெறியில் பயிற்றுவிக்க வேண்டும். அப்பொழுதுதான் 'பெண்கள்' என்ற ஒரு வேறுபாடான தனித்த கண்ணோட்டத்தை மாற்ற இயலும், ஆண் பெண் என்ற இரு நிலையும் ஒருங்கிணைய முடியும் எனத் தாராளவாதிகள் கருத்துரைக்கின்றனர்.

தாராளப் பெண்ணியவாதிகள் பாதிக்கப்பட்ட பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், பாலியல் வன்முறைக்காளான பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியும் பெண்கள் காப்பகம் மறுவாழ்வு மையம் குழந்தைகள் காப்பகம் போன்றவற்றை அமைத்து உதவுவதோடு தனி நபர் வெற்றிக்கும் உதவி வருகின்றனர்.

மற்ற பெண்ணிய இயக்கங்கள் தாராளப் பெண்ணிய இயக்கத்தை எதிர்த்துக் குறை கூறி வருகின்றன. பிற இயக்கவாதிகளின் குற்றச்சாட்டு இவர்களது செயல் அடிப்படையில் சீர் திருத்தப் போக்கினதே என்பதாகும். அதோடு புரட்சி இல்லாமல் பெண் விடுதலை கிட்டாது என்பது இவர்கள் வாதம். புரட்சியானது தங்களுக்குக் கொஞ்ச நஞ்சம் இருக்கும் வாய்ப்புகளையும் விடுதலையையும் நீதியையும் அழித்துவிடும் என்பது இவர்கள் வாதமாகும்.

தாராளப் பெண்ணியவாதிகளைப் பொறுத்தமட்டிலும் உடற்கூறு வேறுபாட்டில் ஆகட்டும், சமூகப் பொருளாதார நெறியிலாகட்டும் இவர்களுக்கு எதிரி என்று யாருமில்லை.

இந்நோக்கில்தான் இவர்கள் தீவிரவாதப் பெண்ணியவாதிகளோடு அதிகம் முரண்படுகிறார்கள். (தீவிரவாதிகளுக்கு ஆண்கள் தான் எதிரிகள்).

அமெரிக்காவில் 1960களில் தாராளப் பெண்ணியம், 'ஆதாரப் பெண்ணியம்' என்றழைக்கப்பட்டது 'Now' என்றழைக்கப்படும் என்ற தேசிய அமைப்பு தாராளப் பெண்ணியத்தை வளர்த்தது. இவ்வமைப்பு சம உரிமை, சம நீதி, சம மதிப்பு, விடுதலைப் போக்கு இவைகளையே வலியுறுத்தி வந்தது, முதலில் பெண்கள், பிறகுதான் மனிதப் பிறவிகள் என்ற கருதப்பட வேண்டும் என்ற வாதத்தை முன் வைத்தது. சட்டத்தில் மாறுதல்கள் கொண்டு வர வேண்டும் என்ற நிலையில் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பெண்கள் பற்றிய பல மசோதாக்கள் நிறைவேற்ற இவ்வமைப்பு துணைநின்றது. பொது மக்களிடையே தங்கள் கருத்துக்கள் பரவ இவ்வமைப்பினர் நாடெங்கும் பல கூட்டங்கள் நடத்தினர்.

அமெரிக்காவைப் போன்று இங்கிலாந்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான தாராளப் பெண்ணிய இயக்கங்கள் இல்லை. ஆனால் உழைப்பாளிகளின் இயக்கத்தையும் தொழில் சங்கங்களையும் சார்ந்த இங்கிலாந்துப் பெண்மணிகள் 'Now' என்ற இயக்கம் கொண்டு வந்த சட்டச் சீர்திருத்தங்களைத் தங்கள் நாட்டில் கொண்டு வரத் துணை நின்றனர்.

**தாராளப் பெண்ணியத்தின் திட்டங்களும் செயல்பாடுகளும்**.

பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் 'சமத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதைச் சட்டத்தின் வழி கொண்டு வருவதே தாராளவாதிகளின் மையச் செயல்பாடாக அமைந்தது. பெண்களின் பிரச்சினைகளைத் தகுந்த மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து வழி கானவும் இவர்கள் பாடுபட்டனர். ஏழ்மை நிலையில் உள்ள பெண்கள் மற்றும் வந்தேறிய (அகதி) பெண்கள் இவர்களின் நிலையை உயர்த்த பல உத்திகளைக் கையாண்டனர்.

**தாராளப் பெண்ணியத்தின் முக்கிய செயற்பாடுகள் வருமாறு**

1. சம ஊதியம், சம கல்வி வாய்ப்பு, சம வேலை வாய்ப்பு இவற்றைப் பெண்களுக்குப் பெற்றுத் தருதல்.

2. பெண்களை வேறுபடுத்தக் கூடிய அத்தனை அரசியல் அமைப்பையும் ஒழித்தல்.

3. தொடர்பு சாதனங்களில் காணப்படும் 'பால் பேதங்களை' ஒழித்தல்

4. பெண்களின் பிரச்சினைகளை முழுவதுமாக அறிந்து கொள்ளுதல்.

5. தன் விருப்பக் கருக்கலைப்பு, குழந்தைப் பராமரிப்பு, தாய்மைப் பேறு மற்றும் நல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.

6. பாலியலில் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் வன்மைகளையும் கொடுமைகளையும் கடுமமையாக எதிர்ததல் மற்றும் அதற்கான தண்டனையைப் பெற்றுத் தருதல்.

7. பெண் ஒருபால்சோக்கையினரைத் தனிப்படுத்தி விமர்ச்சிப்பதைத் தடுத்தல்.

தாராளப் பெண்ணியவாதிகளும் தீவிரப் பெண்ணியவாதிகளும், கூட மேற்கூறிய செயற்பாடுகளுக்கு ஒருங்கிணைந்த ஆதரவு தந்தனர். அரசியல் வட்டாரத்திலும் அரசியல் நடவடிக்கைகளிலும் தங்கள் செயற்பாட்டால் தாராளப் பெண்ணியவாதிகள் பெருத்த அளவில் மாற்றத்தைக் கொண்டு வந்தனர்.

**சமதர்ம பெண்ணியம் (Socialist Feminisim)**

சமதர்ம பெண்ணியம் என்பது இனம் மற்றும் பால் வேறுபாட்டை ஒழிப்பதை அடிப்படை நோக்காகக் கொண்ட இயக்கமாகும். சமதர்மத்தைச் சமுதாயத்தில் கொண்டுவர விரும்பியவர்களும் கம்யூனிசவாதிகளும், மனித உரிமை கோரும் மார்க்சியவாதிகளும் உழைப்பாளிகளும் சமதர்ம பெண்ணியத்தின் தோற்றத்திற்கு வித்திட்டவர்களாவார்கள். எனவெ இப் பெண்ணியத்தின் போக்கில் கம்யூனிச மார்க்கிய கொள்கைகளை அடையாளம் காண இயலும். பெண் விடுதலையைக் கொள்கையாகவும் சமூகத்தில் வேரூன்றி உள்ள தந்தைவழிச் சமூகத்தின் மூலத்தைத் துக்கி எறிவதைக் குறிக்கோளாகவும், தன்னலவாதிகளின் தன்னலத்தையும், ஆண் பெண் என்று பாகுபடுத்துவோரின் கொள்கைகளையும் சமூக நெறியில் ஒழிப்பதைச் செயல்பாடாகவும் கொண்டுள்ளது. சமதர்ம பெண்ணியம்.

பெண்களின் ஒடுக்கு முறைக்கு முதலாளித்துவமும் பொருளாதார அமைப்புமே காரணம் என்ற சமதர்ம பெண்ணியவாதிகள் நம்புகின்றனர். எனவே பொருளாதாரப் பண்பாட்டு அடிப்படையிலான முதலாளித்துவப் போக்கை இப்பெண்ணியவாதிகள் கண்டனம் செய்கின்றனர்.

சமதர்ம பெண்ணியத்திற்கு, ப்ரெட்ரிக் எங்கெல்ஸினுடைய ‘குடும்பம், தனிச் சொத்து ஆகியவற்றின் தோற்றம்’ (1884) என்ற நூல் மூலாதாரமாக விளங்குகிறது. இந்நூல் ‘ஆண் பெண் ஆகியோருக்கிடையே உள்ள உழைப்பின் அடிப்படையிலான வேறுபாடே பெண்களை அடிமைப்படுத்துகிறது’ என்கிறது எங்கல்ஸ், இந்த வேறுபாட்டிற்கு முதலாளித்துவ அமைப்பும் மரபு வழிவந்த குடும்ப அமைப்பும் காரணம் என்று விளக்கியுள்ளார். அதாவது, ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண அமைப்பு குடும்ப அளவிலும், முதலாளி- தொழிலாளி என்ற அமைப்பு சமூக அளவிலும் பெண்களை அடிமைப்படுத்தியுள்ளது என்கிறார். மரபு வழியாகப் பின்பற்றி வந்த கோட்பாடுகளின் வழி நடக்கும் திருமணங்களின் விளைவுகளை இந்நூல் மிகத் துல்லியமாகக் காட்டுகிறது. குடும்ப அமைப்பில் பெண்கள் அடிமைகளாகவும், பிள்ளை பெறும்

இயந்திரங்களாகவும், உரிமையற்ற நிலையில் வாழும் நிலையையும் சுட்டிக்காட்டியுள்ளது. சமதர்ம பெண்ணியவாதிகள் பாலியலை அடிப்படையாகக் கொண்ட (குடும்ப அலகு கொண்ட) சமூக அமைப்பைப் பொருளாதாரப் பரட்சியின் மூலம் மாற்ற முடியும் என்ற நம்பகின்றனர். அதனடிப்படையில் பொருளாதார விடுதலையே பெண்களைத் தனியுரிமை உள்ளவர்களாக உருவாக்கும் என்கின்றனர்.

சமதர்ம பெண்ணிவாதிகள் தங்களுக்கென்று சில தனிக்கொள்கைகளைக் கொண்டுள்ளனர். ‘அரசியல் ஈடுபாடு என்பது தங்களின் சொந்த விருப்பு வெறுப்பின்பாற்பட்டது’ என்று நம்புகின்றனர். திருமணப் பந்தம், பாலியல் உறவு, குடும்பம், பிள்ளைப் பேறு என்பன தங்களின் வேண்டும் வேண்டாமை என்ற இயற்கையின் அடிப்படையின் தேவையில் தோன்றுவதுதான் என்ற வாதிடுகின்றனர்.

சமதர்ம பெண்ணியம், பெண்கள் பாலியல் நெறியில் மட்டுமன்றி, வயது நிலையிலும், சமூக நிலையிலும், சக்தி அடிப்படையிலும்,இன அடிப்படையிலும், தேசிய அடிப்படையிலும் ஒடுக்கப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டுகின்றது.

சமதர்ம பெண்ணியம், ஆண்களை நேரடி எதிரியாகக் கருதவில்லை என்றாலும் அவர்களைக் கண்டனம் செய்கின்றது. ஆண்கள் தந்தை வழிச் சமூக அமைப்பின் தலைவனாகவும் குடும்பத் தலைவனாகவும், முதலாளியாகவும், சொத்துரிமை உடையவனாகவும், வேலை வாங்குபவனாகவும் இருப்பதால் அவர்கள் பெண்களை விட உயர்ந்தவர்களாகச் சமூகத்தில் பங்கு வகிக்கின்றனர். அதனடிப்படையில் ஆண்களிடம் காணப்படும் தன்னலம் மற்றும் சுரண்டல் போக்கையும் ஆதிக்க மனப்பான்மையையும் சமதர்மவாதிகள் கண்டனம் செய்கின்றனர். இவர்கள் தாராளவாதிகளின் ‘ஆணுக்குப் பெண் சமம்’ என்ற கொள்கை, சமூகத்தில் பெரிய பாதிப்பையோ கருத்து மாற்றத்தையோ ஏற்படுத்தி விடவில்லை என்ற கருதுகின்றனர். பெண்கள் பெறும் பொருளாதார விடுதலையே, சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே இவர்கள் வாதம்.

சமதர்ம பெண்ணியவாதிகள் தீவிரப் பெண்ணியவாதிகளின் கருத்துக்கள் சிலவற்றை ஒத்துக் கொண்டனர். அதனடிப்படையில் தங்கள் இயக்கத்தைச் சீர்திருத்தியும் கொண்டனர். மார்க்சிய கொள்கைகளை முக்கியமாக ஏற்றுக்கொண்டாலும், தீவிரப் பெண்ணியத்தின், ‘பெண்கள் பெண்களுக்காக - பெண்கள் மட்டுமே’ என்ற கொள்கையே வரவேற்று, அதை அடிப்படையாகக் கொண்டு ‘அனைத்திலும் பெண்கள்’ என்ற கருத்தைப் பரப்ப முற்பட்டனர்.

சமதர்ம பெண்ணியத்தில் உள்ள பெண் அறிவாளிகள் பெண் ஒடுக்கு முறைக்கு இரு முக்கிய காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

1. ஆணின் திறன் அல்லது சக்தி (Male Power)

2. முதலாளித்துவம் (Capitalism)

இவ்விரண்டின் விளைவே தந்தைவழிச் சமூக அமைப்பு, அதன் விளைவே ‘பெண்ணின் ஒடுக்குமுறை’ என்று கருத்துரைத்தனர். மேலும் அவர்கள் தீவிரவாதிகளின் தன்னாட்சி உடைய பெண்களுக்கான இயக்கம் ஒன்று தேவை என்ற கருத்தை ஒத்துக் கொண்டனர். தீவிரவாதப் பெண்கள், சமதர்ம பெண்ணியவாதிகளின் முதலாளித்துவம் பற்றிய ஆய்வை ஏற்றுக்கொண்டுள்ளனர். இவ்விரண்டு கொள்கையினருக்கிடையே தொடக்கக் காலத்தில் இருந்த கருத்து வேறுபாடு, காலம் செல்லச் செல்ல குறைந்தது.

சமதர்ம பெண்ணியத்திற்கு அமெரிக்காவைக் காட்டிலும், இங்கிலாந்தில் அதிதீவிர வரவேற்பு இருந்தது. சமதர்ம பெண்ணியம் பின்வரும் மூன்று கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. கூலி வேலை (Wage Labour)

2. குடும்பம் (The Family)

3. கருத்துருவம் (Ideology)

**1. கூலி வேலை (Wage Labour)**

பெண்கள் ஒடுக்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் பொருளாதார அமைப்பே, நவீன மற்றும் சக்தி வாய்ந்த இயக்கங்களின் வருகையும் பெண்களின் வாய்ப்பின்மைக்கு ஓரளவு காரணமாயின என்பதைச் சமதர்மவாதிகள் அறிந்திருந்தனர். பெண்கள் மிகப் பல இடங்களில் மிகவும் குறைந்த ஊதியத்திற்கு திருப்தியில்லாத நிலையில்லா வேலையைப் பார்க் நேரிடுகிறது. பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப இவர்களை மிக எளிதாக வேலைக்குச் சேர்க்கவோ, தூக்கி எறியவோ முடிந்தது. ‘பெண்களின் கூட்டமைப்பு’ என்ற இயக்கம் தோன்றிய பிறகு பெண்களின் பங்கில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அவர்கள் வேலைத் தளத்தில் ஒடுக்கப்படுவதிலும் ஏமாற்றப்படுவதிலும் இருந்து ஓரளவு விடுபட்டனர். சமதர்ம பெண்ணியவாதிகளின் இத்தகைய முயற்சிக்குப் பின் வேலை பார்க்கும் இனம் மற்றும் கறுப்பர் இனத்தாரிடையே முன்னேற்றத்தைக் காண முடிந்தது.

**2. குடும்பம் (The Family)**

மரபு வழி வந்த ‘குடும்பம்’ என்ற அமைப்பு ஒரு நீண்ட வரலாற்றை உடையது. மார்க்கம், எங்கு எல்லாம் இவ்வமைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தைக் கூறியிருந்தாலும், சமதர்ம பெண்ணியவாதிகள், குடும்ப அமைப்பில் தீவிரமான சில

மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும என்றெ கருத்துரைத்தனர். பாரம்பரிய குடும்ப அமைப்பில் பெண்களைப் பொறுத்தவரையில் வீட்டிலும் வேலை செய்து வெளியிலும் வேலை செய்து அதிக சுமைக்கு ஆளாகி, தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இதை லெனின், ‘பெண்கள் சமையற்கட்டுக்கும், பள்ளிக் கூடத்திற்கும், வீட்டு வேலைக்கம், வெளி வேலைக்கும் என்று அல்லல்பட்டு ஒரு தொடர் சங்கிலி போல் செயல்படுகிறார்கள்’ என்று வர்ணித்துள்ளார். மத்தியதரக் குடும்பத்தில் ஒரு பெண் கணவனின் விருப்பத்திற்கு அடிபணிந்து அவனின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி, குழந்தை வளர்ப்பிலும் பாடுபட்டு, வீட்டையும் பராமரித்து ஓர் இயந்திரம் போன்று செயல்பட்டு, பல ஆண்டுக்காலம் உணர்ச்சியின்றி வாழ்வதால் அவளுக்குத் திடீரென்று இயலாமையும், கோபமம் தாபமும், பொறாமையும் உண்டாகி உடலளவிலும், மனத்தளவிலும் பாதிக்கப்படுகிறாள். குடும்பத்துவம் (Familism) என்ற போலியன மரபுக் கருத்தாக்கத்தை உடைத்து, குடும்ப அமைப்பில் மாறுபாட்டை ஏற்படுத்தி, பெண்ணுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டும் என்ற சமதர்ம பெண்ணியவாதிகள் கருதினர். மைக்கேல் பேரட், மேரி மிக்கின்டாஷ் என்பவர்கள் தனிக்குடும்ப அமைப்பு ஓரளவு ஆண், பெண் இருவரும் குறைந்தது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நல்லது கெட்டதைப் பகிர்ந்து கொண்ட அவரவர்க்குரிய தனிமனித மதிப்பு நிலை பாதிக்கப்படாமல் வாழ வழிவகுக்கும் என்ற பரவலான கருத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வரும் குழந்தைகள் மரபுவழிக் குடும்பத்திலிருந்து வரும் குழந்தைகளிடமிருந்து சிறிதும் மாறுபட்டு விளங்கவில்லை என்பதாலும் செல்வம், கல்வி, முன்னுரிமை போன்றவைகள் தனிக்குடும்ப அமைப்பிலும், தொடர்வதாலும் இவ்வமைப்பில் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை.

**3. கருத்துருவம் (Ideology)**

மார்க்சிய பெண்ணியவாதிகள் ‘கருத்துருவக் கொள்கை’ என்பதை முன்னேறச் செய்வதையே ஒரு செயற்பாடாகக் கொண்டிருந்தனர்.

சக்தி அதிகம் மிக்க ஆண்கள், சக்தி குறைந்த பெண்களை நம்ப வைத்து ஏமாற்றி, அவர்களை அடக்கி ஒடுக்கி வந்துள்ளனர். மேலும் ஆண்கள் மதம், அரசியல், பண்பாடு இவற்றின் மூலமாக ஏதாவது ஒரு வழியில் ‘மகிழ்ச்சியான குடும்பத் தலைவி’ என்ற மாயையை ஏற்படுத்தி தொடக்க காலம் முதல் பெண்களை அடிமைப்படுத்தி வந்திருக்கின்றனர். மார்க்சியம் இக்கருத்தை எடுத்துச் சொல்லி மக்களிடையே பிரபலப்படுத்தியது.

மார்க்சியப் பெண்ணிய ஆராய்ச்சி, வாழ்க்கையின் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் ஆராய்ந்தது. அதனடிப்படையில் குடும்பத்தில் காலம் காலமாகச் சார்பு நிலையில் இருந்து வந்த

பெண்களின் அடிமை நிலையை மாற்ற முயன்றது. குடும்பத்தில் ஆண், பெண் இருவரின் பங்க நிலை பற்றிய மாயை அவர்களின் மனத்தின் அடித்தளத்தில் வேரூன்றியிருந்ததால் சமூகப் போர்வையில் செயற்கையான முகம் கொண்ட இப்பண்பாட்டைம மாற்றுவது மார்க்சியவாதிகளுக்கு ஒரு சவாலாக அமைந்தது. ஏனென்றால், பெண்கள் யாரால்? யாருக்காக? எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறார்க்ள என்பதை திரைகிழித்துக் காண்பிப்பது அத்துணை எளிதான செயலல்ல. மார்க்சியவாதிகளின் இந்த ஆராய்ச்சியும், அதனடிப்படையிலான கடும் முயற்சியும் படிப்படியாகச் சமதர்ம வாதிகளையும், தீவிரவாதிகளையும் ஒன்று சேர்த்துச் செயலாற்ற வைத்தது.

பெண்கள் வணிக முறையிலும் அடிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை மார்க்சியவாதிகள் கீழ்க்கண்டவாறு எடுத்துக் காட்டியுள்ளனர். பெண் நுகர்வோரை எதிர்நோக்கி, அவர்களை அடியோடு தன்வயப்படுத்தும் விதமாகப் பொருட்கள் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டன. நடை உடை அணிகலன், தலைமுடி அலங்கரிப்பு, காலணி என்று பெண்களi இனம் பிரித்துக் காட்டும் பொருட்கள் சந்தைக்கு வந்தன. இவற்றின் மூலம், பெண்கள் தங்களை ஆணிலிருந்து பிரித்து இனம் காட்டிக் கொண்டனர். சிறு பெண் குழந்தையிடம் கூட இனம் பிரித்து தன்னைக் காட்டிக் கொள்ளு; மரபு வளர்ந்திருந்தது.

முழு நிறைவான இல்லம் என்ற பெயரில் வீட்டிற்கு அடிப்படைத் தேவை இல்லாத புதிய பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு வந்து பெண்களை வணிகத்தில் சுரண்டினர். இப்பொருளாதார அடக்கு முறையைச் சமதர்ம பெண்ணியவாதிகள் சுட்டிக்காட்டி, இங்கும் ‘குடும்பம்’ என்ற நிலையிலேயே பெண்கள் அடிமைப்படுத்தப்படும் அவலத்தை எடுத்துக்காட்டுகின்றனர்.

1966 -ல் ஜுலியட் மிட்சல் என்ற பெண்மணி மேற்கூறிய கருத்துருவக் கொள்கையை முதன் முதலில் இங்கிலாந்தில் பரப்பினார். அப்பொழுது அவர் பெண்களின் அடிமை நிலைக்கு வீட்டு வேலை, தாய்மைப் பேறு, குழந்தைப் பராமரிப்பு, பாலியல் பங்குநிலை இவற்றைக் காரணமாகக் காட்டி இவைகளே பெண்கள் உளவியல் நெறியில் சமத்துவத்தை நேர்ககிச் செல்ல தடைக்கற்களாக இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்.

**சமதர்ம பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள்**

சமதர்ம பெண்ணியவாதிகள் சீர்திருத்தப் பிரச்சாரங்களைச் செயற்பாடாகக் கொண்டிருந்தனர். இத்தகைய பிரச்சாரங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பயன்பட்டதோடு, இயக்கத்தை வளர்ப்பதற்கும் உதவின. சமதர்ம பெண்ணியவாதிகள் இடைக்காலத் திட்டங்கள் வகுத்து செயற்பட்டனரே தவிர தங்களுக்கென முடிந்த முடிவான

திட்டங்களை வைத்துக் கொள்ளவில்லை. அதனால் இத்தகைய பிரச்சாரங்கள் சில சமயம் தாராளவாதிகளின் பிரச்சாரங்களோடு ஒரு பாதி ஒத்துச் சென்றன.

சமதர்மவாதிகளின் செயற்பாடுகள் வேலை பார்க்கும் மகளிரின் முன்னேற்றத்தையே கருத்தில் கொண்டிருந்தன. அவர்கள் ஊதியப் பிரச்சினை, தொழிற் சங்கப் பிரச்சினைகள் இவற்றில் கவனம் செலுத்தின. முதலாளி வர்க்கத்தினரின் சுரண்டல் போக்கை ஒடுக்கப்பாடுபட்டன. வேலை பார்க்கும் மகளிர்க்குச் சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்துவதிலும் அவர்களுக்கு இலவசக் கருக்கலைப்பு மற்றும் எளிய கருத்தடைச் சாதனங்கள் கிடைக்கச் செய்வதிலும் பெண்களுக்கே உரிய தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

சமதர்மவாதிகள் தொழில் கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டு வேலை பார்க்கும் மகளிர் முன்னேற்றதிற்கான சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கும் பாடுபட்டனர்.

சமதர்மவாதிகளில் படித்த பெண்கள், குறிப்பாகப் பல்கலைக்கழகப் பேராசிரியைகள், கல்லூரி ஆசிரியைகள் முதலாளித்துவ பண்பாட்டிற்கு எதிரான தங்கள் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதில் கவனம் செலுத்தினர். தங்கள் கொள்கைகளை மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமும் பரப்பினர். குறிப்பாக ஃபெமினிஸ்ட்ரெவ்யூ போன்ற கல்வியிதழ்கள் இதற்குப் பயன்பட்டன. பெண்ணியப் பத்திரிகை அல்லாத பிற பத்திரிகைகளின் மூலமும் கருத்துக்களைப் பரப்பினர்.

பொருளாதார அமைப்பில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டால் ஒழிய சமூக அமைப்பில் சமத்துவத்தைக் கொண்டு வருதல் இயலாது என்று சமதர்மவாதிகள் நம்பினர். எனவே சமூகத்தில் ஒரு பகுதியைச் சீரமைப்பதை விட சமூகத்தின் மொத்தத்தையும் சீரமைப்பதே சிறந்தது என்று கருதி, அதற்காகப் பாடுபட்டனர்;.

வேலை பார்க்கும் மகளிரிடையே ‘முதலில் நீங்கள் பெண்கள், பின் தன் உழைப்பாளிகள்’ என்ற கருத்தாக்கத்தைப் பரப்பி அவர்களிடையே ஒட்டுமொத்த விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றனர் சமதர்மவாதிகள்.

**தீவிரவாதப் பெண்ணியம்**

‘Radical’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ‘வேர்’ என்பது பொருள். இச்சொல் லத்தின் மொழியிலிருந்து உருவான சொல்லாகும். சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளின் காரணங்களை வேரிலிருந்து ஆராய்வது என்பதைக் கருத்தில் கொண்டே ‘Radical’ என்ற சொல்லைப் பெண்ணியவாதிகள் பயன்பத்தினர். தமிழ் இதைத் ‘தீவிரவாதம்’ என்று

மொழிபெயர்த்துள்ளனர். இஃது மேற்கூறிய பொருளை உணர்த்தவில்லை என்றாலும், 'Radical' என்பதன் நேரடியான மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது.

தாராளப் பெண்ணியத்திலிருந்து விலகி வந்த அமைப்பே தீவிரவாதப் பெண்ணியம். ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்து பல பெண் அமைப்புகளிலிருந்து பிரிந்து வந்த தீவிரவாதப் பெண்கள் அறுபதுகளில் தங்களுக்கென்று சில அமைப்புகளைத் தோற்றுவித்துப் பெண்களின் பிரச்சினைகளை ஆராய்ந்தனர். பெண்கள் அடிமைகளாக அன்றி ஓர் உயிரியாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்து அவர்களிடையே உருவானது. இக்கருத்து வலுப்பெற்று, ஆண் ஒதுக்கப்பட வேண்டியவன் என்ற கருத்தாக்கம் நிலை பெற்றது. அதுவே, தீவிரவாதப் பெண்ணியத்தின் வலுவான கொள்கையானது.

தீவிரப் பெண்ணியக்கம் தொடக்கத்தில் பெண்களின் ஒடுக்கு முறைக்கான காரணத்தையும், அதன் வேரையும் கண்டறிந்து. அதை வேரறுப்பதை முக்கிய கொள்கையாகக் கொண்டிருந்தது. இவ்வியக்கத்தைச் சார்ந்த பெண்ணியவாதிகள் பெண்களுக்குப் பாலுறவில் உள்ள பங்கை எடுத்துக் காட்டிக் கண்டன் செய்தனர். நடைமுறையில் உள்ள பால் பேதம் பற்றியும் ஆராயத் தொடங்கினர். மேலும் மனித சமுதாயத்தின் மறுஉற்பத்திக்குக் காரணமான திருமணம் மற்றும் கட்டாயக் குடும்ப அமைப்பு, தர்யமைப் பேறு போன்றவற்றை ஆராய்ந்த இவையே பெண்களின் அடிமைத்தனத்திற்கு வித்திட்டது என்ற கண்டறிந்தனர். எனவே. பாரம்பரிய திருமண முறையை, குடும்ப அமைப்பை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுக்கத் தொடங்கினர். இதையே தங்கள் இயக்கத்தின் மையப் பிரச்சாரமாக எடுத்துக் கொண்டுப் பதிய சமுதாயத்தை உருவாக்க முனைந்தனர். அதற்காக, குடும்பம் என்பது பெண்களைச் சுரண்டும் அமைப்பு என்ற அது அவர்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே முரண்பாடான முறைகேடான அடிமை மனப்பான்மைக்குப் பழக்குவித்து, அவர்களின் தனித்தன்மையை அழித்தது என்றும் கட்டுரையின் மூலமும் துண்டுப்பிரச்சாரங்க்ள மூலமும் 1970 களில் தீவிரவாதிகள் எடுத்துரைக்கத் தொடங்கினர். ஆண்களைத் தங்கள் எதிரிகள் என்று வெளிப்படையாகக் கூறினர்.

இதன் தொடர்ச்சியாகச்; சில குழுக்கள் ஆண்களை முழுமையாக ஒதுக்கிய சமுதாயத்தை உருவாக்குதல் என்ற கோட்பாட்டையும் பரப்பத் தொடங்கினர்.

'லெஸ்பியன் ஃபெமினிசம்' என்ற அமைப்பு தீவிரவாதப் பெண்ணியத்தின் ஒரு முக்கிய கிளையாகும். பெண் ஓரினச் சேர்க்கையைக் குறிக்கும் இவ்வமைப்பு பாலியலில் மட்டுமல்லாது அரசியல் அளவிலும், பொருளாதார அளவிலும் வியக்கத்தக்க பங்கை நிலை நாட்டியுள்ளது. 1970 -ல் ரீடா மே ப்ரவுன் சார்லட் பன்ஜ் டைகிரேஸ் அட்கின்சன் ஜில்ஜான்ஸன் போன்ற அதி

தீவிரப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் அரசியல் அளவில் 'லெஸ்பியனிஸம்' பங்கு பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தனர்.

சார்லட் பன்ஜ், லெஸ்பியன் பெண்ணிய அரசியல் கொள்கை என்பது மொத்த அரசியல் அமைப்பின் ஒட்டைகளையும் குறைபாடுகளையும் ஆராய்ந்து அதுபற்றி விமர்சிப்பதாகும் என்கிறார். மேலும் இருபால் சேர்க்கை என்பது ஆண் மேலாதிக்கத்தின் மைல் கல்லாகும் என்று வர்ணக்கிறார். லெஸ்பியன் பெண்ணியவாதிகள், எல்லாப் பெண்களுமே ஓரினச் சேர்க்கையைச் சாh்ந்;தவர்கள் தான் என்று வாதிடுகின்றனர். ஆண்களின் மூலம் புகுத்தப்பட்ட கட்டாய இருபால் சேர்க்கை, பெண்களைப் பிரித்து இனம் காட்டுகிறது என்று குற்றம் சாற்றுகின்றனர். லீட்ஸ் - புரட்சிப் பெண்ணியம் என்ற அமைப்பு 'லெஸ்பியன் பெண்ணியம் என்றெ ஒன்றே பெண்ணியமாகும்' என்ற கருத்தைப் பரப்பியது. லெஸ்பியன் பெண்ணியவாதிகள் பிற பெண்களோடு உறவு வைத்தக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், அவர்கள் ஆண்களொடு கொண்டுள்ள உறவை அறவே விட்டுவிட வேண்டும். இத்தகைய கட்டுப்பாட்டைத் தங்களுக்குத் தாங்களே விதித்துக் கொண்டுள்ளனர். அரசியல் பெண் ஓரினச் சேர்க்கையாளர் என்பது கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது.

1. பெண்ணியக் கொள்கையினால் தனக்கு ஏற்பட்ட ஈர்ப்பில் அல்லது பாதிப்பில் பெண் ஓரினச் சேர்க்கையை ஆதரிப்பவள் அல்லது ஏற்றுக் கொண்டவள்.

2. பெண்ணால் பெண் என்று அடையாளம் காட்டப்பட்டவள், பிற பெண்களிடத்து உறவு வைத்துக் கொள்ளாமலேயே தன் வாழ்க்கையைப் பெண்ணியக் கொள்கைகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டவள்.

3. அரசியலில் ஈடுபட வைக்கப்பட்ட பெண், பெண்ணியக் கொள்கையை அடையாளம் கண்டு, அதன்வழி முன்பு தான் ஒதுக்கப்பட்ட முறையையும், தற்போது விடுதலையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் தன்மையையும் உணர்ந்து கொண்டவள்.

தீவிரப் பெண்ணியத்துள்ளே உருவான இத்தகைய கடுந்தீவிர அமைப்புகள், தங்களுக்குள்ளே தன்னாட்சி கொண்டவைகளாகவும், தனிமைப்படுத்திக் கொண்ட குழுக்களாகவும் உருப்பெற்றன. பெரும்பான்மையான தீவிரப் பெண்ணியவாதிகள் மரபு நெறியாக இவர்களோடு ஒத்துப்போக இயலவில்லை. எனவே, இப்படிப்பட்ட பிரிவுகளை பண்பாட்டை எதிர்க்கும் குழுக்களாகக் கருத வேண்டி சூழலும் ஏற்பட்டது.

தீவிரப் பெண்ணிய வாதிகளுக்கும், அதிதீவிரப் பெண்ணியவாதிகளுக்கும் நோக்கம் ஒன்றுதான். ஆண்களால் உருவாக்கப்பட்ட அனைத்து அமைப்புகளையும் சமூக மதிப்புகளையும் உடைத்தெறிந்து 'பெண்கள் மட்டுNமு' 'முழுவதும் பெண்ணாட்சியே', 'எதிலும்

எங்கும்’ என்ற தகுதி பெற்ற சமுதாயத்தை உருவாக்குவதே அவர்களின் ஒன்றுபட்ட குறிக்கோளாகும். அதற்கு முதற்படியாகப் பெண்களால் நடத்தப்படும் வணிகங்கள், உணவகங்கள், புத்தக கடைகள், பெரிய அளவிலான அலுவலகங்கள், நலவாழ்வு மையங்கள் போன்றவற்றைத் தோற்றுவிப்பதில் அதிதீவிரம் காட்டினர். அத்துடன், ஆண்களினால் உருவாக்கப்பட்டு, ‘பெண்களின் நலவாழ்வு’ என்ற பெயரில் நடக்கும் திட்டங்களை உடைத்தெறிந்து தங்கள் முன்னேற்றத்தைத் தாங்களாகவே பெற வேண்டும் என்ற வலியுறுத்தி வருகின்றனர்.

‘அந்தரங்க் பகிரங்கம்’ என்பது தீவிரப் பெண்ணயத்தின் மிக்க சிறப்புடைய கருத்துப் படிவமாகும். 1960 -ன் இறுதியில் அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் தோற்றம் பெற்ற இக்கருத்தாக்கம் எழுபதுகளில் எழுத்துகளின் மூலம் பிரபலமடைந்தது. 1970 -ல் கேரல் ஹேனிஷ் என்பவர் இரண்டாம் ஆண்டின் குறிப்புக்கள்’ என்ற கட்டுரையில் இக்கருத்துப் படிவத்தை விளக்கி, அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார். ‘தனி மனிதனுக்குரிய அந்தரங்கம்’ என்று ஆண் ஆதிக்கச் சமூகம் சிலவற்றை வரையறை செய்திருந்தது. அதன் படிக்காதல், திருமண உறவு, பாலியல் உறவு, குழந்தைப் பேறு என்பன ஆணின் தனிப்பட்ட வாழ்விற்குரியதாகும். இதில் சம்பந்தப்பட்ட பெண்ணும் ஆணின் அந்தரங்கத்திற்குத் துணை போவாள். எனவே, அவளின் பிரச்சினைகள் பொது இடத்தல், பொது வாழ்வில் விவாதிக்கத் தக்கதல்ல எனக் காலம் காலமாகக் கட்டுப்படுத்தியிருந்தனர் தந்தைவழிச் சமூக அமைப்பினர். தீவிரவாதப் பெண்ணியத்தினர். பெண்களின் பிரச்சினைகள் பொதுப் பிரச்சினை எனப் பிரகடனப்படுத்தி அதை விவாதத்திற்கு உட்படுத்தி, தீர்வு காண விளைந்தனர்.

தீவிரவாதிகள் சமதர்ம பெண்ணியவாதம் அவ்வளவு புரட்சி கரமானதோ, சக்தி வாய்ந்ததோ அல்ல என்கின்றனர். வகுப்பு, பொருளாதார அமைப்பு என்பன பெண்களின் ஒடுக்குமுறையைப் பொறுத்தமட்டில் இரண்டாம் நிலையை, உடற்கூறு என்பதே பெண்களின் ஒடுக்கு முறைக்கு முதன்மையான காரணம் என்று தீவிரப் பெண்ணியவாதிகள் கருத்துரைக்கின்றனர். பொருளாதாரப் புரட்சியினால், பெண் ஒடுக்குமுறையை அடியோடு ஒழித்துவிட முடியும் என்ற சமதர்மவாதத்தை இவர்கள் நம்பவில்லை.

ஆனால், தந்தைவழிச் சமூகத்தை எதிர்ப்பதில், சமத்hம பெண்ணியவாதிகளும், தீவிரவாதப் பெண்ணியவாதிகளும் ஒன்றுபடுகின்றனர். இவர்கள் இருவரும் இக்கருத்தில் ஒன்றிணைந்து தாராளப் பெண்ணிய வாதிகளை ஒதுக்கினா. தாராளப் பெண்ணியம் நடுத்தர மக்களுக்கு மட்டுமே பயன் தருகிறத என்றம், இவ்வியக்கம் தன்போக்குப்படி நடப்பதாகவும், உண்மையான சக்தியைப் பற்றி அறியாமையோடு இருப்பதாகவும் குறை கூறினர். சுலாமித்

ஃபயர்ஸ்டேன் என்பவர் ‘பாலியல் பற்றிய வாதம்’ என்ற நூலில் தீவிரப் பெண்ணியத்தின் வாதப் பிரதிவாதங்களை எழுதியுள்ளார். இந்நூல் அன்றம் இன்றும் தீவிரப் பெண்ணியத்தன் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. தீவிரவாதப் பெண்ணியத்தின் முக்கிய கொள்கைகள் நான்காகும். அவையாவன,

1. தந்தைவழிச் சமூகம் (Partriarchy)

2. குடும்ப அமைப்பு (The Family)

3. பாலியல் (Sexuality)

4. பெண்களின் வரலாறு (Womens’s History)

**1. தந்தைவழிச் சமூகம் (Partriarchy)**

இதற்குத் ‘தந்தையின் ஆட்சி’ என்பது பொருளாகும். ஆனால், தீவிரப் பெண்ணியவாதிகள், பெண்களை அடக்கி ஆளும் ஆணின் ஆளுகை என்பதைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆணின் மேலாண்மை என்பது மிகவும் தொன்று தொட்ட ஒன்றாகும். எல்லா ஆண்களுமே பெண்களை அடக்கி ஆண்டதாகத்தான் வரலாறு. எனவே பெண்களுக்கு ‘ஆண்கள் எதிரி’ என்று சுட்டிக் காட்டப்படுகிறார்கள். குடும்பம், பொருளாதாரம் அரசியல் மற்றும் பாலுறவு போன்றவற்றில் தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பெண்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தந்தைவழிச் சமுதாயம் என்பது வன்முறையாலேயே காக்கப்பட்டுள்ளது. ஆண்கள் தங்களுடைய சக்தியையும், மேலாண்மையையும் நிலைநிறுத்திக் கொள்ள பெண்களை வன்முறைக்கு ஆளாக்குகிறார்கள் என்று கருதப்படுகிறது.

அடக்கு முறையின் ஒரு வடிவம் கற்பழிப்பு (அ) பாலியல் வன்முறை, தனிப்பட்ட ஒரு பெண், தான் கற்பழிக்கப்பட்டாளோ இல்லையோ அதனுடைய பயத்தை உணர்ந்திருந்தாள். இதனுடைய விளைவே, அவளுக்கு ஆணிடத்து ஒரு அச்சமும், அவனிடத்து தன்னை எல்லா நிலையிலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியுமாகும்.

ஆண், பெண் இருவருக்கும் உடற்கூற்றில் அமைந்த வேறுபாடு சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட இயற்கையாக அமைந்த ஒன்றாகும். உடல் கூற்றைப் பொறுத்தமட்டில் பாலியலில் ஆண் அதிக ஈடுபாடும், பெண்களை அடக்கி ஆளும் தன்மையையும் கொண்டுள்ளான். சுலாமித் ஃபயர்ஸ்டோன் என்பவர், ‘பெண்கள் தங்களின் உடற்கூற்றின் அமைப்பினாலேயே ஒருவிதத்தில் ஊனப்படுத்தப்பட்டவர்கள். ஏனெனில் அவர்கள் மட்டுமே தாய்மை அடைந்து பிள்ளைப் பேற்றின் சகல கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

எனவே பெண்களைப் பொறுத்தவரை, தாய்மை என்பது காட்டுமிராண்டித்தனமானது என்று ஆணித்தரமாகக் கூறுகிறார்.

மேலும், ஒரு பெண் பிள்ளை பெற வேண்டிய நிர்ப்பந்தம் உள்ள காலத்தளவும் ஆணைச் சார்ந்தே வாழவேண்டிய நிலையில் உள்ளாள் என்று இவர் கருதுகிறார். ஒரு பெண் ஆணுக்கு நிகரான நிலையை அடைய வேண்டுமானால் இரண்டே இரண்டு புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டால்தான் முடியும் என்கிறார்.

1. பெண்கள் தம் உடம்பிலிருந்து பிள்ளை பெறுவதைத் தவிர்த்தல்

2. பாலுறவு கொள்ளதலையும், குழந்தை பெறுவதையும் விட்டுவிடுதல். இக்கூற்றைத் தீவிரவாதிகளும், சமதர்ம வாதிகளும் ஒத்துக் கொண்டுள்ளனர்.

தான் கர்ப்பமடையாமல், பெண்கள் மட்டுமே கர்ப்பமடைவது தங்களின் மேலாண்மைத் தன்மையைக் காட்டுகிறது என்று ஆண் மக்கள் நினைக்கின்றனர். மேலும், உடற்கூற்றின்படி பெண்தன்மை என்பது ஆண்தன்மையைவிட ஒருபடி கீழானது என்றும் கருதுகின்றனர். எனவே தீவிரப் பெண்ணியவாதிகள் உடற்கூறுதான் பெண்களை அடிமைப்படுத்தும் காரணி என்று கண்டுணர்ந்து, அது பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

தீவிரப் பெண்ணியாதிகளின் ஆராய்ச்சியின் விளைவாகப் 'பெண் மேலாண்மைக்கு' வித்திடும் சிறிய கூட்டம் ஒன்று உருவாகியது. இவர்கள், பெண்கள் ஆண்களை விட உயர்வானர்கள் என்று கூறுகின்றனர். பெண்கள் குழந்தை பெற்றுக் கொடுப்பவர்களாகவும், ஆண்களை விடச் சற்று அதிக வயது வாழ்பவர்களாகவும், குடும்பத்தில் ஒத்து வாழ்பவர்களாகவும், உடலியலில் ஆண்களைவிட நோய் தாங்கும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருக்கின்றனர் என்பதே பெண் மேலாண்மைக்கு அவர்கள் கூறும் காரணங்களாகும். ஆனால், இஃது, பெண்ணியத்தின் அடிப்படைக் கொள்கையான பாலியல் சமத்துவத்தை உடைத்தெறிவதாக இருப்பதால் பெரும்பான்மையான பெண்ணியவாதிகள் இதை அடியோடு ஒதுக்கிவிட்டனர்.

**2. குடும்ப அமைப்பு (The Family)**

தீவிரவாதப் பெண்ணியவாதிகள் பெண்களின் அடிமைத்தனத்திற்கு வித்திடுவது குடும்பம் என்ற அமைப்பும் அதற்குத் தொடக்கமாக அமையும் திருமணம் என்பதுமாகும் என்று கருதுகின்றனர். எனவே, பெண் விடுதலை என்பது திருமண முறையை அடியோடு அழித்தால் ஒழிய கிடைக்க முடியாது என்று அதி தீவிரவாதத்தை முன் வைத்தனர்.

சமதர்மவாதிகளுக்கு முதலாளித்துவம் எப்படியோ, அப்படியே தீவிரவாதிகளுக்குத் திருமணமும். குடும்ப அமைப்பிற்கு அடிப்படையான ஆண் பெண் இணையும் இருபால் சேர்க்கையைத் தீவிரவாதிகள் தீவிரமாக எதிர்த்தனர். இஃது பெண்களை ஆணுக்குக் கீழானவர்களாக அடிமைகளாக உருவாக்குவதால் இவ்வகைப் புணர்ச்சிக்கு வித்திடும் ‘ஒரத்திக்கு ஒருவன்’ என்ற அமைப்பை பாலியல் தடைக்கட்டாகக் கருதி அதை ஒழி;கப்பாடுபட்டனர்.

**3. பாலியல்** (Sexuality)

பால் உறவு அல்லது பால் ஈடுபாடு என்பத ஆணையும் பெண்ணையும் உடல்வழி இணைக்கம் பாலம் என்றாலும், அதுவே ஆண் பெண் இருவருக்கும் முரண்பாடுகளை உருவாக்கும் இடமாகவும் அமைந்துள்ளது. முதலாளித்துவம் என்பது பெண்ணினுடைய எதிரி என்று சமதர்மவாதிகளால் சுட்டப்பட்டாலும், அதைவிட நெருக்கமான எதிரியாக ‘ஆண்மகன்’ தீவிரவதிகளால் சுட்டப்படுகிறான்.

தீவிரப் பெண்ணியவாதிகளின் குறைந்தளவு வேண்டுகோள், உடலுறவு, பெண்களின் விருப்பு வெறுப்புகளைப் பொறுதததே இருக்க வேண்டும் என்பதாகும். அதாவது, பெண்களுக்கு உடலுறவில் விடுதலை இருக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்து. பாலியல் உறவு பெண்களை அடிமைப்படுத்த ஆண்களால் கையாளப்பட்டு வரும் வரை, அவர்களுக்குள்ளே உளவியல் பாங்கில் விலகித்தான் போவார்கள், எனவே, பாலியல் விடுதலையே தனிக்குடும்ப அமைப்பில் திருமணத்தினால் ஏற்படும் கட்டாய உடலுறவுக்கு ஒரு முடிவு கட்டும் என்கின்றனர்.

ஆனி கொயட் என்பவர் எழுதிய ‘புணர்ச்சிப் பரவசப் புனைகதை’ என்ற நூல், பெண் ஒரினச் சேர்க்கையாளர்களிடம் மிகவும் பிரபலமடைந்தது. ‘ஆண் தேவையில்லை’ என்ற கொள்கை எழும்ப இந்நூல் ஒரு காரணமாக அமைந்தது. பெண்களுக்கு ஆண்கள் தேவையில்லை என்கிற நிலையில்; அவர்கள் தங்கள் விருப்பப்படி பலருடன் வரையறையற்ற பாலுறவு கொண்டோ, இருதர (இருபால் சேர்க்கை மற்றும் ஓரினச் சேர்க்கை இரண்டிலும் ஈடுபாடு) பால் சேர்க்கை அனுபவித்தோ ஓரினக் கல்வியில் ஈடுபட்டோ மணம் செய்யாமல் தனிவாழ்க்கையே மேற்கொண்டோ வருவார்களேயானால் அது காலங்காலமாக இருந்துவரும் தனிக் குடும்ப அமைப்பை முறித்து விடும். அதன்வழி, தந்தைவழிச் சமுதாயத்தின் சக்தியும் வலுவிழக்கும் என்று பாலியல் புரட்சி பற்றி இந்நூலில் ஆனி கொய்ட் கூறியுள்ளார்.

**4. பெண்களின் வரலாறு(Womens’s History)**

தந்தைவழிச் சமூகக் கருத்துருவம் கடந்த காலத்தின் வரலாற்றை உணர்த்தும், தந்தை வழிச் சமூகத்தின் தோற்றமானது, உடற்கூறு வேறுபாட்டிலோ பொருளாதார நிலையிலோ இல்லாமல் இருக்கும் அளவில் தொன்றுதொட்ட காலத்தில் பெண்கள் ஆண்களைவிட உயர்வான நிலையில் இருந்ததால் ஏற்பட்டதாகும். பிற்பாடே வரலாற்று உண்மைப்படி ஆண் மேலாண்மை தோன்றியது.

லண்டனில் உள்ள தாய்வழிச் சமூக ஆய்வு மற்றும் மீட்பு நிலை என்ற அமைப்பு ஒரு காலத்தில் தாய்வழிச் சமூகம் இருந்தது என்பதை ஆராய்ச்சி வழி ஒத்துக் கொள்கிறது. அந்நாளைய தாய்வழிச் சமூகம், சமாதானம் உள்ளதாகவும், சண்டைச் சச்சரவுகள் இல்லாததாகவும், தெய்வீக ஈடுபாடு மிகுந்ததாகவும் அறியப்படுகிறது.

தாய்வழிச் சமூக வரலாற்றைக் கண்டு, அதை எடுத்துரைத்து, அதன் வழிப் பெண்களும் ஒரு காலத்தில் உயர்விடத்தைப் பெற்றிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டிச் சமூகத்தில் உயர்வு தாழ்வை ஒழிப்பது இவ்வாய்வின் நோக்கமாக அமைந்தது.

**தீவிரப் பெண்ணயவாதிகளின் செயற்பாடுகள்**

தீவிரவாதப் பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள் மிகவும் புதியதாகவும்மக்களைக் கவர்ந்திழுக்கும் வகையிலும் அமைந்திருந்தன. அவர்கள் நடைமுறையிலிருக்கும் ஆணாதிக்கப் போக்கிற்கு  எதிரான பண்பாட்டை கடைப்பிடிக்கத் தொடங்கினர். சிறு சிறு குழுக்களாகச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட பெண்களும், பிற பெண்ணிய இயக்கங்களில் சேருவதைவிட இத்தகைய சிறு குழுக்களில் எளிதாகத் தங்களை இணைத்துக் கொள்ள முடிந்தது. அவர்கள் தங்கள் எண்ணங்களையும், கருத்துக் முடிந்தது. அவர்கள் தங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும், உணர்வுகளையும எளிதாக இக்குழுக்களில் பரிமாறிக் கொள்ள முடிந்தது. தந்தைவழிச் சமூகப் போக்கு, அதிகாரப் படிநிலை அமைப்பு என்ற மேலாதிக்கப் போக்குகளை இக்குழுக்கள் புறக்கணித்தனர். தங்களுக்குள் ஆட்சி ஆதிக்கப் போக்கு இருக்கக் கூடாது என்பதற்காக, தலைமையை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அனைவரும் சமவாய்ப்புகள் பெற்று, சம மதிப்புடன் விடுதலையாகச் செயல்பட்டனர் தலைமை வேண்டாப் பெண்ணியாவதிகள் என்று இவர்கள் குறிப்பிடப்பட்டனர். இத்தகைய தலைமை வேண்டாப் போக்கு இங்கிலாந்திலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் வளர்க்கப்பட்டது.

அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது சிறு குழுக்களில் காணப்படம் மற்றொரு நடைமுறையாகும். இது ‘விழிப்புணர்வூட்டல் என்று சுட்டப்படுகிறது. ஒவ்வொரு பெண்ணும் தன் சொந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதால் பெண் அடக்குமுறைக்கான காரணங்களைக் கண்டறிவத எளிதாயிற்று. இம்முறையே அறுபதுகளின் இறுதியில்

‘தனிநபர்களுக்குரியது பொதவானது’ என்ற தீவிரப் பெணணியவாதக் கொள்கை உருவாக வழிவகுத்தது.

தீவிரவாதப் பெண்ணிய குழுக்கள் ‘எதிர்வு செயற்பாடுகள்’ என்ற சொல்லக்கூடிய நூதன போராட்ட முறையைக் கையாண்டு தங்கள் கொள்கைகளைப் பரப்பி மக்களை ஈர்த்தனர். இஃது அமெரிக்காவில் மிகப் பிரபலமடைந்த கொள்கைப் பரப்பு முறையாகும். சீர்திருத்தப் பிரச்சாரம் மேற்கொள்ளும் போது, குறிப்பாகக் கருக்கலைப்பு, இழிபொருள் இலக்கிய எதிர்ப்பு, அல்லது ஒரினச்சேர்க்கை உரிமை கட்டுப்படா உரிமை போன்ற கொள்கைகளைப் பரப்ப இம்முறை கையாளப்பட்டது.

தீவிரப் பிரிவினையாளர் என்ற ஒரு பிரிவு தங்களைச் சுற்றி உள்ள தந்தைவழிச் சமூகப் பண்பாட்டை எந்த அளவு ஒதுக்கி வாழ இயலுமோ அந்த அளவு ஒதுக்கி வாழ முடிவெடுத்தனர். தங்கள் வாழ்க்கையை ஆணாதிக்கச் சமூகத்திலிருந்து விலக்கி, தனியாகவோ அல்லது பிற பெண்களோடு சோந்;தோ வாழ்வது என்பதைத் தற்காலிக அல்லது நிரந்தர இலக்காகக் கொண்டிருந்தனர். நடைமுறையில் பிரிவனைவாதம் பின்பற்றுவதற்கு மிகக் கடுமையானதும் மூலதனம் அதிகம் உடையதுமாகும். இத்தகைய பிரிவினைவாதிகள் தங்களுக்கென்று நலவாழ்வு மையம், பத்திரிகைகள், புத்தகக் கடைகள், உணவகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பள்ளிகள், பாதுகாப்பு மையங்கள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொண்டனர். அமெரிக்காவில் இத்தகைய போக்கு அதிகரித்தது என்றாலும் பிரிட்டனில் பொரளாதாரச் சூழலால் இவ்வணுகு முறை வெற்றி பெறவில்லை.

மேற்கண்ட பெண்ணியவாதங்களை உருவாக்குவதில் மேரி வோல்ஸ்டன் கிராப்ட், ஜான் ஸ்ரூவர்ட் மில், சைமன்-டி பெவாயர், கேட் மில்லட் போன்றவர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

தாராளப் பெண்ணியவாதம் மேற்கத்திய நாடுகளுடைய நீண்ட மரபின் அடிப்படையில், புதிய கருத்துக்களை இணைத்துக் கொண்டுள்ளது. தனிநபர் விடுதலை, அரசியல் செல்வாக்க, சமவாய்ப்பு போன்ற கோரிக்கைகளை மக்களாட்சிக்கு ஏற்ற முறையில் வடிவமைத்து வெற்றி பெற்றது.

சமதர்ம பெண்ணியம் முதலாளித்துவத்தின் வகுப்புவாத அடக்குமுறையை எதிர்த்துத் தன்னுடைய கொள்கைகளை வகுத்துக் கொண்டது எனவே அப்போக்குடைய மார்க்சியம் இடதுசாரி கொள்கை இவற்றிலிருந்து கருத்துக்களை எடுத்துக் கொண்டு தன்னை வளர்த்தக் கொண்டது.

தீவிரவாதப் பெண்ணியவாதிகள், அடிப்படையில் ஆண் அடக்குமுறைக்கு ஆட்பட்டவர்கள். எனவே அவர்கள் அதை எதிர்க்கும தீவிரச் செயற்பாட்டாளர்களாக உருவாகினர். அவர்களுக்கு ஆண்கள் முக்கிய எதிரிகளானார்கள். அவர்கள் எந்த ஒரு முன்னேற்ற இயக்கத்தையும், பின்பற்றாமல் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் தங்களுக்கென்று தனிப்பட்ட கொள்கைகளை வகுத்துக் கொண்டனர்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பத்திரிகைகளின் மூலம் பெண்ணியக் கொள்கைகள் பரிமாறப்பட்டு ஒன்றுக்கொன்று இடைமிடையப்பட்டு வளர்ந்தது என்றாலும், அமெரிக்காவில் தீவிரவாதமே ஆற்றல் பெற்றிருந்தது. இங்கிலாந்தில் அரசியல் அமைப்பு மற்றும் மரபு ஆதிக்கப் போக்கு இவற்றின் காரணமாகச் சமதர்ம பெண்ணியமே வரவேற்கப்பட்டுப் பிரபலமடைந்தது.

**பெண்ணியக் கோட்பாட்டாளர்கள்**

பெண்ணியம் என்பது திடீரென்று பிறந்து வளர்ந்த இயக்கம் அன்று. இவ்வியக்கத்தை உருவாக்க, வளர்க்கப் பாடுபட்டவர்கள் சுமார் மூன்று நூற்றண்டைச் சேர்ந்தவர்களாகவர், 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்ரா பெண் முதல் இன்றைய கேட் மில்லட் வரை பலரும் பெண்ணியத்தின் அடிப்படைக் கொள்கைகளை உருவாக்கித் தந்துள்ளனர். இவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் மேரி வோல்ஸ்டன் கிராப்ட் ஜான் ஸ்ரூவர்ட் மில், சைமன் டி பெவாயர், பெட்டி ஃப்ரைடன், கேட் மில்லட் போன்றவர்களாவர். மேரி வோல்ஸ்டன் கிராப்ட் பெண்ணிய இயக்கத்திற்கு வித்திட்டார் என்றால் சைமன் டி பெவாயரும் பெட்டி ஃப்ரைடனும் அதை வளர்த்தவர்களாவர். ஜுலியட் மைக்கேல், ஷீலா ரோபோத்தம், அட்ரைன் ரிச் போன்றோர் பெண்ணிய இயக்கத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இவர்களைப் பற்றி வரலாற்றை அறிவது பெண்ணியத்தை முழுமையாக அறிவதற்குத் துணை நிற்கும்.

**மேரி வோல்ஸ்டன் கிராப்ட் (1759 - 1797)**

பெண்ணியக் கோட்பாட்டாளர்களிடையே காலத்தால் மூத்தவர் மேரி வோல்ஸ்டன் கிராப்ட் என்ற அமை;மையார். இவர் 18 ஆம் நூற்றாண்டிலேயே பெண்ணுரிமைக்காக முதல் குரல் கொடுத்தவராவார் கி.பி. 1792 -ல் 'பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு' என்ற நூலை எழுதி வெளியீட்டுள்ளார். இந்நூல் பெண்ணியக்கம், பெண் விடுதலை, பெண் கல்வி, பெண்களுக்குச் சட்டத்தில் தகுந்த வாய்ப்பு, பெண் ஓட்டுரிமை, பெண்ணுக்குச் சொத்துரிமை, பெண் வேலை வாய்ப்பு என்ற புரட்சிகரமான கருத்துக்கள் விளக்கப்பட்டிருந்தன. இந்நூல் தோன்றிய காலத்தல் அதிகம் பிரபலமடையவில்லை. அதுமட்டுமன்றி மிகச் சில பெண்மணிகளே. அக்காலத்தில் இந்நூலின் கருத்தை வரவேற்றிருக்கின்றனர். இந்நூலில், மேரி வோல்ஸ்டன் கிராப்ட், 'தங்கள் வாழ்நாளில் ஆண்கள் தங்களுக்கான உரிமையைச் சரிநிகராகப் பெண்களுக்கு விட்டுக் கொடுத்தும், ஓர் உயர்வான நிலையைக் கொடுத்தும் வாழ வேண்டும். என்று வலியுறுத்தியுள்ளார். இவருடைய இக்கருத்தைக் ஹொரேஸ் வால்போல் என்பவர் இயற்கைக்கு மாறானது' என்று வர்ணிக்கிறார். மேலும், இவர் வோல்ஸ்டோன் கிராப்ட்க்கு 'ஆடைக்கள் மறைந்திருக்கும் கழுதை புலி' எனும் அடைமொழியைக் கொடுத்து அதன் மூலம் அவரைப் பூடகமாக எள்ளி நகையாடியுள்ளார்.

வோல்ஸ்டோன் கிராப்ட், தம் இளம் வயதிலிருந்ததே பெண் விடுதலைக்காகப் போராடியவர். பெண் என்ற பால்பாகுபாட்டால் உண்டான பல கொடுமைகளைத் தண்ணுடைய அனுபவத்தின் மூலமே தெரிந்து கொண்ட இவர், தம்முடைய குடிகாரத் தந்தையினால் பட்ட துன்பங்கள் மூலம் பெண் விடுதலை இன்றியமையாதது என்றுணர்ந்து போராடத் தொடங்கினார். தன்னுடைய 28 வது வயது வரை பெண்களுக்கே உரியது என்று முத்திரை குத்தப்பட்ட ஆசிரியைத் தொழில், வீட்டுப் பராமரிப்பு, குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுகதல் போன்ற வேலைகளைச் செய்து வந்தவர். பின் தாம் ஒரு எழுத்தாளராகவும், தீவிரச் சீர்திருத்தவாதியாகவும் உருவாக எண்ணி, அவ்வேலைகளைத் துறந்தார். நான் வாழ்ந்து வந்த, ரூபிளியை விட்டு இலண்டனில் குடியேறினார். அங்குத் தத்துவ ஞானியான வில்லியம் காட்வினைச் சந்தித்து மணந்து கொண்டார். கில்பர்ட் இம்லே என்ற ஆண் நண்பனின் தொடர்பும் ஏற்பட்டது.

வோல்ஸ்டோன் கிராப்ட் பெண்களின் ஓட்டுரிமைக்காகத் தம் காலத்தல் குரல் எழத்பினார். பெண்கல்வியை வற்புறுத்தினார். பெண்கள் படிப்பறிவு பெறவதினால் தகுதியானவர்களா இருக்கிறார்கள். தகுதியானவர்களாவதால் நற்குணமுடையவர்ளாக இருக்கிறார்கள்; எனவே, சமூகம் அனைத்துமே மகிழ்ச்சியாக, நிறைவாக வாழ முடியும், சமூகத்தில் போராட்டத்திற்கு இடம் இருக்காது என விவரிக்கிறார்.

பாலுறவு பற்றியும் இவர் வெளிப்படையாகக் கருத்தத் தெரிவித்தார். பாலுறவு என்பது இயல்பானது. அணுக்கு அது எவ்வளவு தேவை என உணரப்படுகிறதோ அதுபோல் பெண்ணுக்கும் தேவை என உணரப்படவேண்டும் என்கிறார். உணர்ச்சிக்கு இடம் கொடாமல், அறிவுக்கு இடம் கொடுத்து நோக்கினால் ஆண்கள் இவ்வாதத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள வாய்ப்புண்டு என்று கூறினார். மேலும், இனம், வகுப்பு இவற்றிலும் சமநிலை வேண்டும் என்றம் வற்புறுத்தினார்.

கிராப்ட், ஆங்கிலச் சமூகத்தில் பெண்கள் நியாயத்திற்குப் புறம்பாக நடத்தப்படுகிறார்கள் என்றும், கல்வியின் மூலம் மட்டுமே இப்போக்கைச் சீர் செய்ய முடியும் என்றும் நம்பினார். தந்தைவழி ஆட்சிமுறையில் அமைந்த குடும்ப அமைப்பில், பெண்களின் கல்வி மறுக்கப்பட்டதால் அவர்களுடைய திறமையும் சக்தியும் விணாக்கப்பட்டுவிட்டன என்று வருந்துகிறார்.

வோல்ஸ்டோன் கிராப்டின் தனிப்பட்ட வாழ்க்கை, போராட்டம் நிறைந்ததாகவும், சர்ச்கைக்குரியதாகவும் அமைந்திருந்தது. தம் காதலர்களால் கைவிடப்பட்டும், காட்டிக் கொடுக்கப்பட்டும் நட்டாற்றில் விடப்பட்ட துடுப்பில்லாப் படகு போல் அலைக்கழிக்கப்பட்டார். தம் 38 வது வயதில் குழந்தைப் பேற்றின் போது காலமானார். இவர் இறந்தபின் இவரது கணவர் வில்லியம் காட்வின் தம் மனைவியின் அந்தரங்க வாழ்வு பற்றி மேரி வோல்ஸ்டோன் கிராப்டின் நினைவுகள் என்ற நூலை எழுதி வெளியிட்டார் இதில் அவரின் தனிப்பட்ட வாழ்வைப் பகிரங்கப்படுத்தினார். ஏற்கெனவே இவரது தீவிரவாதத்தை எதிர்த்து வந்த பழமைவாதிகள் அதற்கு இவரது வாழ்வை ஒரு காரணமாகக் காட்டி இவரை ஒரு ‘மன நோயாளி’ என முத்திரை குத்தவும், இந்நூல் துணைபோயிற்று.

தம் வாழ்நாளில் போற்றப்படாத இவர், பின் நாட்களில் பெண்ணியவாதிகளால் போற்றப்பட்டார், மதிக்கப்பட்டார் இவரது கருத்துக்கள் பெண்ணிய இயக்கத்திற்கு முன்னோடியாக அமைந்தன. அமெரிக்கப் பெண்ணியவாதியான மார்கரெட் ஃபுல்லர் என்பவர் இவரைப் பற்றிக் கூறுகையில், மேரி வோல்ஸ்டோன் கிராப்ட், தாம் எழுதிச் சாதித்ததை விடத் தம் சொந்த வாழ்க்கை அனுபவம் மூலமாகச் சாதித்தது அதிகம் என்று வர்ணத்துள்ளார்.

**ஜான் ஸ்டுவர்ட் மில் (1806 - 1873)**

ஜேம்ஸ் மில் என்ற தத்துவ ஞானியின் மகனான ஜான் ஸ்டுவர்ட் மில் ஆங்கிலத் தத்துவ ஞானியாவார், அத்துடன் சிறந்த பொருளாதார நிபுணராகவும் அரசியல்வாதியாகவும் விளங்கினார். இவர், ஒரு பிறவி மேதையாகக் கருதப்பட்டவர். அரசியல், பொருளாதாரம், சமூகவியல் பற்றிய பல நூல்களை எழுதியுள்ளார்.

பெண்ணியத்தைப் பொறுத்தமட்டில், ஒரு ஆண்மகனாக இருந்து அதன் வரலாற்றில் புகழ் பெற்றவராக விளங்குகிறார். பெண்ணடிமைத்தனத்தை ஒழிப்பதில் ஒரு தாராளவாதியாக வாதித்து, சாதனை பல கண்டவர். உலக அளவில் பெண் விடுதலை அவர்களின் கல்வி வாய்ப்பு மற்றும கருப்பர் அடிமை ஒழிப்பு போன்றவற்றிற்கு மிகவும் பரிந்துரைத்தார். பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து இவர் எழுதிய ‘பெண்ணடிமை நிலை’ என்ற நூல் மிகப் புகழ் பெற்றது. இந்நூலில். பெண்ணடிமைத் தனம் என்பது கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் விடுதலை அவர்களக்கு அளிக்கப்படுதல் வேண்டும் என்றம தற்போதுள்ள சமூக அமைப்பில் காணப்படும் ‘பாலியல் பாகுபாடு’ என்பது சட்டப்படி அகற்றப்பட வேண்டும் என்றம் கூறியுள்ளார். இப்பாகுபாடு அடிப்படையில் தவறுடையது. ஆதலால் இது மனதகுல முன்னேற்றத்திற்கு முதன்மைத் தடங்களாக உள்ளது என்றும் விளக்கியுள்ளார். முழு சமவுரிமை என்ற கொள்கையை நடைமுறையில் கொண்டு வந்தால் மட்டுமே எல்லா வாக்கத்ரனருள்ளும் முன்னேற்றத்தைக் காண முடியும் என்றும், அதை நடைமுறைப்படுத்துவதில் எந்தச் சக்தியும் குறுக்கிடக்கூடாது என்றம் வாதிட்டுள்ளார்.

மேலும், பெண்ணடிமைத்தனத்திற்கு ஆண்களின் அரசியல் பங்கெ காரணம் என்று கருதும் இவர் குடும்ப அமைப்பில் காணப்படும் ஆணாதிக்கத்தை ஒழிக்க வேண்டும் என்றம் அப்படி ஒழித்தால்தான் அதனை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை மாற்ற முடியும் என்றம் கருத்துரைத்துள்ளார்.

ஸ்டூவர்ட் மில், பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில், வெஸ்ட்மின்ஸ்டர் தொகுதியில் போட்டியிட்ட போது, ‘பெண்கள் எல்லோர்க்கும் எல்லாவிதத்திலும் சமம்’ என்ற கருத்தைத் தன் முக்கிய கொள்கையாகப் பிரகடனப்படுத்தி வெற்றி பெற்றார் 1866 -ல் ஹவுஸ் ஆப் காமன்ஸில் கென்சிங்கிடன் சொஸைட்டி, ஸ் சப்ரேஜ் பெடிஷன், என்ற மனுவைத் தாக்கல் செய்தார். பெண்கள் ஓட்டுரிமை பெறுவதற்கான இம்மசோதா அவ்வாண்டில் குறை கூறப்பட்டதோடு, ஆதரவின்றி ஒதுக்கப்பட்டது. ஆனால் ஸ்டூவர்ட் மில்லின் தொடர் முயற்சியால் பின்வந்த ஆண்டுகளில் பெருத்த வெற்றியையும், ஆதரவையும் பெற்றது. இதுவே இங்கிலாந்தில் பெண்களுக்கான முதல் வெற்றிப்படியாக இருந்தது.

இவரின் மாற்றாள் மகளான ஹெலன் டெய்லர் என்பவரைப் ‘பெண்கள் ஓட்டுரிமை இய்க’ த்திற்கு தலைவியாக்கினார். இவ்வமைப்பின் கீழ் பல பெண்களை ஒன்று சேர்ந்தார். அவர்கள் மூலம் நிதி திரட்டி, இயக்கத்தை வளர்த்தார். பெண்கள் வெளிப்படையாக எல்லா இயக்கங்களிலும் பங்கெற்க வேண்டும் என்ற தம் கொள்கையை இதன் மூலம் செயலாக்கினார். மேலும், பெண் கல்விக்காக தம் சொத்தின் பெரும் பகுதியை அர்ப்பணித்தார்.

‘ஹெரியட் டெய்லர்’ என்ற பெண்மணியின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார் மில். அவரோடு இணைந்து ‘சமவுரிமைக் கொள்கை’ என்ற சக்தி வாய்ந்த கொள்கையைப் பரப்பினார். இவரின் கொள்கைகளைப் பார்க்கும் போது, இவரை ‘இங்கிலாந்தின் பாரதி’ என்று வர்ணிக்கத் தோன்றுகிறது.

**சைமன் டி பெவாயர் (1908 - 1986)**

சைமன் டி பெவாயர் என்பவர் பிரெஞ்சு தத்துவஞானி 1949 -ல், பிரெஞ்சு மொழியில் வெளிவந்த ‘லே டியாக்சைன் செக்ஸ்’ என்ற இலக்கியத் தரம் வாய்ந்த நூலின் ஆசிரியராவார். இந்நூல், ஆங்கிலத்தில் ‘The Second Sex’ என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு உலகளவில் பிரபலமானது. தமிழில் இந்நூலை ‘இரண்டாம் பால்’ என்று மொழி பெயர்க்கலாம்.

பெவாயர், தம் கருத்துக்களாலும் செயல்பாட்டாலும், புதிய பெண்ணியத்தின் ஒரு தலைசிறந்த பெண்மணியாக விளங்கினார். தம்முடைய வாழ்வில், தாமே ஒரு சுதந்திரப் பெண்ணாக இருந்து திருமணம் செய்து கொள்ளாமல், பிள்ளைப் பேறுமின்றி, ஆண், பெண் இருபால் நண்பர்களோடு, ‘சமத்துவம்’ என்ற கொள்கையை நடைமுறையில் காண்பித்து வாழ்ந்து வெற்றி கண்டவராவார்.

பெவாயர் இரண்டாம் பால் என்ற நூலை எழுதும் போது, ‘தான் ஒரு பெண்ணியவாதி அல்ல’ என்று பிரகடனப்படுத்pக் கொண்டார். அதாவது தொடக்கத்தில் பெண்ணிய இயக்கத்தோடு தொடர்பு கொள்ளாது, பெண்கள் நலனில் அக்கறை கொண்டவராக மட்டுமே தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். பெண்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற கூறிவந்தார்.

ஒரு சமதர்மவாதியாக இருந்த இவர், ‘பாலியல் வேறுபாடு’ சமூகத்தைப் பாதிப்பதையும். அது பல புரட்சிகரமான இடதுசாரிகளிடையேயும் நடைமுறையில் இருந்ததையும் கண்டு வருந்தினார். எனவே, பெண்கள் தங்களுக்கான உரிமைகளைப் போராடிப் பெறவில்லையானால், அவர்களுடைய எதிர்காலம் சூன்யமாகும் என்ற கருத்து அவர் மனதில் எழுந்தது. அதன் காரணமாக, 1970 -ல் தீவிரவாதப் பெண் இயக்கமான ‘பெண்கள் விடுதலை இயக்கத்தில்’ தம்மை இணைத்துக் கொண்டார். அவ்வியக்கத்தின் முன்னேற்றத்திற்காகப் பல வழிகளில் பாடுபட்டார்.

பெவாயர் 1971-ல் ஜீசேல் ஹலிமி என்பவரோடு இணைந்து, பெண்ணியச் சட்ட மறுமலர்ச்சிக் கழகம் என்ற அமைப்பைத் தோற்றுவித்து நடத்தினார். பிரான்ஸிஸ் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கியதில். இவரது பங்கு தலையாயதாகும் இவர் ‘கொஸ்டின்ஸ் ஃபெமினிஸ்ட்’ என்ற பிரெஞ்சுப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். 1974 -ல் ‘லீக்யூடு

ப்ராய்ட் டி பெமிஸ்' என்ற பிரெஞ்சு மொழிக் கருத்தரங்கத்தைத் தலைமை ஏற்று நடத்தினார். பிரான்சு நாட்டைச் சேர்ந்த மார்க்சிய பெண்ணியவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்.

பெவாயர், பெண்களுக்கென தனிப்பட்ட சிறப்புச் சலுகைகள் கோரப்படுவதை ஏற்றுக் கொள்ளாத்துடன், அதை வன்மையாக எதிர்க்கவும் செய்தார். 'மனித இனம் என்பது ஓரினம், எல்லோரும் எல்லார்க்கும் சமம்' என்பது இவரது அசைக்க முடியாத கருத்தாக இருந்து வந்தது. அதனடிப்படையில் பெண்கள் ஆண்களுக்கு நிகராக உழைத்து, தங்கள் விடுதலையை நிலைநாட்ட வேண்டும் என்ற கொள்கையைப் பரப்பி, அக்கொள்கையோடே வாழ்ந்து மறைந்தார்.

**பெட்டி ஃப்ரைடன் (1921 -)**

பெட்டி ஃப்ரைடன் ஒரு மனோதத்துவ அறிஞர், இவர் 'பெண்ணியல்பு புதிர் நிலை' என்ற நூலின் ஆசிரியராவார். பல வருடங்களாகப் பெண்ணியத்தில் இருந்தும் பிரபலமாகாத நிலையில் இந்நூல் உலக அரங்கில் எதிர்பாராத அளவில் அவரை அடையாளம் காட்டியது. இந்நூலில் பலரும் சொல்லத் தயங்கிய பயந்த சில புரட்சிகரமான கருத்துக்களை இவர் துணிந்து வெளியிட்டார். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்றவை இவரை ஒரே நாளில் உலக மேடையில் தோன்றச் செய்தன.

பெட்டி ஃப்ரைடன் 'புதிய பெண்கள் இயக்கத்தினைத் தொடங்கி வைத்தவர்' என்றும்; 'பெண்ணியக்கத்தின் இரண்டாவது அலைக்கு வித்திட்டவர்' என்றும் போற்றப்படுபவர். இவர் பெண்ணியம் என்பது 'மனித உரிமைகள் என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது' என்று விளக்கியுள்ளார். இவரது தனித்துவப் போக்கும், தாராளவாதமும் அநேக அமெரிக்கப் பெண்களிடையே வரவேற்பைப் பெற்றத. ஃப்ரைடன் தாராள வாதப் பெண்ணியத்தை ஆதாரப் பெண்ணியம் என்று சுட்டியுள்ளார்.

1966 -ல் ''Now' என்ற 'தேசிய மகளிர் அமைப்பு' எனப்தைத் தொடங்கி 1970 வரை அதன் தலைவியாகப் பணியாற்றினார். 1971-ல் 'தேசிய மகளிர் அரசியல் குழு' அமைப்பதற்கும் பெரிதும் உதவினார். 1973-ல் முதல் 'மகளிர் வங்கி' அமைப்பதற்கும் உதவிளார். அவ்வாண்டிலேயே, அகில உலகப் பெண்ணியவாதிகளின் கூட்டத்தை நடத்தினார். அத்துடன் சமவுரிமைக்கான 'தேசிய மகளிர் போராட்டம்' ஒன்றையும் நடத்தினார். எழுபதிலிருந்தே இவர் சட்ட மாற்றத்தை வலியுறுத்தி குறிப்பாக சமவுரிமை மசோதா கொண்டுவரப்பட வேண்டும் என்று தீவிரமாகப் போராடினார்.

இவர், தம் முதல் நூலான 'பெண்ணியல்பு புதிர்நிலை' என்பதில் பெண்கள் ஒரு மனைவியாகவும், தாயாகவும் மட்டுமே வாழ்ந்து விடக்கூடாது, கல்வியறிவு மூலம் தங்களை ஒரு முழுமையான மனிதராக உருவாக்கிக் கொண்டு முன்னேற வேண்டும் என்று எடுத்துரைக்கிறார். ஆனால் 1981-ல் சுமார் 18 வருடங்களக்குப் பின், 'இரண்டாம் நிலை' என்ற நூலில் முந்தைய கருத்திலிருந்து வேறுபடுகிறார். இந்நூலில் புதிய பெண்ணியக் கொள்கையான 'பெண்கள் ஆண் மூலமாகக் குழந்தை பெறுவது கூடாது' என்ற கருத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார். பெண்கள் விடுதலை அவர்கள் விருப்பத்தின் அடிப்படையிலேயே என்பது இவரின் கருத்தாகும். இவர் தீவிரப் பெண்ணிய வாதிகளைக் கடுமையாக எதிர்த்தார். இவர்களால் பெண்ணிய வாதிகளைக் கடுமையாக எதிர்த்தார். இவர்களால், பெண்ணிய இயக்கம் திசை திரும்பி, அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று எச்சரிக்கை விடுத்தார். ஃப்ரைடனின் இம்மாற்றத்தைக் கருத்தல் கொண்டு சில்வர் எய்ன்ஸ்டீன் என்பவர் இவரைத் 'தற்காலத்திய மரபு பெண்ணியவாதி' என்றும், 'மறுபார்வை கொண்ட தாராளப் பெண்ணியவாதி' என்றும் மதிப்பிட்டுள்ளார்.

**கேட் மில்லட் (1934 -)**

கேட் மில்லட் புதிய பெண்ணிய அமைப்பின் மிகச் சிறந்த கோட்பாட்டாளராவார். அமெரிக்க எழுத்தாளரான இவர் சிறந்த கலைஞரும் ஆவார். பெண் விடுதலை இயக்கத்திற்குத் தொடக்க காலத்தல் வித்திட்டவர். அந்த இயக்கத்தில் செல்வாக்குடையவராகவும் விளங்கினார். 1960 களில் குடியுரிமை இயக்கத்தில் ஒரு எழுச்சிமிக்க செயல்பாட்டாளராகத் திகழ்;ந்தார். 1970 -ல் 'பாலியல் அரசியல்' என்ற இவரது நூல் வெளிவந்து பெருமளவில் வரவேற்புப் பெற்றது. 'Now' இன் தொடக்க உறுப்பினரான இவர், பின் தீவிரவாதியானார். சட்டச் சீர்திருத்தம் மற்றும் பொருளாதார மாற்றம் மட்டும் பெண் விடுதலைக்கு வித்திடும் என்ற இவர் நம்பவில்லை. ஆண், பெண் இருபாலாரும் தங்களின் சொந்த மற்றும் பாலியல் நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டால்தான், முழு விடுதலை பெற முடியும் என்ற கருத்துரைத்துள்ளார். 1970 -ல் அமெரிக்கப் பெண்கள் விடுதலை இயக்கத்தின் ஒரு சாதரான பெண் ஓரினச் சேர்க்கையாளரிடையே எழுந்த பிரச்சினை குறித்த வாதாடினார். அப்பொழுது தம் சொந்த வாழ்க்கையில் அனுபவித்த இருபால் சேர்க்கையைப் பற்றி வெளிப்படையாகப் பேசினார். ஆனால் அவருடைய இந்தக் கொள்கைக்காகத் தாக்கிப் பேசப்பட்டார். பிறபாடு கவலையில்லா விடுதலைப் பெண்கள் இவருக்கு ஆதரவு கொடுத்து, தங்கள் இயக்கத்தை மேலும் வலுவுடையதாக்கிக் கொண்டனர். எழுபதுகளின் முடிவு வரையில் தீவிரச் செயற்பாட்டாளராக அகில உலக அளவில் அறியப்பட்டார். ஆனால், பெண்கள் உரிமைக்கான இவரது நடவடிக்கையும், போராட்டமும் இவரை ஈரானிலிருந்து வெளியேற்றியது. பின்பு

நியுயார்க்கிலும் லாஸ் ஏஞ்சல்ஸிலும் சிற்பியாகத் தம் வேலையைத் தொடர்ந்தார். மேலும் 1971 -ல் பெண்கள் பற்றிய ஒரு படத்தை வெளிக் கொணர்ந்தார். 1974 -ல் தம்முடைய தன்வரலாற்றை 'ப்ளையிங்' ப்ராஸ்டிடியுசன் பேப்பர்ஸ்" என்ற நூலும், 1977 -ல் சீதா என்ற நூலும், 1979 -ல் 'தி பேஸ்மெண்ட் மெடிடேஷன் ஆன் எ ஹயூமன் சேக்ரிபைஸ்' என்ற நூலும் எழுதி வெளியிட்டார்.

ஓர் இயக்கம் உருவாக வேண்டுமானால் அது அடிப்படையானக் கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். பெண்ணியக் கோட்பாடுகள் பெண் விடுதலை, ஆண்களுக்கு நிகரான சமவுரிமை, சமவாய்ப்பு, சம ஊதியம் இவற்றைப் பெறுதல், காலம் காலமாக இருந்து வந்த ஆணாதிக்கத்தை எதிர்த்தல் போன்றவற்றை வற்புறுத்துவதாகும். இக்கோட்பாடுகளை உருவாக்கித் தந்தவர்கள், பெண்ணிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

வினாக்கள்

1. பெண்ணிய வகைகளை எழுதி விளக்குக.

2. சமதர்ம பெண்ணியம் குறித்து கட்டுரை வரைக.

3. தீவிரவாத பெண்ணியம் பற்றி விளக்குக.

4.தந்தை வழிச் சமூகம் குறித்து எழுதுக.

5. தீவிரப் பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள் குறித்து வரையறுக்க.

6. பெண்ணிய கோட்பாட்டாளர்கள் பற்றி விளக்குக.

**பார்வை நூல்கள்**

1. அன்புக்கரசி-மோகன் லார்பீர்(தொகுப்பு ஆசிரியர்கள்), தலித் பெண்ணியம், தலித் ஆதார மய்யம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி,மதுரை-16

2. முனைவர்.இரா.பிரேமா, பெண்ணியம், தமிழ் புத்தகலாயம், தி.நகர்,சென்னை-17

முனைவர்.ஆ.உஷா,

உதவிப்பேராசிரியர்,

தமிழியல் துறை,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

9790381487

ushaskv23@gmail.com